கலைஞானம்

பாகம் 1



# சினிமா சீக்ரெட்

# சமர்ப்பணம்




எனக்கு ஏழு வயதாகியிருந்தபோது, நான் கட்டபொம்மன் நாடகம் பார்த்துவிட்டு வந்து "என்னடா... என்னடா... கட்டபொம்மா... எந்நேரம் பார்த்தாலும் கத்திச்சண்டை..." என்ற பாடலை ஒரு குச்சியைக் கையில் எடுத்து சுழட்டியவாறு பாடிக்கொண்டே ஒரு நாற்காலியிலிருந்து மற்றொரு நாற்காலிக்கு குதிக்க... கால் தடுமாறி நாற்காலியும் சாய்ந்து என் கீழ் உதட்டில் வெட்டிவிட்டது. உடனே என் தாய் பேச்சியம்மாள், அடுப்புக்கரித்துண்டை நொறுக்கி உப்புக்கல்லையும் நசுக்கி உதட்டுக்கு கட்டுப் போட்டார். அப்போது என் தந்தை முத்தையா வந்து விபரம் கேட்க, நடந்ததை என் தாய் சொல்ல... "இவன் வருங்காலத்தில் ஒரு புலவனாக வருவான்' என்றார். என் தாயும் "அப்படியா' என்று மகிழ்ச்சியில் கட்டி அணைத்து முத்தமிட்டார்.

இன்று அவர்கள் லட்சியக்கனவு நிறைவேறியது. சினிமா உலகில் நானும் ஒரு கலைஞன் ஆனேன் என்பதை நினைத்து இந்நூலை என்

பெற்றோர்களுக்கு அன்பு காணிக்கையாக்குகிறேன்.

**-கலைஞானம்**

# முன்னுரை

சினிமாவுக்கு கதைகள் எழுதுவதில் நான் தேர்ந்து விட்டேன் என்றுதான் நினைக்கிறேன். அதனாலேயே சில நண்பர்கள் என்னை ''கதைத்தாத்தா', ''பீஷ்மர்', ''கதைஞானம்' என்றெல்லாம் பாராட்டுகிறார்கள்.

ஆனால் வரலாறு எழுதுவது... அதிலும் எழுதி புத்தகமாக வெளியிடுவதில் ஒரு பயம் இருந்து கொண்டே இருக்கிறது. காரணம்... முறையாகக் கற்ற எழுத்தாளர்கள் என்னைக் கறையாக எண்ணி எடுத்தெறிந்துவிடுவார்களோ என்ற பயம்தான். இருந்தாலும் கோதைநாயகியம்மாள், கி.ராஜநாராயணன் போன்றோர் ஆரம்பத்தில் படிக்காதவர்கள்தான். பின்னாளில் மிகச்சிறந்த எழுத்தாளர்களானார்களே. அவர்களை வழிகாட்டியாக எண்ணி எழுதத் துணிந் விட்டேன். கொள்ளுவதும், தள்ளுவதும் அன்பு வாசக களின் உள்ளங்களே.

பார்த்ததை, கேட்டதை, சொன்னதை அனுபவமாக எடுத்துக்கொண்டேதான் இதுவரை சினிமாவுக்கு 30 கதைகளுக்கு மேல் எழுதிவிட்டேன். இதில் மிகப்பெரிய இயக்குநர்களுடன் திரைக்கதை ஒத்துழைப்பு சுமார் நூறைத் தாண்டும். தயாரிப்பு 16 படங்கள். பாடல்கள் எட்டு. இயக்கம் 2. மெயின் காமெடியனாக ''இது நம்ம ஆளு' ஒன்றுதான். சின்னச் சின்ன வேஷங்கள் சில... இதற்குமேல் என் தகுதிக்கு என்ன வேண்டும்? நான் எடுத்துக்கொண்ட இந்த புது முயற்சிக்கு உங்கள் ஆதரவுதான் வேண்டும்.

முக்கியமாக இங்கே சொல்லவேண்டியது ஒன்று உண்டு. என்னவென்றால் 1974-ல் ஒரே மாதத்தில் என்னிடம் ஆறு கதைகளை சினிமா தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினார்கள். எல்லாரும் ''உடனே ஷூட்டிங் போக வேண்டும் எழுதிக்கொடுங்கள்' என்று அவசரப்படுத்தினார்கள். அப்போது நான் ஒரு யுக்தியைக் கையாண்டேன். தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரையும் டேப்ரிக்கார்டர் வாங்கி வரச் சொல்லி அதிலே கதையைச் சொல்லிவிட்டேன். உதவியாளர்களை வைத்து அதில் உள்ளதை எழுதிக் கொடுக்கச் சொல்லிவிட்டேன். அவர்கள்... பனசை மணியன், ஜெயபாலு சீனிவாசன், தஞ்சை கே.சுரேஷ்குமார், வி.எம்.ஏ. ஷாலப்பா... தினகரன் அப்பப்ப சிலரும் இப்படிப் பழக்கப்பட்டதால் இதுவரை அதையே கையாண்டு வருகிறேன்.

''சினிமா சீக்ரெட்' தொடரையும் ரெக்கார்டு பண்ணித் தர்றேன் என்றேன், நக்கீரன் துணையாசிரியர் இரா.த.சக்திவேலிடம். அப்போது அவர் சொன்னார்... ''ஐயா, நீங்கள் சொல்லிக்கொண்டே வாருங்கள், நான் எழுதுகிறேன். அது சரியில்லையென்றால் ரெக்கார்டு பண்ணலாம்'' என்றார். அதையும்தான் பார்ப்போமே என்று உளுந்தமூட்டையை கொத்திவிட்டது போல் பொலபொலவென்று கொட்டிக்கொண்டேயிருந்தேன். மூன்று வாரங்களுக்குச் சேர்ந்தார்போல்... என்ன ஆச்சரியம் ஒருவரிகூட தவறாமலும் கூடாமலும் எழுதியதோடு, அதனை அழகுபடுத்தியும் காட்டி என்னை அசத்திவருகிறார். அவருக்கு என் முதல் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ''சினிமா சீக்ரெட்' தொடர் எழுத எனக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்துவரும் நக்கீரன் ஆசிரியர் உயர்திரு நக்கீரன்கோபால் அவர்களுக்கும், நக்கீரன் காமராஜ், மற்றும் அவருடன் தொழில் செய்யும் அத்தனை பேருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நக்கீரன் பத்திரிகையில் தொடராக வந்த ''சினிமா சீக்ரெட்'டை பொறுமையாக படித்தும் பாராட்டியும், அன்பு காட்டியும் வரும் அனைத்து வாசகர் ளுக்கும் தலைவணங்குகிறேன்... நன்றி!

-கலைஞானம்

# இல்லை... ஆனால்... ஆமாம்...!

*-மேலாண்மை பொன்னுச்சாமி*



கிராமம் போன்றதொரு பொய்யான பிம்பங்களையே கிராமம் என்று காட்டி வந்த தமிழ் சினிமா வழியாக அச்சு அசலான தமிழ்ப் பண்பாட்டு கிராமங்கள், மனிதர்கள், மொழிகள், கலாச்சாரம் ஆகியவற்றை தமிழ்க் கிராமங்களுக்கு அறிமுகப்படுத்திய இயக்குநர் இமயம் பாரதிராஜா, உலகம் கண்டவர். உலகத்துக்கு தமிழ்க் கிராமங்களைக் காட்டியவர். தான் கொண்டாடிய பிறந்த கிராமம் தன்னைக் கொண்டாடத் தவறியதை உணர்த்திக் காட்ட நினைத்தவர். தமது படத் துவக்கவிழாவை அல்லி நகர அய்யனார் கோயிலில் நடத்தி, உலகப்புகழ் பெற்ற தமிழ் சினிமா சூரியன்கள், நட்சத்திரங்கள், சந்திரன்களை வரவழைத்து அல்லி நகரத்தை திணறடித்தார்.அப்படி வரவழைக்கப்பட்டவர்களில் நானும் கலைஞானமும் அடக்கம். சென்னையிலிருந்து திண்டுக்கல் வரை ரயில் பயணம்.

கும்பகோணத்தில் ராம்ராஜ் காட்டன்ஸ் புதிய விற்பனை நிலையம் துவக்குகிறார் திரு.நாகராஜ். ஓவிய நடிகர் சிவகுமார் சிறப்புரையுடன் கலை நிகழ்ச்சிகள். உரை கேட்க சென்னையிலிருந்து சில முக்கிய நண்பர்கள் அழைக்கப்பட்டனர். அப்படி அழைக்கப்பட்டவர்களில் கலைஞானமும் நானும் அடக்கம். இரண்டு ரயில் பயணங்களிலும் கலைஞானம் என்ன சாதித்தார், என்னென்ன சரித்திர சாதனைகள் நிகழ்த்தினார்? என்பதையெல்லாம் அவர் துளிகூட பேசவில்லை. என்னைப் பற்றியே புகழ்ந்தார். போற்றிப் பாராட்டினார். நான் எழுதிய ஒவ்வொரு கதைகளையும், பாத்திரங்களையும் நினைவுபடுத்தி விவரித்தார். பாராட்டிப் பாராட்டி ரசித்தார், பூரித்தார்.

ஓவிய நடிகர் சிவகுமார் தம்மிடம் இருந்த எனது சிறுகதைத் தொகுப்புகளைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கிறார். வாசித்திருக்கிறார். வாசித்த மனசின் சிறகு விரிப்புகளாக அவரது பேச்சு. எனக்கு அவரைப் பற்றி அப்போது ஒன்றுமே தெரியாது. ''திரையுலகப் பிரமுகர்' என்பது மட்டுமே தெரியும். மற்ற எதுவும் தெரியாது. கிராமத்து வெள்ளந்தித்தனம் நிறைந்த அவரது சிரிப்பையே ஓர் அன்னியோன்யத்துடன் ரசித்துக் கொண்டு வந்தேன். அவர் திரையுலகம் குறித்து நிறைய பேசினார். திரையுலகப் பிரமுகர்கள் பற்றியும் நிறைய பேசினார். ஏடறியாத ரகசியங்கள், யாருமறியா மர்மங்கள் என்று வண்டி வண்டியாக கொட்டினார். அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய் திகைத்தேன். இத்தனை மர்மங்களா, இத்தனை ரகசியங்களா? இவர் இப்படியா? அவர் அப்படிப்பட்டவரா? என்று திகைத்து மூச்சுத் திணறினேன்.

மேற்குலக நாட்டு மனிதராக இருந்திருந்தால் அவர் சொன்ன சினிமா சீக்ரெட்களை புத்தகங்களாக எழுதி உலகம் பூராவும் பரபரப்பை நிகழ்த்தி கோடி கோடி டாலர்களாக விற்றுக் குவித்திருப்பார். கலைஞானம் தமிழர். உலக மாந்தருக்கெல்லாம் தலைமாந்தர். கிராமத்தான். பாமர மனிதர். நேர்மையை உயிர்போன்று கருதுகிறவர். பணத்தை கால் தூசி எனவும், கண்ணியத்தை உயிரெனவும் கருதுகிறவர்.

தமிழ் சினிமாவின் மேன்மையான விஷயங்களையும், உயர் பண்பு மனிதர்களையும், நல்லவைகளையும் பற்றி மட்டுமே சினிமா சீக்ரெட்டாக நக்கீரனில் எழுதியிருக்கிறார்.

திடுக்கிடும் பல உண்மைகள், ரகசியங்கள், அதிசயங்கள், சினிமா உலகின் வரலாற்றுத் திருப்பங்கள், பலப் பல முக்கிய நிகழ்வுகள் ''சினிமா சீக்ரெட்'டாக இந்த நூல்களில் வருகின்றன. அந்தக் காலத்தில் இரவு

சாப்பாட்டுக்குக்கூட இல்லாது கஷ்டப்பட்ட எம்.ஜி.ஆர். குடும்பம் சாண்டோ சின்னப்ப தேவர், தமது டவுசர் பைகள் இரண்டிலும் போட்டுக்கொண்டு வந்த அரிசியில் பசியாறிய சம்பவம்... சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்தியதில் எம்.ஜி.ஆர். காட்டிய வைராக்கியத் திற்கு காரணமாக இருந் திருக்குமோ...

''ரஜினிகாந்த் அறிமுகப்படுத்தப்பட்டது கே.பால சந்தரால், கதாநாயகனாக அறிமுகப்படுத்தப்பட்டது ''முள்ளும் மலரும்' மகேந்திரனால்' என்ற கருத்துப் பிம்பம்தான் எனக்குள் இருந்தது.

''பைரவி' மூலமாக ரஜினியை கதாநாயகனாக முதன்முதலில் அறிமுகப்படுத்தியது கலைஞானம்தான் என்ற தகவல் இந்த நூலில் வருகிறது. சரித்திரம் படைத்த ரஜினிகாந்த்தை சாதனைப் பாதையில் செலுத்திய கலைஞானம், எழுமலையில் பாலகிருஷ்ணனாக சுற்றித் திரிந்த காலத்தில் ஒரு சினிமா பார்க்கக் கூட இயலாத ஏழ்மையில் இருந்தவர். சினிமா ஆர்வம் கொண்டிருந்தவர். சினிமா பார்க்கக்கூட காசில்லை. அந்நாளைய மதுரை மாவட்ட எழுமலையில் பஞ்சாயத்து கிளார்க்காக இருந்த முத்தையாவின் அகால மரணம், பாலகிருஷ்ணன் உள்ளிட்ட மொத்த குடும்பத்தையும் வறுமையில் வறுத்தெடுத்தது, உறவுகளின் பொய்மை தெரிந்தது. வறுமை, வீட்டுக்குள் வறுமையற்றிருந்தது. தெருவில் இட்லி விற்றுக்கொண்டிருந்த பாலகிருஷ்ணன், சினிமா ஆர்வம் கொண்டு... சினிமா பார்ப்பதற்காகவே சினிமா கொட்டகையில் முறுக்குத் தட்டு தூக்க ஆரம்பித்த கதையிலிருந்து... பார்த்த சினிமாவை பாராதவருக்கு கதை சொல்லும் கலையில் கை தேர்ந்த கதை...

சினிமா உலகத்துக்குள் நுழைய நாடக சபாவில் சங்கடப்பட்ட கதை... சென்னைக்கு வந்து முட்டி மோதிய கதை... சந்திக்க முயன்ற பிரபலங்களையெல்லாம் சந்திக்க இயலாமல் திரும்பிய கதை...

அந்நாளைய பிரபல சினிமா கவிஞர் கவி.கே.பி.காமாட்சி சுந்தரம், பாலகிருஷ்ணனுக்கு தார்மீக உதவிகள் செய்தது... குடும்பத்துடன் பட்ட பாடுகள்... என்று இந்த நூல் விரிகிறது. ஒரு சுவா ரஸ்யமான நாவல் போல் துவங்கி, இயங்கி பரந்து விரிவடைகிறது.

பாலகிருஷ்ணன் என்ற எழுமலைச் சிறுவன், கல்வி யில்லாமலேயே கதாசிரியராக உயர்ந்த கதை, திரையுலக வாசலில் காத்துக்கிடந்தவர், திரையுலகத்தின் நாயகர்களையும், நாயகிகளையும், இயக்குநர்களையும்,

பாடலாசிரியர்களையும் ஊற்றென உருவாக்குகிற திரைப்பட ''கர்த்தா'வாக உயர்ந்த கதை -பலருக்கு உதவியாகத் திகழ்ந்தவர்...

பலரது மோசடிக்குள்ளான போதிலும், தமது உயர்பண்பை இழக்காத வைராக் கிய நேர்மை இவையெல்லாம் மகத்தான ஆச்சரியங்கள் தான்.

இதையெல்லாம் தாண்டி, இன்னும் கிராமத்து சுபாவங்களை தக்க வைத்திருக்கிறார். வாழ்க்கையுடன் -வறுமையுடன் -கடன்களுடன் மல்லுக்கட்டிப் போராடிய எந்தத் தருணத்திலும் உயர்மாண்புகளை இழக்காமல் இருந்த விஷயமெல்லாம் வியப்புக் குரியவைதான்.

முறையான கல்வியில்லாமலேயே முழுமுதல் திறமை யான கதாசிரியராக ஆனவர், என்னைப்போல எழுத்தாளனல்ல, என்னைவிட திறமையான கதாசிரியர். இந்தப் பிரமிப்புதான் என்னை அணிந்துரை எழுத வைக்கிறது.

முறையான கல்வியில்லாமலேயே உயர்நிலை எழுத் தாளர்களான ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், இயக்குநர் பாரதிராஜா, கலைஞானம் போன்ற மேதமை உருவங்களின் உயரங்களைப் பார்க்கிறபோது கல்வி யில்லாமல் போன எனது தாழ்மையுணர்ச்சி சற்றே தணிகிறது,

''சினிமா சீக்ரெட்' சினிமா ரகசியங்களை மட்டும் சொல்லவில்லை, வாழ்வின் சீக்ரெட்களையும், உயர் பண்புடன் வாழ்வதிலுள்ள சீக்ரெட்களையும் சேர்த்தே சொல்கிறது.

''சினிமா சீக்ரெட்' ஒரு சிறந்த நூல். வாழ்வைச் சொல்கிற நூல். வாழ்வை வென்ற மனிதனைச் சொல்கிற நூல். சினிமாவைச் சொல்கிற நூல். சினிமாவை செதுக்கிய சிற்பிகளின் உயர் திறமையைச் சொல்கிற நூல்.

இந்த நூல் வாழ்க்கைச் சரிதமா? இல்லை... ஆமாம்!

வாழ்ந்த நினைவுகளா? இல்லை... ஆமாம்!

திரைத்துறை சார்ந்த ரகசியமா? இல்லை... ஆமாம்!

மொத்தத்தில்... ஒவ்வொருத்தரும் வாசிக்க வேண்டிய நூல் இது.

நன்றி!

**என்றும் உங்கள்**

**மேலாண்மை பொன்னுச்சாமி**

# ஒப்பனை இல்லா உண்மை!

**அ** னுபவங்களைப் போன்ற திரைக்கதையை எந்த சினிமாவிலும் பார்க்க முடியாது. பார்க்கின்ற சினிமாக்களைவிடவும் படிக்கின்ற அனுபவங்கள் சுவாரஸ்யமானவையாக இருக்கும். அதிலும் சினிமாத் துறையில் பழுத்த அனுபவம் பெற்ற ஒரு வித்தகர் தன் அனுபவங்களை வாசகர்களுக்கு வழங்கினால் படிக்கப் படிக்கத் திகட்டாது. ஜாம்பவான்களுடன் பழகிய ஜாம்பவனான திரைப்பட தயாரிப்பாளர்- இயக்குநர் -கதாசிரியர் -நடிகர் கலைஞானம் அவர்களின் திரைத்துறை சார்ந்த வாழ்க்கை அனுபவமும் நமக்குத் திகட்டாத இன்பமாக படிக்கக் கிடைத் திருக்கிறது. இதுவரை வெளிப்படாமல் புதைத்து வைக்கப்பட்டிருக் கும் உண்மைகள் அதனை நேரில் கண்டவரின் வார்த்தை களில் வெளிப்படும் போது சுவாரஸ்யம் மட்டுமல்ல, ஆச்சரியமும் விறுவிறுப்பும் கூடுதலாகச் சேர்கின்றன. அப்படிச் சேர்ந்ததுதான் இந்த ''சினிமா சீக்ரெட்.'

நக்கீரன் இதழில் இது தொடராகத் தொடர்கிறது. சினிமா போஸ்டர்கள் போல பிரம்மாண்ட போஸ்டர்களுடன் விளம்பரம் செய்யப்பட்ட நக்கீரனின் தொடர்கள் நிறைய உண்டு. ஆனால், ஒரு அவசரச் சூழல் எவ்வித விளம்பரமும் இல்லாமல் சட்டெனத் தொடங்கப்பட்டு, வாசகர்களின் பேராதரவினால் வெற்றிகரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் தொடரான கலைஞானம் அவர்களின் சினிமா சீக்ரெட்டின் முதல் பாகம்தான் உங்கள் கைகளில் புத்தகமாகத் தவழ்கிறது. சினிமா மொழியிலேயே சொல்வதென்றால் ஆறிருந்து அறுபது வரை என்பார்களே, அதுபோல 20-லிருந்து 100 வரை அனைத்துத் தரப்பினரும் விரும்பி படிக்கும் வகையிலான நிகழ்வுகளை மேக்கப் போடாமல் வெளிப்படுத்துகிறார் கலைஞானம் அவர்கள். ஒப்பனை இல்லாத அந்த உண்மைகள்தான் வாசகர்களை வசீகரிக்கின்றன.

எம்.கே.தியாகராஜ பாகவதர் காலத்திருந்து டி.ஆர். மகாங்கம் போன்ற இசையரசர்கள் வரையிலான ஒரு காலகட்டம், சினிமா சாம்ராஜ்ஜியத்தை கட்டி ஆட்சி செய்த எம்.ஜி.ஆர்-சிவாஜி காலகட்டம், அவர்களுக் கடுத்து சினிமாவில் நிலைத்த இடத்தைப் பெற்ற ரஜினி -கமல் யுகம் அதன்பின் இப்போதுள்ள கலைஞர்களின் காலம் என கலைஞானத்தின் திரைப் பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு ஜாம்பவானுடனும்

இணைந்து பணியாற்றி அவர்களின் அன்பைப் பெற்ற ஜாம்பவனாக கலைஞானம் இருப்பதும், அவர்களின் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்ததும் அவர் வெளிப்படுத்தும் அனுபவ வார்த்தை களின் வாயிலாகத் தெரியவருகிறது. அதிலும் குறிப்பாக, சாண்டோ சின்னப்ப தேவர் பற்றிய கலைஞானத் தின் விவரிப்பு, படிக்கின்ற எவரையும் மெய்சிர்க்க வைத்துவிடும். பகைபோல வெளியே தெரிந்த சினிமா கலைஞர்கள் உள்ளே நட்புறவோடு ஒட்டி உறவாடிய தையும், வெளிப்பார்வைக்கு நட்புபோலத் தெரிந்த பலரும் உள்ளுக்குள் மோசமான பகையைக் கொண்டி ருந்ததையும் இந்த சீக்ரெட் மூலம் அம்பலப்படுகிறது.

கலைஞானம் அவர்களை தம்பி இணையாசிரியர் காமராஜ் அவர்களின் ஆலோசனையின் பேரில் நக்கீரனுக்குள் கட்டி இழுத்து வந்தவர் தம்பி இரா.த.சக்திவேல். நக்கீரனின் சினிமா சக்கரவர்த்தி அவர்தான். நக்கீரன் சினிமா பகுதியில் வரும் எழுத்துகள் அனைத்தும் துணையாசிரியரான தம்பி சக்திவேலுடையவை. சினிக்கூத்து இதழின் அட்டை டூ அட்டை அனைத்தும் அவரது உழைப்பு. சிறப்பிதழ்களை சிறப்பாக வெளிக்கொண்டு வருவதும் அவர்தான். அயராத உழைப்பு, வசீகரிக்கும் எழுத்துநடை, எளிமையான வார்த்தைகள், கலகலப்புக்குப் பஞ்சமில்லாத செய்திகள் என தம்பி சக்திவேல் சினிமாதுறை சம்பந்தமான தகவல்களில் சிக்ஸர்களாக அடித்துக்கொண்டே இருப்பார். கலைஞானம் அவர்களை நக்கீரனில் தொடர் எழுத சம்மதிக்கச் செய்ததுடன், அவ ருடைய அனுபவங்களை அப்படியே வார்த்தைகளில் வடிப்பவரும் தம்பி சக்திவேல்தான். அருமையான கதையை ஒரு தேர்ந்த இயக்குநர் எப்படி நேர்த்தியான திரைக்கதை யாக்கி சுவாரஸ்யமாகத் தருவாரோ அப்படித்தான் கலைஞானம் தரும் சீக்ரெட்டுகளை சிலுசிலு நடையில் எழுத்துவடிவமாக்கித் தருகிறார் தம்பி சக்திவேல்.

சினிமா கனவுகளுடன் புதிய புதிய இளைஞர்கள் புறப்பட்டு வந்துகொண்டே இருக்கிறார்கள். வெற்றி பெறுகிறவர்களும் உண்டு, வேதனையுடன் திரும்புகிறவர் களும் உண்டு. திரும்ப முடியாத இடத்திற்குச் செல்பவர் களும் உண்டு. திரைத்துறை என்பது எப்படிப்பட்டது என்பதையும் உழைப்பும் சாதுர்யமும் கொண்டவர்கள் எத்தகைய சூழல் களை சந்தித்து வெற்றிபெற வேண்டும் என்பதை மிகச்சாதாரண விவசாய குடும்பத்திலிருந்து பிறந்து, எளிய மனிதராக திரையுலகில் அடிவைத்து மிகப்பெரும் நட்சத்திரங்களை வைத்து படம் தயாரிக்கவும் இயக்குவுமான நிலைக்கு உயர்ந்த ஐயா கலைஞானம் தன்

வாழ்க்கை அனுபவங்கள் மூலம் இந்த சினிமா சீக்ரெட்டில் சொல்லித் தருகிறார். அனுபவங்களை விட சிறந்த பாடம் வேறெதுவும் உண்டா? மேலும் இந்த தொடரின் வெற்றிக்கு மெருகூட்டுவது அந்தக்கால, இந்த கால சினிமாக்களின் கருப்பு வெள்ளை+கலர் படங்கள். இதை கதைக்கேற்றவாறு கொடுத்து பெரிதும் உதவுவது தம்பி போட்டோ ஞானம். அவருக்கு நக்கீரனின் பாராட்டுக்கள்.

தன்னம்பிக்கையையும் வெற்றிக்கான வழியையும் நமக்கு அளிக்கும் ஐயா கலைஞானத்தின் சினிமா சீக்ரெட் புத்தகத்தை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது உங்கள் நக்கீரன்.

**-என்றென்றும் உங்கள்**

**நக்கீரன் கோபால்**

# முதல் பாகத்தில் உள்ள சிறப்பம்சங்கள்!

''சினிமா சீக்ரெட்' முதல் பாகத்தில்...

சிறு வயதில் நான் எங்கள் ஊர் டூரிங் டாக்கீஸில் முறுக்கு விற்ற அனுபவம், நடிப் பாசையில் சென்னை வந்த அனுபவங்களுடன்...

பி.யூ.சின்னப்பாவை நான் சந்தித்தது, ''பராசக்தி' பூசாரி கவி.கே.பி.காமாட்சி சுந்தரத்துடனான என் அனுபவங்களுடன்... அன்றைய கால சென்னை நகரம் குறித்தும் எழுதியிருக்கிறேன்...

கவி.கே.பி.காமாட்சி சுந்தரத்தின் உடலை சுடுகாடுவரை சுமந்த எம்.ஜி.ஆர்., சுடுகாட்டில் எம்.ஜி.ஆர். என்னிடம் பேசிய விஷயங்கள், படிப்பவர் நெஞ்சை நெகிழ வைக்கும்.

டி.ஆர்.மகாலிங்கத்துடனான அனுபவம், எம்.கே.தியாகராஜ பாகவதரைப் பார்த்தது, அவரின் வாழ்க்கை அனுபவங்களுடன் சரோஜா தேவியை நான் பிரம்பால் அடித்த சுவாரஸ்யங் களும் உள்ளன. கமல்ஹாசனை மீண்டும் நடிப் பதற்காக நான் அழைத்து வந்தது, கமலுடனான முரண்பாடு, கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் மகனைக் காப்பாற்றிய எம்.ஜி.ஆரின் கருணை, சாண்டோ சின்னப்ப தேவருடனான என் அனுபவங்கள்... என பல உற்சாகமான, உணர்ச்சிகரமான நிகழ்வுகளை எழுதியுள்ளேன்.

''சினிமா சீக்ரெட்'டின் அடுத்தடுத்த பாகங்களையும் நீங்கள் படிக்கும்போது பல அற்புதமான அனுபவங்களை, பிரபலங்களின் வெளிவராத குண இயல்புகளை நீங்கள் முழுமையாக அறிய முடியும்.

வாசிக்கத் தொடங்குங்கள்... வரலாறை!

**-அன்புடன்**

**கலைஞானம்**

# என் கதைகளில்,தயாரிப்புகளில்
## அறிமுகமானவர்கள் பட்டியல்

**நட்சத்திரங்கள்**

ரஜினிகாந்த்

(கதாநாயகனான ) - படம்: பைரவி

கமல்ஹாசன்

(குழந்தை நட்சத்திரமாக இருந்த கமல் வாலிபனாக ஆனதும் மறு அறிமுகம். படம் : குறத்தி மகன்)

கீதா - படம் : பைரவி

ஜெய்சித்ரா - படம் : குறத்தி மகன்

வாணிஸ்ரீ - படம் : காதல் படுத்தும் பாடு

சுருளிராஜன் - படம் : காதல் படுத்தும் பாடு

எஸ்.எஸ்.சந்திரன் - படம் : காதல் படுத்தும் பாடு

மாதவி - படம் : புதிய தோரணங்கள்

சொப்னா - படம் : நெல்லிக்கனி

''ராஜபார்ட்' உடையப்பா - படம் : தாய் வீட்டு சீதனம்

கோவிந்தா - படம் : லவ் 86 - இந்தி

கண்ணன் - எஸ்.எஸ்.ஆரின் மகன் (இரண்டாவது நாயகன்) படம்: காக்கைச் சிறகினிலே

முத்துமாணிக்கம் - (எஸ்.எஸ்.ஆரின் தங்கை மகன், (இரண்டாவது நாயகன்) படம் : செல்லக்கிளி

நாகராஜசோழன்- (கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்) படம் : எதிர்வீட்டு ஜன்னல்)

**அறிமுக இயக்குநர்கள்**

எம்.பாஸ்கர் -(படம் : பைரவி)

எஸ்.எஸ்.தேவதாஸ்- (நடிகை தேவிகாவின் கணவர்)

படம் : வெகுளிப்பெண்

கே.எம்.பாலகிருஷ்ணன் -(நடிகர் குமரிமுத்துவின் அண்ணன்)

படம் : ஆறு புஷ்பங்கள்

பனசை மணியன்- (படம் : நீதிக்கு ஒரு பெண்)

**பாடலாசிரியர்கள்**

கவிஞர் சிதம்பரநாதன் - (படம் : பைரவி)

அருப்புக்கோட்டைதவசுமணி -(படம் : இளஞ்ஜோடிகள்)

**அறிமுக பின்னணிப் பாடகர்கள்**

சீர்காழி சிவசிதம்பரம் - (படம் : மிருதங்க சக்கரவர்த்தி)

சந்திரபோஸ் - (படம் : ஆறு புஷ்பங்கள்)

**புகைப்படக் கலைஞர்கள்**

"ஸ்டில்ஸ்' ரவி - (படம் : பைரவி)

வெள்ளைச்சாமி - (படம்:புதிய தோரணங்கள்)

நடராஜன் - (படம் : செல்லக்கிளி)

**படத் தொகுப்பாளர்கள்**

கௌதமன் - (படம் : புதிய தோரணங்கள்)

வெள்ளைச்சாமி - (படம்:புதிய தோரணங்கள்)

**நான் அறிமுகம் செய்த தயாரிப்பாளர்கள்**

என். சகுந்தலா

டி.என். வெங்கட்ராமன்

முருகன் கலைஞானம்

பி.மகாலட்சுமி

பி.கோப்பெருந்தெவி

என்.ஜான்ஸிராணி

**நான் அறிமுகம் செய்த மூலக்கதையாசிரியர்**

**புஷ்பவல்லி கலைஞானம்** - (படம் : புதுப்பட்டி பொன்னுத்தாயி)

**என் வாழ்க்கை மீது அக்கறை காட்டியவர்கள்**

கவி. கே.பி . காமாட்சி சுந்தரம்

கவிஞர் சுரதா

எழுத்தாளர் ஏ.எஸ்.முத்து

நான் ஒரு கலைஞன் ஆவதற்கு அன்பும், அக்கறையும் காட்டிய, காட்டிவருபவர் என் அண்ணன் ஆர்.எம். கிருஷ்ணசாமி.

**நான் திரைக்கதைகளில் பங்கேற்ற**

**இயக்குநர்கள்- தயாரிப்பாளர்கள்**

சாண்டோ சின்னப்ப தேவர்

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

ஜோஸப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

ஏ.பீம்சிங்

எஸ்.தியாகராஜன் (சின்னப்ப தேவரின் மாப்பிள்ளை)

மதுரை திருமாறன்

முக்தா சீனிவாசன்

எம்.எஸ்.காசிவிஸ்வாதன்

விசு (என்கிற) விஸ்வநாதன்

வி.சி. குகநாதன்

பாரதிராஜா

பாக்யராஜ்

ஆர்.வி.உதயகுமார்

பி.வாசு

கலைமணி

கே.ராஜேஷ்வர்

பார்த்திபன்

கோகுல கிருஷ்ணன்

மற்றும் பலர்...

**என் கதைகளில், பங்குபெற்ற பிரபலங்கள்**

நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

ஜெமினிகணேசன்

எம்.என்.நம்பியார்

ஜெய்சங்கர்

சிவகுமார்

ரவிச்சந்திரன்

முத்துராமன்

ராதாரவி

நாகேஷ்

கராத்தே மணி

ஸ்ரீகாந்த்

வி.கே.ராமசாமி

தேங்காய் சீனிவாசன்

சோ (ராமசாமி)

மேஜர்சுந்தர்ராஜன்

சுதாகர்

கே.ஏ.தங்கவேல்

கார்த்திக்

சுரேஷ்

எஸ்.வீ.சேகர்

சிலோன் மனோகர்

நிழல்கள் ரவி

வெண்ணிற ஆடைமூர்த்தி

விசு (எ) விஸ்வநாதன்

வி.எஸ்.ராகவன்

டைரக்டர் கே.விஸ்வநாத் (சங்கராபரணம்)

பார்த்திபன்

காகா ராதாகிருஷ்ணன்

எஸ்.ஏ.அசோகன்

கிருபானந்த வாரியார்

விஜயகுமார்

நெப்போலியன்

சங்கிலிமுருகன்

கிருஷ்ணம்ராஜ் (தெலுங்கு)

நாகபூஷணம் (தெலுங்கு)

ராஜநளா (தெலுங்கு)

பாபு - காமெடி (தெலுங்கு)

கலைச்செல்வி ஜெயலலிதா

கே.ஆர்.விஜயா

சுஜாதா

மனோரமா

ராதா

விஜயசாந்தி

தேவிகா

கனகா

ராஜசுலோசனா

எஸ்.வரலட்சுமி

சி.ஐ.டி. சகுந்தலா

ஸ்ரீப்ரியா

ஸ்ரீவித்யா

ஒய்.விஜயா

ஜெயந்தி

ஜெயா

சுலக்ஷணா

சுகுமாரி

சச்சு

சுந்தரிபாய்

அம்பிகா

லட்சுமி

ராதிகா

மேஜிக் ராதிகா

தீபா

வசந்தா (இரவும் பகலும் அறிமுகம்)

சூரியகலா

காந்திமதி

எஸ்.என்.லட்சுமி

வெண்ணிறஆடை நிர்மலா

மஞ்சுளா

ஜமுனா (தெலுங்கு)

ஜெயபிரதா (தெலுங்கு)

கிருஷ்ணகுமாரி (தெலுங்கு)

மற்றும் பலர்...

**இயக்குநர்கள்**

ஜோசப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

கே.எஸ். கோபாலகிருஷ்ணன்

ஏ.பீம்சிங்

கே.சங்கர்

பி.வாசு

முக்தா சீனிவாசன்

மதுரை திருமாறன்

எஸ்.எஸ். தேவதாஸ் (தேவிகா கணவர்)

எம்.பாஸ்கர் (பைரவி டைரக்டர்)

கர்ணன்

என்.கே.விஸ்வநாதன்

பி.ஆர்.சோமு

ஆர்.சி. சக்தி

கே.எஸ்.ரவிகுமார்

ராமநாராயணன்

முரசொலி சொர்ணம்

தாசரி நாராயணராவ் (தெலுங்கு)

**பாடலாசிரியர்கள்**

கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் வாலி

புலவர் புலமைப்பித்தன்

ஆலங்குடி சோமு

முத்துலிங்கம்

பிறைசூடன்

கங்கைஅமரன்

**இசையமைப்பாளர்கள்**

எம்.எஸ்.விஸ்வநாதன்

கே.வி. மகாதேவன்

இளையராஜா

சங்கர்-கணேஷ்

வி.குமார்

டி.ஆர்.பாப்பா

**பாடியவர்கள்**

பாலமுரளிகிருஷ்ணா

டி.எம்.சௌந்தரராஜன்

எஸ்.பி.பாலசுப்ரமணியம்

ஜேசுதாஸ்

மலேசிய வாசுதேவன்

மனோ

பி.சுசீலா

எஸ்.ஜானகி

எல்.ஆர்.ஈஸ்வரி

வாணிஜெயராம்

**வசனம் எழுதியவர்கள்**

ஏ.எல்.நாராயணன்

வியட்நாம்வீடு சுந்தரம்

ஏ.எஸ்.பிரகாசம்

தூயவன்

பனசை மணியன்

**டான்ஸ் மாஸ்டர்கள்**

தங்கப்பன்

கமலஹாசன் (உதவி)

சுந்தரம் (பிரபுதேவா தந்தை)

விமலா (இளஞ்ஜோடிகள்)

**ஸ்டண்ட் மாஸ்டர்கள்**

சங்கர்

மாதவன்

ஹயாத்

**என் நாடகங்களில் தலைமை தாங்கியவர்கள்**

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்

டி.ஏ.மதுரம்

எம்.ஏ.வி. (ராமாயணம் எடுத்த தயாரிப்பாளர்)

எஸ்.ஏ.நடராஜன் ("மந்திரிகுமாரி' படப் புகழ்)

**நாடகங்களில் என்னுடன் நடித்தவர்கள்**

குலதெய்வம் ராஜகோபால்

காகா ராதாகிருஷ்ணன்

கவி கே.பி.காமாட்சி சுந்தரம்

வி.எம். ஏழுமலை

எஸ்.ஏ.நடராஜன் (மிட்டாதாரர்)

கே.தவமணி தேவி (இலங்கைக் குயில் கவர்ச்சிக்கன்னி

-ஆரவல்லி சூரவல்லி, வனமோகினி

போன்ற படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்)

"கண் திறந்தது' ராமநாதன் (மனோரமாவின் கணவர்)

**நான் சினிமாவில் துணை நடிகராக**

**நடித்த படங்கள்**

கோகிலாவாணி, தெனாலிராமன், செல்லப்பிள்ளை

வெறும் பேச்சல்ல

**சிறப்புத் தோற்றம்**

கே. பாக்யராஜின் "இது நம்ம ஆளு'

கோபுர வாசலிலே

பெரிய இடத்து மாப்பிள்ளை

பார்த்திபனின் கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம்

# 1. முறுக்கு காதல்!

1937 காலகட்டம் அது.

மதுரை ஜில்லா, உசிலம்பட்டியை அடுத்த எழுமலை கிராமம்தான் எங்கள் ஊர்.

அப்பா முத்தையா பஞ்சாயத்து போர்டு கிளார்க்காக இருந்ததால் எங்க குடும்பம் எல்லோருக்கும் தெரிந் தாகவும், மதிப்பிற்குரியதாகவும் இருந்தது.

உடன்பிறந்த நாங்கள் ஐந்து பேர். இதில் இருவர் பெண்கள். பாலகிருஷ்ணனான நான் நடுவில் பிறந்தவன். எனக்கு ஏழு வயது இருக்கும்போது அந்த துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

என் அப்பா தன் 39 வயதில் விஷப்பரு தாக்குதலுக்கு ஆளானார். இப்போதெல்லாம் ஒரே ஒரு இன்ஜெக்ஷன் மூலம் விஷப்பருவை நீக்கிவிடலாம். அப்போது அந்த வசதி இல்லையே...? விஷப்பரு தாக்குதலுக்கு ஆளான அப்பா மறுவாரமே இறந்து போனார்.

அப்பாவுக்கு மாதச் சம்பளம் ஆறு ரூபாய். அன்று அது பெரிய தொகை. அப்பாவும் இல்லை... ஆறு ரூபாயும் இல்லை. பூர்வீக சொத்தோ, சேமிப்போ எதுவு மில்லை. அனாதையாக நின்றது எங்கள் குடும்பம். அந்த காலகட்டத்தில் விதவைப் பெண்கள் வெளியே, தெருவில் போய்வரமாட்டார்கள். அதிலும் என் அம்மா மிக அழகாக இருப்பார். அதனால் வீட்டை விட்டு வெளியே வரமாட்டார். ஆனாலும் பிள்ளைகளைக் காப்பாற்ற உழைக்க வேண்டுமே?!

வீட்டுக்குள் இருந்தபடியே இட்லி சுட்டுத் தருவார். நானும், என் தங்கையும் வீதி வீதியாகச் சென்று இட்லியை விற்று வருவோம். இட்லி விற்பனையாகி விட்டால் அந்தக் காசில் கேழ்வரகு வாங்கி வறுத்து, இடித்து இரவுச் சாப்பாட்டுக்கு களி செய்வார் அம்மா. இட்லி விற்காவிட்டால் அந்த இட்லிதான் இரவுக்கும்.

வீட்டு வரி கட்டாதவர்களின் வீட்டு அண்டா, குண்டா, மரக்கதவுகளை தூக்கி வந்து விடுவார் பஞ்சாயத்து போர்டு பில் கலெக்டர். அவர்கள் பதறியபடி கிளார்க்கான என் அப்பாவிடம் முறையிடுவார்கள். உடனே

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பொருட்களை திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்வார். அதற்கு நன்றியாகவோ என்னவோ... ''கிளார்க்கு புள்ளைகளா... ரெண்டு இட்லி குடுப்பா'' என இரக்கப்பட்டு எங்களிடம் இட்லி வாங்குவார்கள்.

எம்.ஜி.ஆர். என்னைப் பாராட்டி தங்க மோதிரம் பரிசளித்தார். அதை பூரிப்போடு பார்த்து சிவாஜி கை தட்டினார். எத்தனையோ ஜாம்பவான்களுடன் எனக்கு அனுபவம் உண்டு. சுமார் 200 படங்களுக்கு திரைக்கதை எழுதியிருக்கிறேன். நான் என்ன படிப்பு படித்திருக்கிறேன் தெரியுமா? என் அப்பாவின் மரணத்திற்குப் பின் இரண்டாம் வகுப்புடன் என் படிப்பிற்கு முற்றுப்புள்ளி விழுந்தது. அந்தப் புள்ளியிலிருந்துதான் என் அனுபவக் கல்வி தொடங்கியது.

எனது ஆறுவயதில் எங்கள் ஊர் பள்ளிக்கூடத்தில் சில ஊமைப் படங்களைப் பார்த்திருக்கேன். அப்போதைய வெள்ளையர் அரசாங்கம் சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்து நிறைய துண்டுப் படங்களை எடுத்து கிராமங்களில் போட்டுக் காட்டும். அதைப் பார்த்தபோதே எனக்கு சினிமா மீது பெரும் லயிப்பு ஏற்பட்டது.

என் எட்டாவது வயதில்... அதுவரை எங்கள் ஊருக்கு எட்டாமல் இருந்த சினிமா கொட்டகை எங்கள் ஊரை எட்டியது. ''கவுடர் டாக்கீஸ்' என்பது அந்த டூரிங் டாக்கீஸ் பெயர். எனக்கோ சொல்ல முடியாத பரவசம். கொட்டகை கட்டும் வேலைகள் நடந்தபோதே இரவு நேரங்களில் நண்பர்களுடன் சேர்ந்து அங்கே படுத்துக்கொள்வேன்.

கொட்டகை கட்டி முடித்து திறப்பு விழாவுக்கு முதல்நாள் ட்ரயல் பார்ப்பதற்காக சில காட்சிகளை ட்ரைலர் போல் ஓட்டினார்கள். அதைப்பார்த்த எனக்கு ஏதோ சொர்க்கத்தில் மிதப்பது போல இருந்தது. தினசரி சினிமா பார்த்தே ஆக வேண்டும் என்கிற வெறிபிடித்தது எனக்கு. ஆனால் டிக்கெட் கட்டணம் ஒண்ணேகால் அணா. ஒரு அணாவுக்கு ஒரு மனுஷன் வயிறார சாப்பிட்டு விடலாம். இவ்வளவு டிக்கெட் கட்டணத்துக்கு எங்கே போவது?

அம்மா வைத்திருந்த இரண்டு அணாவை திருடிக் கொண்டு போனேன். டிக்கெட் எடுத்தது போக மீதிக் காசுக்கு முறுக்கு வாங்கி வைத்து தின்றபடி படம் பார்த்தேன். நான் பார்த்த முதல் திரைப்படம் ''கிருஷ்ண லீலா'.

படம் பார்த்த பரவசம் குறையாமல் வீட்டுக்கு வந்தேன்.

எங்களோட மண் வானம் பார்த்த பூமி. சோளம், கம்பு, கேப்பை, சாமை என காட்டு வெள்ளாமைப் பொருட்களில்தான் உணவு சாப்பிடுவோம். அரிசி சாதம் அவ்வளவு லேசில் கிடைக்காது.

"கேப்ப வாங்கி திருகி களி கிண்டலாம்னு வச்சிருந்த காச களவாண்டுக்கிட்டுப் போயி சினிமாவா பாத்திட்டு வர்றே" என கோபமான அம்மா விளக்குமாறை திருப்பிப் பிடித்து அந்தக் கட்டைப் பகுதியால் என்னை "அடி அடி' என்று அடித்துவிட்டு "ரெண்டணா கொண்டாந்து குடுத்திட்டு வீட்டுக்குள்ள வா" எனச் சொல்லி துரத்திவிட்டார்.

விட்ட இடத்திலேயே தேடுவது மாதிரி டாக்கீஸ் முதலாளி வேலுச்சாமி நாடார் முன்பு கைகட்டி நின்றேன்.

"யாரு, கிளார்க் மகனா... என்னப்பா?"

"எனக்கு ஏதாவது வேலை குடுங்க."

"நீ படிக்கலியேடா."

நான் சலனமே இல்லாமல் மௌனமாக நின்றேன்.

"நாளைலயிருந்து கொட்டகைல பொம்பளையாளுக உட்கார்ந்திருக்க பக்கத்துல முறுக்கு விக்கிறியா?".

"தினசரி சினிமா பார்க்கணும்னு நினைச்சவனுக்கு ஓ.சி.யில தினமும் பார்க்குற வாய்ப்பாச்சே." உற்சாகத்தில் பேச்சே வரவில்லை.

"ம்" என தலையாட்டினேன்.

டூரிங் டாக்கீஸில் மணல் பரப்பி ஒருபுறம் ஆண் களும் இன்னொருபுறம் பெண்களும் அமர்ந்து படம் பார்ப்பார்கள். இருபுறத்துக்கும் நடுவில் நீளமாக மண்ணால் தடுப்புச்சுவர் கட்டியிருப்பார்கள்.

படத்தின் ஒவ்வொரு ரீல் முடிந்ததும் ரீல் மாற்றுவதற்காக லைட் போடுவார்கள். அந்தச் சமயம் கூட்டத்துக்குள் முறுக்குத் தட்டுடன் புகுந்து "முறுக்கு முறுக்கே" என கூவி விற்க வேண்டும். இப்படி ஒரு படத்திற்கு குறைந்தது ஏழெட்டு முறை லைட் போடுவார்கள். அப்போதெல்லாம் முறுக்கு விற்க வேண்டும். படம் ஓடும்போது ஓரமாக உட்கார்ந்து ரசிப்பேன்.



கிராமப்புறங்களுக்கே உரிய காதலும், கசமுசாக்களும் சினிமா கொட்டகைகளில் சுவாரஸ்யமாக அரங்கேறும்.

நான் எட்டு வயது சிறுவன் என்பதால் பெண்கள் கூட்டத்திற்குள் சரளமாக வளைய வருவேன். இருபாலருக்கும் இடையேயான சுவரோரம் நான் வரும்போது ஆண்கள் பகுதியிலிருந்து ஒரு இளைஞர் அழைத்தார்.

''என்னண்ணே?'

''அதோ... தலயில ரோஜாப்பூ வச்சுக்கிட்டு ஒரு அக்கா உக்காந்திருக்கில்ல. அதுக்கு ஒரு அணாவுக்கு முறுக்குக் குடு. குடுக்கும்போது அந்த அண்ணன் குடுக்கச் சொன்னாருன்னு பேரு சொல்லிக் குடு...' எனச் சொல்லிவிட்டு தன் பேரையும் சொன்னார்.

''சரிண்ணே...'

''லைட்ட ஆஃப் பண்ண பின்னாடிதான்டா குடுக்கணும்.'

''ம்...'

...இப்படி முறுக்கு விற்கிற என்னை தங்கள் காதல் முறுக்கிற்கு தூதுவனாக ஆக்கியவர்கள் பலர்.

இந்த காதல் தூதுக்கு நான் கமிஷன் அடிக்க ஆரம்பித்தேன். கடலைமாவில் செய்யப்பட்ட உசிலம்பட்டி முறுக்கு ரொம்ப ஃபேமஸ். ருசியாகவும் இருக்கும். இருட்டில் தானே ''அக்கா'க்களுக்கு முறுக்கு தரச் சொல்கிறார்கள். அதனால் பெரிய முறுக்கில் முதல் சுற்றுவை உடைத்து வைத்துக் கொடுப்பேன். உடைத்ததை நான் சாப்பிடுவேன்.

இதேபோல் ஒருமுறை ''செகப்புச் சேல அக்காவுக்கு குடு' என ஒரு மைனர் சொல்ல... இருட்டில் வேறொரு செகப்புச் சேலை அக்காவிடம் ''அண்ணன் பேரைச் சொல்லி''க் கொடுக்க... அந்தப் பெண் கூச்சல் போட... லைட் போடப்பட்டது. படம் நிறுத்தப்பட்டது. ஒரே கூச்சல். ஊர் முக்கிய புள்ளியின் மனைவி அவர்.

''எவன்டா முறுக்குக் குடுக்கச் சொன்னது?'' என என்னைத் துளைத்தார்கள். கொலைவெறியுடன் அவர்கள் இருந்ததால் முறுக்குக் கொடுக்கச் சொன்ன மைனர் தப்பி ஓடிவிட்டார்.

(நான் 19 வயதில் சென்னை வரும்வரை அந்த மைனர் என் கண்ணில் தட்டுப்படவேயில்லை).

கொட்டகை முதலாளி கூப்பிட்டார் என்னை.

"இனிமே நீ முறுக்கு விற்க வேணாம்."

முறுக்குத் தீனி, முறுக்கு விற்பதால் கிடைக்கும் கூலி இதையெல்லாம் விட... "இனிமே நான் ஓ.சி.யில சினிமாப் பாக்க முடியாதே?' என்கிற துக்கத்தில் துவண்டு போய் நின்றேன்.

# 2. கிண்டல் பதில்!

"இனிமே நீ முறுக்கு விக்க வேணாம்னு கொட்டகை முதலாளி சொல்லீட்டாரே..." என விக்கித்துப் போய் நின்றேன்.

ஆனால் அவர் என்னை விலக்கி வைக்கவில்லை. சினிமா கொட்டகை சார்ந்தே வேறொரு வேலை தந்தார். சிரமமான வேலை என்றாலும் சினிமாவை தினமும் பார்க்கும் பாக்கியம் இருக்கே... மகிழ்ந்துபோனேன்.

கொட்டகையில் என்ன படம் நடக்கிறதோ... அந்தப் படத்தின் போஸ்டர் ஒட்டப்பட்ட தட்டியை நாங்கள் தோளில் வைத்துக்கொண்டு நடக்கவேண்டும். எங்களுக்கு முன் எங்களுக்கான லீடர், படம் பற்றிய பிட் நோட்டீஸை மக்களுக்கு விநியோகித்தபடியே போவார்.

"கோபாலா" என கூப்பிடுவார் லீடர்.

"ஏன் சார்?" என நாங்கள் பதிலுக்குக் கேட்போம்.

"கோபாலா!"

"ஏன் சார்...?"

"எங்க போற?"

"சினிமா பார்க்க!"

"என்ன சினிமா?"

"ஆர்யமாலா!"

...இப்படி கோஷமிட்டபடியே எழுமலை, சாப்டூர், பேரையூர், அத்திப்பட்டி என முப்பதிற்கும் அதிகமான சுத்துப்பட்டி கிராமங்களில் சுமார் 15-20 மைல்கள் நடந்து படத்தை விளம்பரம் செய்வோம்.

மாலைக்காட்சி ஆரம்பிப்பதற்குள் மீண்டும் கொட்டகை வந்துவிடுவோம். மாலை, இரவு என இரண்டு காட்சிகளையும் பார்த்துவிடுவேன் நான்.

சிலசமயம் எனது நண்பர்கள் என்னிடம் படத்தின் கதையைக் கேட்பார்கள். காளியம்மன் கோயிலில் உட்கார்ந்து கதை சொல்வேன். ஒரே படத்தையே பல காட்சிகள் நான் பார்ப்பதால் டைட்டிலில் ஆரம்பித்து 'சுபம்' போடும் வரையிலான முழுப் படத்தையும் வாயால்

இசையமைத்து, பாடலையும் பாடி, வசனங்களையும் சொல்லுவேன். நண்பர்களுக்குப் படம் பார்த்த உணர்வை உண்டாக்கிவிடுவேன்.

இப்படித்தான் கதை சொல்லும் அனுபவம் எனக்குள் வந்தது.

15 வயது.

வாலிப வசந்தத்திற்குள் நுழைந்துகொண்டிருக்கிற பருவம்.

மதுரையில் உள்ள திரையரங்குகளில் மட்டுமே புதிய படங்கள் ரிலீஸ் ஆகும்.

சினிமா கதையை சினிமாப் படம் போல் சொல்லும் அனுபவம் எனக்கு இருப்பதால் நண்பர்கள் தங்களுக்குள் ஒரு தொகையை வசூல் செய்து என்னிடம் கொடுத்து படம் பார்க்க வழியனுப்பி வைப்பார்கள்.

எங்கள் ஊரிலிருந்து மதுரை போய்வர காலையில் ஒருமுறை மட்டுமே 'சங்கர் டிரான்ஸ்போர்ட்' பஸ் வந்துபோகும்.



காலையில் பஸ் ஏறி மதுரையில் இறங்குவேன். சனி, ஞாயிறுகளில் மட்டுமே அப்போது மேட்னி ஷோ உண்டு. அதனால் அந்தக் கிழமைகளில்தான் மதுரை வருவேன்.

நண்பர்கள் கொடுத்த காசில் மத்தியான ஆட்டம் படம் பார்ப்பேன். முடிந்ததும் எதையாவது சாப்பிட்டுவிட்டு மாலைக் காட்சி பார்ப்பேன். மறுபடி நைட் ஷோ பார்த்துவிட்டு பஸ் நிலையத்தில் (இப்போது பெரியார் பஸ் ஸ்டாண்ட்) படுத்துத் தூங்குவேன். அதிகாலையில் பஸ் ஏறி ஊருக்கு வருவேன்.

பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்திருக்கும் என் நண்பர்கள், நான் பஸ்ஸை விட்டு இறங்கியதுமே ஆர்வமாக என்னைச் சூழ்ந்துகொண்டு காளியம்மன் கோயிலுக்கு கூட்டிப் போய்விடுவார்கள்.

மூன்று காட்சிகளும் பார்த்திருப்பதால் காட்சி பிசகாமல் வாயால் படம் ஓட்டுவேன். திருப்பங்களுடன் கூடிய பிடித்தமான அம்சங்கள் இருந்தால் மறுவாரம் அவரவர் செலவில் நண்பர்கள் மதுரைக்குப் போய் படம் பார்ப்பார்கள். பிடித்தமில்லாத கதையாக இருந்தால் "நம்மூரு கொட்டகைக்கி இந்தப் படம் வந்தா பாத்துக்கலாம்'" எனச் சொல்லி மதுரை விஜயத்தை கேன்சல் செய்து விடுவார்கள்.

19 வயது. வாட்டசாட்டமான வாலிபனாக நிற்கிறேன். இந்த வயதிற்குள் சுமார் ஐயாயிரம் காட்சிகள் பார்த்திருப்பேன். எனக்குள் ஒரு திரைக்கதையாசிரியன் உருவாகிவிட்டான்.

அந்தச் சமயத்தில் பி.யூ.சின்னப்பா, எம்.கே.தியாகராஜ பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன், 'காளி' என்.ரத்னம், டி.ஏ.மதுரம், ராஜகாந்தம், டி.எஸ்.துரைராஜ், வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஒய்.வி.ராவ் (நடிகை லட்சுமியின் தந்தை), ஹொன்னப்பா பாகவதர் மற்றும் வசுந்தராதேவி (வைஜெயந்திமாலாவின் அம்மா) உள்ளிட்ட நட்சத்திரங்கள் முன்னணியில் இருந்தார்கள்.

அவர்களின் படங்களைப் பார்த்து நண்பர்களிடம் பேசி, நடித்துக் காட்டிக்கொண்டிருந்தேன்.

"ஏண்டா பாலு... நீதான் நல்லா நடிச்சுக் காமிக்கிறியே... ஏன் நீ சினிமாவுல சேரக்கூடாது?" என நண்பர்கள் சொல்ல... உள்ளே இருந்த கலைச்சுடர் மேலும் பிரகாச மானது. குண்டூசி, பேசும் படம் சினிமா பத்திரிகைகளில் வரும் செய்திகளைத் திக்கித் திணறி, எழுத்துக் கூட்டிப் படிப்பேன். சிலசமயம் என் நண்பர்கள் படித்துச் சொல்லு வார்கள். அந்தப் புத்தகங்களில் சினிமா நட்சத்திரங்களின் அட்ரஸ் போடுவார்கள்.

"நான் உங்கள் படத்தில் நடிக்க விரும்புகிறேன். எனக்கு வாய்ப்புத் தரவும். உங்கள் பதில் கண்டதும் உடனே மெட்ராஸ் புறப்பட்டு வருகிறேன்" என பல நட்சத்திரங் களுக்கு நண்பர்கள் மூலம் கடிதம் போட்டேன். எந்த நட்சத்திரத்திடமிருந்தும் பதில் வரவில்லை.

நாட்கள் ஓடின. அஞ்சலிதேவி புகழ்பெறத் தொடங்கி, தயாரிப்பு நிறுவனமும் ஆரம்பித்தார். அவருக்கு கடிதம் எழுத முடிவானது.

"ரிப்ளை கார்டு வச்சு லெட்டர் போட்டா கண்டிப்பா பதில் வரும்டா" என நண்பன் சொன்ன ஆலோசனைப்படி கடிதம் போட்டேன். பதில் வந்தது. பறப்பது மாதிரி இருந்தது. 'என்ன எழுதியிருக்காரோ அஞ்சலிதேவி' என்கிற படபடப்பும் இருந்தது. கடிதத்தை எடுத்துக்கொண்டு நண்பர்களுடன் காளியம்மன் கோயிலை அடைந்தோம். நண்பன் படித்தான்.

"உங்கள் கடிதம் பார்த்தோம். சந்தோஷம். உங்களுடைய ஆசையை நிறைவேற்ற முடியாததற்கு வருந்துகிறோம்."

இங்ஙனம்,

**மேனேஜர்**

கடிதம் கண்டு நான் கலங்கிப்போனேன். வாய்ப்புத் தர முடியாததை அஞ்சலிதேவியே எழுதியிருந்தாலாவது ஆறுதலா இருக்கும். மேனேஜரல்லவா எழுதியிருக்கிறார். அது எனக்கு கூடுதல் சோகத்தை உண்டாக்கிவிட்டது.

நன்றாக கதை சொல்கிறேன், பாடுகிறேன், நன்றாக நடிப்பதாக நண்பர்கள் சொல்கிறார்கள், பார்க்க நல்ல உடற்கட்டோடும் இருக்கிறேன்... எனக்கு ஏன் சினிமா வாய்ப்பு கிடைக்கவில்லை.

"கிடைக்கவில்லை என்பதற்காக விட்டுவிட முடியுமா? இனி நட்சத்திரங்களுக்கு கடிதம் எழுதக்கூடாது. ஸ்டுடியோக்களுக்கு கடிதம் எழுதலாம்" என தீர்மானித் தேன்.

சினிமா சான்ஸ் கேட்க போட்டோ எடுத்து அனுப்ப வேண்டும் என்கிற யோசனை எனக்குப் புலப்படவில்லை. அதேசமயம் என் தோற்றத்தை எழுத்தின் மூலம் நிறுத்த வேண்டும். அதன்படியே சேலம் மாடர்ன் தியேட்டர்ஸிற்கு கடிதம் எழுதினோம்.

"ஐந்தடி உயரம், சிவப்பு நிறம், அடர்ந்த முடி, அகன்ற நெற்றி, நல்ல பல் வரிசை, எடுப்பான மூக்கு... இப்படி எல்லாப் பொருத்தமும் உள்ள எனக்கு நடிக்க வாய்ப்புத் தரவேண்டும்" என கடிதத்தில் விபரம் சொல்லி அனுப்பினோம்.

மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து பதில் வந்தது.

அதே பரபரப்பு... படபடப்பு... அதே நண்பர்கள்.... அதே கோயில். கடிதத்தைப் படித்தான் நண்பன்.

"கடிதத்தை மிகவும் உன்னிப்பாகப் படித்தோம். உங்களுக்கு நூற்றுக்கு நூறு பொருத்தம் இருக்கு. இப்படிப்பட்ட 'பாடி' அமைப்பு கொண்ட நீங்கள் மிலிட்டரி யில் சேர்ந்துவிடுங்கள்!"

வந்த பதில் வருத்தப்பட வைத்தாலும் வாடிப் போய்விடவில்லை.

மெட்ராஸ் கிளம்ப முடிவு செய்தேன்.

அங்கே போனதும் அஞ்சலிதேவி வீட்டுக்குப் போக வேண்டும்.

அஞ்சலிதேவி வீட்டில் என்ன செய்யவேண்டும் என ஒரு மாஸ்டர் பிளானும் ரெடி.

# 3. பால்கனி பரவசம்!

"நெஜமாவே மெட்ராஸ் போகப்போறியா பாலு?"

"ம்..."

அந்தக் காலத்தில் 'மதுரை பார்க்காதவன் மாபாவி' எனும் பழமொழி எங்கள் ஊரில் உண்டு. ஊரில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பக்கத்திலிருக்கிற மதுரைக்குப் போனதில்லை. அப்படிப்பட்ட ஊரிலிருந்து நான் மெட்ராஸ் போக முடிவு செய்ததால் நண்பர்களில் சிலருக்கு வியப்பு.

"எப்படிடா சினிமாவுல சேருவ?"

"ரயிலை விட்டு இறங்கியதும் முதல் வேலையா அஞ்சலிதேவி வீட்டுக்குப் போவேன். கெஞ்சிக் கூத்தாடி அஞ்சலிதேவி வீட்டுப் பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றும் வேலையைப் பெறுவேன். நீரூற்றும்போது பாடல்களைப் பாடுவேன். ஒருநாள் என் பாட்டு அஞ்சலிதேவியின் காதில் விழும்.

'அட... என்ன ஒரு தெய்வீக கானம். நீயாடா தம்பி இந்தப் பாடலைப் பாடினாய்?' என வியந்துபோகும் அஞ்சலிதேவி என்னை சினிமாவில் சேர்த்துவிடுவார்." இதுதான் பிளான்.

"மெட்ராஸ் போக ரொம்பக் காசு தேவைப்படுமே? என்ன பண்ணப் போறே?"

என் அண்ணன் ஆர்.எம்.கிருஷ்ணசாமி ரைஸ்மில்லில் உதவி கணக்கராக வேலை பார்த்து வந்தார். வீடு ஒன்றை

ஒத்திக்கு (லீஸ்) வாங்க சிறுகச் சிறுக அவர் சேர்த்து வைத்திருந்த நூறு ரூபாயை எடுத்துக்கொண்டேன்.

மெட்ராஸில் பிக்பாக்கெட் திருடர்கள் அதிகம் என கேள்விப்பட்டிருந்ததால் டெய்லரிடம் போய்... கோவணத்தில் சின்னதாக ஒரு பாக்கெட்டும், அதை மூட அமுக்குப்பட்டனும் தைத்து வாங்கிக்கொண்டேன்.

90 ரூபாய் கோவண பாக்கெட்டில். ரயில் டிக்கெட் 6 ரூபாய். நாலு ரூபாய் சட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன். ஏகப்பட்ட கனவுகளுடன்

ரயிலில் ஏறி அமர்ந்தேன்.

மதுரையை விட்டு வேகமெடுத்தது ரயில்.

நாடு சுதந்திரம் பெற்று இரண்டாண்டுகள்தான் ஆகியிருந் தன. நெரிசல் இல்லாத நகரமாக இருந்தது மெட்ராஸ். எக்மோர் ரயிலடியை விட்டு வெளியே வந்ததும் அஞ்சலி தேவியின் வீட்டுக்கு எப்படிப் போவது என்பது பற்றி எதிர்ப்பட்டவர்களிடம் விசாரித்தேன். சரியான பதில் கிடைக்கவில்லை. தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா, அன்றைய 'கவர்ச்சிக்கன்னி' டி.ஆர்.ராஜகுமாரி ஆகியோரின் வீடுகளை மட்டுமே தரிசிக்க முடிந்தது. பகலில் அலைச்சல். இரவில் பிளாட்பாரத்தில் தூக்கம் என நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன.

திரையில் பார்த்த நட்சத்திரங்களில் யாரையாவது நேரில் பார்த்துவிடலாம்... என்கிற ஆசையில் ஜெமினி ஸ்டுடியோ வந்தேன். இப்போது ராணி சீதை ஹால் இருக்கும் இடத்திற்கு எதிரில் ஸ்டுடியோவின் நுழைவுவாயில் இருந்தது. ரொம்ப நேரம் அங்கே நின்றிருந்தேன். யாரையும் பார்க்க முடியவில்லை. இந்தியில் திட்டி விரட்டினார் வாட்ச்மேன். ஏமாற்றமும், சலிப்புமாக நடந்தே மைலாப்பூர் வந்தேன்.



ஆஞ்சநேயர் கோயில் எதிரே ஒரு வீட்டின் முன்பு கூட்டமாக நின்றிருந்தார்கள். விசாரித்தபோது... அது டி.ஆர்.மகாலிங்கம் வீடு எனச் சொன்னார்கள். தியாகராஜ பாகவதர் மற்றும் என்.எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்டவர்கள் பற்றி பத்திரிகையாளர் லட்சுமிகாந்தன் சர்ச்சைக்குரிய செய்திகளை வெளியிட்டு வந்தார். ஏதோ ஒரு காரணத்தால் லட்சுமி காந்தன் கொலை செய்யப்பட, பாகவதரும், என்.எஸ்.கே.வும் அந்த வழக்கில் சிக்கிக்கொண்டனர். இதனால் பாகவதர் புகழ் மங்கி வந்தது. பாகவதர் போலவே பாடும் திறன் கொண்ட டி.ஆர்.மகாலிங்கம்,

'ஸ்ரீவள்ளி', 'நாம் இருவர்' படங்கள் மூலம் சினிமா மார்க்கெட்டைப் பிடித்திருந்தார். அதனால் தினமும் ஓரிரு முறை தன் வீட்டு பால்கனியில் நின்று ரசிகர்களைப் பார்த்து கையசைப்பாராம் டி.ஆர்.மகாலிங்கம்.

'மகாலிங்கம் நம்ம மாவட்டத்துக்காரராச்சே. (சோழவந்தான்) அவரைப் பார்த்துப்புடணும்' என்ற ஆவலில் கூட்டத்தில் ஒருவனாக பால்கனியைப் பார்த்தபடி நின்றிருந்தேன்.

அப்பப்பா... என்னவொரு பரவசம். நடிகை எஸ்.வரலட்சுமியுடன் ஜோடியாக பால்கனியில் தோன்றிய மகாலிங்கம் கூட்டத்தைப் பார்த்து கையசைத்தார். வரலட்சுமியும் கையசைத்தார். சில நிமிடங்களுக்குப் பின் உள்ளே சென்றுவிட்டார்கள். ஏதோ சாதித்துவிட்ட திருப்தியில் கூட்டம் கலைந்தது.

டி.ஆர்.மகாலிங்கம், எஸ்.வரலட்சுமி குறித்து சுவாரஸ்யமான செய்திகள் உண்டு. ஒலிபெருக்கி இல்லாமலேயே கிலோமீட்டர் தாண்டி ஒலிக்கும்படி பாடும் வல்லமை பெற்றவர் கிட்டப்பா பாகவதர். அதே திறமை கொண்ட மகாலிங்கம், கிட்டப்பாவின் புகழை எட்டினார் நாடக உலகில். இப்படி இசையால் சினிமாவில் ஹீரோவானார். இதே இசைத்திறமை எஸ்.வரலட்சுமிக்கும் உண்டு. இருந்தாலும் திரையுலகம் அவரை கதாநாயகியாக்கவில்லை. கேரக்டர் ஆர்ட்டிஸ்ட் டாகவே வந்தார். கற்றாரை கற்றார் காமுறுவதுபோல்... இவர்கள் இருவரும் இசையால் நட்பு வயப்பட்டார்கள். தனது மகன் பெயரில் 'சுகுமார் புரொடக்ஷன்ஸ்' எனும் நிறுவனத்தை தொடங்கி ''மச்ச ரேகை' படத்தை தயாரித்து நாயகனாக நடித்த மகாலிங்கம் அதில் எஸ்.வரலட்சுமியை கதாநாயகியாக்கினார். படம் தோல்வி. மீண்டும் 'மோகன சுந்தரம்' படத்தை தயாரித்து வரலட்சுமியை ஜோடியாக்கி னார். இதுவும் தோல்வி. மீண்டும் வரலட்சுமியை ஜோடியாக்கி 'சின்னத்துரை' படத்தை தயாரித்தார் மகாலிங்கம். இதுவும் தோல்விதான்.

இப்படியிருந்தது அவர்கள் நட்பு. மகாலிங்கம் வீட்டிலேயேதான் வரலட்சுமி இருப்பார். திருமதி மகாலிங்கமும் மனப்பூர்வமாக வரலட்சுமியை மதித்தார்.

ஆனாலும் இவர்களைப் பற்றி அப்போதைய சினிமா பத்திரிகைகள் கிசுகிசு எழுதவில்லை. காரணம்... 'லட்சுமிகாந்தன் கொலை' பாதிப்புதான்.

பின்னாளில் எஸ்.வரலட்சுமி, 'என் வாழ்க்கையில் நான் சந்தித்ததெல்லாம் துரோகமும், ஏமாற்றமும்தான்' என என்னிடம் மனம்விட்டுப் பேசுவார்

என்றோ... மகாலிங்கத்திடம் கடனை வசூலிக்க நான் போவேன் என்றோ... அப்போது நினைத்தாவது பார்த்திருக்க முடியுமா? அதையெல்லாம் அந்தந்த சமயங்களில் சொல்கிறேன்

'மச்சரேகை'யில் இருவரும் நடித்துக்கொண்டிருந்த சமயத்தில்தான்... பால்கனில் அவர்களைப் பார்க்கிறேன். ஒரு தேவகுமாரனை ஒரு தேவதையுடன் சேர்த்து பார்த்துவிட்ட பிரம்மை எனக்கு. முதன்முதலாக நான் நேரில் தரிசித்த நட்சத்திரங்கள் இவ்விருவரும்தான்.

டி.ஆர்.மகாலிங்கம் வீட்டிற்குள் சர்வசாதாரணமாக போய் வந்துகொண்டிருந்தார் ராமதாஸ் எனும் இளைஞர். அவர் ஒரு படத்தில் பைத்தியக்காரனாக நடித்திருக்கிறார். அதனால் அவரிடம் "நீங்க நடிச்ச படத்தைப் பார்த்திருக் கேன். எனக்கும் சினிமாவுல சான்ஸ் வாங்கிக் குடுங்க'" என்றேன்.



"முதல்ல நீ எனக்கு டிபன் வாங்கிக் குடு" என்றார். லஸ் கார்னருக்கு வந்தோம். இருவரும் ஹோட்டலில் சாப்பிட்டோம். கோடம்பாக்கம் போவதற்காக பஸ் ஏறினோம்.

அப்போதெல்லாம் மைலாப்பூரிலிருந்து பனகல் பூங்கா வரும் பஸ் அப்படியே பாண்டி பஜார் வழியாக திரும்ப மைலாப்பூர் செல்லும். உஸ்மான் ரோட்டில் பஸ் வராது. இறங்கி நடந்தோம். அங்கொன்றும் இங்கொன்றுமாய் வீடுகள் இருந்தன. கோடம்பாக்கம் 'பெரிய கேட்' எனப்படும் ரயில்வே கேட் வந்து சேர்ந்தோம். (அப்போது மேம்பாலம் கிடையாது.) ரயில்வே கேட் அடைக்கப்பட்ட சமயம் காரில் காத்திருக்கும் நட்சத்திரங்களைப் பார்க்க வென்றே ஒரு கூட்டம் கூடுவது வழக்கம்.

பெரிய கேட் அருகே உயரமான இடத்தில் ஏறிய ராமதாஸ் என்னையும் ஏறச் சொன்னார்.

''அதோ... தூரத்துல ஒரு கோயிலோட சின்ன கோபுரம் தெரியுதா? அதைத்தாண்டி போனா அங்க ஒரு ஸ்டுடியோ இருக்கு. அங்க நடிக்கிறதுக்கு ஆள் எடுப்பாங்க. குதிரை வண்டி புடுச்சு போய்க்கோ'' எனச் சொல்லிவிட்டு ராமதாஸ் கிளம்பிவிட்டார். அப்போது எங்கு பார்த்தாலும் ஏரியும், முட்செடியுமாக இருந்தது. வீடுகளே இல்லை. இந்த இடம் ஆற்காட்டு நவாப் காலத்தில் 'கோடாபாத்' என்று பெயர் பெற்றிருந்தது. இது உருது சொல். 'கோடாபாத்' என்றால் 'குதிரை கட்டும் இடம்' என அர்த்தமாம். கோடாபாத்தான் காலப்போக்கில் மருவி கோடம்பாக்கம் ஆனது.

பெரிய கோபுரம் கட்டப்படாத வடபழனி கோயிலும் அதைத்தாண்டி இருந்த வாஹினி ஸ்டுடியோவையும்தான் ராமதாஸ் குறிப்பிட்டார். இப்போது சேகர் எம்போரியம் இருக்கும் இடத்தில் குதிரை வண்டி ஸ்டாண்ட் இருந்தது. பத்து நிமிஷத்தில் அங்கு போய்விடலாம் இப்போது. அப்போது... அடர்ந்த காடுகளும், ஏரியுமாக மிரட்சி

உண்டானதால் பயம் உண்டாகியது. 'காலையில் அங்கே போய்க்கொள்ளலாம்' என திரும்பி நடந்தேன்.

பனகல் பார்க்கில் பிராமணர்கள் சிறு குழுவாக அமர்ந்து ரேடியோவில் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுடன் உட்கார்ந்துவிட்டேன். இரவானதும் பூங்கா காவலாளி எல்லோரையும் வெளியேறச் சொன்னார். அப்படியே நடந்து பாண்டி பஜார் வந்தேன். 'கனவுக் கன்னி' டி.ஆர்.ராஜகுமாரியின் ''ராஜகுமாரி' தியேட்டர் கட்டப்பட்ட புதுசு. 'இந்து' பேப்பர் ஒன்றை வாங்கி பக்கத்திலிருந்த பிளாட்ஃபார்மில் விரித்து படுத்துக் கொண்டேன்.

நள்ளிரவில் அலறல் சத்தம். பதறி எழுந்தேன். பிளாட்ஃபார்மில் படுத்திருந்தவர்களை போலீஸார் அடித்து விரட்டிக்கொண்டிருந்தார்கள். தலைதெறிக்க ஓட்டம் பிடித்தேன். ஓட்டல் ஒன்றின் பின்புறம் போய் பதுங்கினேன். (பின்னாளில் விஜயகாந்த்தின் அலுவலகம் இருந்த ராஜாபாதர் தெரு) எச்சில் இலை கொட்டும் தொட்டி மறைவில் விடிய விடிய தூங்காமல் உட்கார்ந்திருந்தேன்.

விடிந்தது.

நடந்தே வாஹினி ஸ்டுடியோ வந்துசேர்ந்தேன். அப்போதெல்லாம் சினிமா அமைப்புகள் இல்லை. தேவையான துணை நடிகர்களை ஸ்டுடியோ நிர்வாகமே ஏற்பாடு செய்துகொள்ளும். கூட்டம் கூட்டமாக மக்கள் நிற்கும் காட்சிக்காக டோக்கன் கொடுத்து ஆட்களை உள்ளே அனுப்பினார்கள்.

என் முறை வரும்போது 'டோக்கன் தீர்ந்துப் போச்சு' எனச் சொல்லி கவுன்ட்டரை மூடிவிட்டார்கள்.

கடிதம் எழுதி சான்ஸ் பிடித்து கதாநாயகனாகிவிடலாம் என நினைத்தேன். ஆனால் நான் நினைத்தது போல் சினிமா லேசுப்பட்டதாக இல்லை. நானும் லேசில் விடுவதாக இல்லை.

மாடர்ன் தியேட்டர்ஸில் சான்ஸ் பிடிக்க சேலத்துக்கு பயணமானேன்.

# 4. அடி வாங்காமல் காப்பாற்றிய சின்னப்பா!

எட்டு நாட்களாக குளிக்காத நான் கட்டியிருந்த அதே வேஷ்டி-சட்டையுடன் சேலம் நகருக்குள் இருந்த மாடர்ன் தியேட்டர்ஸின் ரிகர்ஸல் ஹால் வாசலில் வந்து நின்றேன். மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோ நகருக்கு வெளியே இருந்தது. மறுநாள் எடுக்கப்படவிருக்கும் காட்சிகளுக்கான ஒத்திகை முதல்நாள் நடக்கும். அதற்காக கம்பெனி பஸ்ஸில் நட்சத்திரங்கள் ரிகர்ஸல் ஹாலுக்கு வருவார்களாம்.

'மாடர்ன் தியேட்டர்ஸ்' டி.ஆர்.சுந்தரம் அப்போது 'பொன்முடி' படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். பாரதிதாசன் எழுதிய கவிதை நடை கதையான ''எதிர் பாராத முத்தம்' தான் பாரதிதாசன் வசனத்தில், எல்லீஸ் ஆர்.டங்கன் இயக்கத்தில் 'பொன்முடி'யாக உருவாகிக் கொண்டிருந்தது.

நான் அங்கே நின்றிருந்த நேரம்... கம்பெனி பஸ் வந்து நின்றது. ஒத்திகைக்காக பி.வி.நரசிம்மபாரதி, மாதுரிதேவி நட்சத்திர ஜோடி வந்திறங்கினார்கள். அவர்களைப் பார்த்ததும் எனக்குள் மின்னல் வெட்டியதுபோல் ஒரு சந்தோஷ தாக்குதல். வாட்டசாட்டமாக பாகவதர் கிராப்புடன் கம்பீரமாக இருந்தார் நரசிம்மபாரதி. இதமான சூரிய வெளிச்சம் போல் மின்னும் மேனியழகுடன் இருந்தார் மாதுரிதேவி.

இன்னும் சில மாதங்களில் 'பொன்முடி' ரிலீஸ் ஆகி... தமிழ்நாடு முழுக்க இந்த நட்சத்திர ஜோடியைப் பற்றி கிளுகிளுப்பான ஒரு சர்ச்சை நிலவும் என்று அந்த நட்சத்திர ஜோடிக்கே அப்போது தெரிந்திருக்காதுதான்.

'பொன்முடி' சர்ச்சையையும், பின்னாளில் நான் நரசிம்மபாரதியுடன் நட்பானதையும், அந்த சர்ச்சைக்கு நரசிம்ம பாரதி கொடுத்த விளக்கத்தையும் விரிவாகவே சொல்கிறேன்.

'பொன்முடி' படத்தின் கடற்கரை டூயட் பாட்டு ஒன்றில் நரசிம்மபாரதியும், மாதுரிதேவியும் ரொம்பவே அந்நியோன்யமாக நடித்திருந்தார்கள். இன்றைக்கு காதல் அந்நியோன்யம் என்பது சினிமாவில் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் இந்த கெமிஸ்ட்ரி அப்போதே திரையில் வந்ததால் திகுதிகுவெனப் பற்றியது. மாடர்ன் ஸ்டுடியோவிலேயே கடல் மணலைப் பரப்பி பீச் செட் போட்டு படமாக்கியிருந்தார்கள்.

'பொன்முடி' தமிழ்ப்படம். ஆனால் தமிழ்க் கலாச்சாரத்திற்கு ஏற்ற மாதிரி எடுக்கப்படவில்லை. மேல்நாட்டுக்காரரான டங்கன் மேல்நாட்டு கலாச் சாரத்தில் தமிழ்ப் படத்தை எடுப்பதா?' என பத்திரிகைகள் கண்டித்தன. மறுபுறம் 'ஒரிஜினல் காதலர்களைப் போல் நடித்திருக்கிறார்கள். காதல் காட்சிகள் கவிதையாக உள்ளன' என பாராட்டும் கிடைத்தது. என்னைப் போன்ற அன்றைய இளைஞர்கள் படம் பார்த்து கிளுகிளுத்துப் போனார்கள். இந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் ஜே.ஜி.விஜயனுக்கு விருதுகளும் கிடைத்தன. இப்படி... 'பொன்முடி' சலசலப்பை உண்டாக்கியது 1950-ல்.

1962-ல் நரசிம்மபாரதியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. தியாகராஜ பாகவதரை வைத்து 'அசோக்குமார்', பி.யூ.சின்னப்பாவை வைத்து 'ரத்னகுமார்' என வெற்றிப் படங்களைத் தந்த 'முருகன் டாக்கீஸ்' எஸ்.எம்.எஸ்.சுந்தரராம அய்யர் மீண்டும் படம் தயாரிக்க வந்தார். அவரது நிறுவனத்தில் தயாரிப்பு உதவி நிர்வாகியாகவும், கார் டிரைவராகவும் நான் வேலைக்குச் சேர்ந்தேன். என் முதலாளி சுந்தரராம அய்யரைப் பார்க்க நரசிம்மபாரதி வருவார். அதோடு நரசிம்மபாரதி குடியிருந்த மந்தைவெளியில்தான் நானும் இருந்தேன். இதனால் அவருடன் நட்பு உண்டானது.

"இன்னைக்கி சினிமாவுல கட்டிப்பிடிச்சு நெருக்கமா நடிக்கிறது சாதாரணமாப் போச்சு. ஆனா அன்னைக்கே எப்படி மாதுரிதேவி கூட கிளுகிளுப்பா நடிச்சீங்க? அந்தம்மாவும் எப்படி சம்மதிச்சாங்க?" எனக் கேட்டேன்.

"டைரக்டர் எல்லீஸ் ஆர்.டங்கன் ஸ்ட்ரிக்ட்டானவர். மனசுல நினைச்சதை ஃபிலிம்ல கொண்டு வராம விடமாட்டார். இதெல்லாம் தெரிஞ்சுதான் படத்துல நடிச்சோம். டங்கன் என்ன சொன்னாரோ... அதைத்தான் நாங்க செஞ்சோம்" என விளக்கம் சொன்னார் நரசிம்மபாரதி.

மீண்டும் ரிகர்ஸல் ஹாலுக்கே வருகிறேன். நரசிம்ம பாரதியையும், மாதுரி தேவியையும் நேரில் பார்த்துவிட்ட திருப்தி கிடைத்தது. ஆனால்..., வாய்ப்பு வாங்கி விடணும் என கிளம்பியபோது இருந்த வீராப்பு இப்போது என்னிடம் இல்லை. ஒருவித தாழ்வுணர்ச்சி காரணமாகவும், ரிகர்ஸல் ஹால் ஆபீஸிற்குள் நுழைய நான் முயற்சி செய்யவில்லை.

நான் சென்னையில் இருந்தபோதே பி.யூ.சின்னப்பாவைப் பார்க்க கெல்லீஸில் இருந்த அவரின் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் தன்

சொந்த ஊரான புதுக்கோட்டைக்கு போயிருப்பதாகச் சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது.



நான் பி.யூ.சின்னப்பாவின் ரசிகன். காரணம் அவர் அன்றைய 'வீரதீர'மான ஆக்ஷன் ஹீரோ. 'மங்கையற்கரசி' படத்தில் தாத்தா, அப்பா, மகன்... என மூன்று கேரக்டரில் வசீகரித்திருந்தார். இந்தப் படத்தில் கவிஞர் சுரதா எழுதிய 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' எனும் வசனம் இன்றளவும் அரசியல் அரங்கில் பேசப்படுகிறது. இதேபோல் 'உத்தமபுத்திரன்' படத்தில் இரட்டை வேட நடிப்பில் அற்புதம் நிகழ்த்தியிருப்பார் சின்னப்பா.

இன்று சினிமா உலகில் பிரமாண்டம் என்பது முக்கியமாகப் பேசப்படுகிறது. இதென்ன பிரமாண்டம்... சின்னப்பா நடித்த 'ரத்னகுமார்' படத்தின் விளம்பரத்திற்காக தயாரிப்பாளர் எஸ்.எம்.எஸ். சுந்தரராம

அய்யர் பிரமாண்டமே நிகழ்த்தினார். நான் அப்போது ஊரில் இருந்தேன். மதுரையைச் சுற்றிலும் ஒரு விமானம் தாழ்வாகப் பறந்தது. விமானத்திலிருந்து "ரத்ன குமார்' படத்தின் பிட் நோட்டீஸ் போடப்பட்டது. அது மட்டுமில்லாமல் ஒரே ஊரில் இரண்டு தியேட்டர்களில் ஒரே படம் வெளியாகும் ட்ரெண்ட்டையும் சின்னப்பாவின் படம் தொடங்கி வைத்தது. மதுரையில் இரண்டு தியேட்டரில் வெளியானது. அதனால் சின்னப்பா மீது தீராத காதல்.

சேலத்திலிருந்து கிளம்பி புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தேன்.

'ஐயாவைப் பார்க்கணும்' என்றேன் -ஆர்வத்துடனும், அச்சத்துடனும், குளிக்காத அழுக்குடனும்.

'ஒரே கேள்வி'ங்கிற நாடகம் போடுறதுக்காக வெளியூர் போயிருக்காரு. வர்றதுக்கு ஒரு வாரம் ஆகும்!' என்றார்கள் சின்னப்பா வீட்டிலிருந்தவர்கள். தங்கியிருந்து அவரை தரிசித்து விட வேண்டும் என முடிவு செய்தேன். எங்கே தங்குவது?

என் சித்தப்பாவின் மனைவியுடன் பிறந்தவர் தர்மு அம்மா. அவரை நான் பார்த்ததில்லை. ஆனால் அவர் குடும்பம் புதுக்கோட்டையில் இருக்கிறது என்பது தெரியும். பிரபலமில்லாத ஒருவரை முகவரி இல்லாமல் எப்படி கண்டுபிடிப்பது?

ஊர் முழுக்க பெண்கள் தண்ணீர் பிடிக்கும் குழாயடிகளுக்குச் சென்று "செல்லி தங்கச்சி தர்மு' என விசாரித்தேன். அந்தப் பெயரில் வேறு சில பெண்களைப் பார்த்தேன். கடைசி முயற்சியில் அவர் வீட்டைக் கண்டுபிடித்து விட்டேன்.

என் அப்பாவின் மரணச் சேதியே சில மாதங்களுக்குப் பிறகுதான் அவரை எட்டியதாம். என்னைப் பார்த்ததும் பழைய விஷயங்களைச் சொல்லிக் கதறி அழுதார். அவர் வீட்டிலேயே தங்கியிருந்து தினசரி சின்னப்பா வீட்டுக்குப் போய் வந்தேன். சொன்னமாதிரியே ஒரு வாரம் கழிந்து சின்னப்பா வீடு திரும்பியிருந்தார்.

"ஐயா"

"என்னப்பா?"

"சினிமாவுல சேர ஆசையா இருக்கேன். நீங்கதான் என்னை சேர்த்து விடணும்"

"நாடகத்துல நடிச்சிருக்கியா?"

"இல்லய்யா"

"சினிமாவுல ஒரு வரி வசனம் பேசுற வேஷத்துக்குக் கூட நாடக நடிகர்களைத்தான் தேடிப் பிடிச்சு போடுவாங்க. நாடக அனுபவம் வேணும் உனக்கு. நல்லா டிரெய்னிங் எடுத்திட்டு வா. சினிமாவுல உனக்கு வேஷம் வாங்கித் தர்றேன்" என என்னை உற்சாகப்படுத்தி அனுப்பினார்.

திருடிய நூறு ரூபாயுடன் சென்னை கிளம்பிய நான் சேலம்-புதுக்கோட்டை சுற்றி ஐம்பது ரூபாய் மீதத்துடன் ஊர் திரும்பினேன்.

ரூபாயை திருடிச் சென்றதால் கோபத்தில் இருந்த என் அண்ணன் அடிக்கப் பாய்ந்தார்.

"நான் பி.யூ.சின்னப்பாவ பாத்துப் பேசினேன்" எனச் சொன்னதும் ஓங்கிய கையை கீழே இறக்கிய அண்ணன் "நெசமாவாடா?" எனக் கேட்டார்.

சின்னப்பாவை பார்த்ததையும், நாடக அனுபவம் பெறச் சொன்னதையும் அண்ணனிடம் சொன்னேன்.

"என்னப்பா சொல்றீக?" நம்ம பாலகிருஷ்ணன் சின்னப்பாவை பார்த்துப் பேசினானா?' என எங்கள் எழுமலை கிராமமே என்னை ஆச்சர்யமாகப் பார்த்தது.

"இவனுக்கு சினிமாதான்னு முடிவாகியிருந்தா யாரால மாத்த முடியும்?" என மனம்மாறிய அண்ணன், நாடகத்திற்கு தேவையான ஏற்பாடுகளை மளமளவெனச் செய்தார்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் எழுதிய "வாழ்க்கை வாழ்வதற்கே" கதையை நாடகமாகப் போடும் உரிமையை வாங்கி வந்தார் என் அண்ணன்.

அப்போது பிரபல சக்தி நாடக சபா விருதுநகரில் தங்கி நாடகம் நடத்தி வந்தது. அங்கே நாடக ஆசிரியராக இருந்த ஜோதிமாணிக்கம், ஆர்மோனியக் கலைஞர் அனந்தசேகர் ஆகிய இருவரையும் அண்ணன் ஊருக்கு அழைத்து வந்தார்.

நடிக்க வாய்ப்புள்ள வில்லன் வேஷம் எனக்கு எடுத்துக்கொண்டேன். ஹீரோ வேஷத்துக்கு ஆட்கள் கிடைக்காததால் என் அண்ணன் கிருஷ்ணசாமி ஹீரோவானார்.

மனப்பாடம் செய்வதற்காக நாடகப் பாடங்கள் அந்தந்த கேரக்டர்களுக்கு பிரித்துத் தரப்பட்டது. "பாலு... இயல்பிலேயே நீ நல்லா நடிக்கிற. அப்படியே உன் பாணியில் நடி" எனப் பாராட்டிய நாடக ஆசிரியர் எனது வசன உச்சரிப்பைக் கேட்டு சிரித்துவிட்டார். மதுரைக்காரர்களுக்கே உரிய 'ழ'கர 'ள'கர தகராறுதான்.

ஊர் வாசக சாலையில் ஒருவர் தினமும் 'தினத்தந்தி' பேப்பரை எழுத்துக் கூட்டி வாசிப்பார். அவரைப் பார்த்தே நானும் வாசிக்கப் பழகினேன். உச்சரிப்புகளையும் பழகினேன்.

ஒரு வாரம் கழித்து மீண்டும் வந்த ஆசிரியர் என் உச்சரிப்பைப் பாராட்டினார். நாடக அரங்கேற்றம் நடந்தது. எனக்கு பாராட்டு கிடைத்தது. தேனி மாவட்டம் வீரபாண்டி திருவிழாவில் நாடகம் போடவும் வாய்ப்புக் கிடைத்தது.

'சின்னப்பாவால் நான் சினிமாவில் சேருவேன்' என்கிற என் நம்பிக்கையை நசுக்குவதுபோல் வந்தது சின்னப்பாவின் அகால மரணச் செய்தி.

# 5. செட்டியாருக்கு வந்த கோபம்!

என்னைப் போன்ற ரசிகர்களுக்கெல்லாம் பி.யூ.சின்னப்பா உச்ச நட்சத்திரம். ஆனால் எனக்கு அவர் நம்பிக்கை நட்சத்திரம். சொன்னபடி அவர் என்னை சினிமாவில் சேர்த்துவிடுவார் என்கிற நம்பிக்கையில் நாடகம் போட்டேன்.

ஆனால் விதியின் நாடகம் வேறு மாதிரி இருந்தது. எவருமே எதிர்பாராத விதமாக... ஏன்? எமனுமே எதிர் பாராத விதமாக தன் 36 வயதில் அகால மரணமடைந்தார் ஆக்ஷன் ஹீரோ பி.யூ. சின்னப்பா.

நாடகம் மூலம் தனக்குப் பொருளாதார நஷ்டம் உண்டானாலும் கூட, எனக்கு அனுபவம் கிடைப்பதால் என் அண்ணன் நாடகத்தை நடத்தினார். சின்னப்பாவே இறந்துவிட்ட பிறகு எனக்கு யார் வழிகாட்டப் போகிறார்கள்?

அதனால் நாடகம் போடுவதை நிறுத்தினேன்.

1952 இறுதியில் 'பராசக்தி' திரைப்படம் வெளியாகி நாடு முழுக்க புதிய தாக்கத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

1953-ன் தொடக்கத்தில் என் தாயார் 'பராசக்தி' படம் பார்த்துவிட்டு "ஏலே பாலு, அந்தப் படத்துல கெட்ட பூசாரியா நடிச்சிருக்கது நம்ம காமாட்சிப்பா. சின்ன வயசுல மதுரையில எங்க வீட்ல நான் இருந்தப்போ காமாட்சி எங்ககூடத்தான் வெளையாடும். ஒனக்கு ஒண்ணுவிட்ட அண்ணன்தான் காமாட்சி" எனச் சொன்னார். எனக்கு ஆச்சரியம் தாளவில்லை.

"நம்ம அண்ணன் நடிகரா?' என வியந்தேன். ஆனால் அவர் சாதனை படைத்துக்கொண்டிருக்கிற சினிமா படைப்பாளி என்பது அப்போது என் சிற்றறிவுக்கு எட்டவில்லை. "மீண்டும் மெட்ராஸ் போகணும். காமாட்சி அண்ணனைப் பார்க்கணும்" என முடிவு செய்துகொண்டேன்.

உசிலம்பட்டிக்காரரான உசிலை சோமநாதன், நான் நடித்த நாடகங்களைப் பார்த்திருந்ததால் தனது "எழுச்சிக் கனல்' நாடகத்தில் வில்லன் வேஷத்தில் என்னை நடிக்க வைத்தார். (பின்னாளில் "மெட்ராஸ் டூ பாண்டிச்சேரி', 'சாது மிரண்டால்' படங்களின் கதாசிரியர் உசிலை

சோமநாதன்) அந்த நாடகம் காரைக்குடியில் நடந்தது. நாடகம் நடத்தி முடிந்ததும் அங்கிருந்தபடியே மெட்ராஸ் புறப்பட்டேன்.

**1953 ஜூன்.**

'பராசக்தி' படத்தை ஏவி.மெய்யப்ப செட்டியாரும், பெருமாள் முதலியாரும் சேர்ந்து தயாரித்திருந்தனர். அதனால் நேரே ஏவி.எம். ஸ்டுடியோ வந்தேன்.

''பராசக்தி பூசாரி காமாட்சி என்னோட ஒண்ணுவிட்ட அண்ணன். அவர பார்க்கணும்'' என காவலாளியிடம் சொன்னேன்.

''ஒண்ணுவிட்டிருந்தாலும் சரி... ரெண்டுவிட்டிருந்தாலும் சரி... நான் உன்னைய உள்ள விடமாட்டேன்'' என கண்டிப்பு காட்டினார் காவலாளி.

''மெட்ராஸ்ல எனக்கு யாரையும் தெரியாது. நம்பி வந்துட்டேன். கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க'' என அழுகையை அடக்கிக்கொண்டு கெஞ்சினேன். மனமிரங்கியவர், ''இன்னைக்கு அவரு ஸ்டுடியோவுக்கு வரல. ஒண்ணு செய்... வடபழனி கோயிலுக்கு எதிர ஒரு



வெத்தலப் பாக்கு கடை இருக்கு. அந்தக் கடைக்கி அடிக்கடி வந்து போவார். அங்க போய் அட்ரஸ் கேளு'' என்றார் காவலாளி.

நடந்தே வந்து கடைக்காரரிடம் விபரம் சொல்லிக் கேட்டேன்.

''அடிக்கடி வர்றவர்தான். சமீபகாலமா அவரு இங்க வரல. தியாகராய நகர்ல கண்ணம்மாபேட்டை சுடுகாடு ரொம்ப பிரபலம். சுடுகாட்டுக்கு எதிர துக்காராம் தெரு இருக்கு. அங்ஙன போயி விசாரிச்சுக்க...' என்றார் கடைக்காரர். தி.நகர் வந்து சேர்ந்தேன். அப்போது அங்கே பஸ் ஸ்டாண்ட்டோ, போலீஸ் ஸ்டேஷனோ கிடையாது. புதர் மண்டிக் கிடந்தது. அங்கே துக்காராம் என்ற பெயரில் மூன்று தெருக்கள் இருந்தன. குழம்பிப்போய் சுற்றிமுற்றிப் பார்த்தேன். ஒரு டெய்லர் கடையும், வெற்றிலைப் பாக்கு கடையும் இருந்தது.

டெய்லரிடம் 'பராசக்தி பூசாரி வீடு' என இழுத்தேன். என்னைப் பற்றி விசாரித்துவிட்டு காஜா போடும் பையனை ''வாத்தியார் வீட்டுல போய் விவரம் சொல்லிட்டு வாடா' என அனுப்பினார்.

காஜா பையனுடன் ஒரு அம்மா வந்தார். ''ஊரு மதுரையாம். வாத்தியார கேட்டு வந்திருக்காரு' என டெய்லர் சொல்ல... அந்தம்மா என்னை அழைத்துச் சென்றார். திண்ணையில் உட்கார்ந்திருந்த காமாட்சி அண்ணனிடம், 'உங்க சொந்தமாம்' எனச் சொல்லிவிட்டு அந்தம்மா வீட்டுக்குள் போய்விட்டார். நான் கை கட்டி அவர் முன் நின்றேன்.

''யாரு நீ?''

''உங்க தம்பி முறை. பாலகிருஷ்ணன். எழுமலைல வாக்கப்பட்ட பேச்சியம்மா மகன்.''

அதிர்ச்சியும், ஆச்சரியமுமாக என்னைப் பார்த்தவருக்கு கண்கள் கலங்கின. ''என்னையத் தேடியும் ஒரு உறவு இம்புட்டு தூரம் வந்திருக்கே. என்ன விஷயம்?''

''சினிமாவுல நடிக்கணும்.''

''குளிச்சிட்டு டிபன் சாப்பிடு.''

சாப்பிட்டுவிட்டு வந்தேன். நான் காமாட்சி அண்ணன் முன் கைகட்டி நின்றபோது எனது விரலில் இருந்த மோதிரத்தைப் பார்த்திருப்பார் போல.

"பாலு அந்த மோதிரத்தைக் கழட்டு."

கழட்டினேன். அப்போது ஒரு இளைஞர் வந்தார்.

"டேய் கிருஷ்ணாராம்... இதை அடகு வச்சு "கலக்கல்' வாங்கிட்டு வாடா. பாலுவையும் கூட்டிப்போ. இனிமே பாலு அடிக்கடி அங்க போகணும்ல. இடத்த காமிச்சு விட்டுடு."

கிருஷ்ணாராம் என்னைக் கூட்டிக்கொண்டு போனார்.

"கலக்கல்னா' என்ன" என கேட்டேன்.

"சாராயம். அது குடிக்கலேன்னா அவருக்கு கை, கால் நடுங்கும்" என்றார் கிருஷ்ணாராம்.

கண்ணம்மாபேட்டை சுடுகாட்டின் பின்புறம்... அதாவது இப்போது போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் இடத்தில் புதர் மறைவில் சாராயம் காய்ச்சிக்கொண்டிருந்தார்கள். சாராயம் வாங்கிக்கொண்டு திரும்பினோம். சிறிது... தம்ளரில் ஊத்திக் குடித்தார். அதுவரை சோர்ந்திருந்த அண்ணனிடமிருந்து இப்போது கர்ஜனை பிறந்தது. அவர் பேசியதிலிருந்து உருக்கமான ஒரு விஷயத்தையும் தெரிந்துகொள்ள முடிந்தது. ஏழு வயதில் மதுரையை விட்டுக் கிளம்பிய அண்ணன், பல நாடகக் குழுவில் அனுபவம் பெற்றவர். 20 வயதில் முதலியார் சாதி பெண்ணை கலப்புத் திருமணம் (இவர் அகமுடையார் சாதி) செய்துகொண்டு மதுரை வந்தார். ஆனால் அண்ணனின் வீட்டார் அந்தத் திருமணத்தை ஏற்க மறுத்து வீட்டுக்குள் அனுமதிக்கவில்லை.

"இனி நான் சாகிறவரை இந்த மண்ணை மிதிக்க மாட்டேன்" என சத்தியம் பண்ணிவிட்டு வந்துவிட்டார். முதல் மனைவி இறந்து, இரண்டாம் மனைவியை காவேரிப்பாக்கத்தில் குடிவைத்தார். இப்போது பாமா என்கிற பிராமணப் பெண்ணை மூன்றாம் திருமணம் செய்து குழந்தைகளுடன் வசிக்கிறார்.

"மதுரை மண்ணை மிதிக்கமாட்டேன்" என சத்தியம் செய்து 38 ஆண்டுகளுக்குப் பின் நான் அண்ணனை 'தம்பி' என்கிற உறவுடன் சந்தித்ததால்தான் அவருக்கு நெகிழ்ச்சி ஏற்பட்டது.

சாராயத்தால் அண்ணன் உற்சாகம் பெற்றிருந்தபோது ஏவி.எம்.ஸ்டுடியோவிலிருந்து அண்ணனை அழைத்துச் செல்ல ஆஸ்டின் கார் வந்தது. "பாலு... நீயும் வண்டியில ஏறு" என்றார்.

ஏறிக்கொண்டேன்.ஏவி.எம். ஸ்டுடியோ நுழைவு வாயிலில் கார் நுழைந்தபோது... காலையில்

என்னை உள்ளே விட மறுத்த அதே காவலாளி அண்ணனுக்கும் எனக்கும் சல்யூட் போட்டார்.

காரை விட்டு அண்ணன் இறங்கியதும் ஆங்காங்கே உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து நின்று "வாத்தியார் வாத்தியார்..." எனச் சொல்லி வணக்கமிட்டனர். அண்ணன் ஒரு அறைக்குள் போனார்.

"என்னடா இது... ஏவி.எம்.மே மரியாதை செய்யுது. அண்ணன் அம்புட்டுப் பெரிய ஆளா?" என ஆச்சரியப்பட்டபடி அருகே இருந்த புரொடக்ஷன் நிர்வாகியிடம் அண்ணனைப் பற்றி பேச்சுக் கொடுத்தேன்.

"அவரோட தம்பீங்கிற. அவரப் பத்தி எதுவும் தெரியாதா? அவரு ரொம்ப பெரிய ஆளுப்பா. கவி.கே.பி.காமாட்சி சுந்தரம்னா சும்மாவா?" என நிறைய விஷயங்களைச் சொன்னார்.

ஏவி.எம். ஸ்டுடியோ காரைக்குடியில் இருந்த காலகட்டம். 1947-ல் 'நாம் இருவர்' படத்தை ஏவி.மெய்யப்ப செட்டியாரே இயக்கி தயாரித்தார்.

இதில்...

'மகான் காந்தி மகான்'

"இக வாழ்வினிலே ஆனந்தம்

ஈடேறும் காதலே சொந்தம்'

என பிரபலமான பாடல்களை கவி.கே.பி. காமாட்சி சுந்தரம் எழுதியிருந்தார். அதன் பிறகு "வேதாள உலகம்' படத்தை ஏவி.எம். எடுத்தது. இதில் இவர் பாட்டெழுதவில்லை.

காரைக்குடி ஸ்டுடியோ தீ விபத்தில் பாதிக்கப்பட்டதால் சென்னையில் புதிய ஏவி.எம். ஸ்டுடியோ நிர்மாணிக்கப்பட்டது. புதிய ஏவி.எம்.மின் முதல் படம் "வாழ்க்கை.'

வைஜெயந்திமாலா முதன் முதலாக இந்தப் படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இசையமைப்பாளர் ஆர்.சுதர்ஸனம். ட்யூன் ரெடி.

யாரை வச்சு பாட்டெழுதலாம்?' என செட்டியார் கேட்க... தயங்கித் தயங்கி காமாட்சி சுந்தரம் பெயரைச் சொன்னார் சுதர்ஸனம்.

செட்டியாரின் முகம் இறுகுகிறது. ஆனாலும் சுதர்ஸனம், ''காமாட்சி முதன் முதலாக பாட்டெழுதிய ராசியால் ''நாம் இருவர்' படம் பெரும் வெற்றி பெற்றது. அவர் பாட்டெழுதாத ''வேதாள உலகம்' சுமாராத்தான் போச்சு. அதனால் காமாட்சியை ''வாழ்க்கை'ப் படத்திற்கு எழுத வைக்கலாம்'' எனச் சொல்ல...

கோபமான செட்டியார்... ''அந்தக் குரங்கைப் பத்திப் பேசாதே'' எனச் சொல்ல.. ''காமாட்சி எப்படியோ இருக்கட்டும். ஆனா அவரோட அறிவை, திறமையை நாம பயன்படுத்திக்கலாமே'' என மறுபடியும் சுதர்ஸனம் வலியுறுத்தவே...

'நீ பிரியப்பட்டா அந்த குரங்கைப் போட்டுக்கோ' என சம்மதித்துவிட்டுப் போனார் செட்டியார்.

ஏவி.மெய்யப்ப செட்டியாருக்கும் கவி.கே.பி.காமாட்சி சுந்தரத்திற்கும் இடையே அப்படி என்னதான் பிரச்சினை?

ஒரு துணை நடிகையால்தான் பிரச்சினை?

# 6. நடிகையால் வந்த பிரச்சினை!

ஏவி.மெய்யப்பச் செட்டியாருக்கும் கவி.கே.பி.காமாட்சி சுந்தரத்திற்கும் இடையே என்ன பிரச்சினை?

ஏவி.எம். ஸ்டுடியோ காரைக்குடியில் இயங்கி வந்தபோது 'நாம் இருவர்' படத்திற்கு காமாட்சி பாட்டெழுதினார். அப்போது படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த சமயம் துணை நடிகை ஒருவரை அவர் கேலி செய்ததாக யாரோ திருத்தி சொல்லியதைக் கேட்டு செட்டியார் மனவேதனைப்பட்டார். ஏற்கனவே சாராயப் போதையில் சில சலம்பல் சம்பவங்களால் காமாட்சி மீது செட்டியாருக்கு ரொம்ப வருத்தம். இந்த துணை நடிகை பாதிக்கப்பட்ட சம்பவ இடத்தில் காமாட்சியும் இருந்ததால் 'இனிமே உன் சகவாசம் வேணாம்' என காமாட்சியை விரட்டிவிட்டார் செட்டியார். அந்தக் கோபத்தில்தான் காமாட்சி பாட்டெழுதுவதை செட்டியார் விரும்பவில்லை. இசையமைப்பாளர் சுதர்ஸனம் விரும்பியதால் காமாட்சி வரவழைக்கப்பட்டார்.

'வாழ்க்கையில் கூடவா பொய்?' என டி.ஆர். ராமச்சந்திரனிடம் வைஜெயந்திமாலா கோபிக்க... அவரை சமாதானப்படுத்தி உண்மையை விளக்குவது போல் டி.ஆர்.ராமச்சந்திரன் பாடுவார். இதுதான் பாட்டுச் சூழல்.

இரண்டு நாளும் பாட்டெழுத உட்கார்ந்து எழுதாமலே கிளம்பினார் காமாட்சி. மூன்றாம் நாள் காலையிலும் இதே கதை. செட்டியாருக்கு விஷயம் போகிறது. திட்டமிட்டபடி எதையும் செய்து முடிப்பது செட்டியார் பாணி. இரண்டு நாளாக பாட்டு தயாராகாததால் 'துணை நடிகை விஷயத்தை மனசில வச்சு குரங்கு, விளையாட்டு காண்பிக்குதோ' என டவுட் பட்ட செட்டியார் கம்போஸிங் நடக்கிற இடத்திற்குள் நுழைய... ஒருவித பரபரப்பு.

'ட்யூனைப் போடு' என காமாட்சி ஜாடை காட்ட... சுதர்ஸனம் இசைக்கிறார்.

'டடடா டடடா டடடா டடடா

டடடா டடடா டட்டான்டடா'

காமாட்சி வார்த்தைகளை வீசுகிறார்.

'உன் கண் உன்னை ஏமாற்றினால்

என்மேல் கோபம் உண்டாவதேன்

டடடா டடடா டடடா டடடா

டடடா டடடா டட்டான்டா'

'அடடா...' என மெச்சிப்போன செட்டியார், 'யாரோ ஒரு பொண்ணு பேச்சைக் கேட்டு என்னைய விசாரிக்காமலே விரட்டினீர்களே' என்கிற பழைய வருத்தத்தைப் பாட்டில் கொண்டு வந்துவிட்ட காமாட்சியின் திறமையைப் புரிந்து 'என்ன இருந்தாலும் கவிஞன்... கவிஞன்தான். சூசகமா சொல்லிட்டியே' என பாராட்டுகிறார்.

"உன்னை நான் வெளியேத்தினதுக்கு உன்னோட குடிப்பழக்கமும் ஒரு காரணம். இருந்தாலும் உன் திறமையை பயன்படுத்திக்கணும். இனிமே ஏவி.எம். தயாரிக்கிற படத்திலெல்லாம் உனக்கு பாட்டு உண்டு.

இனிமே உனக்கு மாசச் சம்பளம். உனக்குனு ஒரு ரூம் தர்றேன். பிரச்சினையில்லாம குறைவா குடி. நல்லா எழுது" என அனுமதித்தார் செட்டியார்.

"இப்படி செட்டியாரையே அசத்தியவர் உங்க அண்ணன் கவி.கே.பி.காமாட்சி சுந்தரம்" என ஏவி.எம். புரொடக்ஷன் மேனேஜர் சொல்லி முடிப்பதற்கும், அலுவலகத்திற்குப்



போயிருந்த அண்ணன் காமாட்சி திரும்பி வருவதற்கும் சரியாக இருந்தது. காமாட்சி அண்ணன் மீது எனக்குள் பலமடங்கு மதிப்பு உயர்ந்தது.

ஏவி.எம். படங்களின் அஸோசியேட் டைரக்டர் லட்சுமிநாராயணன், காமாட்சியைப் பார்த்து வணக்கம் வைத்தார்.

"டேய்... லட்சுமி... இவன் என்னோட தம்பி பாலு. இவன் நடிக்க வந்திருக்கான். இன்னைக்கி என்ன ஷூட்டிங் போகுது?"

"செல்லப்பிள்ளை படத்துக்காக சீட்டாடும் காட்சி எடுக்குறோம்."

"பாலுவுக்கு அதுல ஒரு வேஷம் ரெடி பண்ணு."

"இதோ... இப்பவே டைரக்டரிடம் சொல்றேன்" என லட்சுமிநாராயணன் ஓடினார்.

மேக்-அப்மேனைக் கூப்பிட்ட அண்ணன், "இவனுக்கு மேக்-அப் போடு" என்க...

"தம்பிக்கு உங்க கையால முகச்சாயம் தொட்டு வைங்க" என மேக்-அப்மேன் சொல்ல மூவரும் மேக்-அப் ரூமை நோக்கி நடந்தோம். அப்போது ஒரு ஃபுளோரில் சிவாஜிகணேசனின் தெலுங்கு பட ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தது. என்னையும் கூட்டிக்கொண்டு செட்டுக்குள் நுழைந்தார்.

அண்ணனைப் பார்த்ததும் எழுந்து நின்றார் சிவாஜி.

"டேய் கணேசா... இவன் யார் தெரியுமா?"

"சொல்லுங்கண்ணே..."

"என் தம்பிடா. சினிமாவுல உன்னை "வின்' பண்ண வந்திருக்கான்."

"என் தம்பி பெரிய ஆளா வந்தா எனக்குத்தானே சந்தோஷம்" என்றார் சிவாஜி.

எனக்கு வெலவெலத்துப் போனது. (பின்னாளில் சிவாஜிக்கு கதைகள் எழுதி, அவரை வைத்து படங்கள் தயாரிப்பேன்... என்பதையெல்லாம் நினைத்துப் பார்த்தேனா என்ன?)

'செல்லப்பிள்ளை' படத்திற்காக காமாட்சி அண்ணன் எழுதிய சீட்டாட்டப் பாடல் காட்சி படப்பிடிப்பு அரங்கில் நான் மேக்-அப்புடன் உட்கார வைக்கப்பட்டேன். (கே.ஆர்.ராமசாமி-சாவித்திரி நடித்த படம் இது) வட்ட மேஜையில் ஒரு சேரில் அமர்ந்திருந்த என்னிடம் சீட்டுக்கட்டு கொடுக்கப்பட்டது. கேமரா என் முன்னால் இருந்ததால் கேமராவைப் பார்த்தேன். தியேட்டரில் என் முகம் நல்லா தெரியவேண்டும் என்பதால்!

"கேமராவைப் பார்க்கக்கூடாது. கைல இருக்க சீட்டுக்கட்ட கலச்சுக்கிட்டே இருக்கணும்" என அஸோஸியேட் லட்சுமிநாராயணன் சொன்னார்.

'ஓ.கே.பாஸ்' என்பது போல் தலையாட்டிவிட்டு சீட்டுக் கட்டைப் புரட்டினேன். 'ஷூட்டிங் முடிஞ்சிருச்சு, கிளம்பலாம்' என்றதும் வெளியே வந்தேன். தரையில் பாதம் படாததுபோல் 'நடித்துவிட்டோமே' என்கிற மிதப்பு. படம் விரைவிலேயே வெளியாகிவிடும் என தகவல் கிடைத்ததால் காமாட்சி அண்ணனுக்கு தகவல் அனுப்பிவிட்டு ஷூட்டிங் முடிந்த கையோடு ஊருக்குக் கிளம்பினேன்.

சினிமாவில் நடித்ததை என் நண்பர்களிடம் சொல்ல... அது எழுமலை கிராமம் தாண்டி பரவியது. சில நாட்களிலேயே 'செல்லப்பிள்ளை'

சினிமாவில் நடித்த பாலு நடிக்கும் ''உத்தமன்' நாடகம் என நோட்டீஸ் போட்டு விளம்பரம் செய்தார்கள் நண்பர்கள். நல்ல வசூல்.

மதுரையில் 'செல்லப்பிள்ளை' படம் ரிலீஸானது. நண்பர்களுடன் படம் பார்க்கப் போனேன். படம் தொடங்கி வணக்கமும் போட்டாச்சு. படத்தில் என்னைக் காணவில்லை.

'இவனெல்லாம் எப்புடிடா சினிமாவுல நடிக்க முடியும்' என கேலியும் கிண்டலும் செய்துவிட்டு நண்பர்கள் ஊருக்குக் கிளம்பிப் போனார்கள். படத்தின் அடுத்த காட்சியை நான் உன்னிப்பாகப் பார்த்தேன். அந்த சீட்டாட்டப் பாடலில் கண்மூடி திறக்கிற நேரத்தில் நான் தோன்றி மறைந்தேன். (படப்பிடிப்பில் என் முன்னால்தான் கேமரா பார்வை தொடங்கியது. அது ட்ராலி ஷாட். தொடக்க இடம் வேகமாக ஓடி மறையும் என்பதெல்லாம் அப்போது எனக்குத் தெரியாதே!)

'நான் பொய் சொன்னதாக' நண்பர்கள் செய்த கேலியால் அவமானம் எனக்கு.

மீண்டும் மெட்ராஸ். காமாட்சி அண்ணனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

'சினிமா லட்சியம்' என்பது மாறி... சோத்துக்காக கிடைத்த வேஷங்களைப் போட முடிவு செய்தேன். துணை நடிகர் ராமானுஜம் எனக்கு நண்பரானார். அவர் எனக்கு பொம்மை போல் வந்து போகும் வேஷங்களை வாங்கிக் கொடுத்தார். 'தெனாலிராமன்' படத்தில் சிவாஜி மிருதங்கம் வாசிப்பார். அவருக்குப் பின்னால் புல்லாங்குழலுடன் அசையாமல் உட்கார்ந்திருப்பேன். டி.எஸ்.பாலையா ஹீரோவாக நடித்த ''வெறும் பேச்சல்ல' படத்தில் சிப்பாய் வேஷம்.

இந்த சினிமா அனுபவத்தால் எனக்கு நண்பர்கள் வட்டம் அமைந்தது. 'ஒரு நாடகம் நடித்து அதன் அரங்கேற்றத்திற்கு சினிமா ஸ்டார்களை அழைக்கணும். அப்படி வருபவர்கள் நம் நடிப்பைப் பாராட்டி சினிமா சான்ஸ் ஏற்படுத்தித் தருவார்கள். காமாட்சி அண்ணனின் செல்வாக்கைப் பயன்படுத்தி சினிமா நட்சத்திரங்களை அழைக்கலாமே' என முடிவாயிற்று.

காமாட்சி அண்ணன் பாட்டெழுதி ரிக்ஷாக்காரன் வேஷத்தில் நடிக்க, நான் கதை-வசனம் எழுதி ஹீரோவாக நடித்து இயக்க முடிவானது.

'எதிர்பாராதது' படப் புகழ் சி.என்.பாண்டுரங்கன் இசையமைக்க ஒப்புக்கொண்டார்.

சென்னை மின்ட் பகுதியில் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் இருந்த சௌந்தர்ய மஹாலில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தலைமையில் 22-08-1954 அன்று எனது ''ரத்த சக்தி' நாடகம் அரங்கேறியது. என்.எஸ்.கே. துணைவியார் மதுரம் உள்ளிட்ட சில சினிமாப் புள்ளிகள் முன் வரிசையில் அமர்ந்து நாடகம் பார்த்தனர்.

நாடகம் முடிந்ததும் என்.எஸ்.கே. பேசினார்.

''இந்த நாடகம் பலாப்பழம் போல இருக்கு. நான் சொல்றது புரியுதா?'' என மக்களைப் பார்த்துக் கேட்டார்.

'பலாப்பழ தித்திப்போடு நாடகத்தை ஒப்பிடுகிறாரே...' என எனக்கு மகிழ்ச்சி.

மக்கள், என்.எஸ்.கே.வை பார்த்து ''புரியலே' என்றனர்.

என்.எஸ்.கே. சஸ்பென்ஸை உடைத்தார்.

''பலாவுல மேல முள் முள்ளா இருக்கும். இடையில சதை இருக்கும். கடைசியில கொட்டைதான் இருக்கும். இந்த நாடகம் கரடு முரடா ஆரம்பிச்சு, அப்புறம் இனிச்சாலும் கடைசியில கொட்டைதான்'' என விளக்கம் சொல்ல... ஜனங்கள் சிரித்தனர்.

நான் அதிர்ச்சியாகி நின்றேன். திரை இறக்கப்பட்டதும் என்னைக் கூப்பிட்டுத் தட்டிக் கொடுத்து, '' ''இடையிலே சதை இருக்கு'னு சொன்னேனே... அதை டெவலப் பண்ணு. இந்த ஸ்கிரிப்ட்டை நாளைக்கி என் வீட்டுக்கு எடுத்திட்டு வா'' என்றார் என்.எஸ்.கே. ஆனால் நான் என்.எஸ்.கே. வீட்டுக்குப் போகவில்லை.

கண்ணதாசனிடம் துணை வசனகர்த்தாவாக இருந்து புகழ்பெற்ற அய்யாப்பிள்ளை, காமாட்சி அண்ணனைப் பார்க்க வந்தார்.

அப்போது நான் அறிந்த சுவாரஸ்யங்கள்...

# 7. பிணம் சுமந்த எம்.ஜி.ஆர்.

கலைவாணர் என்.எஸ்.கே. தலைமையில் நான் நடத்திய நாடகத்தில் வரும் காட்சி போலவே என் தாயாரும் இறந்துபோனார். எனது வேலைகள் கெட்டுவிடக்கூடாது என்பதால் எனக்குத் தெரியப்படுத்தாமலே இறுதிச் சடங்கும் செய்துவிட்டனர். ஏழு வயதில் அப்பாவையும் 24 வயதில் அம்மாவையும் இழந்து நின்றேன்.

ஆனாலும் ''சினிமாதான் எனக்கு' என்பதில் நம்பிக்கை குறையாமல் இருந்தேன்.

கண்ணதாசனிடம் உதவி வசனகர்த்தாவாக அனுபவம் பெற்ற அய்யாப்பிள்ளை, காமாட்சியை சந்தித்து காமாட்சியின் பாடல்களைப் பற்றி சிலாகித்து பேசிக் கொண்டிருந்தார்.

என்.எஸ்.கே.வின் ''நல்லதம்பி' படத்தில் இந்திரன் வேஷத்தில் நடித்ததுடன்...

'குடிச்சுப் பழகணும்

பாலைக் குடிச்சுப் பழகணும்

படிச்சுப் படிச்சு சொன்னாலும்

பாழுங்கள்ளை நீக்கி

பாலைக் குடிச்சுப் பழகணும்'

என்கிற பாடலை எழுதியிருந்தார்.

'புது பெண்ணின் மனதைத் தொட்டுப் போறவரே'

'ஓ ரசிக்கும் சீமானே' (பராசக்தி)



'தேனுண்ணும் வண்டு மாமலரைக் கண்டு' (அமர தீபம்)

'சிற்பி செதுக்காத பொற்சிலையே' (எதிர்பாராதது)

இப்படி பல பிரபல பாடல்களை கவி காமாட்சி படைத்திருந்தார். சமீபத்தில் மறைந்த நாகேஸ்வரராவும், பத்மினியின் சகோதரி லலிதாவும் நடித்த அண்ணாவின் ஓர் இரவு படத்தில் 'அக்கம் பக்கம் யாரும் இல்லை' எனும் பாடலில் முத்தம் பற்றிய சஸ்பென்ஸ் வைத்து எழுதியிருப்பார்.

இலக்கியமாகவும், கமர்ஷியலாகவும் காமாட்சி போட்ட பாட்டுப் படையலை... அய்யாப்பிள்ளை மூலம் என்னால் உணர முடிந்தது.

சினிமா நட்சத்திரங்களிடம் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த 'தமிழ் சினிமா' பத்திரிகையின் ஆசிரியர் கரீம் ஒருநாள் காமாட்சி அண்ணனை பேட்டியெடுக்க வந்திருந்தார்.

"பேட்டியெல்லாம் வேணாம். உண்மையை நான் சொல்லுவேன். இதனால் இப்போ பெரிய ஆளுகளா இருக்க பலர் மனசு கஷ்டப்படலாம்" என அண்ணன் மறுத்துவிட...

"அல்லா மேல ஆணையா நான் பத்திரிகைல எழுதல. சும்மா தெரிஞ்சு வச்சுக்கிறேன்" என கரீம் வற்புறுத்தினார்.

"அதெல்லாம் வேணாம். இப்போ பெரிய ஹீரோவா இருக்கிற ஒருத்தருக்கு அப்போ நான் செஞ்ச ஒரு சிறு உதவிய சொல்றேன்..." அண்ணன் சஸ்பென்ஸ் வைத்து நிறுத்த... கரீம் அவர்களுடன் சேர்ந்து நானும் அண்ணனின் வாயைப் பார்த்தேன்.

"பிரபல நடிகர் எம்.கே.ராதாவின் அப்பா எம்.கந்தசாமி முதலியார் நாடக உலகில் ரொம்ப பெரிய ஆள். அவரோட நாடகங்கள்ல 18 வயசு இளைஞன் ஹீரோவா நடிச்சான். நடனம், பாட்டு, இசை வாத்தியங்கள் வாசிக்கிறது, நடிப்புத் திறமை... இப்படி எல்லா கலையும் தெரிஞ்சவன் அந்த ஹீரோ. நாடகம் போடுற ஊர்லயெல்லாம் அந்த ஹீரோவுக்காகவே நல்ல வசூல் கிடைச்சது. ஒரு ஊர்ல தங்கி நாடகம் போட்டுக்கிட்டிருந்தாங்க. ஒருநாள் காலைல... வாலிபனா ஒருவரும், கூடவே வெடவெடனு ஒல்லியா ஒரு சிறுவனும் நாடக ஆபீசுக்குள்ள வந்து முதலாளி கந்தசாமி முதலியாரைப் பார்த்து 'ஐயா... நாங்க ரெண்டு பேரும் உங்க நாடகக் குழுவுல சேரணும்'னு கேட்டுக்கிட்டாங்க.

இவுக ரெண்டுபேரும் ஏற்கனவே ஒரு நாடக சபாவுல இருந்து, பிடிக்காம இங்க வந்து சான்ஸ் கேக்குறாங்க.

அவங்களை ஏற இறங்கப் பார்த்த கந்தசாமி முதலியார், வாலிபத்தில் இருந்தவரைப் பார்த்து "நீ வேணும்னா சேர்ந்துக்கோ. இவன் ரொம்ப சிறு பயலா இருக்கான். உடம்ப நல்லா தேத்திக்கிட்டு ஒரு ஆறேழு மாசம் கழிச்சு வந்தான்னா சேத்துக்கலாம்" எனச் சொல்லிவிட்டார்.

"ஐயா... எங்க இருந்தாலும் நாங்க ஒரே இடத்துல இருக்கணும்னு எங்க அம்மா சொல்லியிருக்காங்கய்யா. அம்மா பேச்ச மீற முடியாதுங்கய்யா.

பெரிய மனசு பண்ணுங்கய்யா''னு ரெண்டு பேரும் கேட்டிருக்காங்க.

''அப்படின்னா இன்னும் கொஞ்ச காலம் கழிச்சு வாங்க. ரெண்டு பேரையுமே சேத்துக்கிறேன்'' என முதலாளி சொல்லிவிட...

நாடக கொட்டகை வாசலில் இருவரும் செய்வதறியாது திகைத்து, தயங்கி நின்னுருக்காங்க.

கொட்டகை வாட்ச்மேன், அவர்களிடம் பேசி விஷயத்தைத் தெரிஞ்சுக்கிட்டு, ''தம்பிகளா இந்த நாடக கம்பெனில ஹீரோவா நடிக்கிறவருக்கு நல்ல செல்வாக்கு. அவரு சொன்னா முதலாளி கேப்பாரு. ஹீரோ ஆத்துக்கு குளிக்கப் போயிருக்காரு. இப்ப வர்ற நேரம்தான்'' எனச் சொல்லவும், இருவரும் காத்திருந்தாங்க.

குழுவினர் மத்தியில் ஹீரோ ஈரத்தலையை துவட்டியபடி வர்றாரு. ''அதோ நல்ல செகப்பா தல துவட்டிக்கிட்டு வர்றவருதான் ஹீரோ'' என வாட்ச்மேன் சொல்ல... இருவரும் எதிரே நடந்து வந்து ஹீரோவுக்கு வணக்கம் போட்டு நிற்கிறார்கள்.

ஹீரோ விசாரித்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு இருவரையும் கூட்டிக்கொண்டு முதலாளியிடம் போகிறார்.

''இவங்களை நம்ம கம்பெனியில சேத்துக்கங்க. பின்னாடி பெரிய ஆளா வருவாங்க'' என ஹீரோ சொல்ல... முதலாளியும் சம்மதித்து அவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்.

காமாட்சி அண்ணன் சொல்லி முடித்ததும் எனக்கு ஆர்வம் தாங்கவில்லை.

அண்ணனே விடை சொன்னார்.

அந்த ஹீரோ... நான். அந்த இருவர்... எம்.ஜி. சக்கரபாணி, எம்.ஜி.ராமச்சந்திரன்.

'இந்தப் படம் ஓடினால் மன்னன், ஓடாவிட்டால் நாடோடி' என எம்.ஜி.ஆரைப் பற்றி பேச வைத்த படம் 'நாடோடி மன்னன்'. எம்.ஜி.ஆர். இயக்கி நடித்து, தயாரித்த படம். இதற்காக நிறையவே கடன் வாங்கிப் படமெடுத்தார். இந்தப் படம் 1958-ஆம் ஆண்டு வெளியானது. என்றாலும் சில வருடங்களுக்கு முன்பே பட வேலைகள் ஆரம்பித்திருந்தன. தன் சொந்தப்படமான இதில் காமாட்சிக்கு பாட்டெழுதும் வாய்ப்பைக் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

"நாடோடி மன்னனுக்கு பாட்டெழுதிக் குடுங்கண்ணேனு தம்பி (எம்.ஜி.ஆர்.) கூப்பிட்டுச்சு. நானும் போனேன். ஆனா கூடவே தம்பிக்கு ஆகவே ஆகாத ஒரு விருந்தாளியையும் கூட்டிக்கிட்டுப் போனேன். அதனால தம்பிக்கு என்மேல கோவம். நாசூக்கா பேசி திருப்பி அனுப்பிச்சிருச்சு. பாட்டு எழுத முடியல. அந்த வேண்டாத விருந்தாளி யாருன்னா... குடிதான்; சாராயம்தான்" என அந்த அனுபவத்தையும் கறீமிடம், அண்ணன் சொன்னார்.

மக்கள் செல்வாக்குள்ள பெரிய நட்சத்திரமாய் எம்.ஜி.ஆர். இருப்பதால் 'காமாட்சி அண்ணன் கதை அளக்குறாரோ?' என என் மனசுக்குள் சந்தேகம்.

ஆனால் சில மாதங்களிலேயே காமாட்சி அண்ணனுக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் இடையேயான அன்பை, மதிப்பை கண்ணாரக் கண்டேன் நான்.

'கவி.கே.பி. காமாட்சிசுந்தரம் இறந்துவிட்டார்' என்கிற துயரச் செய்தியை நானும் என் நண்பரும் சினிமாப் புள்ளிகளின் வீடுகளுக்குத் தெரியப்படுத்தினோம்.

ஆளுயர ரோஜாப்பூ மாலையுடன் முதல் ஆளாக எம்.ஜி.ஆர். வந்தார். காமாட்சி அண்ணனின் உடலுக்கு மாலையைப் போட்டுவிட்டு சாஷ்டாங்கமாக தரையில் விழுந்து வணங்கினார். அடுத்து என்.எஸ்.கே., கே.ஆர்.ராமசாமி, வீ.கே.ராமசாமி உள்ளிட்டவர்கள் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அலங்கரிக்கப்பட்ட பாடையில் காமாட்சி அண்ணனின் உடல் வைக்கப்பட்டது. பாடையைத் தூக்க போதுமான ஆளில்லை. இதைக் கவனித்த எம்.ஜி.ஆர்., கொஞ்சமும் யோசிக்கவில்லை. பாடையின் முன்புற கைப்பிடியைப் பற்ற... என்.எஸ்.கே.வும் ஒருபிடியைப் பற்ற... கே.ஆர்.ராமசாமியும், வீ.கே.ராமசாமியும் பின்பக்கம் தூக்கினார்கள்.

சுமார் முக்கால் கிலோமீட்டர் தூரம் பாடையைச் சுமந்து வந்து கண்ணம்மாபேட்டை சுடுகாட்டில் இறக்கினார்கள்.

'காமாட்சி அண்ணனுக்கு சொந்தக்காரங்க யாரு?' என எம்.ஜி.ஆர். கேட்க... அவர் முன்னால் என்னை நிறுத்தினார்கள்.

"அண்ணன் கடன் எதுவும் வச்சிட்டுப் போயிட்டாரா?"

'மனிதனுக்கு ஞானம் போதிக்கும் சுடுகாட்டில் வைத்து முதன்முதலாக எம்.ஜி.ஆரிடம் பேசப்போகிறேன்' என்கிற பரவச பதட்டத்துடன் 'எம்.ஜி.ஆரை அண்ணன் என அழைக்க வேண்டும்' என நொடிப்பொழுதில் தீர்மானித்துவிட்டுச் சொன்னேன்.

"ஆயிரம் ரூபாகிட்ட கடன் வச்சிருப்பாருங்கண்ணே..."

"சரி... நாளைக்கி என்னோட ஆபீஸ் வந்து ஆயிரம் ரூபா வாங்கி கடனை அடைச்சிடு."

"சரிங்கண்ணே..." என கும்பிட்டேன்.

உடல் தகனத்திற்கு தேவையான உதவிகளையும் ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துவிட்டுக் கிளம்பினார் எம்.ஜி.ஆர்.

மறுநாள்...

எம்.ஜி.ஆரின் அலுவலகம் சென்றேன். ஒரு கவரில் ஆயிரம் ரூபாய் போடப்பட்டிருந்தது. அதை என்னிடம் கொடுத்தார்கள். வாங்கிக்கொண்டு வந்தேன்.

கடன்கள் அடைக்கப்பட்டன. காமாட்சி அண்ணனின் குழந்தைகள் சிறு வயதினராக இருந்ததால் தன் உறவினர்கள் இருக்கும் பகுதியில் தானும் குடியேறுவதாகச் சொல்லி அண்ணனின் துணைவியார் வீடு காலி செய்துவிட்டுப் போனார்கள்.

இனி எங்கே தங்குவது?

நடுரோட்டில் நின்று யோசித்தேன்.

# 8. சரோஜாதேவிக்கு பிரம்படி!

'இனி என்ன செய்வது?'

நடுரோட்டில் நின்று திசை தேடி யோசித்தேன்.

மின்னல் வெட்டியது போல் அந்த நினைவு வந்துபோனது. 'மந்திரிகுமாரி' படப்புகழ் எஸ்.ஏ.நடராஜன், 'பொன்முடி' பட ஒளிப்பதிவாளர் ஜே.ஜி.விஜயன், சாண்டோ சின்னப்பா தேவர்... இவர்கள் மூவரும் தலா ஐயாயிரம் ரூபாய் போட்டு 'நல்ல தங்கை' என்கிற படத்தை தயாரித்து வந்தனர். கதை-வசனம் ஏ.பி.நாகராஜன். தயாரிப்பு கம்பெனி கோவையில் இயங்கி வந்தது.

நம்பியார், எஸ்.ஏ.நடராஜன் இருவரும் நாயகர்கள். ராஜசுலோச்சனா, மாதுரிதேவி நாயகிகள். படம் கொண்டிருந்தபோதே கருத்து வேறுபாடு காரணமாக தேவர் விலகிக்கொண்டார். காமாட்சி அண்ணனிடம் பாடல் எழுதி வாங்குவதற்காக நடராஜனும், விஜயனும் கோவையிலிருந்து வந்திருந் தனர். அப்போது அவர்களை உபசரித்து நன்கு பழகிக்கொண்டேன் நான். 'நல்ல தங்கை' படம் வெளியாகி பெரும் வெற்றிபெற்றது. இதையடுத்து 'கோகிலவாணி' என்கிற படத்தை தமிழ்-கன்னடம் என இரண்டு மொழிகளில் தயாரித்து இயக்கி வில்லனாகவும் எஸ்.ஏ.நடராஜன் நடித்துவந்தார். மைசூரில் பிரிமியர் ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. மைசூர் கிளம்ப முடிவு செய்தேன். அப்போது என் அண்ணன் கிருஷ்ணசாமி, ''வீவிங் ட்ரெய்னிங்' (நெசவு வாத்தியார் வேலைக்கான பயிற்சி) பெற சென்னை வந்திருந்தார். அவரைச் சந்தித்து 'மைசூர் போகணும்' என்றேன்.

''இனியுமா பாலு நீ இந்த சினிமாவ நம்புற?''

''இந்த ஒரு தடவை எனக்கு ட்ரெயினுக்குப் போக காசு குடு. சினிமாவில் இந்த முறையும் எனக்கு வாய்ப்புக் கிடைக்கலேன்னா... மைசூர்லயே தங்கி ஹோட்டல் வேலையில் சேர்ந்திடுறேன்'' என்றேன்.

பயிற்சிக்கு வந்திருந்த நண்பர்களிடம் கொஞ்சம் பணம் வசூலித்து சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு வந்து கலங்கிய கண்களுடன் என்னை வழியனுப்பி வைத்தார் அண்ணன். மைசூர் பிரிமியர் ஸ்டுடியோ

வந்துவிட்டேன். அப்போது காகா ராதாகிருஷ்ணன் பிரபல நடிகர். 'கோகில வாணி'யில் அவரும் நடித்துக்கொண்டிருந்தார்.

''நான் காமாட்சியின் தம்பி'' என அறிமுகப்படுத்தி கொண்டேன்.

'அடடே... என் குருநாதரோட தம்பியா நீ?' என உற்சாகமாகிவிட்டார். எஸ்.ஏ.நடராஜன் என்னைப் பார்த்து குசலம் விசாரித்தார்.

''படத்துக்கான கேரக்டர்களுக்கெல்லாம் ஆள் போட்டு நடிச்சிக்கிட்டிருக்காங்க. இருந்தாலும் கிடைக்கிற வாய்ப்பில் எல்லாம் வேற வேற வேஷத்துல உன்னை பயன்படுத்திக்கிறேன்'' எனச் சொல்லி நான் தங்குவதற்கு இடமும், உணவும் தந்தார் எஸ்.ஏ.நடராஜன்.

எஸ்டேட் கணக்கப்பிள்ளை, டான்ஸ் மாஸ்டர், ('வஞ்சனை அறியா வானம்பாடி வாழ்வைத் தேடி ஓடுதடா' என எஸ்.டி.சுந்தரம் எழுதி பாடலுக்கு) கண் தெரியாதவனாக வந்து பாடுதல், தப்பி ஓடும் ரௌடி, ரௌடியைத் துரத்தும் போலீஸ், வில்லன் எஸ்.ஏ.நடராஜனின் கையாள்... இப்படி ''கோகிலவாணி' என்கிற ஒரே படத்தில் பலவித சிறு கேரக்டர்களில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. 'பலவேஷம் பாலகிருஷ்ண பிள்ளை' என காகா ராதாகிருஷ்ணன் என்னை கிண்டல் கூட செய்தார்.

ஒரே காட்சியை முதலில் ரகுவீர், பிரபல நடிகை தாம்பரம் லலிதா நடிக்க தமிழிலும், அதே காட்சியை கன்னட நாயகன் -நாயகியை வைத்து கன்னடத்திலுமாக மாறி, மாறி எடுத்தார் எஸ்.ஏ.நடராஜன்.

அப்போது புதுமுக அளவிலேயே இருந்தார் சரோஜாதேவி. தமிழில் நடிக்க வராத காலகட்டம். 'கோகிலவாணி' கன்னட காட்சிப்படி காதலனும், காதலி சரோஜாதேவியும் எதிர் எதிர் திசையில் குப்புறப்படுத்துக்கொண்டு ரொமான்ஸாக பேசிக்கொண்டிருப்பார்கள்.

இதைப் பார்த்து பொறுக்க முடியாத வில்லன் எஸ்.ஏ.நடராஜன், தன் கையாளான என்னிடம் ஒரு பிரம்பைக் கொடுத்து 'அவளை அடி' என்பார். நான் முதுகில் அடிக்க வேண்டும். சரோஜாதேவி அலறி எழுந்திருக்க வேண்டும்.

காட்சிக்கான ஏற்பாடுகள் தயார். சரோஜாதேவி குப்புறப்படுத்து ரொமான்ஸ் பேசிக்கொண்டிருக்க... நடராஜன் என்னிடம் பிரம்பைத் தர, அதை வாங்கிய நான் ஆவேசமாக பாவனை மட்டும் காட்டி சரோஜாதேவி முதுகில் பட்டும் படாமலும் பிரம்பை வைத்து எடுத்தேன்.

'பளார்...'



என் கன்னத்தில் ஓங்கி ஒன்று கொடுத்தார் நடராஜன்.

"நிஜமாவே அடிடா. அப்பத்தான் வலி தாங்காம அலறி எந்திரிக்கும் சரோஜாதேவி. ஷாட் ரியலா அமையும்" என்றார்.

"அடிச்சா காயம் ஏற்படுமே?"

"அடிக்கலேன்னா ஒன்னய நான் அடிப்பேன்."

"டைரக்டர் சொல்வதை செய்தாகணும். அதுவும் தங்க இடம் கொடுத்து, சோறு போடுறவராச்சே" அதற்காக சம்மதித்தேன். எஸ்.ஏ.நடராஜனுக்கும் சரோஜாதேவிக்கும் ஏதோ மனக்கசப்பு. இந்தக் காட்சி மூலம் பழி தீர்க்கிறார் என்பதையும் ஓரளவு என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

ரீ-டேக் ஏற்பாடானது. மீண்டும் குப்புறப்படுத்தபடி சரோஜாதேவி ரொமான்ஸ் பண்ணினார்.

பிரம்பால் ஓங்கி அவர் முதுகில் அடித்தேன்.

சரோஜாதேவி அலறிய அலறல் இருக்கே... பயத்தில் ஸ்டுடியோவை விட்டே வெளியில் ஓடிவிட்டேன். காட்சி திருப்தியானதில் நடராஜனுக்கு ரொம்பவே சந்தோஷம்.

நான் அடித்த அடியில் சரோஜாதேவிக்கு நிச்சயம் காயம் ஏற்பட்டிருக்கும். அந்த வலி இப்போதும் கூட அவர் மனதில் இருக்கலாம்... என்கிற பயத்தில் இப்போதும் கூட சரோஜாதேவி இருக்கும் இடத்தில் நான் இருக்கவேண்டியது வந்தால் அவரை சந்திக்காமலே நழுவிவிடுவேன்.

சரோஜாதேவியிடம் அவரின் மேக்அப்-மேன் கோபால் தினமும் "நீங்க சென்னைக்கு வாங்கம்மா. உங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு" எனச் சொல்லியபடியே இருந்ததால்... சரோஜாதேவியும் சென்னை வந்தார். அவரை டைரக்டர் கே.சுப்ரமணியத்திடம் அழைத்துப் போனார் கோபால். அப்போது நாடோடி மன்னனின் பின்பாதி கலர் படத்திற்கு நாயகி தேடிக்கொண்டிருந்த எம்.ஜி.ஆரிடம் சரோஜாதேவியை கே.சுப்ரமணியம் அறிமுகப்படுத்தி வைக்க... 'நாடோடி மன்னன்' மூலம் பெரிய நட்சத்திரமானார் சரோஜாதேவி. இந்த விபரங்களை மேக்அப்-மேன் கோபால் ஒருமுறை என்னிடம் சொன்னார்.

கோகிலவாணி ஷூட்டிங் முடிந்த கையோடு என் ஊரான எழுமலைக்கு வந்தேன். அப்போதுதான் எனக்கு ஒரு யோசனை வந்தது.

பின்னாளில் 'குமரிப்பெண்', 'நான்' படங்களின் கதை ஆசிரியராகவும், டைரக்டராகவும் புகழ்பெற்ற டி.என்.பாலு, வாடகைக்கார் ஓட்டிவந்தார். 15 நாட்கள் வேலை பார்த்து சேர்க்கும் பணத்தை வைத்து 15 நாட்கள் சினிமா வாய்ப்பு தேடுவார். இதனால் உணவு உள்ளிட்ட அடிப்படை விஷயங்களுக்கு அவர் சிரமப்படவில்லை. 'நாமளும் இப்படிச் செஞ்சா என்ன?' என்கிற யோசனை வந்தது. மதுரை சென்று கார் டிரைவிங் கற்று லைசென்ஸும் வாங்கிக்கொண்டேன்.

ஏற்கனவே 'செல்லப்பிள்ளை'யில் நடித்திருப்பதாகச் சொல்லி நான் பட்ட அவமானத்தால் 'கோகிலவாணி'யில் நடித்திருப்பதை யாரிடமும் ஜம்பமாகச் சொல்லவில்லை. மேம்போக்காக ஒரு தகவலாக மட்டும் தெரிவித்துவிட்டு மெட்ராஸ் வந்தேன்.

'கோகிலவாணி' இரண்டு மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளியாகி பயங்கர தோல்வியைத் தழுவியது. தியேட்டருக்குப் படம் பார்க்கப் போனேன். கூட்டமே இல்லை. 'நாம நடிச்சது நாலஞ்சு பேருக்குக்கூட தெரியாமப் போச்சே' என மனச்சோர்வு வந்தது.

''இனி நடிக்கிற வேலை வேண்டாம்'' என முடிவெடுத்தேன்.

காமாட்சி அண்ணன் பாட்டெழுதும்போது கூடவே இருந்து 'எதுகை மோனை' மற்றும் மெட்டுக்கேற்ப வார்த்தைகள் போடுவதை ஓரளவு தெரிந்து வைத்திருந்ததால் பாட்டெழுத முடிவு செய்தேன்.

பாலகிருஷ்ணன் ஆகிய நான் 'கலைஞானம்' என பெயர் சூட்டிக்கொண்டேன். அப்போது அமெச்சூர் நாடகங்கள் நிறைய நடந்து வந்ததால் சில நாடகங்களுக்கு பாட்டெழுதினேன்.

எம்.ஜி.ஆர். படத்துக்கு நான் எழுதிய பாட்டு...!

# 9. பாடினார் ஜானகி...மயங்கினார் மகாலிங்கம்!

மதுரைக்காரரான எஸ்.எம்.எஸ்.சுந்தரராம அய்யர் 'ஸ்ரீமுருகன் டாக்கீஸ்' சார்பில் தியாகராஜ பாகவதரை வைத்து 'அசோக்குமார்', பி.யு. சின்னப்பாவை வைத்து 'ரத்னகுமார்' உட்பட சில படங்களைத் தயாரித்தவர்.
'அசோக்குமா'ரில் சிறிய வேஷத்திலும் 'ரத்னகுமா'ரில் முக்கிய கேரக்டரிலும் எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். அதனால் எம்.ஜி.ஆரை வைத்து படம் பண்ணுவதற்காக மீண்டும் வந்தார் சுந்தரராமஅய்யர். 'அம்பாள் டாக்கீஸ்' என்ற தயாரிப்பு நிறுவனம் துவங்கப்பட்டது.

எம்.ஜி.ஆர் திராவிட இயக்கத்தில் முக்கியமாக இருந்ததால் படத்திற்கு 'மதிவாணன்' என பெயர் சூட்டப்பட்டது. என்.எஸ்.ராமதாஸ் இயக்குநராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். (இவரும் மதுரைதான். பின்னாளில் எம்.ஜி.ஆரை வைத்து 'தாழம்பூ' படத்தை இயக்கியவர்.)

பாட்டெழுத வாய்ப்பு கேட்டு கோடம்பாக்கம் ட்ரஸ்ட்புரம் அலுவலகத்திற்கு வந்தேன். நானும் மதுரைப் பக்கம் என்பதால் டைரக்டரும், தயாரிப்பாளரும் என்னை உட்கார வைத்தனர். டைரக்டர் ஒரு கதைச் சூழலைச் சொல்லி பாட்டெழுதச் சொன்னார்.

'ஈரநிலாவிலே எழில்பூங்காவிலே

இன்பம் பொங்குதே இருவிழி உறவிலே'

என பல்லவியை எழுதிக் காட்டினேன்.



'கான மயிலாட கண்டிருந்த வான்கோழியாய்'... 'கவிஞன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்' என்பது போல் நானும் எழுதினேன்.

''நல்லாருக்கே, ஆனாலும் நாங்க படம் சம்பந்தமா எது செய்றதா இருந்தாலும் எம்.ஜி.ஆரை கேட்டுத்தான் செய்வோம். அவர்கிட்ட உன்ன கூட்டிட்டுப் போறோம். அவர் 'சரி' சொல்லிட்டா நீ எழுது'' என்றார் சுந்தரராமஅய்யர். கூடவே ''கலைஞானம்... நீ எனக்கொரு உதவி செய்யணும். கம்பெனிக்கு கார் டிரைவரா ஒரு நல்ல ஆளா புடுச்சுக்கிட்டு வரமுடியுமா?'' என்றார்.

''நானே கார் ஓட்டுவேன்.''

''அப்ப வண்டிய எடு. எம்.ஜி.ஆர். வீட்டுக்குப் போகணும்'' என்றார்.

ராயப்பேட்டை லாயிட்ஸ் ரோட்டில் எம்.ஜி.ஆரின் பழைய வீட்டுக்கு எதிரில் உள்ள சந்தில் ஒரு வீட்டின் திண்ணையில்தான் சினிமா சம்பந்தமாக எம்.ஜி.ஆரை பார்க்க வருபவர்கள்

அமரவைக்கப்பட்டிருப்பார்கள். ஆர்.எம்.வீரப்பன் மூலமாக சிக்னல் வந்த பிறகுதான் எம்.ஜி.ஆரை சந்திக்க முடியும்.

சுந்தரராமஅய்யருக்கு சிக்னல் வந்து சேரவில்லை. ஆனால் அடிக்கடி அங்கே போய்வருவார். நானும் கார் ஓட்டுவேன்.

சுந்தரராமஅய்யருக்கு என்னைப் பிடித்துவிட்டதால் மாதம் 30 ரூபாய் சம்பளம் பேசி என்னை கம்பெனி டிரைவராக்கினார்.

'சினிமாவில் இருப்பதால் எனக்கு கெட்ட சகவாசம், பழக்கம் ஏற்படலாம்' என பயந்துகொண்டிருந்த என் அண்ணன் இப்போது நான் மாதச்சம்பளம் வாங்குவதால் எங்கள் அக்காள் மகள் புஷ்பவல்லியை எனக்குத் திருமணம் செய்து வைத்தார்.

எம்.ஜி.ஆர்.-சுந்தரராமஅய்யர் சந்திப்பு நடந்தது. இருப்பினும் ஆரம்பகட்ட நிலையிலேயே இருவருக்கும் சரிப்பட்டு வரவில்லை. இதனால் 'மதிவாணன்' படத்தில் எம்.ஜி.ஆர். நடிக்கவில்லை.

'வேறு யாரை நடிக்க வைக்கலாம்?' என முதலாளி யோசித்தார்.

சில படங்களிலேயே சினிமாவில் உச்சம் எட்டி சொந்தப் படங்களைத் தயாரித்து நஷ்டப்பட்டு சொந்த ஊரான சோழவந்தானிலேயே செட்டில் ஆகியிருந்தார் டி.ஆர்.மகா லிங்கம். மதுரை நாடக மன்றங்களின் வரவேற்பால் மீண்டும் 'காயாத கானகத்தே' என கணீர் குரலில் நாடகங்களில் நடித்துகொண்டிருந்தார்.

கண்ணதாசன், தான் தயாரித்த 'மாலையிட்ட மங்கை' படம் மூலம் மீண்டும் மகாலிங்கத்தை நாயகனாக்கினார். இதில் மகாலிங்கம் பாடிய 'செந்தமிழ் தேன்மொழியாள்' பாடல் பெரும் பலமாக அமைந்து... மீண்டும் மவுசு ஏற்பட்டது மகாலிங்கத்திற்கு. அதனால் 'மதிவாணன்'

படத்தின் நாயகனாக மகாலிங்கம் ஒப்பந்தம் செய்யப்பட்டார். பின்னணிப் பாடகி எஸ்.ஜானகி திரைத்துறைக்குள் வந்திருந்த ஆரம்ப காலகட்டம். 'மதிவாணன்' படத்தில் ஜானகி பாட ஏற்பாடானது. இசையில் பெரும் புலமை பெற்ற பாட்டுக்காரரான டி.ஆர்.மகாலிங்கம் 'புதுப்பாடகி பாடுறாங்களா நம் படத்தில்? அப்படின்னா நான் அந்தப் பெண் பாடுவதைக் கேட்கணுமே' என முதலாளியிடம் தெரிவிக்க... அதன்படி ஏற்பாடானது.

அடையாறில் இருந்த மகாலிங்கம் வீட்டுக்குப் போய் அவரை காரில் ஏற்றிக்கொண்டு ட்ரஸ்ட்புரம் அலுவலகம் வந்தேன்.

எஸ்.ஜானகி வந்ததும் மகாலிங்கத்தைப் பார்த்துக் கும்பிட்டார்.

'பாடிக்காட்டம்மா' என்றார் மகாலிங்கம். ஜானகியும் ஒரு பாடலைப் பாடினார்.

''பிரமாதம். குரல் அருமையா இருக்கு. பொதுவா தனக்குனு ஒரு தனித்துவத்தோட பாடுறவங்ககூட பாடும்போது கைவிரல்களையோ, கால்லயோ, தலையை ஆட்டியபடியோ... ஏதாவது அங்க அசைவோட தாளம் போட்டபடிதான் பாடுவாங்க. மனசுக்குள் மட்டுமே தாளம் போட்டபடி அசையாமல் சிலை மாதிரி நின்னு பாடக்கூடியவர் எம்.கே.டி.தியாகராஜ பாகவதர் மட்டும்தான். அவருக்குப் பின்னாடி அந்த அம்சம் உன்கிட்ட இருக்கிறதைப் பார்க்கிறேன். உச்சஸ்தாயியில்கூட அலட்டாம பாடுறேம்மா'' என பாராட்டினார் மகாலிங்கம்.

மீண்டும் மகாலிங்கத்தை அவரின் வீட்டில் விடுவதற்காக காரில் ஏற்றிக்கொண்டு கிளம்பினேன். முதன் முதலில் நான் மெட்ராஸ் வந்தபோது மைலாப்பூர் வீட்டுப் பால்கனியில் மகாலிங்கத்தையும், எஸ்.வரலட்சுமியைச் சேர்த்துப் பார்த்தேனல்லவா? அதை அவரிடம் சொன்னேன்.

அதுமட்டுமில்லை... 'நீங்க தயாரிச்ச ''சின்னத்துரை' படத்திற்கு காமாட்சி அண்ணன் பாட்டெழுதினாரு. அதுக்கு சம்பளம் வரலைனு அதைக் கேட்டு என்னை அனுப்பி வைப்பார். என்னைப் பார்த்ததும் ''கடன்காரன் வந்திட்டான்' என்பது மாதிரி நீங்க சங்கடப்படுவீங்க. ஆனா உங்களை நேரில் பார்க்கிற சந்தோஷத்துக்காகவே நான் அண்ணன் சொல்றபோதெல்லாம் உங்க வீட்டுக்கு வருவேன்'' எனச் சொன்னேன்.

''ஓ... அது நீதானா? என்னப்பா பண்றது. அப்போ ரொம்ப கஷ்டகாலம் எனக்கு'' என விளக்கம் சொன்னார்.

அவரின் வீடு வந்தது.

நான் காமாட்சியின் தம்பி என்பதால் வீட்டுக்குள் அழைத்துப்போய் தன் கையால் எனக்கு குளிர்பானம் தந்து உபசரித்து அனுப்பினார் மகாலிங்கம்.

காரில் திரும்பிவரும்போது தியாகராஜ பாகவதர் வீட்டை கிராஸ்பண்ணியபோது எனக்கு மனசில் வலி. டி.ஆர். மகாலிங்கம்

மீண்டும் எழுந்துவிட்டார். ஆனால் பாகவதரால் முடியாமல் போனதே... என்கிற வருத்தம் தந்த வலி அது.

பாகவதர் பற்றிய நினைவுகள் என் கண் முன்னால் காட்சியாக விரிந்தது.

சினிமா கம்பெனிகளுக்கு ஃபைனான்ஸ் ஏற்பாடு செய்துதரும் ராமசாமி அய்யர் எங்க முதலாளி சுந்தரராமஅய்யரைப் பார்க்க வந்தார்.

"உங்க கார் டிரைவரை ரெண்டு மூணு நாளைக்கு என்கூட அனுப்புங்க" என கேட்டுக்கொண்டதையடுத்து அவருடன் நான் அனுப்பி வைக்கப்பட்டேன்.

புத்தம் புது ஸ்டாண்டர்டு கார் வாங்கியிருந்தார் ராமசாமி. அந்தக் காரில் என்னை அமர வைத்து அவரே ஓட்டிப் போனார். சில பிரபலங்களை சந்திக்கப் போவதாகவும், அப்படிப் போகும் இடங்களில் அவர் காரை விட்டு இறங்கியதும் மீண்டும் காரை ரோட்டை நோக்கி திருப்பி வைப்பது, காரை பார்த்துக்கொள்வது... இதுதான் என் வேலை.

முன் ஸீட்டில் நான். டிரைவர் சீட்டில் அவர். ஒரு வீட்டின் கேட்டுக்குள் கார் நுழைந்தது.

காரை விட்டு இறங்கிய ராமசாமி, "நீ பின் ஸீட்ல போய் உட்கார்ந்துக்கோ. முன்ஸீட்டில் பாகவதர் உட்காரப்போறார்" எனச் சொல்லிவிட்டு அந்த வீட்டுக்குள் போனார்.

"என்னது பாகவதரா?" எனக்கு மகிழ்ச்சியும் வியப்பும் தாளவில்லை.

'பாகவதர் வருவார் பின்னே... அர்த்தர் வாசனை வரும் முன்னே' என்பதுபோல் திடீரென ஒரு நறுமணம் நாசியைத் தாக்க... நிமிர்ந்து பார்த்தேன். தங்கத்தில் வார்த்த உருவம்போல் பாகவதர் வந்தார். நான் கார் கதவைத் திறந்தேன். ஏறி உட்கார்ந்தார். என்னைப் பார்த்து அழகிய சிரிப்பொன்றை உதிர்த்தார்.

கார் கிளம்பியது. பின் ஸீட்டில் இருந்தபடி அவர்கள் பேசியதிலிருந்து நான் தெரிந்துகொண்டது இதுதான்...

'ராமாயணம்' உள்ளிட்ட பல படங்களைத் தயாரித்தவர் எம்.ஏ.வேணு. பாகவதரின் ரசிகர் அவர். பாகவதரோ 'லட்சுமிகாந்தன் கொலை வழக்கு' காரணமாக



மார்க்கெட் இழந்து நொடித்திருந்தார். வேணுவும் பணத் தட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட பாகவதர் மேல் மரியாதை காரணமாக பாகவதரை வைத்து 'சிவகாமி' படத்தை தயாரித்தார். இந்தப் படத்தினை வெளிக்கொண்டுவர ஃபைனான்ஸியரிடம் கடன்வாங்க பாகவதரை, ராமசாமி அழைத்துச் செல்கிறார்.

ஃபைனான்ஸியரைப் பார்த்துப் பேசி அக்ரிமெண்ட்டுடன் திரும்பி வருகிறார்கள்.

'காரை நீ ஓட்டு' என்றார் ராமசாமி. அர்ஜுனனுக்கு தேரோட்டிய கிருஷ்ணனுடன், பாகவதருக்கு காரோட்டும் பாலகிருஷ்ணனான என்னை ஒப்பிட்டுக்கொண்டே காரை ஓட்டினேன். ஃபைனான்ஸியரின் அக்ரிமெண்ட் கண்டிஷன்களை பாகவதருக்கு படித்துக் காட்டியபடியே வந்தார் ராமசாமி.

வாழ்க்கையில் ஏற்றம் என்பது எவ்வளவு விரும்பத்தக்கதோ அந்தளவு வருந்தத்தக்கது இறக்கம்.

**தன் வாழ்வில் நடந்த இரண்டு சம்பவங்களை ஒப்பிட்டு பாகவதர் சொன்ன ரகசியம்…**

# 10. பாகவதரும், வெள்ளைக் குதிரையும்!

தியாகராஜ பாகவதருக்கு ரசிகைகள் அதிகம். 'ஹரிதாஸ்' படத்தில் பெண்களை வசீகரிக்கும் மைனராக நடித்திருந்ததால் வழக்கத்துக்கு மாறாக வில்லத்தனம் போன்ற குறும்பை நடிப்பில் வெளிப்படுத்தினார்.

'வாழ்வில் ஓர் திருநாள்' பாடல் காட்சியில் பெண்ணொருத்தி மதி மயங்கி பாகவதரைப் பார்த்து கண்ணடிப்பாள். பாகவதர் பார்க்கிற அழகான பெண்களையெல்லாம் கண்ணடித்து சில்மிஷம் காட்டுவார்.

அதேபோல் அந்தப் படத்தில் வரும் 'மன்மத லீலையை வென்றார் உண்டோ' பாடலும் பரபரப்பாகப் பேசப்பட்டது. கட்டிய மனைவியை விட்டுவிட்டு தாசியே கதி என கிடப்பார் பாகவதர். தாசியாக அன்றைய கவர்ச்சிக் கன்னி டி.ஆர்.ராஜகுமாரியின் காந்தமென இழுக்கும் கவர்ச்சி ஆட்டமும் பாகவதரின் பாட்டும் ரசிகர்களை மயக்கிப்போட்டது.

'மன்மத லீலையை வென்றார் உண்டோ?

என்மேல் உனக்கென்ன பாராமுகம்?

நின்மதி வதனமும், நீள்விழியும் கண்டு... என்மதி மயங்கினேன் மூன்று உலகிலும்

என்னுடனே நீ பேசினால் வாய் முத்து உதிர்ந்துவிடுமோ?



உன்னை எந்நேரமும் நினைந்து உருகும் என்னிடம் வந்தால் மெனக்கெடுமோ?

உன்னை நயந்து, நான் வேண்டியும், ஓர் முத்தம் தந்தால் குறைந்திடுமோ

ஒரு பிழை அறியா என் மனம் மலர்க்கணை பாய்ந்து அல்லல்படுமோ மனம் கவர்... மன்மத லீலையை வென்றார் உண்டோ?'

...இப்படி முத்தம் கேட்டு இரைஞ்சி ஒரு பூவை எடுத்து நாசியில் வைத்து ஆழமாக முகர்ந்து வீசுவார் பாகவதர். ஆடியபடியே அதை கேட்ச் பண்ணி தலையில் சூடும் ராஜகுமாரி, பாகவதரை நோக்கி ஒரு பறக்கும் முத்தத்தை வீசுவார். அப்போது இசையுடன் ராஜகுமாரியின் ''இச்' சத்தமும் இனிமையாக ஒலிக்கும்.

இப்படிப் பல கவர்ச்சிகரமான விஷயங்களால் படம் சக்கைப் போடுபோட்டது. அதாவது 16-10-1944ல் தீபாவளி நாளில்

வெளியான ஹரிதாஸ் 1945 தீபாவளியைக் கடந்து 1946 தீபாவளி வரை தொடர்ந்து ஓடியது.

இந்த வெற்றி பாகவதரின் உச்சகட்டம் என்றே சொல்லலாம். இந்த உச்சகட்ட காலத்தில்தான் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் பாகவதர் சிறை சென்றார்.

'பாகவதர் சிறை சென்றதற்குக் காரணம் அந்த வெள்ளைக் குதிரைதான்' என பொதுமக்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள். அதிலும் எங்க மதுரை மாவட்ட மக்கள் அந்த வெள்ளைக் குதிரை பற்றியே அதிகம் பேசினார்கள். அப்போது நான் ஊரில் இருந்தேன். எங்க ஊரிலும் குதிரைப் பேச்சுதான்.

அதாவது...

கிராமப்புற மக்களின் நம்பிக்கைகளில் முக்கியமான ஒன்று... முனி, கருப்பு போன்ற காவல் தெய்வங்கள் தூய பால்நிற வெள்ளைக் குதிரையில் அமர்ந்து ஊரைச் சுற்றி வந்து காவல் காப்பதாக ஐதீகம். அதனால்தான் நள்ளிரவில் வீட்டை விட்டு வெளியே வந்தால் 'குதிரைல முனி வர்ற நேரம்... குறுக்கப் போனா அடிச்சிடும்' என்பார்கள். அப்படியும் வெளியே போகவேண்டிய நிர்பந்தம் வந்தால் சாலையின், தெருவின் ஓரமாகவே போய்வரச் சொல்லுவார்கள்.

''சாமி வர்ற வெள்ளைக் குதிரையில் ஏறி பாகவதர் வந்தாருல்ல... அதுதான் சாமி கோவத்துக்கு ஆளாகிட்டாரு பாகவதரு'' என அழுத்தமாக நம்பினார்கள்.

'ஹரிதாஸ்' படத்தில் டைட்டில் முடிந்ததும் ஆரம்பக் காட்சியே மாசு மருவற்ற வெள்ளைநிறக் குதிரை மீது பாட்டுப் பாடியபடி வந்து பெண்களை வம்பிழுப்பார் பாகவதர். (வாழ்வில் ஓர் திருநாள் பாடல் காட்சி)

இதுதான் அந்த வெள்ளைக்குதிரை சென்ட்டிமென்ட்.

இதே வெள்ளைக் குதிரை சென்ட்டிமென்ட் பின்னாளில் என்னையும் கூட பதட்டப்பட வைத்தது.

நான் கதை எழுதி தயாரித்த 'புதிய தோரணங்கள்' படத்தில் நாயகி மாதவி வெள்ளைக்குதிரை வளர்ப்பார். (மாதவியின் ஆளை விழுங்கும் அந்த கண்ணழகைப் பார்த்து அவரை கதாநாயகியாக தேர்வு செய்து அறிமுகப்படுத்தியவன் நான்) படத்தின் முதல் காட்சியிலேயே... பக்கத்து

ஊர் பசுமாடு தங்கள் ஊர் வயலில் மேய்ந்ததால் சேலை முந்தானையால் மாட்டைக் கட்டி வெள்ளைக் குதிரையில் அமர்ந்து மாதவி வருவதாக... வசனம் எழுதிய ஏ.எஸ்.பிரகாசம் காட்சியை எழுதிவிட்டார்.

"பாகவதரையும், வெள்ளைக்குதிரை சென்ட்டிமென்ட்டை யும் சொல்லி குதிரை மீது அமராமல் இழுத்து வருவதுபோல் காட்சியை மாற்றலாம்" என நான் சொன்னேன்.

படத்தின் இயக்குநரான கேமராமேதை எம். கர்ணன், "இந்தக் காலத்திலுமா இப்படிப்பட்ட சென்ட்டிமென்ட்டை நம்புறீங்க? எழுத்தில் உள்ளபடி மாதவி, குதிரையில் வரட்டும்" எனச் சொல்லி... அதன்படியே எடுக்கப்பட்டு வெற்றிகரமாக, லாபகரமாக படம் ஓடியது. மாதவியும் கமல், ரஜினியுடன் நடித்து நட்சத்திர நாயகியாக உயர்ந்தார்.

'கோகிலவாணி' படப்பிடிப்பின்போது மைசூரில் காகா ராதாகிருஷ்ணன் எனக்குப் பழக்கமானாரல்லவா...? அது முதல் நான் அவரை அவ்வப்போது சந்திப்பேன். பாகவதர் தன் சொந்த விஷயங்களையும் காகாராதாகிருஷ்ணனிடம் மனம்விட்டுப் பேசுவாராம். அப்படி பாகவதர் இரண்டு சம்பவங்களை ஒப்பிட்டுச் சொன்னதை, ஒருமுறை காகாராதாகிருஷ்ணன் என்னிடம் சொன்னார்.

அது...

திருச்சியிலிருந்து பாகவதர் ரயிலில் ஏறி சென்னைக்கு வந்துகொண்டிருக்கிறார் என்கிற தகவல் சென்னை மக்களுக்கு எட்டிவிட்டது. அன்று பெரும்பான்மையான மக்கள் வேலைக்குப் போகாமல் எக்மோர் ஸ்டேஷனில் திரண்டுவிட்டார்கள். அன்றைய தேதிக்கே பிளாட்ஃபார்ம் டிக்கெட் ஒன்றின் விலை அரை அணாதான். அதை சிலர் வாங்கி ஒரு டிக்கெட் ஐந்து ரூபாய் என பிளாக்கில் விற்றிருக்கிறார்கள். ஐந்து ரூபாயில் அந்தக் காலத்தில் ஏழைகள் ஒருவாரம் நன்றாகச் சாப்பிடலாம். டிக்கெட் ஸ்டாக் இல்லாததால் ஸ்டேஷனுக்கு வெளியேயும் மக்கள் வெள்ளம்.

'தேவகுமாரன்போல் இருப்பாராம் பாகவதர். அவர்கிட்ட இருந்து ஒளிவீசுமாம். அப்படிப்பட்டவரை ஒரே ஒரு முறை நேரில் பார்த்தா போதும்' என்பதுதான் அந்த மக்களின் நோக்கம்.

ரயில் எக்மோர் வந்து சேர்ந்தது. திரண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து மிரண்டுதான் போனாராம் பாகவதர். போலீஸாருக்கு தகவல்

சொல்லப்பட்டது. மூன்றடுக்கு வளையமாக போலீஸார், பாகவதரைச் சுற்றி நின்று பாதுகாப்பாக அவரை காரில் ஏற்றி அனுப்பி வைத்தார்களாம்.

அப்படி மக்கள் வெள்ளத்தில் நீந்திய பாகவதர் சிறை சென்று வந்த பிறகு 'புது வாழ்வு','ராஜமுக்தி' படங்களை வெளியிட்டார். ஆனால் தோல்வியையே சந்தித்தது. உடல் மெலிந்து, பார்வையில் குறை ஏற்பட்ட நிலையில்.. சென்னை வருவதற்காக திருச்சியில் ரயில் ஏறுகிறார். இந்த உலகம் பார்த்து மயங்கிய பாகவதராக இருந்தோம்... இப்போது வசீகரம் தன்னிடம் இல்லையே என்பதை உணர்ந்துகொண்ட பாகவதர், தன்னைப் பார்த்து யாரும் பரிதாபமாக பேசக்கூடாது என்பதால் தலையில் உருமா கட்டிக்கொண்டு ரயிலில் அமர்ந்திருக்கிறார். பிளாட்ஃபார்மில் சோடா விற்கும் பையன் ஒருவன் எப்படியோ அடையாளம் கண்டு 'டேய்... இவர்தான்டா நம்மூரு பாகவதரு' என சக சோடா பையனிடம் சொல்ல... இரண்டாமவன் பாகவதரின் அருகே வந்து 'இவர்தானா?' எனச் சொல்லிவிட்டு.... 'சோடா... சோடா... கலரு...' என கூவிக்கொண்டே போய்விட்டானாம்.

பாகவதர் தன்னை மறைத்துக்கொண்ட நிலையிலும் அவரை சோடா பையன் அடையாளம் கண்டது... புகழின் வலிமை. அடையாளம் கண்டும் அதை அவன் வெளிப்படுத்தாதது வீழ்ச்சியின் வலிமை. 'ஹரிதாஸ்' படம்

ரிலீஸானபோது புகழின் உச்சியில் இருந்த பாகவதர், பத்து ஆண்டுகளுக்குப் பின் சோடா விற்பவனுக்கு தன் புகழ் தெரியாமல் போய்விட்டதே என்று உருகி கண் கசிந்திருக்கிறார்... தனது கருப்பு கண் கண்ணாடிக்குள்.

இந்த இரண்டு நிகழ்வுகளை ஒப்பிட்டு இயற்கை நீதியின் யதார்த்தத்தை காகா ராதாகிருஷ்ணனிடம் பகிர்ந்திருக்கிறார் பாகவதர்.

பாகவதர் நினைவுகளில், கலங்கிய கண்களுடன் காரை ஓட்டிக்கொண்டு அலுவலகம் வந்தேன்.

முதலாளி சுந்தரராமஅய்யர் தனது தம்பிகள் சாமிராவ், ராமாச்சாரி, சந்திரன் மற்றும் சகோதரிகள் என பெரும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர். சினிமாவுக்காக மதுரை தெற்கு மாசி வீதியில் இருந்த பெரிய வீட்டையே இழந்தவர். ஆனாலும் தொழிலாளர்களுக்கு உதவிகள் செய்யும் தர்மவான். அதனால்தான் அவரின் வம்சம் உள்நாடு -வெளிநாடுகளில் நன்றாக வாழ்கிறார்கள். நல்ல மனம்கொண்ட

முதலாளியால் டி.ஆர்.மகாலிங்கத்தை வைத்தும் 'மதிவாணன்' படத்தை எடுக்க முடியாத சூழ்நிலை. மதுரைக்கே சென்றுவிட்டார்.

'ஆகஸ்ட் புரட்சி' என்கிற படத்தை தயாரிக்கும் ஏற்பாடுகளைச் செய்துவந்தார் ராமசாமி முதலியார். முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரியின் தந்தைதான் ராமசாமி முதலியார். அப்போது இந்திரகுமாரி சிறுமியாக இருந்தார்.

பாட்டு சான்ஸ் கேட்டு அங்கே போனேன். எதிர்பாராத வரவேற்பு காத்திருந்தது எனக்கு.

# 11. கற்பனைக் கதையை மிஞ்சும் உண்மை சம்பவம்!

ராமசாமி முதலியாரின் (பின்னாளில் அமைச்சராக இருந்த இந்திரகுமாரியின் அப்பா) 'ஆகஸ்ட் புரட்சி' அலுவலகத்திற்கு பாட்டெழுத வாய்ப்புக் கேட்டுப் போனேன். இரண்டு, மூன்று சந்திப்புகளில் நல்ல பழக்கம் ஏற்பட்டது முதலியாருடன். இதனால் 'இந்த கதைக்கு நீயே திரைக்கதை, வசனம் எழுதேன்' என்றார்.

படம் பார்த்துப் பார்த்தே எனக்குள் மெருகேறியிருந்த கதாசிரியன் விழித்துக்கொண்டான். தாங்க முடியாத சந்தோஷத்துடன் ஸ்கிரிப்ட் ஒர்க் முடித்தேன். ட்ரஸ்ட்புரம் அருகே மைனர் ட்ரஸ்ட்புரம் பகுதியில் இருந்த ஒரு நடிகருக்கு கதை சொல்ல அனுப்பி வைக்கப்பட்டேன். அந்த நடிகர் அப்போது பிரபலமில்லை. ஆனால் அவரின் தோற்றமும், கனிவும், அன்பான பேச்சும் என்னை ஈர்த்தது.

'நிச்சயம் இவர் பெரிய ஆளா வருவார்' என என் உள்மனம் சொல்லியது.

அந்த நடிகரை வைத்து மூவாயிரம் அடிகள் வரை எடுக்கப்பட்ட நிலையில்... 'ஆகஸ்ட் புரட்சி' படம் முடங்கியது. தமிழகத்தில் பிறந்த அந்த கன்னடர், என்னுடன் சில நாட்கள் பழகினாலும் என் மனதில் ஆழப் பதிந்துவிட்டார். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார் அவர். ஆனால்... என் உள்மனம் சொல்லியது போலவே பின்னாளில் 'கன்னட சூப்பர் ஸ்டார்' ஆனார் அந்த நடிகர். ஆமாம்... ராஜ்குமார்தான் அவர். நான் சினிமாவில் ஜெயித்தபிறகு அவரை சந்திக்க ஆசைப்பட்டேன். அது முடியாமலே போய்விட்டது. திருமதி ராஜ்குமாரையாவது சந்தித்து விட வேண்டும் என எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

என் சினிமா முயற்சிகள் கைவிட்டுப்போகிறதே என்கிற சுயபரிதாபம் என்னைப் பாடாய் படுத்தியது. இருப்பினும் மனஉறுதியை விட்டுவிடாமல், வெளியூர்களில் நாடகம் போடும் வேலையைச் செய்தேன். சினிமாவில் சின்னச் சின்ன வேஷங்களில் நடித்தவர்கள் ஒரு சிலரை நாடகத்தில் சேர்த்து பப்ளிஸிடி பண்ணினேன். இதனால் ஓரளவுக்கு கூட்டம் சேர்ந்தது. நாடகத்தில் பங்கேற்கும் எல்லோரையும் பனகல் பார்க்கிற்கு வரச் சொல்லிவிடுவேன். அங்கிருந்து வேன் மூலம் அவர்களை நாடகம்

நடக்கும் ஊருக்கு அழைத்துச் செல்வேன். ஒருமுறை சென்னை-ஆந்திரா பார்டரில் இருக்கும் திருக்கண்டலம் என்கிற ஊரில் நாடகம் நடத்த வேனில் ஆட்களை ஏற்றிக் கொண்டிருந்தேன்.

அப்போது நாடகக் குழுவில் உள்ள ஒருவர் ஒல்லியாக இருந்த ஒரு இளைஞனை என் முன்னால் நிறுத்தினார்.

"இவன் முறைப்படி டான்ஸ் கத்துக்கிட்டிருக்கான். ஆனாலும் கஷ்டப்படுறான். நாடகத்தோட இடைவேளையில் இவனை டான்ஸ் ஆட வைக்கலாம். ரொம்ப பசியில் இருக்கான். வயித்துக்கு சாப்பாடு மட்டும் போடுங்க"' என பரிந்துரைத்தார். இதனால் அந்த இளைஞனையும் ஏற்றிக் கொண்டோம்.

திருக்கண்டலம் ஊரில் நாடகம் நடந்தது. இடைவேளையின் போது அந்த இளைஞனை அழைத்தேன்.

"சாப்பிட்டியா?"

"வயிறார சாப்பிட்டேன்!"

"சரி மேடையில் போய் டான்ஸ் ஆடு!"

நான் சொன்னதும் மேடையில் ஏறி ஆடினான். நான் பிற்பகுதி நாடக வேலையில் இருந்தேன். திடீரென ஒட்டுமொத்த கூட்டமும் ஆரவாரம் செய்து 'திரும்பவும் ஆடு' என்றது. நான் வியப்பு தாங்காமல் வந்து பார்த்தேன்.



மீண்டும் ஆடினான் அந்த இளைஞன். உடலை ரப்பராக வளைத்து ஆடுபவர்களைப் பார்த்திருக்கேன். இவனோ எலும்பையே வளைத்து ஆடி அதிசயிக்க வைத்தான்.

உற்சாகம் தாங்காத கூட்டம் "மீண்டும் ஆடு' என்றது. திரும்பவும் அந்த இளைஞன் அற்புதமாக ஆடினான்.

மக்களோ நான்காவது முறையாகவும் அவனை ஆடச் சொன்னார்கள்.

அவனோ களைத்துப் போயிருந்தான். உடனே மேடைக்கு வந்து மைக் பிடித்த நான், "இனியும் ஆடுவதற்கு அந்த இளைஞனின் உடலில் தெம்பு இருக்காது. அது மட்டுமில்லை... நாடகத்தின் பின் பகுதியை நடத்தணும்" என்றேன்.

"நாங்க குடுத்த காசு அந்தப் பையன் ஆடியதுக்கே சரியாப் போச்சு. ஆட்டம் நல்லா இருந்துச்சு. அதுபோதும். உங்க நாடகம் வேணாம்" எனச் சொல்லிவிட்டு கூட்டம் கிளம்பிப் போய்விட்டது.

பாதி நாடகத்தை நடத்தாமலே திரும்பி வந்தோம். அந்த இளைஞன் யார் தெரியுமா?

பின்னாளில் பல பெரிய நட்சத்திரங்களையே ஆட்டுவித்த டான்ஸ் மாஸ்டர் சுந்தரம். அதாவது... பிரபுதேவாவின் அப்பா.

(சுந்தரத்துடனான சுவாரஸ்ய அனுபவங்களை அதற்கான சந்தர்ப்பத்தில் சொல்கிறேன்).

இரண்டு குழந்தைகளாகி விட்டது எனக்கு. வருமானம் இல்லாமல் குடும்பம் நடத்தவே சிரமமாயிருந்தது. அந்தச் சமயம் சக கார் டிரைவரான என் நண்பன் யோசனைப்படி கல்கத்தா பயணமானோம்.

அப்போதெல்லாம் கல்கத்தாவில் தான் அம்பாஸிடர் கார் தயாராகும். சென்னை கம்பெனிக்கு 30 கார்கள் ஆர்டர் கிடைத்ததும் ஒரு மெக்கானிக் உட்பட 30 டிரைவர்களை ரயில் மூலம் அனுப்பி வைப்பார்கள். கல்கத்தா போய் அங்கிருந்து 30 கார்களையும் எடுத்துக் கொண்டு 'கான்வாய்' அமைத்து சென்னை கொண்டு வர வேண்டும். புது இன்ஜின் என்பதால் மிதமான வேகத்தில் வரவேண்டும். 15 நாள் பயணமாக பல மாநிலங்களைக் கடந்து சென்னை கொண்டு வரவேண்டும்.

முதல் வண்டி 'பைலட் கார்'. அந்த டிரைவர்தான் வழிநடத்தும் தலைவன். காரில் பச்சைக்கொடி கட்டியிருக்கும். கடைசி கார் 'பிரேக் டவுன் கார்'. சிவப்புக் கொடி கட்டியிருக்கும். அதில் மெக்கானிக் வருவார். 50 அடி இடைவெளி விட்டு முந்திச் செல்லாமல் சீராக செல்ல வேண்டும். ஏதாவது ஒரு கார் ரிப்பேர் ஆனாலும் எல்லா கார்களும் வரிசையாக நிற்க வேண்டும். மெக்கானிக் கார் முன்னே வந்து சரி செய்யும். பல மாநில கலாச்சாரத்தின் அனுபவங்களுடன் இருக்கும் இந்த கான்வாய் பயணம்.

முதல் முறையாக இந்த கான்வாயில் நானும் கார் ஓட்டி வந்தேன். ஒரு மலைப்பாதையில் எல் ஷேப் பாதையில் என் கார் நுழைந்தபோது... எதிரே ஒரு பள்ளத்தில் பஞ்சாப் லாரி ஒன்று தலைகீழாக குத்திக் கிடந்தது. ஆனால் பைலட் கார் நிற்காததால் நானும் அதைக் கடந்து போனேன்.

அதன்பிறகுதான் எனக்கு முன்பாக என் நண்பன் ராமு ஓட்டி வந்த காரை பள்ளத்தில் மோதித் தள்ளி அதன் மீது லாரி ஏறி நிற்பதை கடைசியாக வந்த மெக்கானிக் கண்டுபிடித்தார்.

சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தோம். உள்ளே இறங்கி ராமுவின் கால்களை தூக்கினேன். அது தனியாக வந்தது. நினைத்துப் பார்க்க முடியாத கொடுமை அது.

விபத்து பற்றி சென்னை ஆபீஸிற்கு தகவல் சொல்லப் போன கேஷியர் 'ராமு இறந்திட்டான்' என சொல்லி முடிப்பதற்குள் கேஷியரின் தலையில் தாக்கி மர்ம கும்பல் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடியது. அவரை கிராம மக்கள் ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்த்திருக்கிறார்கள். இது தெரியாமல் போலீஸில் தகவல் சொல்லி முறைப்படி பரிசோதனை நடத்தி அசரபொத் (ஆயிரம் தோட்டம்) என்கிற இடத்தில் ராமுவைப் புதைத்துவிட்டு வந்தோம்.

"ராமு இறந்திட்டான். ஆனால் மூன்று ராமுகளில் எந்த ராமு?' எனத் தெரியாத சென்னைக் கம்பெனி மூன்று ராமு வீடுகளுக்கும் தகவல் சொன்னது.

நாங்கள் விதியை மீறி காரை வேகமாக ஓட்டி இரண்டு நாளில் சென்னை வந்தோம். 30 டிரைவர்களின் குடும்பமும் திரண்டு நின்றிருந்தது. இப்போதுபோல் அந்தக் காலத்தில் போன், செல்போன் வசதி இல்லாததால், கம்பெனியில் உள்ள நிர்வாகத்திற்கே இறந்தது யார் என்பது தெரியவில்லை. கூடியிருந்த குடும்பத்தினர் "இறந்து போன ராமு யார்?' என்ற குழப்பத்தில் இருந்தார்கள். வேகமாக வந்த கார்கள் ஒவ்வொன்றையும் நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்திவிட்டு, தங்கள் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக டிரைவர்கள் ஓடி வந்தனர். உயிருடன் வந்த இரண்டு ராமுகளையும் பார்த்த அவரவரர் மனைவிகள் சந்தோஷம் தாங்காமல் மகிழ்ச்சியில் அழுதார்கள். 'இறந்துபோனது தன் கணவர் ராமுதான்' என்று அறிந்த இறந்தவரின் மனைவி, 'ஐயோ... என்னை விட்டுட்டுப் போயிட்டீங்களே' என்று கதறி அழுது, கைக்குழந்தையோடு தரையில் விழுந்தாள். சக டிரைவர்கள் அந்தப் பெண்ணையும், குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். அந்தப் பரிதாபமான காட்சி எங்கள் இதயங்களை சுக்குநூறாக்கிவிட்டது. இந்த கொடூர விபத்தால் 'கான்வாய் வேலைக்கு செல்ல வேண்டாம்...' என என் மனைவி சொல்லிவிட்டாள்.

இங்கே நான் சுருக்கமாகச் சொன்ன இந்த கான்வாய் சம்பவத்தை ஒரு கதைபோல் பின்னாளில் பார்த்திபனிடம் சொன்னேன். உடனடியாக பத்தாயிரம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தார். ஆனால் பல மாநில லொகேஷன், புதிய அம்பாஸிடர் கார்கள்... என பெரும் பட்ஜெட் தேவைப்பட்டதால் பார்த்திபன் படமாக்கவில்லை. கதையைக் கேட்ட சத்யராஜ் மேனேஜர் ராமநாதன், அர்ஜுனை வைத்து படமாக்க

விரும்பினார். டைரக்ஷன் கே.சுபாஷ் அதுவும் பட்ஜெட்டால் தொடங்கப்படவில்லை.

பாலிவுட்டின் பிரபல டைரக்டர் ராஜ்குமார் சந்தோஷி சென்னை வந்தபோது கே.சுபாஷ் என்னை அழைத்துச் சென்றார். ஆனால் முழுக்கதையையும் சந்தோஷியிடம் சொல்ல தோதில்லாமல் போனது. இந்தியில் படமாக்க கே.சுபாஷ் முயற்சித்தபடி இருக்கிறார். டைரக்டர் செல்வா மூலம் என்னிடம் இந்த கதையை கேட்டு 'சமயம் வாய்த்தால் நிச்சயம் பண்ணலாம்' என ஆஸ்கர் ரவிச்சந்திரனும் சொல்லியிருக்கிறார்.

கற்பனைக் கதைகளை விட நிஜம், திருப்பம் நிறைந்ததாக இருக்கும் என்பதற்கு எனது 'கான்வாய்' அனுபவம் உதாரணம்.

1963 'கண் திறந்தது' பட ஹீரோவும், நடிகை மனோரமாவின் கணவருமான ராமநாதன், காகா ராதாகிருஷ்ணன் ஆகியோரை வைத்து 'ராமாயணம்' படத் தயாரிப்பாளர் எம்.ஏ. வேணு தலைமையில் 'வெள்ளிக்கிழமை' என்ற நாடகத்தை இயக்கி அரங்கேற்றினேன். நாடகம் பலத்த பாராட்டைப் பெற்றது. (வெள்ளிக்கிழமை கதை 1970-ல் 'வெகுளிப் பெண்' என படமாகி ஜனாதிபதி விருதை வென்றது).

நாடக வெற்றியால் ''கலைஞானம்' என்கிற பெயர் வெளியே தெரிய ஆரம்பித்தது.

கிறிஸ்தவ மத பின்னணியிலான கதையை டி.ஆர்.மகாலிங்கம் -எம்.வி.ராஜம்மா நடிக்க 'ஞான சௌந்தரி' என்ற பெயரில் 'சிட்டாடல் ஸ்டுடியோ' ஜோஸப் தளியத் எடுத்துவந்தார். அதே கதையை அதே 'ஞான சௌந்தரி' என்ற பெயரிலேயே எம்.கே.ராதா-சுசீலாவை வைத்து ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசனும் எடுத்தார். இரண்டு படங்களும் வெளியானாலும் சிட்டாடலின் 'ஞான சௌந்தரி' பெரும் வெற்றி. ஜெமினியின் 'ஞான சௌந்தரி' மாபெரும் தோல்வி.

ஜோஸப்தளியத் கிறிஸ்தவர் என்பதால் அவர் படத்தில் இயல்பு இருந்தது. வாசன் படத்தில் அது இல்லை. தோல்வியை மனப்பூர்வமாக ஒப்புக் கொண்ட வாசன் ''இனிஜெமினியின் 'ஞான சௌந்தரி' எந்தக் காலத்திலும் திரைக்கு வரக்கூடாது'' என பிரிண்ட்டுகளையெல்லாம் திரையரங்குகளிலிருந்து வரவழைத்து மொத்தமாக தீயிட்டுக் கொளுத்தினாராம்.

இப்படிப்பட்ட பாரம்பரியம் கொண்ட சிட்டாடல் நிறுவனம் என் வாழ்க்கையில் திருப்புமுனையை உண்டாக்கியது.

# 12. முருகன் சிரித்தான்!

சிட்டாடல் நிறுவனத்திற்குள் நான் நுழைவதற்குள் காலம் என்னை சீட்டாட்டம் போல் ஆடித்தான்விட்டது.

ரேடியோ ஸ்டேஷன் பின்புறமுள்ள காரணீஸ்வரர் கோயில் தெருவில்தான் குடியிருந்தேன். வீட்டு வாடகை ஒன்றாம் தேதி கொடுக்கவேண்டும். அதனால் அந்தத் தேதி வந்தால் ஹவுஸ் ஓனர் வருவதற்குள் வீட்டை விட்டு வெளியேறி பீச்சில் வந்து அமர்ந்து கொள்வேன். மாதம் 10 ரூபாய் வீதம் நான்கு மாத வாடகை தரவில்லை.

'தெய்வப் பிறவி', 'புதையல்' படங்களை எடுத்த கமால் பிரதர்ஸ் தயாரிப்பில் இரட்டை இயக்குநர்கள் கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில் ஒரு படம் எடுக்க ஏற்பாடாகியிருந்தது. இரட்டை இயக்குநர்களிடம் 'அமிர்தம்' என்கிற கதையைச் சொல்லியிருந்தேன்.

'கதை நல்லாருக்கு. புரொடியூஸர் இன்னும் பத்து நாள்ல வந்திடுவார். வந்ததும் பேசிக்கலாம்' என டைரக்டர்கள் சொல்லியிருந்தனர். அந்த நம்பிக்கையோடு காத்திருந்த நிலையில் வீட்டு வாடகைக்கூட கொடுக்க முடியாத என் நிலையைத் தெரிந்து ஊரிலிருந்து அண்ணன் வந்துவிட்டார்.

''நீ எடுத்த சினிமா முயற்சிகள் எதுவுமே சரியா வரலை. இனிமேலும் வாழ்க்கையைத் தொலைச்சிராத. குடும்பத்தோட கிளம்பு. ஊர்ல பெட்டிக்கடை வச்சுத் தர்றேன், பொழைச்சுக்கலாம்'' எனச் சொல்லிவிட்டார் தீர்மானமாக. ஹவுஸ்ஓனரைப் பார்த்து ஐந்து மாத வாடகையாக 50 ரூபாயும் கொடுத்துவிட்டார்.

எக்மோர் ரயில் நிலையத்திற்கு குடும்பத்துடன் வந்து சேர்ந்தோம். அண்ணன் டிக்கெட் எடுக்கத் தயாரானபோது...

''அண்ணே... கிருஷ்ணன்-பஞ்சு பத்துநாள் வெயிட் பண்ணச் சொல்லியிருக்காங்க. வீட்டு வாடகைக் கணக்குப்படி இன்னும் பத்துநாள் அந்த வீட்ல தங்கலாம். இந்த பத்துநாள் மட்டும் பொறுத்துக்க. இதுல முடியலேன்னா நீ சொன்னபடியே கேட்கிறேன். என் பொண்டாட்டி, பிள்ளைகளை மட்டும் இப்போ கூட்டிட்டுப் போண்ணே.''

''எக்கேடோ கெட்டுப் போ'' எனச் சொல்லிவிட்டு டிக்கெட் எடுத்தார்.

ரயில் ஏறினார்கள். கிளம்புகிற நேரம். கலங்கிய கண்களுடன் என்னைப் பார்த்த அண்ணன், "சாப்பிடக் காசிருக்கா?" என்றார்.

என்னிடம் சல்லிப்பைசா இல்லை. ஆனாலும் "இருக்கு" என்றேன்.

ரயில் சத்தமெடுத்தது. நான்கு வயதிலும், இரண்டு வயதிலுமாக இருந்த என் குழந்தைகளையும், என் மனைவியின் சலனமற்ற முகத்தையும் பார்த்தேன். அழுகை வரும்போல் இருந்தது. கட்டுப்படுத்திக் கொண்டேன்.

ரயில் ஓஓஓ...வென சத்தமெடுத்து ரயில் புறப்படும்போது என் உள்மனமும் அதேபோல் ஓஓஓ...வென அழுதது.

"ஏலே... பாலு... உன் குடும்பம் தோத்துப்போய் ஊருக்கே போகுதேடா..." என எனக்குள் இருந்து ஒரு குரல் பேசியது.



அழுகையை அடக்கிக்கொண்டு நடந்தே வந்தேன். கதவைத் திறந்தேன்.பொருட்கள் எடுக்கப்பட்ட வீடு வெறுமையாக இருந்தது. ஒரு குண்டு பல்பு வெளிச்சத்தில் ராணிமுத்து காலண்டரில் 'யாமிருக்க பயமேன்' என முருகன் சிரித்துக்கொண்டிருந்தான்.

''எந்த நேரமும் உம்பேரைச் சொல்வேனடா... பாவி... இப்படி கைவிட்டுட்டியே' என முருகன் படத்தை ஓங்கி ஓங்கி கைகளால் அடித்துக் கதறிக் கதறித் துவண்டு விழுந்தேன்.

கதவு தட்டும் சத்தம் கேட்டு விழித்தேன்.

'என்னா கலைஞானம் மணி அஞ்சுக்கு மேல ஆச்சு இன்னும் தூக்கமா?'

குரல் கேட்டு திடுக்கிட்டேன். "விடிஞ்சு போச்சா? எப்படித் தூங்கினேன்?" என வியப்பு.

'பாக்தாத் திருடன்', 'மாயமனிதன்' படங்களின் வசனகர்த்தா ஏ.எஸ்.முத்துதான் குரல் கொடுத்தவர். சொந்தப் படம் எடுத்து நொடித்த முத்து 'ஓசி டீக்கு வர்றாரே' என படுத்தபடியே இருந்தேன்.

'என்கிட்ட டீ குடிக்க காசு இருக்கு' என்றார்.

துள்ளி எழுந்தேன். கடைக்குப் போய் டீ சாப்பிட்டோம்.

'சிட்டாடல் ஸ்டுடியோவுல கதை தேவைப்படுதுனு போய் சொன்னேன். அதிபருக்கு என் கதை பிடிக்கல. நீதான் நல்லா கதை சொல்வியே. அதனால உன்பேரை ஸ்டுடியோவுல பதிஞ்சு வச்சிட்டு வந்திருக்கேன்' என்றார் முத்து.

என் நண்பரான டி.என்.பாலுவின் கதையில் ஜெய்சங்கரை அறிமுகம் செய்து 'இரவும் பகலும்' எடுத்து வெளியிட்டிருந்தது சிட்டாடல். படம் சக்ஸஸ். அதனால் உடனடியாக அடுத்த படம் தொடங்கவிருக்கிறார்கள். ஆனாலும் போகிற இடமெல்லாம் கதை கேட்டுட்டு 'நல்லாருக்கு... தகவல் சொல்றப்ப வாங்க'னு அலைக்கழிப்பதால் நான் ஆர்வமில்லாமல் இருந்தேன்.

பஸ் ஏறி கெல்லீஸில் உள்ள சிட்டாடல் அதிபர் ஜோஸப் தளியத் வீட்டிற்கு வந்தோம்.

ஹுட்கா புகைத்தபடியே 'உம்' என்றார் தளியத். அவர் மலையாளி. அவர் பேசும் தமிழ் வித்தியாசமாக இருக்கும். அதனால் 'கதைய சொல்லச் சொல்றாரு' என முத்து என்னிடம் சொல்ல...

"சார்... ஒரு கண்டிஷன்" என்றேன் தளியத்தைப் பார்த்து.

'என்ன?' என்பது போல பார்த்தார்.

"கதை பிடிச்சிருந்தா உடனே அட்வான்ஸ் தரணும். புடிக்கலேன்னா கட் அண்ட் ரைட்டா சொல்லிப்புடணும்" என்றேன்.

கோபத்தில் கண் சிவந்தார் தளியத்.

ஒருவித வெறியுடன் கதை சொல்ல ஆரம்பித்தேன். அது காமெடி கதை என்பதால் அடுத்த பத்து நிமிஷங்களில் தளியத்தின் சிவந்த கண்கள் சிவப்பு மாறி சிரிக்க ஆரம்பித்தன.

ஐம்பது நிமிஷங்களில் திரைப்படம் பார்ப்பதுபோல கதையைச் சொல்லி முடித்தேன்.

எழுந்து நின்று கை கொடுத்து பாராட்டிய தளியத், "சென்ட்டிமென்ட் கதை இருக்கா?" என கேட்டார்.

உருக்கமான ஒரு கதையைச் சொன்னேன்.

மறுபடியும் எழுந்து கை கொடுத்தார்.

"நீங்க நேரா ஸ்டுடியோவுக்கு வந்திடுங்க" எனச் சொன்னார்.

நானும் முத்துவும் வெளியே வந்தோம்.

"சார்... கார்ல ஏறுங்க" என ஒருவர் கூப்பிட...

'நிமிஷத்துல மனுஷன் வாழ்க்கை இப்படி மாறுதே?' என வியப்பும், மகிழ்ச்சியுமாய் காரில் ஏறி உட்கார்ந்தோம்.

பக்கத்திலேயே இருந்த ஸ்டுடியோவுக்கு காரில் போய் இறங்கினோம்.

"சார்... டிபன் சாப்பிட வாங்க" என ஊழியர் ஒருவர் அழைத்தார்.

வியப்பு தாங்கமுடியாமல் உணவுக்கூடம் போனோம். விதவிதமான டிபன். வயிறார சாப்பிட்டோம். அதிபரின் அறையில் உட்கார வைத்தார்கள். சிறிது நேரத்தில் அதிபர் தளியத் வந்தார். பின்னாலேயே பேங்க் மேனேஜர் உட்பட பெரிய பெரிய பதவிகளில் இருக்கும் தளியத்தின் மலையாளி நண்பர்கள் நாலைந்து பேர் வந்தார்கள்.

இந்த நண்பர்கள் சொல்லும் முடிவை வைத்துத்தான் தளியத் கதைகளை இறுதி செய்வார் என்பது புரிந்தது.

அந்த நண்பர்களிடம் இரண்டு கதைகளையும் சொல்லி முடித்தேன்.

'ரெண்டு கதையையும் விட்றாத' என தளியத்திடம் சொல்லிவிட்டுப் போனார்கள். சிட்டாடல் மேனேஜர் வந்தார். அக்ரிமெண்ட் தந்தார்.

'ஒரு கதைக்கு ரூ.2500/- வீதம் ஐயாயிரம் ரூபாய் விலை. அட்வான்ஸ் ஐநூறு ரூபாய்' என்றது அக்ரிமெண்ட்.

அப்போதெல்லாம் நூறு ரூபாய் நோட்டு மிகப்பெரியதாக ஆலமரத்து இலைபோல இருக்கும். ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளை என்னிடம் தந்தார்கள். அதுவரை நூறு ரூபாய் நோட்டை அடுத்தவர் கையில்தான் பார்த்திருக் கிறேன். இப்போது என் கைக்கு வந்ததும் உடம்பில் ஏதோ மின்சாரம் பாய்ந்ததுபோல் இருந்தது.

அக்ரிமெண்ட்டில் கையெழுத்துப் போடும்போது எனக்கு காய்ச்சலே வந்துவிட்டது. இவ்வளவு பெரிய சந்தோஷத்தைத் தாங்க முடியாமல் துவண்டு போனேன். பணத்தை வாங்கிக்கொண்டு வெளியே வந்தோம்.

"வாங்க சார்... கார்ல ஏறுங்க. வீட்ல விடச்சொல்லி யிருக்கார் முதலாளி" என டிரைவர் கூப்பிட காரில் ஏறினோம். வழியில் போஸ்ட் ஆபீஸ் வந்தது. நிறுத்தச் சொல்லி நூறு ரூபாயை ஊருக்கு மணியார்டர் செய்தேன். வழியில் இறங்கிக்கொண்ட முத்து "எனக்கு வசனம் எழுத சான்ஸ் கிடைக்கும்னு உம்மைக் கூட்டிவந்தேன். அவரோ உம்மை வச்சே வசனம் எழுதிக்கிறோம்னு சொல்லிட்டார். அதுவும் சந்தோஷம்தான். 'சரி... ஒரு 100 குடு' என்றார். நூறு ரூபாய் என்பது எளிதில் தருவதற்கு சங்கடம் ஏற்படுத்துகிற பெரும்தொகைதான் அப்போது. இருந்தாலும் மனப்பூர்வமாகக் கொடுத்து அனுப்பி வைத்தேன். என் வீட்டிற்கு காரில் வந்து இறங்கினேன்.

கதவைத் திறந்தேன். 'ராணிமுத்து' காலண்டர் முருகன் சிரித்தார். 'என்னை நம்பினவன் எவண்டா கெட்டான்?' என முருகன் கேட்பதுபோல இருந்தது. இப்போதும் கதறி அழுதேன். (இன்றும் ராணிமுத்து முருகன் என் வீட்டில் சிரித்துக்கொண்டிருக்கிறான். எனக்கு முருகன் மேல் அப்படி ஒரு ஈடுபாடு.)

மறுநாள் காலையில் கார் வந்து ஸ்டுடியோவுக்கு அழைத்துப்போனது. கதை விவாதம் தொடங்கியது. 'இரவும் பகலும்' படத்தில் பணிபுரிந்த பனசை மணியன் என்பவரை உதவி வசனகர்த்தாவாக சேர்த்துக்கங்க' என தளியத் கேட்டுக்கொண்டதால் அவரைச் சேர்த்துக் கொண்டேன்.

'அரை லூசு, முக்கால் லூசு' இதுதான் டைட்டில். இரண்டு லூசுகள் தங்கள் சேஷ்டையால் குற்ற சதியில் மாட்டிக்கொள்ளும் கதை. கதைப்படி ஹீரோ இல்லை. காமெடியாக வில்லன்தான் கதையின் முக்கிய பாத்திரம்.

"இதுக்கு யாரைப் போடலாம்?" என தளியத் கேட்டபோது, சுருளிராஜன் என் நினைவுக்கு வந்தார். சுருளிராஜன் அற்புதமான மேடை நடிகர். ஆனால் சினிமா சான்ஸ் கிடைத்தபாடில்லை. தேனாம்பேட்டை எல்டாம்ஸ்

சாலையில் பலமுறை அவரைச் சந்தித்துப் பேசியிருக்கேன். மதுரை ஏரியாக்காரர் என்பதால் 'சுருளிராஜன்' பெயரைச் சொன்னேன்.

"ஆமாமா... அதுகூட சான்ஸ் கேட்டு ஒருதடவ வந்துச்சு. உங்களுக்கு ஓ.கே.ன்னா சரிதான்' என்றார்.

இப்படி நான் முன்மொழிந்ததால் என் கதை மூலம் சினிமா நடிகரானார் சுருளிராஜன். வில்லத்தனமான 'வேம்பு' பெண் பாத்திரத்திற்கு கமலா பெயரை சிபாரிசு செய்தார்.

கமலா யார்?

அவருடனான எனது அனுபவம்...?

# 13. அந்த அழகி!

'பாமா விஜயம்', 'எதிர் நீச்சல்', 'இரு கோடுகள்' என கே.பாலசந்தரின் படங்களில் தொடர்ந்து கதாநாயகியாக நடித்து புகழ்பெற்றவர் ஜெயந்தி. அந்த ஜெயந்தியின் பெயர்தான் கமலா.

சுந்தரராம அய்யர் தயாரிக்கவிருந்த 'மதிவாணன்' படக் கம்பெனியில் நான் கார் டிரைவராகவும், புரொடக்ஷன் துறையிலும் பணிபுரிந்தேனல்லவா.

அந்தச் சமயம் தன் அம்மாவுடன் அந்த அலுவலகத்திற்கு வாய்ப்புக் கேட்டு வந்தார் கமலா. அப்போது சிறு சிறு வேடங்களில் மட்டுமே நடித்திருந்தார். வாய்ப்புக் கேட்டு முகவரி கொடுத்துவிட்டு, சூளைமேட்டிலிருந்த தங்கள் வீட்டுக்குத் திரும்ப வாகனம் கிடைக்காமல் நின்றிருந்தார் கமலா. எங்க முதலாளியின் அனுமதியுடன் கம்பெனி காரில் ஏற்றிக்கொண்டு போய் அவர்களின் வீட்டில் விட்டேன்.

என்னை உள்ளே அழைத்து டீ தந்து உபசரித் தார்கள். அப்போது கமலாவின் அப்பா என்னிடம் அறிமுகமாகிக்கொண்டார். காளஹஸ்தி பக்கத்தில் அவர் ஜமீன்தார். அவரின் (இரண்டாம் மனைவி) துணைவியின் மகள்தான் கமலா.

"என் மகளுக்கு நல்ல வாய்ப்புகளை வாங்கித் தாருங்கள். என் மகளின் எதிர்காலம் சிறக்க நீங்க உதவணும். உங்களை ரொம்பவே நம்புறோம்" என்றார் ஜமீன்தார்.



கமலாவின் அம்மாவோ ''எம்பொண்ணு ஓரளவுக்குத் தமிழ் பேசுறா. அவ சரளமா தமிழ் பேசணும்... படிக்கணும். நீங்கதான் அவளுக்கு தமிழ் கத்துத் தரணும்'' என்றார்.

'ரண்டாம் வகுப்பு மட்டுமே படித்த... தட்டுத் தடுமாறி தமிழ் கற்றுக்கொண்ட நான் உங்க மகளுக்கு தமிழ் வாத்தியாரா?' என எனக்குள்ளே நினைத்துக்கொண்டு ''சரிங்கம்மா... தமிழ் கத்துக்கொடுக்கிறேன்'' என்றேன்.

சுமார் ஒரு மாதத்துக்கு மேலாக கமலாவின் வீட்டிற்குப் போய் 'தினத்தந்தி' பேப்பர் வாசிக்க வைத்து கற்றுக் கொடுத்தேன்.

(இதனால் பின்னாளில் எங்கு பார்த்தாலும் தன் கணவர் உள்ளிட்ட உறவினர்களிடம் 'இவர்தான் என் குருஜி' என என்னை பெருமையாகக் குறிப்பிடுவார்.)

எம்.ஜி.ஆர். நடிப்பதாக இருந்து பிறகு மகாலிங்கம் நடிப்பதாக இருந்து... கடைசியில் சுந்தரராமய்யர் படம் எடுக்காமலே மதுரை சென்றுவிட்டதால் கமலாவுக்கு என்னால் உதவ முடியவில்லை.

இப்போது சிட்டாடல் நிறுவனத்திற்காக கதை விவாதம் செய்துகொண்டிருந்த எனக்கு கமலாவின் ஞாபகம் வந்தது. 'வேம்பு' கேரக்டருக்கு கமலா என்கிற ஜெயந்தியை பரிந்துரைத்தேன்.

''அந்தப் பொண்ண கூட்டி வா' என புரொடக்ஷன் மேனேஜருக்கு உத்தரவு போட்டார் ஜோசப் தளியத். அடுத்த சிலமணி நேரத்தில் ஜெயந்தி ஸ்டுடியோ வந்து சேர்ந்தார். என்னுடைய தேர்வு சரிதான்... என உணர்ந்து தளியத்'ஓ.கே.' சொல்லிவிட்டார்.

அவர் இலங்கைத் தமிழர். அங்கே மேடை நாடகங்களில் புகழ் பெற்றவர். அவரின் பூர்வீகம் ராமநாதபுரம் மாவட்டம். சினிமாவில் நடிக்க வேண்டும் என்கிற பெரும் விருப்பத்தோடு சென்னை வந்த அவர் பல ஸ்டுடியோக்களில் வாய்ப்புக் கேட்டு அலைந்தார். சிட்டாடல் ஸ்டுடியோவிலும் அவர் சான்ஸ் கேட்டு வந்ததை பலமுறை பார்த்திருக்கிறேன்.

ஒருமுறை... சான்ஸ் கேட்டு வந்தபோது கண் கலங்கி அழாத குறையாக 'அண்ணே எனக்கு ஒரு சான்ஸ் வாங்கிக் குடுங்க' என என்னிடமும் கேட்டார். அப்போதெல்லாம் ராமநாதபுரமும் மதுரை மாவட்டத்தில் இருந்தது. 'நம்ம மாவட்டத்துக்காரராச்சே... அவருக்கு ஏதாவது

பண்ணணும்' என எனக்குத் தோன்றியது. ஆனால் ரெண்டு ஸீன் மட்டுமே உள்ள ஒரு கேரக்டர் மட்டுமே இருந்தது?

"ரெண்டு ஸீன்ல வர்ற வேஷம்தான் இருக்கு."

"சந்தோஷம்" என ஏற்றுக்கொண்டு நடித்தார். அவர்தான் எஸ்.எஸ்.சந்திரன்.

சிட்டாடலின் 'இரவும் பகலும்' படத்தில் அறிமுகமாகி வெற்றிபெற்ற ஜெய்சங்கர், ஜோசப் தளியத்தை பார்க்க வந்தார்.

தன்னை அறிமுகப்படுத்திய முதலாளி, இயக்குநர் என்பதால் தளியத் முன் கை கட்டி  பணிவுடன் பேசினார் ஜெய்.

"அடுத்த படத்துக்கு கதை செலக்ட் பண்ணீட்டீங் களாமே?"

"ஆமா... இவர்தான் கலைஞானம். இவரோட கதைதான்" என தளியத் சொல்ல... ஜெய் எனக்கு வணக்கம் வைத்தார். நானும் வணக்கம் வைத்தேன்.

"அய்யா... இந்தப் படத்தில் நானும் இருக்கேன்ல" என தளியத்திடம் கேட்டார் ஜெய்.

"நாகேஷையும், சந்திரபாபுவையும் மனசுல வச்சு "அரை லூஸு, முக்கால் லூஸு'னு கலைஞானம் எழுதின கதை. அதைத்தான் வேற நடிகர்களை வச்சு எடுக்குறோம். ஹீரோவா நடிச்ச உனக்கு இதுல பெருசா வேஷம் இருக்காது. அதனால இந்தக் காமெடிப் படித்துல நீ இல்லை."

"என்னை அறிமுகப்படுத்தின கம்பெனியோட அடுத்த படத்துல நான் இல்லேன்னா... ர்இவன் பிரச்சினைக்குரிய நடிகன் போல'னு மத்த கம்பெனிங்க என்னை புக்பண்ண மாட்டாங்கய்யா" என முக வாட்டத்துடன் நியாயமான கோரிக்கையை வைத்தார் ஜெய்.

தளியத் என்னைப் பார்த்து 'வேற ஏதாவது கேரக்டர் இருக்கா?' என்பது போல் பாவனையில் கேட்டார்.

"மேனேஜர் கேரக்டர் இருக்கு. ஆனா ரெண்டு, மூணு ஸீன்லதான் மேனேஜர் வர்றார்" என்றேன் நான்.

"நான் இந்தப் படத்தில் இருந்தே ஆகணும்" என்றார் ஜெய்.

"மேனேஜர் ஸீனை டெவலப் பண்ண வாய்ப்பிருக்கா?" என கேட்டார் தளியத்.

''நீங்க சொன்னா டெவலப் பண்ணிடுறேன்'' என நான் சொல்ல...

''ஜெய்... உனக்கு இதுல வேஷம் உண்டு'' என்றார் தளியத்.

மகிழ்ச்சியுடன் கிளம்பிப் போனார் ஜெய்சங்கர்.

கதை விவாதம் முழுக்க முடிந்தது. டெவலப் பண்ணப்பட்ட மேனேஜர் கேரக்டர் ஹீரோ கேரக்டராக உருவெடுத்தது. கதையில் காமெடித்தனம் குறைந்ததால் 'அரை லூஸு, முக்கால் லூஸு' டைட்டிலை விட்டுவிட்டு 'மிஸ் மாயா' என்கிற டைட்டில் பரிசீலிக்கப்பட்டது. உதவி வசனகர்த்தா பனசை மணியனோ, ''காதல் படுத்தும் பாடு' என ஒரு தலைப்பைச் சொல்ல... அந்தத் தலைப்பு இறுதி செய்யப்பட்டது.

ஹீரோ ஜெய்சங்கர், ஹீரோயின்?

ஸ்ரீதரின் 'காதலிக்க நேரமில்லை' படத்தில் ரவிச்சந்திரனுக்கு ஜோடியாக நடித்து பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த ராஜஸ்ரீயை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்தார் தளியத். தமிழிலும் தெலுங்கு நட்சத்திரங்களை வைத்து தெலுங்கிலுமாக இருமொழியில் ஒரே நேரத்தில் படப்பிடிப்பு தொடங்கியது.

'காதலிக்க நேரமில்லை' இந்தி ரீ-மேக்கில் ராஜஸ்ரீ நடிக்கப் போயிருந்ததால் கதாநாயகி இல்லாத காட்சிகளின் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது.

தெலுங்குப் பதிப்பில் கதாநாயகியாக கிருஷ்ணகுமாரி நடித்துவந்தார். நான் அவ்வப்போது வசனங்களில் திருத்தம் தேவைப்பட்டால் மட்டுமே ஷூட்டிங் ஸ்பாட்டிற்குப் போவேன்.

அப்படிப் போயிருந்தபோது தெலுங்குப் பதிப்பிற்காக ஹீரோயின் கிருஷ்ணகுமாரியும், அவரின் தோழி வேடத்தில் நடிக்கும் ஒரு தெலுங்குப் பெண்ணும் மேக்-அப் போட்டுக்கொண்டு அறையிலிருந்து வெளியே வந்தார்கள்.

அந்த தோழி வேஷ இளம்பெண் களையான முக அழகால் என் கண்ணையும் மனசையும் கவர்ந்தாள்.

'இந்தப் பொண்ணை எங்கய்யா புடிச்சீங்க?' என புரொடக்ஷன் மேனேஜரிடம் கேட்டேன்.

''சார்... உங்க வீடு இருக்கும் மைலாப்பூர் காரணீஸ்வரர் தெருவுலதான் அந்தப் பொண்ணு வீடும் இருக்கு.'' சில மாதங்களுக்கு முன் என்

மனைவி சொன்ன ஒரு விஷயம் என் நினைவில் வந்தது.

"என்னங்க... நம்ம தெருவுல குடிசை மாதிரி ஒரு வீடு இருக்கு. அந்த வீட்ல ஒருத்தர் வடை, சுண்டல் தயாரிச்சு வீடு வீடா போய் விற்பாரு. நம்ம புள்ளைகளுக்குக்கூட அவர்கிட்டதான் வாங்கிக் குடுப்பேன். அவரோட கொழுந்தியா பொண்ணு. காங்கிரஸ் கட்சிக்காரங்களோட ஐந்தாண்டுத் திட்ட பிரச்சார நாடகத்துல அந்தப் பொண்ணு நடிக்குதுபோல. நாடகத்துக்காக அந்தப் பொண்ண கார்ல கூட்டிப் போவாங்க. மேக்-அப்போட அந்தப் பொண்ண பார்த்திருக்கேன். ரொம்ப அழகா இருந்துச்சுங்க."



'ஓஹோ... இந்தப் பொண்ணப் பத்திதான் என் பொண்டாட்டி சொன்னாளா...' என நினைத்தபடி அந்தப் பெண்ணைக் கூப்பிட்டேன்.

''வாம்மா... வந்து இப்படி உட்கார்'' என்றேன்.

சரளமாக தமிழில் பேசியபடி அமர்ந்தது அந்தப் பெண்.

"என் மனைவி அடிக்கடி உன்னைப் பத்திச் சொல்லுவா. ஆமா... இவ்வளவு நல்லா தமிழ் பேசுறியே... நல்லா லட்சணமாவும் இருக்கியே, பின்ன ஏன் தெலுங்குப் படத்துல... அதுவும் தோழி வேஷத்துல நடிக்கிற?"

"சான்ஸ் குடுத்தாத்தான சார் திறமையைக் காட்ட முடியும்?" என பதிலுக்குக் கேட்டது அந்தப் பெண்.

அதற்குள் "ஷாட்'டுக்கு அழைப்பு வர அந்தப் பெண் எழுந்து போனது. "அந்தப் பெண் பிரபலமாவார்' என்கிற நம்பிக்கை எனக்கு. ஆனால் எம்.ஜி.ஆர்., சிவாஜியுடனெல்லாம் ஜோடி போடுவார், உடை மற்றும் கூந்தல் அலங்கார ஸ்டைலில் ஒரு புது ட்ரெண்ட்டையே உருவாக்குவார் என்றெல்லாம் அப்போது நான் நினைத்திருக்கவில்லை.

அந்த நடிகை யார்? எப்படி கதாநாயகியானார்?

# 14. தேவிகா காதல்!

ஓரிரு வாரங்கள் ஓடிவிட்டன. அடுத்தகட்ட படப்பிடிப்பு சம்பந்தமாக விவாதம் நடந்துகொண்டிருக்கையில் ஜோசப் தளியத் ஒரு விஷயத்தைச் சொன்னார்.

'காதலிக்க நேரமில்லை' இந்திப் படப்பிடிப்பிற்காக மும்பையிலிருக்கும் ராஜஸ்ரீ முதல்கட்ட படப்பிடிப்பு முடிந்ததும் சென்னை வந்து எங்கள் படத்தில் நடிப்பதாக இருந்தது. ஆனால் இந்திப்படத் தயாரிப்பாளர்களோ 'மொத்தப் படப்பிடிப்பையும் ஒரே ஷெட்யூலில் முடிக்கப் போவதாக' சொல்லிவிட்டதால் தளியத்திற்கு போன்பண்ணி பேசியிருக்கிறார் ராஜஸ்ரீ. 'உங்க படத்துல நடிக்க முடியாமப் போச்சு. சூழ்நிலை அப்படி. அதனால் மன்னிச்சுக்கணும்' என ராஜஸ்ரீ கேட்க... தளியத்தும் 'சரிம்மா' எனச் சொல்லிவிட்டார்.

"கலைஞானம், யாரை ஹீரோயினா போடுறது?" என தளியத் கேட்டார்.

இதே கதையின் தெலுங்குப் பதிப்பில் தோழி வேஷம் போட்ட எங்கள் தெரு பெண்ணான... 'சான்ஸ் குடுத்தாத்தானே சார் திறமையைக் காட்ட முடியும்' என என்னிடம் கேள்வியெழுப்பிய... அந்த பெண்ணைக் குறிப்பிட்டு, "இந்தக் கேரக்டருக்கு அந்தப் பொண்ணு சரியா பொருந்தும்" என்றேன்.

"ஆமாம்ல..." என்ற தளியத், புரொடக்ஷன் மேனேஜரிடம் "அந்தப் பொண்ணை கையோட கூட்டிக்கிட்டு வா. கார் எடுத்துட்டுப் போ" எனச் சொன்னார்.

அப்போது 'க்ளுக்' என ஏளனமாய் ஒரு சிரிப்பு சிரித்தார் உதவி இயக்குநர் ஒருவர்.

"ஏன் சிரிக்கிற?"

"ஹீரோயின் வேஷத்துக்கு அந்தப் பொண்ணு எப்படிங்கய்யா சரியா வரும்?"

உதவி டைரக்டர் இப்படிச் சொன்னதும் கோபமான தளியத், "சரியா வருமா? வராதா?ங்கிறதை நான்தான் (டைரக்டர்தான்) முடிவு பண்ணணும். இடியட்... கெட் அவுட்" என கத்திவிட்டார்.

அடுத்த முக்கால் மணி நேரத்திற்குள்ளாக அந்தப் பெண்ணை அழைத்து வந்துவிட்டார்கள்.

'நீதாம்மா கதாநாயகி' என ஒப்பந்தம் செய்தார் தளியத்.

இப்படித்தான் கதாநாயகியாக அறிமுகமானார் வாணிஸ்ரீ.

ஒரு கதாசிரியன் கதையை உருவாக்கும்போதே... அதை விரிவுபடுத்தும்போதே... அந்த கதாபாத்திரங்களுடன் பயணிப்பான். அதற்கான தகுந்த நட்சத்திரங்கள் அவன் மனக்கண்ணில் தெரியும். அதனால்தான் கதாசிரியன் முன்மொழியும் நட்சத்திரங்களை இயக்குநர் பரிசீலிப்பார். அந்த வகையில்தான் நட்சத்திரங்களை நான் முன்மொழிந்தேன். எனக்குக் கிடைத்த அந்தச் சலுகையை பயன்படுத்தி, தகுதியானவர்கள் சினிமாவில் அறிமுகமாக காரணங்களில் ஒன்றாக நானும் இருந்தேன்.

''காதல் படுத்தும் பாடு' படத்தில்தான் நான் கதாசிரியராக அறிமுகம். எனது வேண்டுகோளால் என் அறிமுகப் படத்திலேயே நடிகர்களாக சுருளிராஜன், எஸ்.எஸ்.சந்திரன் அறிமுகமானார்கள். எடிட்டராக வெள்ளைச்சாமி அறிமுகம். சிறு கேரக்டரில் நடித்து வந்த ஜெயந்தி பெரிய கேரக்டரில் அறிமுகம். கதாநாயகியாக

வாணிஸ்ரீ அறிமுகம். 07-10-1966ல் வெளியான ''காதல் படுத்தும் பாடு' வெற்றிப்படமாக அமைந்தது. இந்தப் படம் வெளியான பிறகு உறங்கக்கூட நேரமில்லாத அளவிற்கு சுருளிராஜன் பிஸியானார். வாணிஸ்ரீ தெலுங்கிலும் மிகப்பெரிய நாயகியானார். பாலசந்தர் பட நாயகியாக ஜெயந்தி உயர்ந்தார்.



ஆனால் கதாசிரியனான எனக்கு திருப்தியை மட்டும் தந்தது. திருப்பம் உடனடியாக ஏற்படவில்லை. எனது இன்னொரு கதையைத் தேர்வு செய்திருந்தார் ஜோசப் தளியத். ஆனால் அடுத்த ஓரிரு வருடங்களில் பார்ட்னர் பிரச்சினையால் சிட்டாடல் ஸ்டுடியோவை தளியத் விற்றுவிட்டு கேரளா சென்றுவிட்டார்.

**1968** காலகட்டம்.

எனது நண்பர் ராஜன் என்னை சந்தித்தார்.

"தி.நகர்ல பொழுதுபோக்கு கிளப் நடத்துறேன். சினிமா கதாசிரியரான நீங்க கிளப்புக்கு தலைவரா வரணும்" எனக் கேட்டுக்கொண்டார். நானும் தலைவரானேன்.

கிளப்பில் சூதாட்டம் நடக்கும். எனக்கு அதிலெல்லாம் ஆர்வமில்லை. அதனால் எனக்கு ஒதுக்கப்பட்ட அறையில் உட்கார்ந்தபடி இருப்பேன். கிளப் வெற்றிகரமா இயங்க ஆரம்பித்தது. ஒரு பொற்கொல்லர் தன்னிடம் நகை செய்ய பொதுமக்கள் கொடுத்த தங்கத்தை வைத்து சீட்டாடி தோற்று... தற்கொலை செய்துகொண்டதாக தகவல் வந்தது. எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அதேபோல் பிரபலமாக இருந்து மார்க்கெட் இழந்த ஒரு நடிகர் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு சீட்டாடுவார். ஒருநாள் தன் மனைவியின் மாங்கல்யத்தை வைத்து ஆடி தோற்றுவிட்டார். உடனே கிளப் கேஷியரைக் கூப்பிட்டு 'பணம் கடன் தாங்க. திரும்ப சீட்டாடி ஜெயிச்சு மாங்கல்யத்தை மீட்டுக்கிறேன்' என அந்த நடிகர் கெஞ்ச... கேஷியர் என்னிடம் வந்து விஷயத்தைச் சொன்னார்.

"நான் வெளியில் போயிட்டதா சொல்லிடு. அவர் கொண்டுவந்த மாங்கல்யத் தங்கத்தை அவர்கிட்டயே திருப்பிக் குடுத்திட்டு... 'இனிமே எங்க கிளப்புக்கு வராதீங்க'னு அவர்கிட்ட கண்டிஷனா சொல்லிடுங்க" என கேஷியரிடம் சொல்லியனுப்பினேன்.

அந்த நடிகர் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. இந்தச் செய்தியை நான் சொல்வதற்குக் காரணம், பொற்கொல்லர் குடும்பமும், நடிகர் குடும்பமும் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை சூதாடிகள் எண்ணிப் பார்க்க வேண்டும். 'அவர்களைப்போல் யாரும் ஆகிவிடக் கூடாது' என இதுபோன்ற சூதாட்டச் செயல்களில் ஈடுபடுகிறவர்களை எச்சரிக்கவே இதைச் சொல்கிறேன்.

"இப்படி பல குடும்பங்களை கஷ்டப்படுத்துற கிளப் பிசினஸ் தேவைதானா?" என ராஜனிடம் கேட்டேன். அதன்படி கிளப்பை கைமாற்றிவிட்டார் ராஜன். அந்த கிளப்பில் எனக்கு தரப்பட்டிருந்த அறையை நான் காலி செய்யாமல் அங்கிருந்தபடியே கதைகள் எழுதினேன்.

சொந்தமாக படம் தயாரிக்கும் முனைப்புடன் நான் இருந்த 1969-ல் கிளப்பில் இருந்த என் அறைக்கு வந்தார் தேவதாஸ். என் முதலாளி சுந்தரராம அய்யரின் மகனும் டைரக்டர் பீம்சிங்கின் உதவி

இயக்குநருமான தேவதாஸ் ஒரு சினிமா ஹீரோபோல வசீகரமாக இருப்பார். சோத்துக் கையில் வாட்ச் கட்டிக்கொண்டு, ஆங்கிலம் கலந்து பேசியபடி வளையவருவார். படப்பிடிப்புத் தளத்தில் சுறுசுறுப்பாக வேலைசெய்யும் தேவதாஸை நடிகை தேவிகா பார்த்திருக்கிறார்.

ஒருநாள்... தேவதாஸூம், தேவிகாவும் தனிமையில் சந்தித்துக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இருவரும் நீண்டநேரம் மனம்விட்டுப் பேசியிருக்கிறார் கள். இருவரும் காதல்வயப்பட்டு திடீரென திருமணம் செய்துகொண்டார்கள். ஒரு புகழ்பெற்ற நடிகை ஒரு உதவி இயக்குநரை திருமணம் செய்துகொண்டது பரபரப்பானது.

ஆனால் தேவதாஸின் உறவினர்களும், தேவிகாவின் அம்மாவும் இந்த காதல் திருமணத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

தேவிகாவிடமிருந்து தேவதாஸை பிரிக்க அவரது உறவினர்களும், தேவதாஸை பிரித்தால்தான் தேவிகாவை மீட்கமுடியும் என தேவிகா வீட்டாரும் தேவதாஸை வலைவீசித் தேடிக்கொண்டிருக்க...

நுங்கம்பாக்கம் பாம்குரோவ் ஓட்டல் பின்புறம் ஒரு தெருவில் தேவதாஸ்-தேவிகா ரகசியமாக தனிக் குடித்தனம் செய்தனர்.

இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையில் என்னைத் தேடிவந்து மனம்விட்டுப் பேசிவிட்டுப் போவார்-தேவிகா .

இவர்கள் இருவரையும் பிரிக்க அலைந்த இருதரப்பினரும் தங்களது தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தினார்கள்.

இந்தச் சிக்கலுக்கு தீர்வு கேட்டு எளிதில் யாரிடமும் உதவி கோர முடியாது. உதவி செய்ய வருபவர்களால் தங்களின் இருப்பிடம் காட்டிக்கொடுக்கப்படலாம்... என்பதுதான் காரணம்.

தேவதாஸின் தந்தையாரிடமே விசுவாச ஊழியனாக நான் இருந்தவன் என்பதால் என்னை மட்டும் ஒருநாள் வீட்டிற்குக் கூட்டிப்போனார்.

பிரிக்க நினைப்பவர்கள் வீடுவரை வந்தால் சமாளிக்க வேண்டுமே! அதனால் தேவதாஸ் கேட்டுக்கொண்டதன் பேரில் அன்றும்... அடுத்தடுத்த சில நாட்களும் நான் அவர்கள் வீட்டிற்கு காவல்காரனாக இருந்தேன்.

தேவிகா-தேவதாஸ் காதல் திருமணத்திற்கு இவ்வளவு எதிர்ப்பு ஏன் வந்தது?

# 15. மாறியது வாழ்க்கை!

தேவிகா-தேவதாஸ் காதல் திருமணத்திற்கு அவ்வளவு எதிர்ப்பு ஏன்?

தமிழின் முதல் பேசும்படம் 1931-ல் வெளிவந்தது. அடுத்தடுத்த ஆண்டுகளில் சினிமா தயாரிப்பில் இறங்கியவர்கள் தேவதாஸின் குடும்பத்தினர். மதுரை சௌராஷ்டிரர்களான இவர்கள் 'அய்யர்' என்றே குறிப்பிடப்படுவர். பி.ஏ.பி.குப்புசாமி அய்யர், எஸ்.எம்.எஸ். சுந்தரராமய்யர் (தேவதாஸின் அப்பா) எஸ்.எம்.எஸ். சீத்தாராமய்யர் 'மல்லி வீடு' கிருஷ்ண மூர்த்தி அய்யர், கோபாலகிருஷ்ண அய்யர் -இப்படி பல ஜாம்பவான்கள் சினிமா தயாரிப்பு தொழில் செய்தனர்.

'முருகன் டாக்கீஸ்', 'ராயல் டாக்கீஸ்', 'அரண் டாக்கீஸ்', 'லாவண்யா புரொடக்ஷன்ஸ்' நிறுவனங்கள் இவர்களுடையது. மூன்று தீபாவளிகளைக் கடந்து ஓடிய 'ஹரிதாஸ்' படம் இவர்களின் 'ராயல் டாக்கீஸ்' தயாரிப்புதான்.

1936-ல் இவர்களின் 'முருகன் டாக்கீஸ்' எடுத்த 'தாராச சசாங்கம்' பெரும் சர்ச்சையைக் கிளப்பிய படம். இந்தப் படத்திற்கு 'தடை விதிக்கலாம்' என அன்றைய பிரிட்டீஷ் சர்க்கார் கூட பரிசீலித்ததாம். அதற்குக் காரணம் அந்தக் கதை.

ஒரு மகரிஷியிடம் நிலாவாகிய சந்திரன் சிஷ்யனாக இருப்பான். மகரிஷியின் மனைவி தாராவுக்கு சந்திரனின் அழகில் கிறக்கம் ஏற்படும். ஒருநாள் நிர்வாண நிலையில் இருக்கும் தாரா, 'எனக்கு உடம்பு முழுக்க எண்ணெய் தேய்த்துவிடு' என்பாள். சந்திரன் அதன்படி எண்ணெய் தேய்ப்பான். அப்போது மகரிஷி பார்த்து ஆத்திரமாகி சந்திரனுக்கு சாபம்விடுவார். இதனால் தேய்ந்து சுருங்க ஆரம்பிக்கும் சந்திரன் கதறியபடி சிவபெருமானின் காலில் விழுவான். அவனைக் காப்பாற்றி தன் தலையில் சூடிக்கொள்வார் சிவன். மகரிஷியின் சாபத்தால் சந்திரன் தேய்வதுதான் தேய்பிறை. சிவனால் காப்பாற்றப்பட்டு வளர்வதுதான் வளர்பிறை. குருவின் மனைவியான 'குருபத்தினி' தாரா சொன்ன வேலையை செய்யாவிட்டால் குருபத்தினி சாபத்திற்கு ஆளாக நேருமோ? என பயந்து, வேறு வழியில்லாமல்தான் தாராவை தொட்டான் சந்திரன். இதைப் புரிந்துதான் சிவன் வரம் அளிப்பார்.

ஆக... சாபத்தால் தேய்ந்து வரத்தால் வளர்கிறான் சந்திரன். இது புராணக் கதை. இதைத்தான் படமாக்கியிருந்தார்கள். படத்தின் நாயகி உடலை ஒட்டிய ஆடையுடன்தான் இருப்பார். இந்தக் கதை நாடக மேடைகளில் அரங்கேற்றம் ஆகும்போது நாயகி அப்படிப்பட்ட மெல்லிய ஆடை அணிந்திருப்பார். ஆனால் அரசல் புரசலாக காட்டும் போது நிர்வாணம் போல் தெரியும். இதனால் இந்தப் படத்திற்கும், நாடகத்திற்கும் 'இந்த எண்ணெய்' காட்சிக்காகவே கூட்டம் கூடுமாம்.

'இது ஆபாசம்' என்ற கருத்தின் அடிப்படையில் எதிர்ப்பு கிளம்பியதால்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் 'தாராச சசாங்கம்' படத்தை தடை செய்ய பரிசீலித்ததாம். ஆனால் தடை செய்யப்படவில்லை என்று என் முதலாளி இந்தக் கதையைச் சொன்னார். அவர்தானே 'தாராச சசாங்கம்' படத்தை எடுத்தவர். சந்திரனைப் பற்றி பல கதைகள் சொல்லப்படுகின்றன. தட்சனுக்கு 27 பெண் குழந்தைகள். இவர்களை சந்திரனுக்குத் திருமணம் செய்துவைத்தார்.



சந்திரன் ரோகிணி மேல் மட்டும் அதிக ஆசை வைத்து வாழ்ந்துவந்தானாம். மற்ற **26** பெண்களும் தந்தை தட்சனிடம் புகார் செய்தனராம். அதனால் கோபமுற்ற தட்சன், 'நீ தேய்ந்து போவாய்' என சந்திரனுக்கு சாபமிட்டானாம். சிவனை நோக்கி சந்திரன் சாப விமோசனத்துக்காக தவமிருந்தான். சிவன், தேய்ந்திருந்த சந்திரனை தலையில் சூடிக்கொண்டு மீண்டும் வளர் பிறையாகி முழுமை பெற அருள்பாலித்தாராம்.

பாகவதர், சின்னப்பா, எம்.ஜி.ஆர். என பலரையும் வைத்து படம் எடுத்த பரம்பரை தேவதாஸின் முன்னோர். தமிழ் சினிமாவின் தூண்களாக இருந்தது அவர்கள் குடும்பம் என்றாலும் மிகையாகாது.

இப்படிப்பட்ட பாரம்பர்ய குடும்பம்... தங்கள் வீட்டுக்கு வரும் பெண் சினிமா நடிகையா என விருப்பப்பட வில்லை. அதோடு சொந்தத்தில் பெண்கள் இருந்ததால் தான், தேவதாஸை துரத்தினார்கள் அவரின் உறவினர் கள்.

தேவிகாவை திருமணம் செய்துகொள்ள கோடீஸ்வர வீட்டு மாப்பிள்ளையே கிடைப்பாரே. எப்பவோ பெரிய ஆட்களாக இருந்தாலும் இப்போது நொடித்திருக்கும் வீட்டுப் பையனை கல்யாணம் பண்ணிட்டாளே என்கிற ஆதங்கம்தான் தேவிகாவின் அம்மாவிற்கு.

நாட்கள் உருண்டன. தேவதாஸ்-தேவிகா காதல் கல்யாணத்திற்கான எதிர்ப்பின் வீரியம் குறைந்தது.

என் நண்பர்களிடம் கடனாக 18 ஆயிரம் ரூபாய் வசூலித்து, எனது கைக்காசையும் போட்டு கிளப் அலுவலகத் திலேயே சொந்தமாக படம் தயாரிக்க புரொடக்ஷன் கம்பெனி தொடங்கினேன். வெற்றி பெற்ற எனது நாடகக் கதையான வெள்ளிக்கிழமையை சினிமாவுக்காக வெகுளிப்பெண் என மாற்றி மேலும் காட்சிகளுடன் முழு திரைக்கதையையும் எழுதி முடித்தேன்.

ஒருநாள் தேவதாஸ் எனது அலுவலகத்திற்கு வந்தார். டைரக்டர் பீம்சிங்கின் உதவியாளரான அவருக்கு நல்ல கதைஞானம் உண்டு. அவரிடம் 'வெகுளிப் பெண்' கதையைச் சொன்னேன்.

''நான் படம் டைரக்ட் பண்ற ஐடியாவுல இருக்கேன். இந்தக் கதை நல்லா இருக்கு. ஃபைனான்ஸியர் கபார் இன்னும் ரெண்டுநாள்ல சிங்கப்பூர்லயிருந்து வர்றார். இந்தக் கதை அவருக்குப் பிடிச்சா உடனடியா வேலையை ஆரம்பிச்சிடலாம்'' என்றார் தேவதாஸ்.

சொன்னபடியே கபார் சென்னை வந்து சவேரா ஓட்டலில் தங்கினார். அவரிடம் தேவதாஸ் என்னை அறிமுகப்படுத்தினார்.

கதையைச் சொன்னேன்.

''கதை பிடிச்சுப் போச்சு. முதல்ல தமிழ்ல படத்தை எடுத்து ஜெயிச்சுக் காட்டுங்க. அப்புறமா தெலுங்கு, இந்தியில் எடுக்கலாம். பணக் கவலை

உங்களுக்கு வேண்டாம். பணத்துக்கு நான் பொறுப்பு?'' என நல்ல சேதி சொன்னார் கபார்.

மறுநாளே... தி.நகர். ஜி.என்.ஷெட்டி ரோட்டில் ஒரு வீடு பிடித்து அலுவலகம் திறந்தாயிற்று.

தான் இயக்குநராகப் போகும் விஷயத்தை இதுவரை தன் காதல் மனைவி தேவிகாவிடம் தேவதாஸ் சொல்லவில்லை. பணம் கைகூடி வந்த நிலையில்... தேவிகாவிடம் தெரியப்படுத்துவதற்காகவும், கதையைச் சொல்வதற்காகவும் என்னையும் அழைத்துக் கொண்டு போனார் தேவதாஸ்.

ஏற்கனவே அவர்களின் வீட்டுக்கு நான் காவல் இருந்தேனல்லவா. அந்த பரிட்சயத்தில் என்னை வரவேற்று தேநீர் தந்தார் தேவிகா.

''கபார்தான் தயாரிப்பாளர். ஆனாலும் பணம் மட்டும்தான் அவர் போடுவார். நாமதான் வொர்க்கிங் பார்ட்னராக இருந்து படத்தை முடிக்கணும். கலைஞானத்தோட 'வெகுளிப் பெண்' கதையை நீயும் கேள்'' என்றார் தேவதாஸ்.

தேவிகாவிடம் நான் கதையைச் சொன்னேன்.'ரொம்ப நல்லாருக்கு' என்றார் தேவிகா. தன் கணவர் இயக்குநராகப் போகிற படம் என்பதால்... தேவிகாவும் திரைக்கதை டிஸ்கஷனில் கலந்துகொண்டார்.

''வெகுளிப்பெண் கேரக்டருக்கு வெண்ணிற ஆடை நிர்மலா பொருத்தமாக இருப்பார்'' என தேவதாஸும், தேவிகாவும் முன்மொழிந்தனர். ஜெமினி கணேசன், பாலாஜி, முத்துராமன், எஸ்.வரலட்சுமி, சச்சு, வீ.கே.ராமசாமி, இசையமைப்பாளர் வி.குமார், பாடல்களுக்கு கண்ணதாசன் என முடிவாயிற்று. இவர்கள் அனைவரும் தேவிகா-தேவதாஸ் இருவருக்கும் ரொம்ப பரிட்சயமானவர்கள் என்பதால் எந்த டிமாண்டும் இல்லாமல் கால்ஷீட் தந்தனர்.

அப்போது புகழ்பெற்ற வசனகர்த்தாவாக இருந்த 'வியட்நாம் வீடு' சுந்தரம் வசனம் எழுத வேண்டும் என ஒரு மனதாக முடிவு செய்தோம்.

எனது முதலாளி சுந்தரராம அய்யர் படம் தயாரிக்கும் முடிவை கைவிட்டு மதுரை சென்றார். அலுவலகம் மூடப்பட்டது. அவர் மகன் தேவதாஸ் சென்னையில் தங்க இடம் இல்லாமல் தவிக்கிற நிலை வந்தது.

'ஆகஸ்ட் புரட்சி' படத்தில் இன்ஸ்பெக்டராக நடிக்க வந்த எம்.எல்.ஆர். எனும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த லட்சுமண செட்டியார் என்

கதைத்திறமை மீது நம்பிக்கை வைத்து சினிமா கம்பெனி துவங்கினார். அந்த அலுவலகத்தில் தேவதாஸை நான் தங்கவைத்து அரவணைத்தேன். அதற்கு நன்றியாக 'வெகுளிப்பெண்' படத்தின் தயாரிப்பு நிர்வாக பொறுப்பையும் தேவதாஸ் என்னிடம் ஒப்படைத்தார். 'வெகுளிப்பெண்' படப்பிடிப்பு நிறைவடைந்தது.

அந்தச் சமயம் தன் மகளின் திருமணத்தை நடத்த கபார் சிங்கப்பூரிலிருந்து திரும்பினார். தஞ்சை அருகே பொதைகுடி என்கிற கிராமத்தில் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு எவர்சில்வர் அண்டாவும் அது நிறைய பிரியாணியும் தர மகளின் கல்யாண நாளன்று ஏற்பாடு செய்தார் கபார்.

நான்தான் வீடு வீடாக பிரியாணி அண்டாவை விநியோகித்தேன். திருமணம் சிறப்பாக முடிந்தது. படத்தை வெளியிடும் அனுமதியை தேவதாஸிற்கு கொடுத்து விட்டு சிங்கப்பூர் சென்றுவிட்டார் கபார்.

1971-ல் ஜெனட் கம்பைன்ஸ் கபார் வழங்கும் 'வெகுளிப்பெண்' ரிலீஸ். மேனா பிரிவியூ தியேட்டரில் பத்திரிகையாளர் காட்சி. சுமார் நூறு நிருபர்கள் படம் பார்த்தனர். க்ளைமாக்ஸ் நெருங்கும்போது படம் ஓட்டுவதை திட்டமிட்டு நிறுத்தினோம். சிறிது நேரம் அமைதியாக இருந்த நிருபர்கள் பொறுமையிழந்தார்கள்.

"ஏன் க்ளைமாக்ஸை நிறுத்திட்டீங்க?" என 'கலைப் பூங்கா' ராவணன் எழுந்து கேள்வியெழுப்ப... மற்ற நிருபர்களும் குரல் கொடுத்தனர்.

"இந்தக் கதையில் நீங்க எவ்வளவு இன்வால்வ் மெண்ட்டோட இருக்கீங்க என்பதை தெரிஞ்சுக்கத்தான் நிறுத்தினோம். உங்க ஆர்வம் சந்தோஷம் தருது" எனச் சொல்லிவிட்டு க்ளைமாக்ஸை ஓடவிட்டோம். படம் முடிந்ததும் என்னையும், தேவதாஸையும் பாராட்டாத நிருபர்களே இல்லை. பத்திரிகைகளும் பிரமாதமாக விமர்சனம் எழுதியன.

என் வாழ்க்கையை மாற்றியமைத்தது 'வெகுளிப்பெண்'.

# 16. குறத்தி மகன்!

'வெகுளிப்பெண்' திரைப்படம் முடியும் தருவாயில் நடிகரும், தயாரிப்பாளருமான எஸ்.வி.சுப்பையா (ஜெயகாந்தனின் 'காவல் தெய்வம்' கதையை அதே பெயரில் சிவாஜியை வைத்து தயாரித்தவர்) கதை தேடுவதை அறிந்து நடிகர் நம்பிராஜன் என்னை அழைத்துப் போனார்.

'எல்லாப் பூக்களும் மலர்ந்த பிறகுதான் மணம் வீசும். முளைவிட்ட உடனே மணப்பது மருக்கொழுந்து' என்கிற விளக்கத்துடன் 'மருக்கொழுந்து' கதையைச் சொன்னேன்.

'ஒரு நல்லநாளில் அட்வான்ஸ் தர்றேன், வேறு யாரிடமும் சொல்லாதே. இந்தக் கதை எனக்குத்தான்' என சொல்லி அனுப்பினார் எஸ்.வி.சுப்பையா.

மறுநாள் தினத்தந்தியில் இந்தச் செய்தி வந்தது. இதைப் படித்த கற்பகம் ஸ்டுடியோ அதிபரும் டைரக்டருமான கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 'கலைஞானம் யாரு?' என நம்பிராஜனிடம் விசாரிக்க... 'நான்தான் அவரை எஸ்.வி.சுப்பையாவிடம் கூட்டிப்போனேன்' எனச் சொல்லியிருக்கிறார் நம்பிராஜன்.

'கலைஞானத்தை கையோட கூட்டிவாங்க' என நம்பிராஜனிடம் கார் கொடுத்து அனுப்ப... அவரும் வந்து என்னை அழைத்துச் சென்று கே.எஸ்.கோபால கிருஷ்ணனின் ஆழ்வார்பேட்டை வீனஸ் காலனி வீட்டில் வைத்து அறிமுகப்படுத்தினார். "எஸ்.வி.சுப்பையா அண்ணனுக்கு என்ன கதை சொன்னீங்க?"



"ஒரு ஹோட்டல் பின்புறம் ஒரு கூடை நிறைய எச்சில் இலை. அதிலிருக்கும் உணவை எடுக்க... நாய்கள் போராடுது. இன்னொரு கூடை நிறைய எச்சில் இலை. அதில் இருக்கும் உணவை டால்டா டப்பாவில் சேகரிக்க நரிக்குறவர்கள் முட்டி மோதுறாங்க. தூரத்தில் ஒரு குறத்தி கவலையுடன் இதைப் பார்த்து 'நம்ம ஜனங்களுக்கு விமோசனமே இல்லையா?'னு கவலைப்படுறா. அப்போ..."

"நிறுத்து... நிறுத்து... இதுக்கு மேல கதை சொல்லாதே. நரிக்குறவர்களை வைத்து ஒரு கதை செய்யணும்ங்கிறது என்னோட லட்சியம். இனிமே இப்படி ஒரு கதையை நானும் எழுத முடியாது, வேற யாரும் எழுத முடியாது. நீ சொன்ன ஓபனிங்கே அருமையா இருக்கு. இந்தக் கதையை நீயும் டெவலப் பண்ணு. நானும் டெவலப் பண்றேன். நானே இந்தப் படத்தை எடுக்குறேன்..." என்றார் கோபாலகிருஷ்ணன்.

"அண்ணே... இந்தக் கதையை வேறு கம்பெனிக்கு தரமாட்டேன்னு எஸ்.வி.சுப்பையாவுக்கு வாக்கு கொடுத்திருக்கேன்."

"சுப்பையா அண்ணன்கிட்ட நான் பேசுறேன்" என உடனே போனை போட்டு சம்மதம் பெற்றார்.

'வெகுளிப்பெண்' நூறு நாட்கள் ஓடிய வெற்றிப்படம். அப்போதைய ஜனாதிபதி வி.வி.கிரியிடம் விருதும் பெற்றது. ஆனாலும் தயாரிப்பாளர் கபாரால் தொடர்ந்து படம் தயாரிக்க முடியவில்லை.

சிங்கப்பூரில் எதிர்க்கட்சியில் இருந்தார் கபார். அதன் காரணமாக அரசியல் கைதியாக சிறைப் பிடிக்கப்பட்டார். (14 வருடங்கள் சிறையில் இருந்தார்)

'வெகுளிப்பெண்' ரிலீஸானதுமே கதை எழுதித் தர முடியாத அளவிற்கு நான் பிஸியானேன்.

'மருக்கொழுந்து' முழு திரைக்கதையும் தயார். குறத்தியாக பத்மினி, குறத்தி மகனாக சிவகுமார், காதலியாக வெண்ணிறஆடை நிர்மலா ஆகியோர் முடிவு செய்யப்பட்டனர்.

குறவனாக சந்திரபாபுவை முடிவு செய்ததும் கற்பகம் ஸ்டுடியோவுக்கே வந்துவிட்டார் சந்திரபாபு. அவரிடம் கதையைச் சொன்னேன். என்னைக் கட்டிப்பிடித்துப் பாராட்டினார்.

பத்மினி, சிவகுமார், வெ.ஆ.நிர்மலா மூவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை முதலில் எடுக்கத் தீர்மானித்த கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், "மருக்கொழுந்து நல்ல டைட்டில். இருந்தாலும் இந்தக் கதைக்கு இந்தத் தலைப்பு பொருத்தமா இருக்கிறதை பாமர ஜனங்களால் புரிஞ்சுக்க முடியாது. அதனால் எளிமையா "குறத்தி மகன்'னு டைட்டில் வைக்கலாம்" என்றார். எனக்கும் இந்தத் தலைப்பு பிடித்திருந்தது.

குறத்தி மகனுக்கு தன் தாயைத் தெரியாது. ஆனால் குறத்திக்கு தன் மகனைத் தெரியும். காதலியுடன் தன் மகன் தன் குடிசை வீட்டருகே மழைக்காக ஒதுங்குவதை யும், அவர்களை உள்ளே அழைத்து குறத்தி திருமணம் செய்து வைப்பதையும்... ஆயிரம் அடிவரை படமாக எடுத்த கோபாலகிருஷ்ணன், அதை தனது ஆஸ்தான விநியோகஸ்தர்களுக்கு போட்டுக் காட்டினார்.

"ரொம்ப பிரமாதமா இருக்கு. ஆனா நரிக்குறவர் கதையை வச்சு முழுப் படத்தையும் எப்படி எடுக்க முடியும்? படம் ஓடும்ங்கிற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. படம் முடிஞ்சு நீங்க கணக்குப் பார்த்தா ஃபிலிம் டப்பாவை விட டால்டா டப்பாதான் கிடைக்கும்" எனச் சொல்லிவிட்டுப் போனார்கள்.

இடிந்து போய்விட்ட கோபாலகிருஷ்ணன் பிறகு சுதாரித்து "இப்போதைக்கு இந்தப் படத்தை நிறுத்தி வைப்போம் கலைஞானம். 'ஆதிபராசக்தி'னு ஒரு திரைக்கதை என்கிட்ட ரெடியா இருக்கு. இந்தப் படத்தை முடிச்சிட்டு 'குறத்திமக'னை எடுப்போம். என்னை நம்பு. அதுவரை நீ என்கூடவே இரு" என்றார்.

நான் ரொம்பவே மதிக்கும் கதாசிரியர்களில் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் முக்கியமானவர் என்பதால் சம்மதித்தேன். 'ஆதிபராசக்தி' ஸ்கிரிப்ட்டில் சிற்சில ஆலோசனைகளை மட்டுமே சொன்னேன். கிட்டத்தட்ட படம் முடிந்த நிலையில் எனக்கு போட்டுக் காட்டினார்.

"அண்ணே... புராணம் தெரிஞ்சவங்களுக்கு இந்தப் படம் நல்ல விஷயமுள்ள படம். ஆனா சராசரி மனிதர் களுக்கான விஷயம் இல்லையே" என்றேன்.

அன்றிரவே ஒரு துணைக்கதையை எழுதி காலையில் என்னிடம் சொன்னார். நான் அசந்துபோனேன். அதுதான் சுருளிராஜன் சம்பந்தப்பட்ட 'ஆத்தாடி மாரியம்மா சோறு ஆக்கிவச்சேன் வாடியம்மா' பாடல் அடங்கிய பகுதி.

'ஆதிபராசக்தி' வெளியானது. தமிழகமெங்கும் வசூலில் சக்கைப்போடு போட்டது. கே.எஸ்.கோபால கிருஷ்ணனும் நானும் ஊர்ஊராக, தியேட்டர் தியேட்டராகச் சென்றோம். ஏகப்பட்ட மரியாதை.

"கலைஞானம்... நீ தப்பா நினைச்சுக்கமாட்டியே. ஆதிசங்கரரின் வாழ்க்கையை படமாக்கணும்ங்கிறது என்னோட லட்சியங்களில் ஒண்ணு. 'ஆதிபராசக்தி' வெற்றிச் சூட்டோட சூடா 'ஆதிசங்கரர்' படம் எடுக்கலாம்.. இது முடிஞ்சதும் கண்டிப்பா 'குறத்தி மகன்' பண்ணலாம். என்ன சொல்ற?"

"சரிண்ணே" என்றேன் நான்.

நானும், கே.எஸ்.கோபாலகிருஷ்ணனும் ஆதிசங்கரர் பற்றிய நூல்களை, செய்திகளை சேகரிக்க ஆரம்பித்தோம்.

அந்தச் சமயம்...

காஞ்சிப் பெரியவர் ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி சுவாமிகளின் சிறந்த பக்தர்களுள் ஒருவரான மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கே.எஸ்.கோபாலகிருஷ்ணனை சந்தித்தார்.

"ஆதிபராசக்தி படம் ரொம்ப அருமையா இருந்தது. பெரியவர்கிட்ட படம் குறித்தும், உங்களைப் பற்றியும் சொன்னேன். 'இந்தக் காலகட்டத்திலும் இப்படி ஆன்மிக படமெல்லாம் தயாரிக்கிறாளா?'னு ஆச்சரியப்பட்டார்.

'அவாளை (கே.எஸ்.கோபாலகிருஷ்ணனை) அழைச் சிட்டு வரவா?'னு கேட்டேன். 'அழைச்சிண்டு வா'னு பெரியவா சொன்னார்" என மீனாட்சிசுந்தரம் பிள்ளை விபரம் சொல்லவும், மகிழ்ந்துபோனார் கே.எஸ்.கோபால கிருஷ்ணன்.

அப்போது கீழ்திருப்பதி அருகே ஒரு குக் கிராமத்தில் காஞ்சிப் பெரியவர் தங்கியிருந்தார். கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், நான் மற்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகிய மூவரும் சென்னையிலிருந்து காரில் கிளம்பினோம். பயணத்தின்போது பெரியவர் பற்றி மீனாட்சிசுந்தரம் பிள்ளை சொல்லியபடியே வந்த தகவல்கள் 'இப்படியும் ஒரு மகானா?' என்கிற வியப்பை எங்களுக்குள் ஏற்படுத்தியது.

கைவசம் ஒரு மாற்றுத்துணி மட்டுமே வைத்திருப்பார். ஒரு கைப்பிடி அரிசியை தானே சமைத்து அதில் சரி பாதியை காக்கைக்கு

வைத்துவிட்டு ஒரு குழந்தையைவிட குறைவாகவே உண்ணுவாராம் பெரியவர்.

தலையில் முக்காடு அணிந்து தண்டம் என்கிற குச்சியை கையில் பிடித்தபடி இருக்கும் சரஸ்வதி கோலத்தில் தான் பக்தர்களுக்கு அருள்பாலிப்பார் பெரியவர். சாதாரண கோலத்தில் பக்தர்களை சந்திக்கமாட்டார். அதற்குக் காரணம்... 'சாமீய்... நீங்களே சமைச்சு கஷ்டப்படுறீங்களே, நாங்க உதவி செய்றோம்' என பக்தர்கள் அன்புத்தொல்லை செய்வதை பெரியவர் விரும்பாததுதான் காரணம்.

மெயின் ரோட்டில் காரை நிறுத்திவிட்டு ஒரு கிலோமீட்டர் தூரம் வயல் வழியாக சேறும் சகதியுமான பாதையில் நடந்தோம். தூரத்தில் சிதிலமடைந்த நிலையில் ஒரு பெருமாள்கோயிலில் பெரியவர் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார். அதனால் காத்திருந்தோம்.

பெரியவர் உணவருந்தியதும் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலில் சென்று விஷயத்தைச் சொல்ல... வரச் சொல்லிவிட்டு சரஸ்வதி கோலம் பூண்டபடி நின்றார் பெரியவர். கோபாலகிருஷ்ணனும், நானும், பெரியவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினோம்.

ஆசிர்வதித்தார் பெரியவர். ஆதிசங்கரர் கதையில் ஒரு முக்கிய விஷயத்தை தவிர்த்துவிடச் சொன்னார் பெரியவர்.

அது என்ன? ஏன்?

# 17. கூடு விட்டு கூடு பாய்ந்த சம்பவம்!

''ஆதிபராசக்தி படம் நீங்கதான் எடுத்தேளா. ரொம்ப நன்னா இருப்பதா சொன்னா. ஆன்மிக கருத்துள்ள படங்களை எடுங்களேன். மக்களுக்கு நீங்க செய்ற சேவையா இருக்கட்டும். அதுக்கு என்னுடைய ஆசிர்வாதம்'' எனச் சொல்லி ஆசிர்வதித்தார் காஞ்சிப் பெரியவர்.

''ஆதிசங்கரர் கதையை சினிமாப் படமா எடுக்க உங்ககிட்ட அனுமதி கேட்கிறோம்'' என்றார் கே.எஸ். கோபாலகிருஷ்ணன்.

''பேஷா எடுங்கோ... நல்ல காரியம்தானே. சிரத்தையா எடுங்கோ. மனப்பூர்வமான ஆசிர்வாதம் உண்டு. ஆனா...'' என பெரியவர் நிறுத்த...

கோபாலகிருஷ்ணனும், நானும் ஒருவரை ஒருவர் புரியாமல் பார்த்துவிட்டு பெரியவரை நோக்கினோம்.

''உங்க முயற்சியை வரவேற்கிறேன். ஆனா பெரியவா (ஆதிசங்கரர்) கூடு விட்டு கூடு பாய்ந்து இல்லறம் கண்டு அரசியோட வாழ்ந்த சம்பவங்களை ரொம்ப ஜாக்கிரதையா கையாளணும். முடிஞ்சா அதை தவிர்த் திடுங்கோ'' என்றார் பெரியவர்.

''தங்களோட விருப்பப்படியே பண்ணிக்கிறோம்'' என சம்மதித்து மீண்டும் பெரியவரிடம் ஆசிபெற்று கிளம் பினோம்.

ஆதிசங்கரர் கதையை சினிமாவாக்க பல நூல்களை நானும் படித்திருந்தேன். ''அபிதான சிந்தாமணி'யில் ஆதிசங்கரர் கூடுவிட்டு கூடு பாய்ந்த நிகழ்வு எழுதப் பட்டிருக்கிறது.

அதை சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்... இந்தியா முழுவதும் ஆன்மிக தர்க்கவாதங்களில் பங்கேற்று வெற்றிபெற்று வந்தார் ஆதிசங்கரர். வட நாட்டில் ஓரிடத்தில் சரச வாணி என்கிற அறிவிற் சிறந்த பெண்மணியுடனும் ஆதிசங்கரர் தர்க்கவாதம் செய்ய நேர்ந்தது. பெண்மணியுடனான வாதத்தில் ஜெயித்துக் கொண்டே வந்தார். அந்தப்பெண் இறுதியாக ஒரு சிக்கலான கேள்வியை கேட்டார்.

"உங்களுக்கு இல்லற ஞானம் உண்டா?"

"தெரியாது" என்று சொன்னால் அது ஒருவகை அனுபவக் குறைபாடு. அதனால் தோல்வி ஏற்படும். "தெரியும்" என்றால் அவரின் துறவறத்திற்கு இழுக்கு நேரும். இதனால் "ஒரு மாதம் அவகாசம் கொடுங்கள்" என ஆதிசங்கரர் கெடு வாங்கிக் கொண்டு வந்தார்.

சிஷ்யர்களுடன் ஓரிடத்தில் தங்கியிருந்தபோது வேட்டைக்கு வந்த ஒரு மன்னனின் உயிரற்ற உடல் காட்டுக்குள் கிடப்பதாக தகவல் எட்ட... சிஷ்யர்களுடன் அங்கு வந்த ஆதிசங்கரர் "இந்த மன்னனின் உடம்பில் என் உயிரைச் செலுத்தி அரண்மனை சென்று இல்லற வாழ்வு பற்றி அறிந்து வருகிறேன். அதுவரை என் உடலை பாதுகாப்பாக வைத்திருங்கள்!" என கூடு விட்டு கூடு பாய்ந்தார். அரண்மனை சென்றார். அரசியுடன் இல்லறம் அறிந்தார்.... இப்படியான சம்பவங்கள் நிறைந்தது அது.

சினிமா எளிதில் பாமரர்களையும் அடையும் கருத்து சாதனம். அதனால்தான் "கூடு விட்டு கூடு பாய்ந்த சம்பவத்தை கவனமாக கையாள வேண்டும். இல்லேன்னா தவிர்க்க வேண்டும்" என்றார் பெரியவர்.



கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், நான் மற்றும் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோர் மீண்டும் காரில் புறப்பட்டோம். அப்போதும் பெரியவர் பற்றி சில சம்பவங்களைச் சொன்னார் மீனாட்சி. ஒரு ஊரில் ரெயில்வே காலனி என்ற பகுதியில் பெரியவரை வைத்து பாதபூஜை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட இடத்திலிருந்து 'தண்டியல்' எனப்படும் பல்லக்கில் பெரியவரை வைத்து ஆறு பிராமணர்கள் சுமந்து சென்றனர். சிறிதுதூரம் சென்றதும் கீழே வைத்து இளைப்பாறி... மீண்டும் சுமந்து... சிறிது தூரம் சென்றதும் கீழே இறக்கி... இப்படி பலமுறை இறக்கி, இறக்கி தூக்கிச் செல்ல... இதைப் பார்த்த நான்கு விவசாய கூலித்தொழிலாளர்கள் "பெரியசாமிய ரயில்வே காலனிக்குத்தானே கொண்டு போறீங்க?" எனக் கேட்க...

பிராமண இளைஞர்கள் "ஆமாம்" என்றனர்.

"நாங்க வேணா சாமிய சுமந்திட்டு வரவா?".

பிராமணர்கள் மௌனமாக பெரியவரைப் பார்க்க பெரியவரோ 'ஆகட்டும்' என்பது போல் சைகை செய்ய... சிறிது நேரத்தில் அலுங்காமல் குலுங்காமல் பெரியவரை கொண்டு போய் பாதபூஜை நடக்கும் இடத்தில் இறக்கிவிட்டு 'வர்றோம் சாமீய்' என பெரியவரிடம் சொல்லிவிட்டு துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினார்கள்.

பாதபூஜை முடிந்த பிறகு... அந்த ஆறு பிராமண இளைஞர்களும் பெரியவரிடம் வந்து "நாங்க ஆறுபேர் உங்களை சுமந்தோம். பாரமா இருந்தது. ஆனா அவா நாலுபேர் சிட்டாட்டம் உங்களை கொண்டு வந்து சேர்த்திட்டாளே... எப்படி?" எனக் கேட்டனர்.

சற்றும் யோசிக்காமல் பெரியவர் சொன்னார்.

"பாதபூஜை செஞ்சு ஏதோ பலனை அடையணும்னு நீங்க என்னை சுமந்தீங்க. அதாம் பாரம். அவா பலனை எதிர்பார்க்கலை. அதான் பாரமில்லை".

"இந்த சம்பவம் உள்ளிட்ட பெரியவர் சம்பந்தமாக மீனாட்சி சுந்தரம்பிள்ளை சொன்னதில் 90 சதவிகித சம்பவங்களை பின்னாளில் 'வேதம் புதிது' படத்தின் கதைக்குள் வைத்தேன். பாரதிராஜாவிடம் நான் இதைச் சொன்னபோது "ஏற்கனவே பெரியவர் மீது நான் சொல்லிக்கொண்டிருந்த மதிப்பு ரொம்ப உயர்ந்து விட்டது' என என்னிடம் சொல்லிச் சிலாகித்தார் பாரதிராஜா. ரசிகர்களாலும் இந்த காட்சிகள் சிலாகிக்கப் பட்டன.

ஆதிசங்கரர் கதையில் கூடு விட்டு கூடு பாயும் நிகழ்வு கத்திமுனையில் நடக்கிற காரியம்போல் இருந்ததால் 'ஆதிசங்கரர்' படத்தையே கைவிட்டார் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்.

'குறத்தி மகன்' பட வேலைகள் மீண்டும் துவங்கின.

இந்த ஒருவருட இடைவெளியில் குறத்தியாக நடித்த பத்மினி அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டார். சந்திர பாபுவும் நடிக்க முடியாத சூழல்.

இதனால் ஏற்கனவே எடுக்கப்பட்ட ஆயிரம் அடி ஃபிலிமை தூக்கிப் போட்டுவிட்டு புதிதாக 'குறத்தி மகன்' தொடங்கப்பட்டது.

''இப்ப இருக்க நடிகைகளில் குறத்தி கேரக்டருக்கு கே.ஆர்.விஜயாதான் சரியா இருக்கும்'' என்றவர் தயக்கத் துடனேயே கே.ஆர்.விஜயாவை போய்ப் பார்த்தார்.

'தன்னை அறிமுகப்படுத்திய குருவுக்கு குரு... தகப்பனுக்கு தகப்பன்' என்ற மதிப்பு கே.எஸ்.கோபால கிருஷ்ணன் மீது விஜயாவுக்கு எப்போதும் உண்டு.

கதையைச் சொன்னதும் விஜயாவும், அவரின் கணவர் வேலாயுதம் நாயரும் உடனே கால்ஷீட் தந்தனர்.

'வெண்ணிற ஆடை' நிர்மலாவுக்குப் பதில் ஜெயசித்ரா அறிமுகப்படுத்தப்பட்டார். ஜெயசித்ராவுக்கு அப்போது 'ரோஹிணி' என்று பெயர். ஜெ. என்கிற எழுத்தில் தொடங்குவதுபோல் பெயர் மாற்றலாம்' என நான் சொன்னதையடுத்து 'ஜெயசித்ரா' என்கிற பெயரை ரோஹிணிக்குச் சூட்டினார் கோபாலகிருஷ்ணன். சந்திரபாபு நடிக்கவிருந்த கேரக்டருக்கு ஜெமினி கணேசன் ஒப்பந்தம் செய்யப்பட்டார். 'சிவகுமாருக்கு பதில் குறத்தி மகனாக யாரை நடிக்க வைக்கலாம்?' என கோபாலகிருஷ்ணன் என்னிடம் கேட்டார்.

இந்தக் கேள்விக்கு என் கண்ணில் மின்னல்போல் தோன்றி மறைந்தது அந்த வாலிபனின் உருவமும், அந்த சம்பவமும்.

''வெகுளிப் பெண்' படத்தில் முத்துராமனும், வெண்ணிற ஆடை நிர்மலாவும் பங்கேற்ற ஒரு பாடல் காட்சி.

''எங்கெல்லாம் வளையோசை கேட்கின்றதோ

அங்கெல்லாம் என் ஆசை பறக்கின்றதே'

-என்கிற அருமையான பாடல்.

முத்துராமனுக்கு நடன அசைவுகளை சொல்லித் தர வந்த டான்ஸ் மாஸ்டர் தங்கப்பன், தனது உதவியாளரை மூவ்மெண்ட்ஸ் சொல்லித்தர அனுப்பினார். அந்தப் பையன் தங்க நிறத்தைவிட அதிகமாக ஜொலிப்புடன் சொல்லித்தர... நான் அந்தப் பையனைப் பார்த்து வியந்து போனேன்.

''அந்தப் பையன் யாரு?'' என மாஸ்டரிடம் கேட்டேன். மாஸ்டர் சொன்ன பதில் எனக்கு வியப்பையும், ஆச்சர்யத்தையும் தந்தது.

ஷாட் ஓ.கே. ஆனதும் நான் அந்தப் பையனின் அருகில் சென்றேன். சுய அறிமுகம் செய்துகொண்டேன்.

"நான்... கலைஞானம். இந்தப் படத்தோட கதாசிரியர். இவ்வளவு வசீகரமா இருக்கீங்க. நீங்க ஏன்... நடிக்க முயற்சிக்கல?"

"இல்லை"

"ஏன்?"

"நடிக்கிறதுல எனக்கு இண்ட்ரஸ்ட் இல்லை"

அந்த வாலிபனின் பதில் எனக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

இன்று... உலக நாயகனாகத் திகழும் கமல் அன்று... "நடிப்பாசை இல்லை" என ஏன் சொன்னார்?

# 18. கமலே சொல்வார்!

''நடிக்கிறதில் எனக்கு இண்ட்ரஸ்ட் இல்லை'' என கமல் என்னிடம் சொன்னது எனக்கு வியப்பாகவும், அதிர்ச்சியாகவும் கூட இருந்தது.

''ஏன்?''

''நான் ஒரு டான்ஸ் குழு நடத்துறேன். என் கவனமெல்லாம் அதில்தான் இருக்கு'' என்றார் கமல்.

'எனக்கு மட்டும் சந்தர்ப்பம் கிடைச்சா... நீதான் என் படத்துல ஹீரோ. இதுல மாற்றமே இல்லை' என எனக்குள்ளேயே சவால் விட்டுக்கொண்டு கிளம்பினேன்.

அந்தச் சம்பவம் இப்போது என் கண்முன் நிழலாடியது.

''அண்ணே... குறத்தி மகனாகப் பிறந்தாலும் பண்புள்ள மகனாக இருக்க அந்த கேரக்டருக்கு கமலஹாசன் பொருத்தமா இருக்கும்ணே'' என்றேன்.

''சரி... அந்தப் பையனை நான் பார்க்கணுமே. கார் எடுத்துட்டுப்போய் கூட்டி வா'' என்றார் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்.

கம்பெனி கார் வெளியில் போயிருந்தது. கார் வரும்வரை காத்திருக்க முடியாது. லேட்டாகும்... என்பதால் என் சொந்தச் செலவில் டாக்ஸி பிடித்து எல்டாம்ஸ் ரோடு கமல் வீட்டுக்குப் போனேன்.

கமலைப் பார்த்து விஷயத்தைச் சொன்னேன்.

சலிப்புடன் முகம் சுளித்தார் கமல்.

''ஏம்ப்பா...''

''சினிமாவில் முதல்ல டான்ஸ் மாஸ்டராகணும்கிறது என்னோட திட்டம். இப்போகூட என் டான்ஸ் குழுவோட நிகழ்ச்சி நடத்த டூர் போயிட்டு வந்திருக்கேன். நடிக்கிறதில் எனக்கு ஆர்வமில்லாமல் இருக்கு'' என்றார் கமல்.

''சந்தோஷம்ப்பா. நீ பெரிய மாஸ்டரா வா. அதேசமயம் குறத்திமகன் கேரக்டர்ல நடிச்சுப் பார். ஒருவேளை உனக்குப் பிடிச்சுப் போச்சுன்னா...

தொடர்ந்து நடிக்கலாம்லப்பா'' எனச் சொன்னேன். எனது வற்புறுத்தலுக்கு சம்மதித்து என்னுடன் காரில் ஏறினார் கமல்.

கமல் குழந்தை நட்சத்திரமாக நடித்து புகழ்பெற்ற பிறகு, குழந்தைப் பருவம் தாண்டிய பிராயத்திற்கும், வாலிபப் பிராயத்திற்கும் இடைப்பட்ட வயதில்... அவரை யாருமே நடிக்க அழைக்காததால் கமலுக்கு நடிப்பின் மீதே வெறுப்பு ஏற்பட்டிருந்ததை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

18 அல்லது 19 வயது கமலை கே.எஸ்.கோபால கிருஷ்ணன் முன் நிறுத்தினேன். கமலின் தோற்றம் அவருக்கு திருப்தி தந்தது. கோபாலகிருஷ்ணன் தனது படங்களில் நிறைய டயலாக் எழுதுவார். அதனால் டயலாக் பேப்பரை கமலிடம் கொடுத்துப் பேசச் சொன்னார். கமலுக்கு அப்போது கீச்சுக்குரல். இதனால் டயலாக் வெடிப்பாக வெளிவரவில்லை.

"கலைஞானம்... தம்பிய பக்கத்து ரூம்ல உட்கார வை'' என்றார். அதன்படி கமலை அமர வைத்துவிட்டு வந்தேன்.

"பையன் நல்லா இருக்கான். ஆனா வசனம் பேசறது எடுப்பா இல்ல. மாஸ்டர் ஸ்ரீதர் சான்ஸ் கேட்டு வந்திருக்கான். அவனை டயலாக் பேச வச்சுப் பார்ப்போம்'' என்றார்.

அதன்படி மாஸ்டர் ஸ்ரீதரை அழைத்து டயலாக் பேப்பரைக் கொடுத்தார். கடலை பொறிச்ச மாதிரி டயலாக் வெடிப்பாகப் பேசினார் ஸ்ரீதர்.



"பெர்ஸனாலிடில கமலைவிட ஸ்ரீதர் கம்மி. ஆனா டயலாக் நல்லா பேசுறான். இவனையே குறத்தி மகனா போடலாம். குறத்தி மகனை வளர்க்கிற வாத்தியாரோட மகன் கேரக்டரை கமலுக்கு கொடுக்கலாம்" என்றார் கோபாலகிருஷ்ணன். கமலும் சம்மதித்தார். மறுபடி அவரை டாக்ஸியில் அழைத்துப்போய் வீட்டில் விட்டுவிட்டு வந்தேன்.

நரிக்குறவர்களை தனது கற்பகம் ஸ்டுடியோவிற்கு வரவழைத்து அவர்களுடன் ஒருநாள் முழுக்க பேசிப் பாஷை கற்றுக்கொண்ட கோபாலகிருஷ்ணன் மறுநாள் கே.ஆர்.விஜயாவுக்கும் ஜெமினிக்கும் அந்த பாஷையை கற்றுக்கொடுத்து அசத்தினார்.

1972-ல் வெளியான 'குறத்தி மகன்' திரைப்படம் பெரும் வெற்றிபெற்றது.

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் தீவிர காங்கிரஸ்காரர். அதனால் படத்தின் க்ளைமாக்ஸ் காட்சிகளில் கேமரா திரும்புகிற பக்கமெல்லாம் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியின் புகைப்படங்கள் தெரிவதுபோல் எடுத்திருந்தார். மத்திய அரசு விருதுக்கு படத்தை அனுப்பியதுடன், இந்திராகாந்திக்கு இந்தப் படத்தைக் போட்டுக் காட்டவும் ஏற்பாடு செய்து படப்பெட்டியுடன் தனது பிரதிநிதிகளையும் அனுப்பிவைத்தார் கோபால கிருஷ்ணன்.

நேரமின்மையால் படம் பார்க்க தாமதித்த இந்திரா, சுமார் ஒருமாதம் கழித்து 'குறத்தி மகன்' படம் பார்த்தார்.

"கல்வி விழிப்புணர்ச்சிக்கு உண்டாக்குகிற அருமையான திரைப்படம் இது. ஆனாலும் இந்தப் படத்திற்கு அரசு விருது கொடுத்தால் எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்யும். என் புகைப்படத்தை அதிகமாகக் காட்டியது தவறு" என இந்திரா சொல்லியதாகத் தகவல் வந்து சேர்ந்தது.

'குறத்தி மக'னில் நான்கு ஸீன்களில் (இரண்டு ஸீன்களில் டயலாக்) மட்டுமே கமல் நடித்திருந்தார். ஆனாலும் கமல் மனம் மாறி நடிப்பைத் தொடரும் விதமாக 'உணர்ச்சிகள்' படத்தைத் தொடங்கினார்.

கமலை நடிப்புத்துறைக்கு தூண்டியதில் 'குறத்திமகன்' படமும், நானும்தான் காரணம் என்பதை கமலே கூட மறுக்க முடியாது. இதனாலேயே எனக்கும் கமலுக்கும் அண்ணன்-தம்பி போன்ற உறவு வளர்ந்தது. ஆனால் 'நான் மீண்டும் சினிமாவில் நடிக்க முயற்சி எடுத்தவர் கலைஞானம்தான். அதன் பலன்தான் இன்று ஹீரோ அந்தஸ்தை பெற்றிருக்கிறேன்' என கமல் ஒருபோதும் சொன்னதேயில்லை. அதைப்பற்றி நான் கவலைப்பட்டதுமில்லை. பிரதிபலன் எதிர்பார்க்காமல் நினைத்ததை முடிப்பது என் சுபாவம்.

கற்பகம் ஸ்டுடியோவிற்குள் நரிக்குறவர் இன மக்கள் திரண்டு வந்து கே.எஸ்.கோபாலகிருஷ்ணனை சந்தித்தார்கள்.

''சாமீய்! படத்துல... 'நாங்கள்லாம் படிச்சாத்தான் முன்னுக்கு வரமுடியும்'னு சொன்னீக சாமீய். படிப்போட அருமை, பெருமை எங்களுக்குப் புரியுது. நீங்களே எங்க புள்ளைக படிக்கிறதுக்கு ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிச்சுக் குடுங்க'' என கோரிக்கை வைத்தனர்.

''நீங்களும் படிச்சு முன்னேறணும்ங்கிற இந்தக் கதையை எழுதுனதே இவர்தான்'' என என்னை அவர்கள் முன்னால் அறிமுகப்படுத்தினார் கோபாலகிருஷ்ணன்.

எனக்கு கும்பிடு போட்ட அந்த மக்கள், அவரை விடுவதாக இல்லை.

பள்ளிக்கூடம் என்பது தனி மனிதனால் சாத்தியமில்லாத விஷயம். ஆனாலும் அவர்களுக்கு ஒரு ஆலோசனை சொன்னார் கோபாலகிருஷ்ணன்.

''நீங்கள்லாம் நேரா கோபாலபுரம் போங்க. அங்கதான் இருக்கு முதலமைச்சர் வீடு. அவரப் பாத்து ''குறத்தி மகன்' படம் பார்த்தோம். அதுபடி படிக்க ஆசப்படுறோம். ஸ்கூல் கட்டித் தாங்கனு கேளுங்க. முதலமைச்சர் நிச்சயம் செய்வாரு. அப்புறம் முதலமைச்சரைப் பார்க்கிற ஐடியாவ நான் குடுத்ததா சொல்லிடாதீங்க'' என அனுப்பி வைத்தார்.

விருகம்பாக்கத்திலிருந்து நடைபயணமாகவே கோபால புரம் வந்த நரிக்குறவர்கள் முதல்வர் வீடு முன் அமர்ந்துவிட்டனர். உதவியாளர்கள் மூலம் கலைஞருக்கு விஷயம் சொல்லப்பட்டது. வெளியே வந்து அந்த மக்களிடம் பேசிய கலைஞர், உடனடியாக உத்தரவு போட்டார். அதுதான் சைதாப்பேட்டையிலிருக்கும் நரிக்குறவர் பள்ளிக்கூடம். அதைத் தொடர்ந்து ஜெயலலிதா இரண்டாம் முறையாக முதலமைச்சர் ஆகும்போது தஞ்சை மாவட்டத்தில் நரிக்குறவர்களின் குழந்தைகளுக்கென ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பித்து வைத்தார்.

ஒரு சமயம் நான் தூர்தர்ஷனில் பேசுவதற்காகப் போயிருந்தேன். அப்போது ஒரு இளைஞர் ஓடிவந்து என் காலைத் தொட்டு வணங்கினார்.

''ஐயா! நான் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்தவன். எம்.ஏ. படிச்சிருக்கேன். 'குறத்தி மகன்' சினிமாதான் அதுக்கு தூண்டுகோலா இருந்திச்சு'' என்றார். பத்திரிகைகளும், அரசும் இந்தக் கதை எழுதிய எனக்கு உரிய முக்கியத்துவம் தரவில்லை என்கிற என் ஆதங்கத்தை தீர்த்து வைத்தது இந்தச் சம்பவம்.

'ஆதிபராசக்தி', 'குறத்தி மகன்', 'வாழையடி வாழை', 'வந்தாளே மகராசி', 'நத்தையில் முத்து', ''ரௌடி ராக்கம்மா' ஆகிய படங்களில் கே.எஸ். கோபாலகிருஷ்ணனுடன் இணைந்து பணியாற்றினேன்.

'குறத்தி மகன்' வெற்றியைப் பார்த்து தயாரிப்பாளர் எம்.எஸ்.காசி விஸ்வநாதனிடமிருந்து அழைப்பு வந்தது.

எம்.சோமசுந்தரமும், எஸ்.கே.மொய்தீனும் சேர்ந்து 'ஜூபிடர் பிக்ஸர்ஸ்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி பல சூப்பர்ஹிட் படங்களைத் தயாரித்தார்கள். பி.யூ.சின்னப்பாவை அறிமுகப்படுத்தியது, எம்.ஜி.ஆரை கதாநாயகனாக்கியது, எம்.எஸ்.விஸ்வநாதன், சின்னப்பா தேவர், எஸ்.ஏ.நடராஜன் போன்றவர்களை வளர்த்தது, அண்ணாவின் 'வேலைக்காரி'யைத் தயாரித்தது... இப்படி பல பெருமைகள் உண்டு ஜூபிடர் நிறுவனத்திற்கு.

அப்படிப்பட்ட 'ஜூபிடர்' சோமசுந்தரத்தின் மகன்தான் காசி விஸ்வநாதன். 'பாமா விஜயம்', 'நெஞ்சம் மறப்பதில்லை' படங்களைத் தயாரித்த காசிவிஸ்வநாதனுக்கு 'வாயாடி' என்கிற கதையைச் சொன்னேன். அவருக்கும், டைரக்டர் மதுரை திருமாறனுக்கும் பிடித்துப்போனது.

''நான் சாந்தமான, பக்திமயமான கேரக்டர்களில் நடித்திருக்கிறேன். ஆனா வாயாடிப்பெண்ணாக நடித்தது இல்லை. இது எனக்கு சரிப்படுமா?'' என தயங்கித் தயங்கி நடிக்க ஒப்புக்கொண்டார் கே.ஆர்.விஜயா. படம் மிகப்பெரிய வெற்றி.

''கலைஞானத்துக்கிட்ட கதை வாங்கிட்டு வாங்க, உடனே கால்ஷீட் தர்றேன்'' என கே.ஆர்.விஜயா சொல்கிற அளவிற்கு நான் வரவேற்புக்குரியவனானேன்.

அதிர்ச்சியையும், இன்ப அதிர்ச்சியையும் எனக்கு ஏற்படுத்திய சிவாஜி படம்.

# 19. அண்ணாவிடம் முறையிடு!

' வாயாடி' வெற்றிக்குப் பிறகு... என்னைத் தேடி வந்து கதை கேட்கும் நிலமை ஏற்பட்டது.

இந்நிலையில் சிவாஜி நடித்த 'தவப்புதல்வன்' படம் வெளியானது. ' மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்ட ஹீரோவின் கதை' என தெரிய வந்ததும்... எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

சிட்டாடல் ஸ்டுடியோ ஜோஸப் தளியத்திற்கு இரண்டு கதை சொல்லி... அதில் ஒன்று 'காதல் படுத்தும் பாடு' படமாக எடுக்கப்பட்டதையும், இன்னொரு கதை படமாகவில்லை என்பதையும் ஏற்கனவே சொல்லியிருந் தேனல்லவா? அந்த இன்னொரு கதைக்குப் பெயர் 'அமுதம்.' மாலைக்கண் நோயால் பாதிக்கப்பட்ட நாயகியை வைத்து நான் அந்தக் கதையை உருவாக்கி யிருந்தேன்.

இதனால் ' தவப்புதல்வன்' படம் பார்த்தேன்.

'கதை-வசனம் -தூயவன்' என டைட்டிலில் போடப் பட்டிருந்தது. படத்தை இயக்கி தயாரித்திருந்தார் முக்தா சீனிவாசன். படம் பார்த்துவிட்டு கோபமான நான், தூயவனின் வீட்டுக்குப் போனேன்.

''அவரு ஹோட்டலுக்குப் போயிருக்கார்'' என அவர் மனைவி தெரிவிக்க...

பாண்டிபஜார் கீதா கபே ஹோட்டலுக்கு வந்தேன். தூயவனை நானோ, என்னைத் தூயவனோ நேரில் பார்த்ததில்லை. பத்திரிகைப் புகைப்படங்கள் மூலமாக மட்டுமே உருவம் தெரியும்.

நான் கோபத்துடன் ஹோட்டலுக்குள் நுழைய... என்னைப் பார்த்ததும் சாப்பிட்டுக்கொண்டிருந்த டிபனை அப்படியே வைத்துவிட்டு வெளியே வந்த தூயவன் ''வணக்கம் கலைஞானம்'' என்றார்.

''நீங்கதான் தூயவனா?''

''ஆமாம்... 'தவப்புதல்வன்' படத்துக் கதையைப் பத்தித்தானே கேட்க வந்தீங்க. முக்தா சீனிவாசன் சொன்னதை நான் கதையாக எழுதிக் கொடுத்தேன். அது என்னோட கதை இல்லை.''

இப்படி தூயவன் உள்ளத்திலும் தூயவனாக உண்மையைச் சொன்னார்.

"அப்படின்னா நான் முக்தா சீனிவாசனிடமே பேசிக்கிறேன்" என கிளம்பினேன்.

"வா கலைஞானம். நீ என்னைப் பார்க்க வர்றதா தூயவன் சொன்னார். முதல்ல நீ உன்னோட 'அமுதம்' கதையைச் சொல்லு" என்றார் முக்தா.

நான் சொன்னதும் "அருமையா இருக்கு. ஆனா, பக்கத்து வீட்டுக்கு மாலைக்கண் வியாதிக்காரர் ஒருவர் அடிக்கடி வந்து போவார். அவரை வச்சுதான் நாலஞ்சு பேர் சேர்ந்து 'தவப்புதல்வன்' கதையை உருவாக்கினோம்" என்றார் முக்தா.

'ஓட்டல் சொர்க்கம்', 'ஐந்து லட்சம்' படங்களைத் தயாரித்து இயக்கிய ஜி.ராமகிருஷ்ணன் என் நண்பர். அவர் முக்தாவுக்கும் நண்பர். எனது கதைத் திறமையை பெருமைப்படுத்தும் விதமாக முக்தாவிடம் ஜி.ராமகிருஷ்ணன் மாலைக்கண் கதையைச்



சொல்லியிருப்பாரோ... என எனக்குள் நினைத்துக் கொண்டேன். "அடுத்த படமும் சிவாஜியை வச்சுதான் எடுக்கப் போறேன். நல்ல கதை இருந்தா இப்பவே சொல்லு" என்றார் முக்தா.

சிவாஜி என்கிற மகா நடிகனுக்கு கதை எழுதவேண்டும் என்பது என் பல வருட கனவு. இதனால் மனம் மகிழ்ந்துபோய் ஒரு கதை சொன்னேன். அதுதான் சிவாஜி -ஜெயலலிதா நடித்து 1974-ல் வெளிவந்த "அன்பைத் தேடி' திரைப்படம்.

'புதுமையான கதை' என பலரும் பாராட்டினார்கள். அன்றிலிருந்து முக்தா சீனிவாசனுடனும், தூயவனுடனும் எனக்கு நல்ல நட்பை இறைவன் உண்டாக்கித் தந்தான்.

டைரக்டர் பீம்சிங்கின் உதவியாளர் அருணாச்சலம் இயக்கத்தில் அவரின் நண்பர் அன்பழகன் தயாரிப்பில் நான் கதை-வசனம் எழுத 'பாத பூஜை' படம் தொடங்கப் பட்டது.

அக்கா-தங்கையை மையமாக வைத்த கதை. அக்காவாக பாரதியும், தங்கையாக ஜெயலலிதாவும் நடித்துவந்தனர். இரண்டாயிரம் அடி எடுத்த நிலையில் டைரக்டருக்கும் கூட திருப்தி ஏற்படவில்லை.

''நான் எடுத்தவிதம் எனக்கே பிடிக்கலை. என்னோட டைரக்ஷன் ஆசைக்காக தயாரிப்பாளர் நஷ்டப்படுறத நானும் விரும்பவில்லை. நீங்க இயக்கித்தாங்க'' என குருநாதர் பீம்சிங்கிடம் பொறுப்பை ஒப்படைக்க... பீம்சிங்கும் சம்மதித்தார்.

முன்பு பீம்சிங்கை சந்திக்க பலமுறை முயற்சித்து ஏமாந்த நான், இப்போது 'பாத பூஜை' கதையைச் சொல்வதற்காக பீம்சிங் முன் அமர்ந்தேன். அவரை சந்திக்க எடுத்த முயற்சிகளை அப்போது சொன்னேன்.

''நேரம் வரும்போதுதான் கலைஞானம் எல்லாம் நடக்கும்'' என்றார்.

கதையைச் சொன்னேன். திருப்தியடைந்த பீம்சிங் ''திரைக்கதையை நான் என் விருப்பத்துக்கு மாத்தி அமைக்கலாமா?'' என கேட்டார். நாங்கள் சம்மதித்தோம்.

ஹாலிவுட்டில் மட்டுமே இருந்த 'திரைக்கதை' என்கிற பிரிவை டைட்டிலில் போடும் முறையை தமிழ் சினிமாவில் கொண்டுவந்தவர் பீம்சிங்தான். பீம்சிங் வருகைக்கு முன்புவரை 'மூலக்கதை', 'கதை-வசனம்' ஆகிய டைட்டில் மட்டுமே இடம் பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது.

பீம்சிங் பெரிய டைரக்டர். ஜெயலலிதா, பாரதி பெரிய நட்சத்திரங்கள். இதனால் பட்ஜெட் அதிகமாகும்போல் இருந்தது. இதையடுத்து ஜெயலலிதாவிடமும், பாரதி யிடமும் 'நாங்க வேறு நட்சத்திரங்களை வைத்து எடுத்துக் கொள்கிறோம்' என தயாரிப்பாளர் கேட்டுக்கொள்ள... அவர்களும் சம்மதித்தனர். அதன்பிறகு ஜெயசித்ரா-ஜெயா நடிக்க தயாரானது 'பாத பூஜை' திரைப்படம்.

கீழ்திருப்பதி என்பது பெங்களூருவைப் போல பல மொழி பேசும் மக்கள் வாழும் ஊர். அதனால் கீழ்திருப்பதிக் காரரான பீம்சிங் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, மராட்டி, இங்கிலீஷ்... என பல மொழி பேசும் திறமையும், கதை அறிவையும் கொண்டிருந்தார். மிகச்சிறப்பாக படத்தை எடுத்துத் தந்தார்.

**1975-**ஆம் ஆண்டு.

கலைஞரின் உறவினரும் பிரபல உரையாடல் ஆசிரியருமான (வசனகர்த்தா) 'முரசொலி' சொர்ணம், என் வீட்டுக்கு வந்தார். எம்.ஜி.ஆருக்கு நெருக்கமானவர் சொர்ணம். 'உலகம் சுற்றும் வாலிபன்' உட்பட பல எம்.ஜி.ஆர். படங்களுக்கு வசனம் எழுதியவர். இவ்வளவு

சிறப்புக்குரிய சொர்ணம் என்னைச் சந்தித்து, ''எனக்கு ஒரு நல்ல கதை வேணும். அதுக்காக உங்களை ஆபீஸுக்கு கூட்டிப்போக வந்தேன்'' என்றார்.

நான் அவருடன் கிளம்பினேன். அலுவலத்தில் வைத்து கதை சொன்னேன். சொர்ணத்திற்கும் படத்தை தயாரிக்கும் சொர்ணத்தின் மைத்துனர் சௌந்தருக்கும் கதை பிடித்துவிட்டது.

''மைசூரில் வைத்து ஒரே ஷெட்யூலில் ஒரு மாசம் ஷூட்டிங் நடத்தி படத்தை இயக்கி முடிக்கப்போறேன். அதனால... அந்த ஒருமாசமும் நீங்க என்கூட இருக்கணும்'' என்றார் சொர்ணம். சம்மதித்தேன்.

சிவகுமார், கமலஹாசன், ஸ்ரீப்ரியா, ஜெயசித்ரா ஆகியோர் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். 'தங்கத்திலே வைரம்' என்கிற தலைப்பைச் சூட்டினார் சொர்ணம்.

'தங்கத்திலே வைரம்' என்கிற அந்த டைட்டிலுக்கு மறக்க முடியாத... ஆனால் வெளியுலகம் பெரும்பாலும் அறிந்திராத சில சம்பவங்கள் உண்டு.

**1968-**ல் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில் 'பணமா பாசமா' படம் வெளியாகி தமிழகமெங்கும் வசூல் மழை கொட்டியது. ஜெமினிகணேசன்-சரோஜாதேவி நடித்திருந்தனர். 'எலந்தப்பழம்... போடு... செக்கச் செவந்த பழம்' என்கிற பாடல் இந்தப் படத்தில்தான் இடம் பெற்றது.

மதுரையில் தங்கம் திரையரங்கில் 'பணமா பாசமா' படத்தின் வெற்றி விழாவுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அப்போதுதான் புதிதாக வாங்கிய காரில் சென்னையிலிருந்து மதுரை வந்தார் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்.

விழாவில் பேசிய கோபாலகிருஷ்ணன், ''பணமா பாசமா என் படம். என் படத்திற்கு நிகர் என் படம்தான். வசூல் மன்னர்களையெல்லாம் ஓவர்டேக் பண்ணிவிட்டது இந்தப் படம்'' என பெருமிதமாகிப் பேசினார்.

விழா முடிந்து வெளியே வந்த கோபாலகிருஷ்ணன், 'எங்க என் காரை காணோம்' என தேட... தியேட்டர் மேனேஜர் வந்து 'இதோ... இதுதான்' என காண்பிக்க... தனது புத்தம் புதிய கார் அப்பளம் போல் நொறுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்துபோனார் கோபாலகிருஷ்ணன்.

"என்னாச்சு?"

"வசூல் மன்னன்னு எம்.ஜி.ஆரை அவரது ரசிகர்கள் குறிப்பிடுவாங்க. விநியோகஸ்தர்களும் குறிப்பிடுவாங்க. ஆனா நீங்க வசூல் மன்னர்களையெல்லாம் என் படம் ஓவர்டேக் பண்ணிடுச்சுனு பேசினீங்கள்ல. அதான்... தங்களோட தலைவரைத் தாக்கினதா ஆவேசப்பட்ட எம்.ஜி.ஆர். ரசிகர்கள் உங்க காரை நொறுக்கிட்டாங்க" என மேனேஜர் சொல்ல... அதிர்ச்சியானார் கோபால கிருஷ்ணன்.

"இனியும் ஒரு நிமிஷம்கூட மதுரையில் நீங்க இருக்க வேணாம். உங்களை எங்களால் பாதுகாக்க முடியாது" எனச் சொன்ன தியேட்டர் நிர்வாகம், வேறொரு காரை ஏற்பாடு செய்து அவரை சென்னைக்கு அனுப்பி வைத்தது.

சென்னை வந்து சேர்ந்த கோபாலகிருஷ்ணன் முதல் வேலையாக அன்றைய முதல்வர் அறிஞர் அண்ணாவை சந்தித்து முறையிட்டார்.

அண்ணா என்ன சொன்னார்?

# 20. எம்.ஜி.ஆரின் கருணை!

முதல்வர் அறிஞர் அண்ணாவை சந்தித்தார் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்.

மதுரையில் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் தன் காரை நொறுக்கிய சம்பவத்தை விளக்கியதுடன்... ''நான் எதார்த்தமாத்தான் பேசினேன். எம்.ஜி.ஆரை குறிப்பிட்டுப் பேசவில்லை'' என விளக்கியதுடன், ''நான் எம்.ஜி.ஆரை குறிப்பிட்டு பேசலைங்கிற விஷயத்தை நீங்கள்தான் சம்பந்தப்பட்டவங்களுக்கு தெரியப்படுத்தணும்'' என்கிற கோரிக்கையையும் வைத்தார்.

அண்ணா மௌனமாக கேட்டுக்கொண்டார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை.

சில நிமிடம் மௌனம் நீடிக்கவே... ''அப்போ நான் கிளம்பறேன்'' என கோபாலகிருஷ்ணன் சொல்ல... 'சரி' என்பதுபோல் தலையை மட்டும் ஆட்டியிருக்கிறார் அண்ணா.

''நாம காங்கிரஸ்காரன். அண்ணா, தன் கட்சிக்காரரான எம்.ஜி.ஆரை விட்டுக் கொடுப்பாரா? விட்டுக்கொடுக்க மாட்டார். நடக்குறது நடக்கட்டும்' தனக்குத்தானே நொந்துபோய் வந்துவிட்டார் கோபாலகிருஷ்ணன்.

அடுத்த ஒரு வாரத்தில் தன் உதவியாளர் தட்சிணா மூர்த்தியோடு குற்றாலத்திற்கு ஓய்வெடுக்கச் சென்றார் கோபாலகிருஷ்ணன். ஹோட்டல் தளவாயில் ரூம் போட்டுவிட்டு ஐந்தருவியில் குளிக்கப்போனார். ஆயில் மசாஜ் செய்துகொண்டு அருவிக்குள் நனைந்தவர் உடம்பைத் தேய்த்துக்கொண்டு அருவிக்கு வெளியே பார்த்தபோது... வாட்டசாட்டமான இரண்டு முரட்டு ஆசாமிகள் கோபாலகிருஷ்ணனை உற்றுப் பார்த்தபடி இருக்க...

'அய்யய்யோ... மதுரை ஆளுங்க... இங்கேயும் வந்திட்டாங்களே' என பதறியவர்... ''டேய் தச்சு... என்னைய அட்டாக்பண்ண வந்திருக்காங்க போலடா. நீ போய் பார்க்கிங்ல இருக்க காரை எடுத்துக்கிட்டு கிட்ட வந்துடு'' எனச் சொல்ல... தட்சிணாமூர்த்தியும் அதன்படி காரை எடுத்துக்கொண்டு வர... குளித்தும் குளிக்காமலும் பாய்ந்துபோய் காரில் ஏறிக்கொண்டார் கோபாலகிருஷ்ணன்.

ஹோட்டலின் மாடி அறையில் தலையைத் துவட்டியபடி ஜன்னல் வழியாக கோபாலகிருஷ்ணன் பார்த்தபோது அதே இருவர் ஹோட்டல் வாசலில் நின்றபடியே உற்றுப் பார்க்க... கோபாலகிருஷ்ணனுக்கு உடம்பு நடுங்க தச்சுவுக்கும் நடுக்கம்.

"டேய் தச்சு... நீ போய் அவங்ககிட்ட 'அதான் அன்னைக்கே பிரச்சினை முடிஞ்சிருச்சே. அப்புறம் ஏன் பின்தொடர்ந்து வர்றீங்க?'னு கேட்டுட்டு வா" எனச் சொல்ல... பயத்துடனேயே வெளியே வந்த தச்சு, 'ஏன் எங்க டைரக்டரை ஃபாலோ-அப் பண்றீங்க?' எனக் கேட்க...

"அந்தப் பிரச்சினை நடந்ததிலிருந்து எங்க டிபார்ட்மெண்ட் ஆளுங்க உங்களோட பாதுகாப்புக்காக ஃபாலோ-அப் பண்றோம். இது சி.எம். உத்தரவு. நாங்க ரகசிய போலீஸ்" என அந்த இருவரும் சொல்ல... நிம்மதியான தச்சு, ஓடிவந்து கோபாலகிருஷ்ணனிடம் சொல்லியிருக்கார்.

நெகிழ்ந்து கண் கலங்கிய கோபாலகிருஷ்ணன், "அறிஞர் அறிஞர்தான்... நான்தான் அண்ணாவை தப்பா எடை



போட்டுட்டேன். உடனே மெட்ராஸ் கிளம்புறோம். முதல் வேலையா அண்ணாவைப் பார்த்து மன்னிப்புக் கேட்கணும்'' என்று சொல்லி சென்னை கிளம்பினார்.

''எனக்குத் தெரியாமலே என்னோட பாதுகாப்புக்கு ஏற்பாடு செஞ்சிருக்கீங்க. இதுக்கு நான் என்ன கைமாறு செய்யபோறேன்'' என உருக்கமாக கோபாலகிருஷ்ணன் சொல்ல...

''கே.எஸ்.ஜி. நீங்க ஒண்ணு செய்ங்க. நாளைக்கே எம்.ஜி.ஆரை வச்சு நீங்க படம் எடுக்கப் போறதா ஒரு விளம்பரம் கொடுங்க. அவரு உங்க படத்துல நடிக்கிறாரோ, இல்லையோ... அது முக்கியமில்லை. அப்படி ஒரு விளம்பரம் வந்தா இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமா ஒரு தீர்வு ஏற்படும்'' என அண்ணா சொல்லியனுப்பினார்.

அண்ணாவின் பேச்சுக்கு அப்பீல் கேட்கமாட்டார் எம்.ஜி.ஆர். இதனால் எம்.ஜி.ஆரிடம் கேட்காமலேயே... விளம்பரம் தயார் செய்தார்.

மறுநாள் நாளிதழ்களில் முழுப்பக்க விளம்பரம் வந்தது.

''புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். நடிக்கும் ''தங்கத்திலே வைரம்.'

இந்த விளம்பரம் வந்த சிலமணி நேரத்திலேயே கோபாலகிருஷ்ணனின் கற்பகம் ஸ்டுடியோ வாசலில் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் திரண்டு வந்து 'டைரக்டருக்கு எங்க வாழ்த்துக்களைச் சொல்லீருங்க' எனச் சொல்லிவிட்டுப் போனார்கள்.

இந்தச் சம்பவங்கள் நடந்த ஒரு வாரத்தில் ரஷ்யா கிளம்பினார் கோபாலகிருஷ்ணன்.

'பணமா பாசமா' படம். ஏழைத் தொழிலாளிப் பெண் பணக்கார வீட்டு மருமகளாவதை சித்தரிக்கும் கம்யூனிஸ சித்தாந்தம் கலந்த கதை. அதனால் கம்யூனிஸ நாடான ரஷ்யாவில் திரைப்பட விழாவில் 'பணமா பாசமா'வைத் திரையிடும் நோக்கத்துடன் ரஷ்யா சென்றார்.

பத்து நாட்களுக்குப் பிறகு சென்னை திரும்பிய கோபாலகிருஷ்ணன் வீட்டுக்கு வந்தார். அப்பாவை வரவேற்கும் விதமாக அவரின் மகன்கள் ஐந்துபேரும் வரிசையாக நின்றிருந்தார்கள். (அவருக்கு ஆறு மகன்கள்)

''எங்க குமாரை காணோம்'' என அவர் கேட்க... அழுகையும் தயக்கமுமாக பிள்ளைகள் நின்றனர்.

சென்னை ஆழ்வார்பேட்டை வீனஸ் காலனியில் கோபாலகிருஷ்ணன் வீடு. இரண்டாவது மாடியில் இருந்து வேடிக்கைப் பார்ப்பதற்காக எட்டிப் பார்த்த ஐந்து வயது குமார் தலைகீழாக கீழே விழுந்துவிட்டான். இதில் உடம்பு எலும்புகள் முழுக்க நொறுங்கி, தலை உட்பட உடலெங்கும் ரத்தக்காயம். அவனை அள்ளிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். இரவு நேரம் இந்த விஷயம் எம்.ஜி.ஆருக்கு எட்ட... காலநேரம் பார்க்காமல் மருத்துவமனைக்கு விரைந்தார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். வந்ததும் டாக்டர்களெல்லாம் அவரைப் பார்க்க திரண்டுவிட... அவர்களிடம் ''எலும்பு, நரம்பு... இப்படி எந்தெந்த பிரிவு இருக்கோ... அந்தந்த ஸ்பெஷலிஸ்ட்டுகளை வச்சு ட்ரீட்மெண்ட் குடுங்க. தேவைப்பட்டா வெளியூர்ல இருந்தும் ஸ்பெஷலிஸ்ட் களை வரவழைங்க. எவ்வளவு செலவானாலும் நான் பாத்துக்கிறேன். என்ன செய்வீங்களோ தெரியாது... சீக்கிரமே குழந்தை எழுந்து நடக்கணும், பேசணும். பழைய மாதிரி அவனை கொண்டு வந்திடணும்'' என எம்.ஜி.ஆர். கேட்டுக்கொண்டார்.

குழந்தையின் தகப்பன் இப்போது ரஷ்யாவில் இருப்பதைத் தெரிந்துகொண்ட எம்.ஜி.ஆர். ஒரு தகப்பனின் ஸ்தானத்தில் இருந்து தினமும் மருத்துவ மனைக்கு வந்து பார்த்து, நலம் விசாரித்துவிட்டுச் செல்வதை கண்ணும் கருத்துமாய் செய்தார். அவன் ஓரளவு உடல்நலம் தேறினான்.

''நம்ம குமாரு இன்னிக்கி உயிரோட இருக்கக் காரணம் எம்.ஜி.ஆர்.தாங்க'' என திருமதி கோபாலகிருஷ்ணன் சொல்ல... கண்களில் நீர் பொங்கியிருக்கிறது கோபால கிருஷ்ணனுக்கு.

''தெய்வம்கிறது எங்கேயோ இல்ல... மனித உருவில் இருக்குங்கிறதை எம்.ஜி.ஆர். உருவத்தில் தெரிஞ்சுக் கிட்டேன் கலைஞானம்'' என 'குறத்தி மகன்' படப்பிடிப்பின்போது என்னிடம் கோபாலகிருஷ்ணன் சொன்னார். என்னிடம் சொல்லும்போதும் அவர் கண்கள் பனித்திருந்தன.

இப்படி மதுரையில் கார் நொறுக்கப்பட்டது முதல் எல்லா விஷயங்களையும் என்னிடம் அவர் சொன்னதைத்தான் இங்கே நான் எழுதியிருக்கிறேன்.

சிவகுமார், கமல் நடிக்க நான் கதை எழுதிய படத்திற்குத்தான் எம்.ஜி.ஆருக்காக வைக்கப்பட்ட 'தங்கத்திலே வைரம்' டைட்டிலை

வைத்தார் டைரக்டர் கே.சொர்ணம். ஒருமாதம் படிப்பிடிப்பில் இருக்க ஒப்புக்கொண்டபடி சொர்ணத்துடன் மைசூருக்கு காரில் சென்றேன்.

"என்னோட முந்தைய படம் சரியா வரல. இங்க ஒரு ஆஞ்சநேயர் கோயில் இருக்காம். இங்க துளசி தீர்த்தம் வாங்கி ஷூட்டிங் ஸ்பாட்டில் தெளிச்சுவிட்டா படம் நல்லா ஓடும்கிறாங்க. சாமி கும்பிடுறது எப்படி? பூஜைக்கு என்னென்ன பொருட்கள் வாங்கணும்? இந்த விபரம் எதுவும் எனக்குத் தெரியாது" என்றார் சொர்ணம்.

நான் அதையெல்லாம் சொன்னேன். மைசூர் நகருக்கு சில கி.மீட்டர் முன்பாகவே அந்தக் கோயில் இருந்தது. அங்கு சென்று பூஜை செய்தோம். தீர்த்தத்தை சேகரித்த சொர்ணம்... ஷூட்டிங் ஸ்பாட்டில் தெளித்துவிட்டார்.

ஒரு மனிதன் பலகீனமடைந்துவிட்டால்... 'எந்த வகையிலாவது நன்மை வந்துவிடாதா?' என எண்ணுவான். சொர்ணம் அந்த மனநிலையில் இருந்தார் என நான் நினைத்துக்கொண்டேன்.

கமலுடன் மேலும் நெருங்கிப் பழகவும், சிவகுமாருடன் நட்பு பாராட்டவும் மைசூர் ஷூட்டிங் ஸ்பாட் எனக்கு வாய்ப்பாக அமைந்தது.

ஒருநாள் கமலிடம் "தம்பி... நான் படம் தயாரிக்கலாம்னு இருக்கேன். கால்ஷீட் வேணும்" என்றேன்.

"மெட்ராஸ் போனதும் பேசிக்கலாம்ணே" என்றார்.

இரவு பகலாக ஷூட்டிங் நடத்தி 25 நாட்களில் படப்பிடிப்பை முடித்துவிட்டார் சொர்ணம்.

மனைவி, பிள்ளைகளை பார்க்கும் ஆவலில் ஷூட்டிங் முடிந்த அன்றே கிளம்பினேன்.

"மயங்குகிறாள் ஒரு மாது'வும் மயங்க வைத்த மதுவும்!

# 21. கமலுக்கு தந்த அட்வான்ஸ்!

சிவகுமார், கமல், ஸ்ரீப்ரியா மற்றும் ஜெய்சித்ரா நடிப்பில், கே.சொர்ணம் இயக்கிய 'தங்கத்திலே வைரம்' படப்பிடிப்பு மைசூரில் நிறைவடைந்தது. நடிகரும், வியாபாரியுமான எனது பெங்களூர் நண்பர் 'வாழக்கா மண்டி' பழனியப்பனுக்கு போன்செய்து "மைசூர்லயிருந்து கிளம்பி பெங்களூர் வர்றேன். அங்கேயிருந்து நைட்டு மெட்ராஸ் போகணும். ஒரு ட்ரெயின் டிக்கெட் போட்டு வை" எனச் சொல்லிவிட்டு பஸ் ஏறினேன்.

எனக்கு டிக்கெட் எடுத்த பழனியப்பன், உட்லண்ட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்த டைரக்டர் எஸ்.பி. முத்து ராமனைப் பார்த்து சான்ஸ் கேட்க போயிருக்கிறார்.

அங்கே பேசிக்கொண்டிருந்துவிட்டு கிளம்புகையில் "கலைஞானம் ஐயாவோட டிக்கெட் என்கிட்ட இருக்கு. நான் அவரைப் பார்த்துக் குடுக்கணும்" என பழனியப்பன் சொல்ல...

"கலைஞானம் வர்றாரா? பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்லதான போவாரு. அதுக்கு இன்னும் நேரம் இருக்கே. முக்கியமான வேலையா நான் அவரை வரச் சொன்னேன்னு அழைச்சிட்டு வாங்க."

எஸ்.பி. முத்துராமன் சொல்லியனுப்ப... பெங்களூர் ரயில் நிலையத்தில் நான் இறங்கியதும் டிக்கெட்டை என்னிடம் கொடுத்துவிட்டு விபரம் சொன்னார் பழனியப்பன்.

ஸ்டேஷனுக்கு பக்கத்திலேயே ஹோட்டல் இருந்ததால் பழனியப்பனுடன் அங்கே போனேன்.



முத்துராமன்-சுஜாதா நடிக்க 'மயங்குகிறாள் ஒரு மாது' படத்தின் கதை விவாதத்திற்காக எஸ்.பி. முத்துராமன், பஞ்சு அருணாசலம்,

முத்துராமனின் உதவியாளர்கள் ரெங்கராஜன், முத்து உள்ளிட்டவர்கள் வந்திருப்பது தெரிந்தது. எஸ்.பி.முத்துராமன் எப்போதும் மது அருந்தமாட்டார். பஞ்சு சாப்பிடுவார். நான் போனபோது சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அஸிஸ்டெண்ட் ஒருவர் ஒரு டம்ளரில் மது ஊற்றி எனக்குக் கொடுத்தார்.

''அதெல்லாம் வேணாம். நான் ஒரு மாசம் கழிச்சு பொண்டாட்டி புள்ளைகளை பார்க்கப் போற குஷியில இருக்கேன்'' என்றேன்.

'லைட்டா சாப்பிடுங்க'' என கேட்டுக்கொண்டதால் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சி தம்ளரை என் அருகில் வைத்திருந்தேன்.

''ஒரு ராங்-சென்ட்டிமென்ட் கதையை கைல எடுத்துட்டோம். இடைவேளைக்கு மேல ஸீன்களை, கேரக்டர்களை எப்படி மூவ் பண்றதுனு தெரியாம நிக்கிறோம்'' எனச் சொன்னார் பஞ்சு.

நான் முழு கதையையும் கேட்டேன்.

''நான் பெருமைக்குச் சொல்லவில்லை. 'கதைகளை பழுது நீக்குவதில் மன்னன்' என அப்போதே எனக்கு ஒரு பேரு. சென்னை பாஷையில சொல்வதானால் 'கதைக்கு கலாய் பூசுறது' என்பார்கள்)

சுவாரஸ்யமாக கதை விவாதம் செய்துகொண்டிருக்க... அந்த அஸிஸ்டெண்ட் எனக்குத் தெரியாமலேயே சரக்கை என் தம்ளரில் ஊத்தியபடி இருக்க... 'என்னடா இது... குறையவே மாட்டேங்குது' என நானும் எடுத்து எடுத்து குடித்தபடியே, பெங்கால் திரைப்படம் ஒன்றில் வருகிற 'பிளாக்மெயில்' கேரக்டரை உதாரணம் காட்டி... ''அப்படி ஒரு கேரக்டரை இந்தக் கதையில் வச்சா... ஆட்டோமேடிக்கா கதை மூவ் ஆகும்'' எனச் சொல்லி கதையின் 'லாக்'கை உடைத்தேன்.

எல்லோருக்கும் மகிழ்ச்சி.

''நைட் தங்குங்க'' எனச் சொன்னார்கள்.

''நான் வீட்டப் பாக்கப் போகணும்'' எனச் சொல்லிவிட்டு எழுந்தேன். போதை அதிகமாகி தட்டுத் தடுமாறிய என்னை எப்படியோ ரயிலில் ஏற்றி உட்கார வைத்துவிட்டு பழனியப்பன் கிளம்பிவிட்டார்.

ட்ரெயின் கிளம்பியது. ''அடடா... மெட்ராஸ் போற ரயில்ல உட்கார்ந்திருக்கோமா? இல்ல... வடநாடு போற ரயிலா?' என திடீர்

சந்தேகம். எதிரே இருப்பவரிடம் கேட்கவும் தயக்கம். ''மது நாறுமே' என யோசித்தபடியே அசந்துவிட்டேன்.

திடீர் விழிப்பு வந்தபோது ஒரு ரயில் நிலையம். ''ஜோலார்பேட்டை' என தமிழில் எழுதியிருந்தது.

''நல்லதாப்போச்சு. நாம சரியான ட்ரெயின்லதான் ஏறியிருக்கோம்' என நிம்மதி வந்தது.

எனது கதையில் வெளியான 'தங்கத்திலே வைரம்' படம் வெற்றிப்படமானது. கமல் ஏற்கனவே இந்தப் படத்தின் படப்பிடிப்பில் சொல்லியிருந்தபடி கால்ஷீட் வாங்க கமலை சந்திக்க முடிவானது. அதன்படி நானும் என் உயிர் நண்பர் டி.என்.வெங்கட்ராமனும் கமலை அவரது வீட்டில் சந்தித்தோம். கமலுக்கு 20 ஆயிரம் ரூபாய் சம்பளம் பேசி 501 ரூபாய்க்கான அட்வான்ஸ் செக் கொடுத்தோம். அந்த செக் பாஸ் ஆகிவிட்டது.

கால்ஷீட்டுக்காக பல நாள் அலைந்தோம். ''இந்த மாதம்... அடுத்த மாதம்...' என காலம் கடத்தினார் கமலின் மேனேஜர் சேஷாத்ரி.

ஆறுமாதங்கள் ஆன நிலையில் ''கலைஞானம் சார்... இப்போ கமல் சாரோட சம்பளம் ஒரு லட்ச ரூபாயா உயர்ந்து போச்சு'' என்றார் சேஷாத்ரி. (இன்றைய மதிப்பில் கணக்கிட்டால் ஒரு கோடி ரூபாய்க்கு சமம்.)

எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''நாங்க கமல்கிட்ட பேசிக்கிறோம்'' என வந்துவிட்டோம். கமல் மேலும் மேலும் வளர்ந்து பெரிய ஹீரோவாகி உச்சம் தொட்டார். நாங்கள் அவரின் கால்ஷீட்டையோ, அவரையோ எட்டிப் பிடிக்க முடியாதபடி இருந்த இடத்திலேயே இருந்துவிட்டோம். கமலின் வளர்ச்சி பிரமிப்பூட்டியது.

(நான் இந்த இடத்தில் கமலுடனான எனது அனுபவங்களை முழுவதுமாகச் சொல்லிவிடுகிறேன்.)

வருடங்கள் உருண்டோடின. பெரிய ஸ்டாரான கமலின் ஓரிரு படங்கள் சரியாகப் போகாத நிலையில் ''கரகாட்டக்காரன்' எனும் பெரும் வெற்றிப் படத்தை தந்த கங்கைஅமரனை தனது படத்திற்கு டைரக்டராக்கினார் கமல். படத்தின் தயாரிப்பும் கமல்தான்.

ஜல்லிக்கட்டு காளை பின்னணியில் ஆன கிராமியக் கதையை எழுதிய கங்கை அமரன், ''இந்தக் கதையின் டிஸ்கஷனுக்கு கலைஞானமும், கலைமணியும் வந்தால் நன்றாக இருக்கும்'' என சொல்ல... கமலும் ''டபுள் ஓ.கே.' சொல்லிவிட்டார்.

அழைப்பின் பேரில் நானும், கலைமணியும் கமலின் ஆபீஸுக்குச் சென்றோம். அங்கே தீவிரமாக கதை விவாதம் நடந்துகொண்டிருந்தது. எனக்கும், கலைமணிக்கும் தலா ஐயாயிரம் ரூபாய்க்கு செக் கொடுத்தார் கமல்.

கதை விவாதத்திற்கிடையே என்னிடம் உள்ள கதைகளை சுருக்கமாகச் சொல்வது எனது வழக்கம். அப்படித்தான்... ''எனது கல்கத்தா கார் அனுபவமான ''கான்வாய் கதை'யை கமலிடம் சொன்னேன். அடுத்து ''எங்க ஊரு ஏட்டையா' என்கிற கதையையும் சொன்னேன்.

''ரெண்டு கதைகளையுமே நான் எடுக்கிறேன். ஆனா... ரெண்டு, மூணு வருஷம் கழிச்சிதான் எடுக்க முடியும்'' என்றார் கமல்.

''உங்க சௌகர்யம் போல செஞ்சுக்கலாம் தம்பி'' என நான் சொன்னேன்.

கமல்-கங்கைஅமரன் படத்திற்கான கதை விவாதம் முடிந்தது. படத்திற்கு ''அதிவீரபாண்டியன்' என்கிற தலைப்பையும் சொன்னேன். கமல் உட்பட எல்லோருக்கும் பிடித்துவிட்டது. படப்பிடிப்பு துவங்க விருந்த நேரத்தில் சில பல காரணங்களால் அந்தப் படம் கைவிடப்பட்டது.

உடனடியாக வேறு படம் தொடங்க வேண்டியிருந்த கமல், ஒரு கதையைத் தானே தயார் செய்து, தானே இயக்கித் தயாரிக்க திட்டமிட்டார். எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு நட்சத்திரங்கள், துணை நடிகர்கள் என சுமார் 200 பேர்களுடன் கமல் தனது சொந்த ஊரான பரமக்குடி பக்கம் தங்கிவிட்டார்.

முதல்நாள் ஷூட்டிங் முடிந்தது. சிந்தனைவயப்பட்டவராக கமல் தூங்காமல் விழித்திருக்க... அந்தச் சமயம் கமலை வைத்து படம் தயாரிக்க விரும்பி அங்கே கமலை சந்தித்தார் சங்கிலி முருகன்.

''என்ன கமல், ஒரு மாதிரியா இருக்கீங்க?'' என சங்கிலி கேட்க...

''இன்னிக்கு ஷூட்டிங் முடிஞ்சது. ஆனாலும் எனக்கு திருப்தி வரலை. கதை சரியா இல்லை. அதான் யோசனையா இருக்கு'' என கமல் சொல்லிவிட்டு... ''சங்கிலி சார், கலைஞானம் என்கிட்ட ரெண்டு

கதைகளோட ''லைன்' சொன்னார். அதுல ஒண்ணு எனக்குப் பிடிச்சிருக்கு. அதை வச்சு பண்ணலாமா? அந்த லைன் சொல்றேன் கேக்குறீங்களா?''

''சொல்லுங்க.''

''ஒரு கிராமத்தில் இரு பெரிய புள்ளிகள். கோயிலின் முதல் மரியாதை எனும் பரிவட்டம் யாருக்கு? என்பதில் இருவருக்கும் இடையே போட்டி. தீர்வு கிடைக்காததால் கோயிலை மூடி ஆளுக்கொரு பூட்டைப் போட்டுவிடுகிறார்கள். தீர்வு கிடைக்கும்வரை கோயிலை திறக்கக்கூடாது என பரஸ்பரம் சவால்விடுகிறார்கள். இதுதான் கலைஞானம் அண்ணன் சொன்ன லைன்'' என கமல் சொல்ல...

''இதை வச்சு தாராளமா செய்யலாம்'' என சங்கிலி முருகனும் ஆர்வமாகிவிட... இருவரும் விடிய விடிய கலந்து பேசியதில் முழு திரைக்கதையையும் கமல் அழகாக எழுதிவிட்டார்.

மறுநாள் படப்பிடிப்பு ஜோராக தொடங்கியது.

அதுதான் 'தேவர் மகன்' திரைப்படம். இந்தச் சமயம்... சந்தர்ப்பம் சில சங்கடங்களை உண்டாக்கியது.

# 22. ஏமாற்றிய கமல்!

''தேவர் மகன்' படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அப்போது நான் பாக்யராஜின் பார்ட்னராக சேர்ந்து 'அம்மா வந்தாச்சு' படத்தை எடுத்து ரிலீஸ்பண்ணும் வேலைகளில் இருந்தோம். இதற்காக நான் பாக்யராஜ் ஆபீஸிலேயே இருந்தேன். அந்த ஆபீசுக்கு கமல் போன் பண்ணினார்.

''அண்ணே... என் படத்தில் உங்களுக்கு முக்கியமான வேஷம் இருக்கு. உடனே கிளம்பி வர முடியுமா?'' என கேட்டார்.

''தம்பி... உங்க படத்துல நீங்க எனக்கு வேஷம் தர்றது அளவிலா மகிழ்ச்சி தருது. 'அம்மா வந்தாச்சு' ரிலீஸ் வேலைகள் இருக்கு'' என்றேன் நான்.

''முதல்ல அதைச் செய்ங்கண்ணே. நான் வேற ஆளைப் போட்டுக்கிறேன்'' என்றார்.

(''தேவர் மகன்' படத்தில் காகா ராதாகிருஷ்ணன் ஏற்றிருந்த வேஷத்திற்காகத்தான் கமல் என்னை அழைத்தார் என்பதை பிற்பாடு காகா ராதாகிருஷ்ணன் என்னிடம் சொன்னார்.)

ஒருநாள்...

என்னுடைய 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தில் என்னால் நடிகராக அறிமுகப்படுத்தப்பட்ட நாகராஜ சோழன் என்னை சந்தித்தார்.

''அண்ணே... 'தேவர் மகன்' படத்துல ஒரு நல்ல கேரக்டர் பண்ணீட்டு வந்தேன்'' என்றார்.

''அப்படி என்ன கேரக்டர்?'' என கேட்டேன்.

டேமில் குண்டு வைப்பது உள்ளிட்ட சில ஸீன்களையும் சொன்னார்.

''கமல்கிட்ட நாம சொன்ன கதை மாதிரி இருக்கே? இதுக்குத்தான் கமல் தேவர் மகனில் நடிக்கக் கூப்பிட்டாரா?'' என எனக்குள் ஒரு சந்தேகம்.

இருந்தாலும் 'முழு விபரமும் தெரியாமல் அவசரப் படக்கூடாது' என அமைதியானேன்.

சிலநாட்கள் கழித்து கமல் அலுவலகத்திற்கு போன் போட்டு மேனேஜர் டி.என்.எஸ்.ஸிடம் பேசினேன். நேரடியாகக் கேட்டுவிடக்கூடாது என்பதால் பாலீஸாக சுற்றி வளைத்து பேச்சை ஆரம்பித்தேன்.

"அதிவீரபாண்டியன் படத்துக்கு ஸ்டோரி டிஸ்கஷனில் கலந்துகிட்டதுக்காக ஒரு செக் குடுத்துச்சு தம்பி. அது என்ன தேதினு சொல்ல முடியுமா?" என கேட்டேன்.

தேடிப்பிடித்து செக் டேட் சொன்னவர்... "கலைஞானம் சார், ஒரு செய்தி உங்ககிட்ட சொல்ல மறந்திட்டேன்" என்றார்.

"என்ன?"

"உங்க தம்பி கமல், நீங்க சொன்ன கதையில் இருந்து 'தேவர் மகன்' படத்துக்காக ரெண்டு, மூணு ஸீன்களை எடுத்துக்கொண்டார். உங்ககிட்ட சொல்லச் சொன்னார். நான் மறந்திட்டேன்" என்றார்.

"சரிங்க" எனச் சொல்லி போனை வைத்துவிட்டேன்.

'தேவர் மகன்' படத்தைப் பார்க்காமல் எந்த முடிவுக்கும் வரக்கூடாது. அவசரப்பட்டு அநாகரிகமாக நடந்துவிடக்கூடாது என உறுதியாக இருந்தேன்.

'தேவர் மகன்' ரிலீஸ். முதல்நாள் முதல் ஷோவே பார்த்தேன். கமலிடம் பேசுவதற்காக போன் போட்டேன்.

சிவாஜி ஃபிலிம்ஸின் 'கலைஞன்' படப்பிடிப்பிற்காக கமல் மைசூர் போய்விட்டதாகச் சொன்னார்கள்.

சென்னைக்கு கமல் வந்தபிறகு சந்திக்கலாம்... என இருந்துவிட்டேன்.



'தேவர் மகன்' மிகப்பெரும் வெற்றியுடன் ஓடி முடியும் தருவாய் ஆன நிலையில்... அதாவது இரு மாதங்களுக்குப் பிறகு கமல் சென்னை திரும்பிவிட்டதாக செய்தி கிடைத்தது.

கமலுடன் பேச விரும்பி பலமுறை அலுவலகத்துக்குப் போன் செய்தேன். ஆனால் முடியவில்லை. ஒருநாள் போன்போட்டு உரத்த குரலில் பேசினேன்.

''கமல் தம்பிகிட்ட போனை குடுங்க. குடுக்கலேன்னா... நான் இப்பவே ஆபீசுக்கு வருவேன்'' எனச் சொன்னதும் உடனே லைனில் வந்தார் கமல்.

''அண்ணே... வணக்கம்ணே. கொஞ்சம் பிஸியா இருந்திட்டேன். என்னண்ணே?''

''தம்பி... 'தேவர் மகன்' பார்த்தேன். கதையோட ஆரம்பம் என்னுடையதா இருந்தாலும் அதுக்கு நீங்க எழுதின ஸ்கிரீன் பிளே அற்புதம் தம்பி. உங்களைத் தவிர வேற யாராலும் இப்படி எழுத முடியாது தம்பி.''

''தேங்க்ஸ் அண்ணே... நாளைக்கி காலைல டி.என்.எஸ்.ஸை உங்க வீட்டுக்கு அனுப்புறேன்.''

கமல் சொன்னது போலவே டி.என்.எஸ். என் வீட்டுக்கு வந்தார். செக் ஒன்றை தந்தார். உழைப்பிற்கேற்றதாக அந்த ஊதியம் இருக்கவில்லை.

''நான் நாளைக்கி தம்பிய பார்த்து பேசிக்கிறேன். செக்கை நீங்க திரும்ப எடுத்திட்டுப் போயிருங்க'' எனச் சொல்லிவிட்டேன்.

மறுநாள் காலை காகா ராதாகிருஷ்ணன் எனக்கு போன் செய்து, ''கலைஞானம்... ஷூட்டிங்ல கமலுக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சுப்பா'' என்றார்.

எனக்கு வருத்தம் உண்டானது.

''கலைஞன்' படத்திற்காக சென்னை அண்ணா மேம்பாலத்திற்கு கீழே கமல் குதிரையில் வரும் காட்சியைப் படமாக்கிக்கொண்டிருந்தார்கள் அதிகாலைக்கும் முன்பாக. பாலத்தின் தூண் சுவர் மீது குதிரை மோதியதில் கமல் கீழே விழுந்துவிட்டார். இதில் குறுக்குத்தண்டின் கடைசி தசைப்பகுதியில் இரண்டாக வெடிப்பு ஏற்பட்டுவிட்டது. சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் கமல்.

இந்தச் சூழ்நிலையில் அவரைப் போய்ப் பார்த்தால் 'கதை விஷயமாக இருக்குமோ?' என கமல் நினைத்து வருந்தினால்? 'அப்படி ஒரு வேதனைக்கு நாம் காரணமாகக்கூடாது' என இருந்துவிட்டேன். கமல் நலம் பெற என் இஷ்ட தெய்வம் முருகனிடம் வேண்டிக்கொண்டேன்.

உயர் சிகிச்சைக்காக மும்பை சென்றுவிட்டார் கமல்.

சில வாரங்களுக்குப் பின்...

டைரக்டர் ரங்கராஜன் தயாரித்துவந்த 'மகராசன்' படத்தில் கமல் சிறப்பு வேடமேற்று நடித்துவந்தார். இன்னும் ஒருநாள் கமல் நடித்துக்கொடுத்தால் படம் வெளியாகிவிடும் என்ற சூழலில்... அதை முடித்துத் தர கமல் மோகன் ஸ்டுடியோ வந்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்தது. நான் அங்கு போனேன். என்னைப் பார்த்ததும் 'வாங்கண்ணே' என எழுந்து கும்பிட்டார் கமல்.

அரை பாதியாக மெலிந்திருந்த கமலைப் பார்த்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"என்ன தம்பி... இப்படி மெலிஞ்சிட்டீங்க?"

"அடிபட்ட காயம் இன்னும் முழுசா ஆறலண்ணே. தொடர்ந்து ட்ரீட்மெண்ட்ல இருக்கேன்" என்றபடியே தான் உட்கார்ந்திருந்த சேரை காண்பித்தார். அதில் பெரிய ஓட்டை இருந்தது.

"என்ன தம்பி இது?"

"சேர்ல உட்காரும்போது மறந்துபோய் சாய்ஞ்சு உட்கார்ந்தா முதுகுத்தண்டுல உராயும், புண் ஆறாது. அதனாலதான் இந்த ஓட்டை சேர்."

கமல் சொன்னதும் என் மனம் ரொம்பவே வேதனைப்பட்டது. "தம்பி உங்களை நலம் விசாரிக்க மட்டும்தான் வந்தேன். முதல்ல உங்க உடம்பை பார்த்துக்கங்க" எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

அடுத்த ஓரிரு நாளில் சங்கிலி முருகன் என் வீட்டுக்கு வந்தார்.

"அப்பே... கமல் உங்களை அழைச்சிட்டு வரச்சொன்னாரு" என்றார். சங்கிலி காரில் அவரும், என் காரில் நானும் கமல் ஆபீஸ் போனோம்.

கமல், மேனேஜர் டி.என்.எஸ். மற்றும் ஊழியர்கள் என்னை எதிர்பார்த்து நின்றிருந்தார்கள்.

எனக்கு முன் சங்கிலி நுழைந்தார். அவர் டைரக்ஷன் பண்ணினார்.

"டி.என்.எஸ். அந்த பண்டலை எடுத்துட்டு வாங்க."

கொண்டு வந்தார்.

"அதை கமல் தம்பியிடம் கொடுங்க."

கொடுத்தார்.

"கமல் தம்பி... அண்ணன்கிட்ட பண்டலைக் குடுத்து ஆசிர்வாதம் வாங்குங்க."

கமல் என்னிடம் கொடுக்க, நானும் வாங்கிக்கொண்டு கமலை ஆசிர்வதித்தேன். (ஆரம்பத்திலிருந்தே இன்றுவரை கமலை ஆசிர்வதிக்கிறவன்தானே நான்.)

'பண்டலில் என்ன இருக்கிறது?' என நாகரிகம் கருதி நானும் கேட்கவில்லை. அவர்களும் சொல்லவில்லை.

விடைபெற்று வீடு வந்து சேர்ந்தேன். பண்டலைப் பிரித்தேன். எனக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

சில மாதங்களுக்கு முன் கமல் அலுவலக மேனேஜர் டி.என்.எஸ். என் வீட்டுக்கு வந்து கொடுத்த, திறமைக்கான ஊதியமாக இல்லை... என நான் திருப்பி அனுப்பிய அந்த காசோலையின் தொகையே இப்போது பணமாக இருந்தது.

எனக்கும், கமலுக்கும் இடையே இடைத்தரர்கள் விளையாடிவிட்டார்கள் என்றாலும் கமல் மீது நம்பிக்கையோடுதான் காத்திருக்கிறேன்.

மீண்டும் 1976 காலகட்டத்திற்கே வருகிறேன்.

சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்பா தேவரிடமிருந்து எனக்கு அழைப்பு.

# 23. தேவர் ஸ்டைல்!

சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்பா தேவரின் 'தேவர் ஃபிலிம்ஸ்' கதை இலாகாவைச் சேர்ந்த சிவம் என்னை சந்தித்து, தேவர் அழைத்து வரச் சொன்னதாகச் சொன்னார். அவருடன் சென்றேன்.

தேவரைப் பார்த்ததும் கும்பிட்டேன்.

"காதல் படுத்தும் பாடு, வெகுளிப்பெண், குறத்தி மகன், வாயாடி இதெல்லாம் உன்னோட கதையா?"

"ஆமாங்கண்ணே..."

"ஆச்சரியமா இருக்கு. கதை எழுதுற ஒவ்வொருத்தரும் தங்களுக்குன்னு ஒரு பாணி வச்சுக்கிட்டு அதே பேட்டன்ல எழுதுவாங்க. நீயோ கதைக்குக் கதை வித்தியாசம் காட்டுறியேப்பா. இதெல்லாம் நீ யாருகிட்ட கத்துக்கிட்ட?"

"சின்ன வயசிலருந்து சினிமா பார்த்த அனுபவம், சொந்த அனுபவம், பார்த்தது, கேட்டது... இதை வச்சு நானே கதை சொல்லப் பழகிக்கிட்டேன்."

"கதை சொல்லி எல்லாரையும் அசத்துவாரு கே.எஸ்.கோபாலகிருஷ்ணன். ஆனா நீ கோபால கிருஷ்ணனையே கதை சொல்லி அசத்துறதா டிஸ்ட்ரி பியூட்டர்ஸ் சொன்னாங்கப்பா. அதனாலதான் உன்னை கூட்டிவரச் சொன்னேன்."

"சரிங்கண்ணே."

"ஏப்பா... நீ எந்த ஊரப்பா?"

"மதுர மாவட்டம் எழுமலை கிராமம்ணே..."

"அட நீ என்ன சாதிக்காரன்டா?"

"தேவர்"

உடனே அருகே இருந்த எச்சில் பணிக்கத்தில் (கும்பா) 'த்தூ' என சத்தமாக வெற்றிலை எச்சிலைத் துப்பிய தேவர் தன் சகோதரனைப் பார்த்து...

"ஏலே மாரியப்பா..."

"அண்ணா...?"

"ஏய், இவன் நம்ம சாதிக்காரன்டா."

"அப்படியாங்ண்ணா" என மாரியப்பன் சொல்ல...

என் பக்கம் திரும்பிய தேவர் "ஏம்ப்பா நீ நம்ம கம்பெனில ஒர்க் பண்றியா?" என கேட்டார்.

"சரிங்கண்ணே..."

"ஒரு கதைக்கு பணம் என்னப்பா வாங்குற? கோபாலகிருஷ்ணன்கிட்ட எவ்வளவு வாங்குற?"

"குறத்தி மகனுக்கு 7,500 ரூபா. அவரோட மத்த படங்கள்ல நான் திரைக்கதை ஒத்துழைப்பு செஞ்சேன். ஒரு படத்துக்கு 2,500 ரூபா குடுத்தார்ணே."

(நான் சொன்னதும் தனது கதை இலாகாவினரை ஒரு பார்வை பார்த்தார். நான் வாங்கியதை விட அவர்களுக்கு அதிகம் தந்துகொண்டிருந்தார் தேவர்.)

"அவ்வளவுதானா?"

"ஆமாண்ணே!"

"சரியப்பா. சம்பாதிச்சதுல நிலம் புலம் வாங்கியிருக்கியா?"

"மாசக் கடைசியானா மார்வாடிகிட்ட பண்ட பாத்திரத்த அடகு வச்சுத்தாண்ணே குடும்பம் நடத்துறேன்."



"அடப்பாவி! இத்தனை கதை எழுதியும் மாசக் கடைசியில பிரச்சினையா? சரி... ஒண்ணு செய்" என்ற தேவர் தன் தம்பியைப் பார்த்து "மாரியப்பா... பத்தாயிரம் கேஷ் கொண்டு வந்து கலைஞானம் கைல குடு" என்றார்.

பணம் என் கைக்கு வந்தது.

"இது அட்வான்ஸ்தான். நீ முதல்ல ஒங்க ஊருக்குப் போ. நிலம் வாங்கிப் போட்டுட்டு வா" எனச் சொல்லி ஆசிர்வதித்தார்.

ஊருக்கு பஸ் ஏறினேன்.

தேவர் எப்போதும் சாதிப்பாசம் காட்டுகிறவரில்லை. புத்திசாலிகளாக இருந்தால் மட்டுமே அவரிடம் பணிபுரிய முடியும். திறமை இல்லாதவர்களை சொந்த சாதிக்காரர்களாக இருந்தாலும் வேலையில் வைத்துக்கொள்ள மாட்டார்.

தன் நிறுவனத்தில் பணிபுரிய வரும் நடிகர், நடிகை, கதாசிரியர் உள்ளிட்ட நட்சத்திரங்களின் திறமை பிடித்துப் போய்விட்டால் முதல் வேலையாக அவர்களுக்கு வீடோ, நிலமோ வாங்கிக்கொள்ள உதவுவார். இதையெல்லாம் அசைபோட்டபடியே... ஊரில் இறங்கினேன். எழுமலையை ஒட்டியே ஒரு ஏக்கர் நிலத்தை ஏழாயிரம் ரூபாய்க்கு வாங்கிப் போட்டுவிட்டு சென்னை திரும்பினேன். தேவர் ஃபிலிம்ஸ் கதை இலாகாவில் சேர்ந்தேன்.

"அப்பா கலைஞானம், இன்னைலேர்ந்து உனக்கு என்ன வேலை தெரியுமா?" எனக் கேட்டார் தேவர்.

"சொல்லுங்கண்ணே..."

"நீ தினம் ஒரு கதை ரெடிபண்ணி என்கிட்ட சொல்லணும்."

எனக்குப் பகீர் என்றது. "பல மாசம் யோசிச்சுத்தான் ஒரு கதை எழுதுவோம். இவரு தினமும் ஒரு கதை கேட்கிறாரே? இவர்கிட்ட அட்வான்ஸ் வாங்கினது தப்போ?" என எனக்குள் யோசனை. ஆனாலும் கெத்து விடக்கூடாதே... தினமும் ஒரு கதை சொல்வதாக சம்மதித்தேன்.

தினமும் இரவு ஒருமணி வரை வீட்டில் உட்கார்ந்து கதை ரெடிபண்ணி, காலையில் ஆபீஸ் போய் தேவரிடம் கதையைச் சொல்வேன். கதையை எளிமையாக, அதே சமயம் சுருக்கமாக அஞ்சு நிமிஷத்தில் சொல்ல வேண்டும்.

கதை பிடிக்காவிட்டால் 'த்தூ' என எச்சில் பணிக்கத்தில் துப்புவார். நல்ல கதையாக இருந்தால் தேர்வு செய்து விடுவார். சிலசமயம் மோசமான கதையில் கூட நல்ல ஸீன்கள் இருந்தால் அதை எடுத்துக்கொள்வார்.

தினமும் கதை தயார் செய்வது எனக்கு நல்ல பயிற்சியாக இருந்தது. அவரால் நிராகரிக்கப்பட்ட எனது கதைகள் பிற்கால ரசனைக்கு சரியாக இருந்ததால் அதை நான் பயன்படுத்திக்கொண்டேன்.

ஒரு கதை படப்பிடிப்பில் இருக்கும். இன்னொரு கதை விவாதம் செய்யப்படும். மூன்றாவதாக புதிய கதையை தேர்வு செய்துகொண்டிருப்பார். இதுதான் தேவர் ஸ்டைல்.

ஒருநாள் தேவருடன் நான், தூயவன் உள்ளிட்ட கதை இலாகாவினர் கதை விவாதத்திற்கு தயாரான நேரத்தில் புரொடரிக்ஷன் அஸிஸ்டெண்ட் சுப்பையா, செங்கல்பட்டில் நடந்த ஷூட்டிங் செலவுகளை எழுதி

தேவரிடம் கொடுத்தார். அதில் டைரக்டர் எம்.ஏ.திருமுகத்திற்கு 'ஸ்பெஷல் சாப்பாடு.. மூன்று ரூபாய் 50 காசு' என எழுதியிருந்தார் சுப்பையா.

"3.50-க்கு ஸ்பெஷல் சாப்பாடுன்னா நல்லா இருக்குமே? நான்கூட சாப்பிடலாமே? அது எந்த ஹோட்டல்ப்பா?" என தேவர் கேட்டார்.

உடுப்பி ஹோட்டல் என்றதும் செங்கல்பட்டு போஸ்ட் ஆபீஸுக்கு போன் போட்டு அந்த ஹோட்டல் நிர்வாகியை லைனுக்கு வரவைத்துப் பேசினார் தேவர்.

"ஐயா... எங்க ஹோட்டல்ல டிபன் மட்டும்தான்" எனச் சொல்லிவிட...

"அது ஸ்ரீஉடுப்பி ஹோட்டல்ணே" என்றார் சுப்பையா.

மீண்டும் செங்கல்பட்டு போஸ்ட் ஆபீஸுக்கு போன். சிறிது நேரத்தில் லைனில் வந்த ஆள், "நான் ஸ்ரீஉடுப்பி முதலாளி பேசுறேன்" எனச் சொல்ல... "ஹோட்டல் முதலாளியா?" என தேவர் கேட்டதுதான் தாமதம்... நின்றுகொண்டிருந்த சுப்பையா திடீரென தேவரின் காலில் விழுந்து "அண்ணே! 50 பைசா அதிகமா பில்லுல எழுதிட்டேண்ணே. என்னைய மன்னிச்சிடுங்க" என கதற...

டென்ஷனில் தேவருக்கு உடம்பெல்லாம் ஆடுகிறது.

"மாரியப்பா... இவனை இப்பவே வேலையை விட்டுத் தூக்கு. இல்லேன்னா... என்னைய வேலையை விட்டுத் தூக்கு" என யானையைப் போல பிளிறினார் தேவர்.

உடனடியாக சுப்பையாவை வேலையிலிருந்து துரத்தினார்கள்.

நாங்களெல்லாம் "ஐம்பது பைசாவுக்கு இம்புட்டு ஆவேசமா?" என அதிர்ச்சியில் உறைந்துபோனோம்.

அதே சுப்பையா இரண்டு மாதம் கழித்து கல்யாணப் பத்திரிகையுடன் தேவரைப் பார்க்க வந்தார்.

"நீயே திருட்டுப்பய... உனக்கு எவன் பொண்ணு தர்றான்?"

"அண்ணே, என் தங்கச்சிக்கு கல்யாணம்ணே..." என சுப்பையா சொன்னதும் மெல்ட் ஆனார் தேவர். இரக்கம் மற்றும் வியப்பு ஏற்படும்போது கையால் மூக்கைப் பிடித்து வாயைப் பொத்தி சிந்திப்பார் தேவர். இப்போதும் அப்படியே செய்தார்.

"பெத்தவங்க இறந்துட்டாங்க. தங்கச்சிய கரையேத்திட்டா என் கடமை முடிஞ்சிடும். தங்கச்சி கல்யாணத்துக்குத் தான் படாதபாடு படுறேன். ஐயாயிரம் ரூபா ஆகுது கல்யாணச் செலவு. இந்த நோட்டுல 101 ரூபா எழுதிட்டீங்கன்னா... இதைக் காட்டியே வசூல் பண்ணிக்குவேன்" என சுப்பையா சொல்ல...

"மாரியப்பா... ஐயாயிரம் கேஷ் அவன் கைல குடு" என்றார். பணம் சுப்பையா கைக்கு வந்தது.

"வேற யாரும் உதவி செஞ்சா வாங்கிக்க. கல்யாணத்தை நல்லபடியா நடத்து. நான் கண்டிப்பா வர்றேன்" என தேவர் சொல்ல... உதவி பெற்ற சுப்பையா மகிழ்ச்சியில் அழுதபடி போனார்.

தேவரின் வலதுபக்கம் நானும், இடதுபக்கம் தூயவனும் உட்கார்ந்திருந்தோம். நான் தேவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். இதை ஓரக்கண்ணால் கவனித்த தேவர், "டேய்... கலைஞானம், ஏன் நீ என்னயவே பாக்குற? 50 பைசாவுக்காக அவனை வேலையை விட்டுத் தூக்கி, இப்போ ஐயாயிரத்த தூக்கித் தர்றானே தேவன்?னு பாக்குறியா? அது வியாபாரம், இது தர்மம். வியாபாரத்துல நான் கண்டிப்பா இருந்தாத்தான் தர்மத்த தாராளமா செய்ய முடியும்" என்றார்.

தேவரின் நியாயம் அப்பழுக்கற்றதாக இருந்தது.

பிரபல கதாநாயகிக்கு தேவர் தந்த அதிர்ச்சி வைத்தியம்!

# 24. பசு-பாம்பு!

"பசுமாட்டை தெய்வமா வணங்குற பழக்கம் நம்ம மக்களுக்கு இருக்கு. அதனால பசுமாட்ட வச்சு ஒரு கதை ரெடிபண்ணுங்கடா" என்றார் தேவர்.

இந்தியில் தேவர் தயாரித்த 'ஆத்தி மேரா சாத்தி' (யானை எனது நண்பன்) படத்தை முன்னுதாரணமாக வைத்துக் கொள்ளச் சொன்னார்.

ஒரு விலங்கு. ஒரு ஹீரோ. ஒரு ஹீரோயின். அந்த விலங்கை ஒருவருக்கு ரொம்பப் பிடிக்கும். இன்னொரு வருக்குப் பிடிக்காது. இந்த அடிப்படை கட்டமைப்பை வைத்து பல படங்களை தேவர் தயாரித்திருக்கிறார். அந்த பாணியில் மனைவி பிரமிளாவுக்கு பசுவை ரொம்பப் பிடிக்கும். கணவன் ஸ்ரீகாந்த்திற்கு பசுவைப் பிடிக்காது. இதன் விளைவு என்ன? என்கிற டிராவலில் நிறைய ஸீன்களைப் பிடித்து 'கோமாதா என் குலமாதா' கதையை தயார் செய்தோம். அடிப்படைக் கதை ஒரே மாதிரி இருந்தாலும் காட்சிகளில் புதுமையைச் சேர்ப்பார் தேவர்.

"இந்தப் படத்தோட க்ளைமாக்ஸ் இங்கிலீஷ் படம் மாதிரி இருக்கணும்" என்றார் தேவர்.

'பசுமாட்டை வச்சுக்கிட்டு என்னய்யா க்ளைமாக்ஸ் பண்றது?'னு நாங்கள் புலம்பிக்கொண்டிருந்தோம்.

பாதி படப்பிடிப்பு நடந்த நிலையில்... "ஓசூர்ல போய் க்ளைமாக்ஸ் எடுத்துட்டு மத்ததை அப்புறம் எடுத்துக்கலாம்" என்றார் தேவர்.

ஒட்டுமொத்த யூனிட்டுமாக சுமார் 150 பேர் ஓசூர் போய் சேர்ந்தோம். 300 ஏக்கர் பரப்பளவுள்ள புல்வெளி. அதில் உயரமான ஒரு மேடு. அதன் உச்சியில் கேமராவை வைக்கச் சொன்னார் தேவர். "நீங்கள்லாம் என் கூடவே நின்னுக்கங்கடா. வேற பக்கம் நின்னீங்கன்னா விபத்து ஏற்படலாம்" என தேவர் சொல்ல... பீதியுடன் நான், தூயவன், மா.ரா ஆகியோர் தேவருடன் நிற்கிறோம்.

தூரத்தில் எங்கேயோ வேட்டுச் சத்தம் கேட்டது. அடுத்த சில நிமிடங்களில் சுமார் ஆயிரம் மாடுகள் புழுதி கிளப்பியபடி பள்ளத்திலிருந்து மேட்டில் தலை தூக்கிப் பார்க்க... அது கண்கொள்ளாக்

காட்சியாக இருந்தது. அதே சமயம் பயம். இவ்வளவு மாடும் சேர்த்து மிதிச்சா என்னாகும்?

ஆனால் கேமரா இருக்கும் இடம் வந்ததும் அந்த மாடுகள் விலகி விலகி ஓடியது. தொடர்ந்து அந்த மாட்டுக் கூட்டம் வில்லன்களை விரட்டும் காட்சி எடுக்கப்பட்டது.

"என்னண்ணே... இவ்வளவு ரிஸ்க் எடுத்திருக்கீங்க?" என நாங்கள் கேட்டோம்.

"படம் பார்க்கிற ஆடியன்ஸ் சந்தோஷப்பட வேணாமா?" என திருப்பிக் கேட்டார் தேவர்.

எங்களுக்குத் தெரியாமலேயே ஓசூர் அரசு பால்பண்ணை மாடுகளை பயன்படுத்திக்கொள்ள அனுமதி வாங்கிய துடன்... வெடிபோட்டு மாடுகளை மிரள வைத்து பள்ளத்திலிருந்து மேட்டுக்கு ஏற்றியதும் ஷூட்டிங் முடிந்த பிறகுதான் எங்களுக்குத் தெரிந்தது.

படப்பிடிப்பு முடிந்த நிலையில் பிரமிளாவை வைத்து 'பேட்ச் ஒர்க்' எனப்படும் 'மேட்சிங் ஷாட்' எடுக்கவேண்டி வந்தது.



இதனால், தேவர் ஃபிலிம்ஸ் புரொடக்ஷன் மேனேஜர் கணேசன் பலமுறை பிரமிளாவுக்கு போன் போட்டும் பிரமிளா சரியான பதில் தரவில்லை. காரணம் இந்த சமயம் கே.பாலசந்தரின் ' அரங்கேற்றம்' படம் வெளியாகி பிரமிளாவை பரபரப்பான கதாநாயகியாக்கிவிட்டது. (தன் குடும்பத்தைக் காப்பாற்ற பாலியல் தொழிலாளியாக மாறும் பிராமணப் பெண்ணின் கதை அரங்கேற்றம்.)

"என்னப்பா சொல்லுது பிரமிளா? வீட்டுக்குப் போய் கேட்டு வா" என தேவர் அனுப்பி வைக்க... கணேசனும் போயிட்டு வந்தார்.

"நான் இப்போ ரொம்ப பிஸியான நடிகை. நேர்ல வந்து பேசலாம்ல. போன்லயே பேசிக்கிட்டிருக்கீங்களேனு அந்தம்மா சொல்றாங்க" என கணேசன் சொல்ல... உடனே பிரமிளாவுக்கு போன் போட்டார் தேவர்.

"போன் வச்சுக்கிறது எதுக்கு தெரியுமாம்மா? எல்லா விஷயத்துக்கும் நேர்ல அலைய வேணாம்னுதான் போன் வசதியை பயன்படுத்திக்கிறோம். இந்தப் படம் முக்கால்வாசி எடுத்திட்டேன். இருந்தாலும் இதைத் தூக்கிப் போட்டுட்டு நான் போன் பண்ணினா மதிக்கிற யாரையாவது வச்சுப் படம் எடுத்துக்கிறேன்" என சொல்லி போனை வைத்துவிட்டார் தேவர்.

"அரங்கேற்றம்' வெற்றி விழா கோவையில் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவை ஏற்பாடு செய்த விநியோகஸ்தர்கள் சிறப்பு விருந்தினராக தேவரையும் அழைத்தனர். விழா மேடையில் பிரமிளாவுக்கு பலத்த வரவேற்பு. 'அரங்கேற்றம்' படத்தில் வாயை உப்பலாக வைத்து காற்றை வெளியிட்டு ஒரு சிரிப்பு சிரிப்பார் பிரமிளா. இதில் ரசிகர்கள் கிறங்கிப் போனார்கள். அந்த மேனரிஸத்தை பிரமிளா மேடையிலும் செய்ய... ரசிகர்களிடம் பெரும் ஆரவாரம் ஏற்பட்டது. தேவரை பேச அழைத்தபோது படாரென அவரின் காலில் விழுந்தார் பிரமிளா.

"இனிமே அப்படியெல்லாம் பேசமாட்டேன்."

"நீ மட்டுமில்ல... யாரா இருந்தாலும் தயாரிப்பாளர்களை மதிக்கணும்மா. அதனாலதான் நான் அப்படி ஒரு முடிவெடுத்தேன். நீ என்னோட ஆபீசுக்கு வந்து என்கிட்ட மன்னிப்பு கேட்டிருக்கலாம். அதுவே போதுமானது. ஆனா இவ்வளவு மக்கள் முன்னாடி என் கால்ல விழுந்து இப்போ நீ உயர்ந்தவளா ஆயிட்ட" என தேவர் ஆசிர்வதித்தார்.

பிரமிளாவை வைத்து பேட்ச் ஒர்க் எடுக்கப்பட்டு படம் வெளியானது. பெரும் வெற்றி பெற்றது.

இங்கு மட்டுமல்ல... இந்திப்பட உலகிலும் தன் அதிரடி நடவடிக்கைகளால் பரபரப்பாக பேசப்பட்டவர் தேவர். அதை தேவரே எங்களிடம் சொன்னார்.

"யானையை வச்சு 'ஆத்தி மேரா சாத்தி' படத்தை எடுத்ததும் நம்ம தயாரிப்பாளர்களுக்குப் போட்டுக் காட்டினேன். 'தமிழ்லதான் மிருகங்களை வச்சு எடுக்குறார்னா... இந்தி ரசிகர்களையும் முட்டாள்கள்னு நினைச்சு யானையை வச்சு எடுத்திருக்காரு. இதோட தேவர் அழியப்போறாரு. ஹீரோ ராஜேஷ்கண்ணாவோட மார்க்கெட்டும் காலி' என விமர்சனம் பண்ணுனாங்க.

'என் முருகன் பாத்துக்குவான்'னு சொல்லி ரிலீஸ் பண்ணினேன். இந்திப் பட சரித்திரத்துலயே இல்லாதபடி இந்தப் படம் வசூல் கொட்டுச்சு" என குறிப்பிட்டார் தேவர்.

இந்தப் படத்தின் வெள்ளிவிழா டெல்லியில் நடந்த போது, தேவரைப் பார்ப்பதற்காகவே தியேட்டர் ஹவுஸ்ஃபுல் ஆனதாம். வழக்கம்போல சந்தனம் பூசிய வெறும் மேனியுடன் பட்டுத்துண்டை போட்டுக்கொண்டு மேடையேறிய தேவர், "லேடிஸ் அண்ட் ஜென்டில்மேன்... ஐ ஒன்டே ஸ்கூல். (நான் ஒருநாள் மட்டுமே பள்ளிக்கூடம் போனவன்) ஐ நோ இந்தி, ஐ நோ இங்கிலீஷ், வெரி ஸாரி. காட் பிளஸ்... முருகா' என பேச... ரசிகர்கள் ஆரவாரம் செய்திருக்கிறார்கள். இந்தி சினிமா வர்த்தகத்தில் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்திவிட்டார் தேவர்.

ஒரு பெரிய இந்தி ஹீரோவிடம் கால்ஷீட் கேட்டுப் போனார் தேவர். ஒரு தொகையை சம்பளமாகக் குறிப்பிட்டு 'மூன்று தவணைகளில் தந்துவிட வேண்டும்' என அந்த ஹீரோ கண்டிஷன் போட... அவர் கேட்டதைவிட கூடுதல் தொகையுடன் மொத்தமாக எடுத்துக் கொடுத்தார் தேவர். மிரண்டுபோனார் அந்த ஹீரோ.

குறிப்பிட்ட ஒரு இசையமைப்பாளர் பெயரைச் சொல்லி 'இவரைத்தான் நம்ம படத்துக்குப் போடணும்' என ஹீரோ சொல்லிவிட... அந்த மியூஸிக் டைரக்டரை சந்தித்தார் தேவர்.

'தேவர்ஜி... உங்களுக்கு நிச்சயம் பண்றேன். ஆனா ரெண்டு வருஷம் கழிச்சு வாங்க' என கால்ஷீட் டைரியைக் காண்பித்து 'இப்போதைக்கு முடியாது' எனச் சொல்லிவிட... ஹோட்டல் அறைக்குத் திரும்பினார் தேவர்.

'எந்தக் காரியத்தையும் சக்ஸஸ் பண்ணிடுவோம். மியூஸிக் டைரக்டரை ஒப்பந்தம் பண்ண முடியலியே' என கவலையுடன் ஹோட்டல் ரிஸப்ஷனில் தன் உதவியாளருடன் உட்கார்ந்திருந்தார் தேவர். அப்போது இரண்டு பேர் பேசிக்கொண்டே அவரைக் கடந்து போனார்கள்.

'நாளைக்கி அந்த மியூஸிக் டைரக்டரின் மூன்று வயது குழந்தைக்குப் பிறந்தநாள்' என்பதை அவர்கள் பேசியதன் மூலம் தெரிந்து உதவியாளர் தேவரிடம் சொல்ல...

உடனே காரை எடுக்கச்சொல்லி கடை வீதிக்குக் கிளம்பினார் தேவர். வரும்போது பட்டுப்பை ஒன்றை முடிபோட்டு கொண்டுவந்தார். அதை தன் தலைமாட்டிலேயே வைத்துத் தூங்கினார். விடிந்ததும் முருகனை வணங்கிவிட்டு அந்த மியூஸிக் டைரக்டர் வீட்டில் போய் இறங்கினார்.

'தேவரை நாம கூப்பிடவே இல்லை. அவரே வர்றாரே' என மியூஸிக் டைரக்டர் வரவேற்க... தேவர் அந்தக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு டேபிளின் மேல் நிறுத்தி... பட்டுப்பையைப் பிரித்து அதிலிருந்த நூறு பவுன் தங்கக் காசுகளை குழந்தை மீது கொட்டி சொர்ணாபிஷேகம் செய்தார்.

''தேவர்ஜி... என்கிட்ட நிறைய பணம் இருக்கு. ஆனா என் குழந்தைக்கு சொர்ணாபிஷேகம் பண்ணணும்னு எனக்குத் தோணல. நீங்க செஞ்சிட்டீங்களே...'' என கண்கலங்கிய மியூஸிக் டைரக்டர், ''ஜி... நாளைக்கே ஸ்டுடியோ வாங்க. ரெக்கார்டிங் ஆரம்பிச்சுடுறேன்'' எனச் சொல்லிவிட்டார். பத்தே நாட்களில் ஆறு பாடல்களுடன் சென்னை திரும்பினார் தேவர்.

''இதுதாண்டா இந்த தேவன் ஸ்டைல். நாளைக்கு நீங்க பெரிய தயாரிப்பாளரா ஆனாலும் இப்படி ஒரு வில்பவரோட இருக்கணும்டா'' என்றார் தேவர் எங்களிடம்.

'கோமாதா என் குலமாதா' வெற்றி பெற்றதும் ''பாம்பை வச்சு கதை எழுதுங்கப்பா'' எனச் சொல்லிவிட்டார் தேவர். மனைவிக்கு பாம்பு தெய்வம். கணவனுக்கோ பிடிக்காது. இந்த அடிப்படைக் கதை ரெடி. போட்டி போட்டுக்கொண்டு நாங்கள் ஸீன் பிடித்தோம். சிவகுமார்-ஜெய்சித்ரா நடிக்க 'வெள்ளிக்கிழமை விரதம்' படப்பிடிப்பு தொடங்கியது.

ஏவி.எம்.மில் படப்பிடிப்பு.

''ஏலேய்... எவனாவது இந்த பாம்ப கைல தூக்கு. பத்தாயிரம் ரூபா ரொக்கமா தர்றேன்'' என எங்களைச் சீண்டினார் தேவர். நாங்கள் மிரண்டு போக... தேவரோ அசால்ட்டாக பாம்பை கையில் தூக்கி விளையாடினார்.

''என்னண்ணே? உள்ளே ஷூட்டிங் நடக்குது. ஆனா பாம்ப வெளியில வச்சுக்கிட்டிருக்கீங்க?'' என நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கும்போது... 'அண்ணே... அந்தப் பாம்பு செத்துப்போச்சு' எனச் சொல்ல... தன்னிடமிருந்த பாம்பை கொடுத்து அனுப்பினார் தேவர். ஷூட்டிங் லைட்டின் வெப்பம் தாங்க முடியாம பாம்பு இறந்திருக்கிறது.

'வெள்ளிக்கிழமை விரதம்' படம் பார்ப்பவர்களுக்கு 'ஒரு பாம்பு பிரமாதமா நடிச்சிருக்கு' என்றுதான் தெரியும். ஆனால் ஸீனுக்கு ஒரு பாம்பு என சுமார் பத்து பாம்புகள் இறந்துவிட்டன.

'வெள்ளிக்கிழமை விரத'மும் வெற்றிப்படமானது. இந்தச் சமயம்...

**தேவரை திகைத்த வைத்த ஜோதிடர்.**

# 25. பறந்து வந்த மயில்!

இப்படி ஷூட்டிங் லைட்டின் வெப்பத்தால் பாம்புகள் இறந்த விஷயத்தை கேள்விப்பட்ட ஜோதிடர் ஒருவர் தேவரைச் சந்தித்தார்.

"அய்யா... நான் பணம் காசுக்கு ஆசப்பட்டு இதச் சொல்லல. கட்டாயம் நான் உங்ககிட்ட பணம் வாங்கமாட்டேன். நீங்க சிறந்த ஆன்மிகவாதி. தர்ம சிந்தனை உள்ளவர். நீங்க இன்னும் பல காலம் நல்லா இருக்கணும். அதனாலதான் சொல்றேன். நாகதோஷம் பொல்லாதது. அதுக்கு நீங்க பரிகாரம் செய்யணும். ராமேசுவரம் பக்கத்தில் தேவிபட்டிணத்தில் கடலுக்கு அடியில் நவகிரகங்கள் இருக்கு. தங்கத்துல பாம்பு உருவம் செஞ்சு அந்தக் கடலுக்குள்ள போட்டுட்டு வந்திடுங்க. தோஷம் கழிஞ்சிடும்" என ஜோதிடர் சொல்லிவிட்டுப் போனார்.

கொஞ்சமும் தாமதிக்காமல் அந்தப் பரிகாரத்தைச் செய்துவிட்டு வந்தார் தேவர்.

எப்போதும் திட்டமிட்டபடி காலையில் கதை விவாதம் தொடங்கிவிட வேண்டும். அதில் தாமதம் ஏற்பட்டாலோ... கதை இலாகாவில் இருப்பவர்கள் தாமதமாக வந்தாலோ தேவருக்கு பொல்லாத கோபம் வந்துவிடும்.

அன்றைக்கு... 'ராமுவைக் காப்பாற்றுங்கள்' என்ற தலைப்பில் 'குமுதம்' ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. பத்தாம் வகுப்பு மாணவனான ராமு சிந்தித்தாலோ, தீவிரமாகப் படித்தாலோ மயங்கி விழுந்துவிடுவான். மாடிப்படிகளில் ஏறினால் அவனது விரல் நகமெல்லாம் நீல நிறமாக மாறிவிடும். மிக அரிதான இருதய வியாதியால் பாதிக்கப்பட்ட அவனுக்கு அமெரிக்க தமிழ் அமைப்பு மூலம் இலவச சிகிச்சை தர ஏற்பாடு செய்யப்பட்டது. அவனை அமெரிக்கா அனுப்பும் செலவை இங்குள்ள சில டாக்டர்கள் ஏற்றுக்கொண்டனர். அமெரிக்காவில் சிகிச்சையின்போது தங்கியிருக்க பத்தாயிரம் ரூபாய் தேவை. அந்த ரூபாய்க்காக அவனைப் பற்றி செய்தி வெளியிட்டு, 'வாசகர்கள் ஒரு ரூபாய் வீதம் மணியார்டர் அனுப்பலாம்' என குமுதம் சொல்லியிருந்தது. செய்தியைப் படித்த எனக்குள் 'ராமுவுக்கு உதவ வேண்டும்' என்கிற துடிப்பு ஏற்பட்டது.

மைலாப்பூரில் ஏற்கனவே நான் குடியிருந்த காரணீஸ்வரர் கோயில் தெருவில் ராமுவின் வீடு இருந்தது. காரில் அவன் வீட்டுக்குப் போனேன்.

என்னைப் பொறுத்தவரை நூறு ரூபாய் எனக்குப் பெரிய தொகை. இருந்தாலும் 101 ரூபாயை அவன் கையில் கொடுத்துவிட்டு "ராமுவை என் கூட அனுப்பி வைங்க. தேவரிடம் சொல்லி உதவி வாங்கித் தருகிறேன்" என்றேன். பிராமண குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள், 'தேவர்... சினிமாக்காரர்' என தயங்க... நான் வற்புறுத்தியதால் சம்மதித்தனர். ராமுவை என்னுடன் காரில் கூட்டிக்கொண்டு வந்தேன்.

தேவரின் அலுவலகம் மாடியில் இருந்தது. பாதி படிக்கட்டு ஏறிய அவன் சோர்வானான். கை விரல் நகங்கள் நீலம் பூத்தது. படிக்கட்டிலேயே அவனை உட்கார வைத்துவிட்டு நான் மேலே போனேன்.

என்னைப் பார்த்ததும் தேவர் கேட்டார். "என்னடா ஞானம் லேட்டு? வேற கம்பெனிக்கு போயிட்டியா?"

"இல்லண்ணே."



"ஆமாடா... யாராவது கூப்பிட்டா பொறுக்கித் தின்ன போயிடுவீங்க."

நான் ராமுவைப் பற்றிச் சொன்னதும், "மெதுவா மேலே கூட்டிட்டு வா" என்றார்.

ராமுவை அவர் முன் நிறுத்தினேன்.

"என்னடா இது? பொல்லாத வியாதியா இருக்கு? பத்தாயிரம் தேவைப்படுதோ?" என இரக்கப்பட்ட தேவர் "மாரியப்பா... பத்தாயிரம் கேஷ் எடுத்திட்டு வா" என்றார்.

பணம் ராமுவின் கைக்கு வந்தது. "லேட் பண்ணாம போய் ட்ரீட்மெண்ட் எடுத்துட்டு வா, காட் பிளஸ் யூ" என்றார். ராமு அவரைக் கும்பிட்டான்.

மீண்டும் ராமுவை அழைத்துக்கொண்டு கீழே இறங்கி ஒரு டாக்ஸி பிடித்து அவனை அனுப்பிவிட்டு மேலே வந்தேன்.

"அயோக்கியப் பயலே. உன் பைல பணம் இருந்தா எடுத்து தர்மம் பண்ண வேண்டியதுதானேடா? யார் கஷ்டப்பட்டாலும் என்கிட்ட கூட்டிக்கிட்டு வர்றியே?" என தேவர் கோபப்பட... நான் தலை குனிந்து நின்றேன்.

சிறிது நேர சங்கடமான மௌனத்திற்குப் பிறகு தேவரே பேசினார்.

"அடேய்... இவனே! கதை டிஸ்கஷன் சமயம் அவனை கூட்டி வந்து நீயும் லேட்டா வந்துட்டியேங்கிற கோவந்தான்டா... தப்பா நினைக்காத. உன்னால உதவ முடியலேன்னாலும் யார்கிட்டயாவது வாங்கி குடுக்கணும்ங்கிற உன்னோட நல்ல எண்ணம் இருக்கே... அதுக்காகவே நீ நல்லா இருப்படா. சரி... சரி... கதையைப் பேசுவோம் வா" என்றார்.

முருகக் கடவுளின் பெருமையைச் சொல்லும் கதையை உருவாக்க வேண்டும் என தேவர் முடிவு செய்து சொன்னார். ஏற்கனவே தான் தயாரித்த 'துணைவன்' படத்தை முன்னுதாரணமாக வைத்துக்கொள்ளச் சொல்லி அப்போது நடந்த சில சம்பவங்களையும் சொன்னார் தேவர்.

சிவாஜி நடித்த 'பட்டிக்காடா பட்டணமா', 'எங்க ஊர் ராஜா' படங்களின் கதாசிரியர் பாலமுருகன் 'துணைவன்' கதையையும் எழுதினார்.

கோயிலுக்குச் செல்லும் கணவன், கோயிலுக்கே போகாத மனைவி. 'நம்ம குடும்பம் நல்லா இருக்கணும்னு நான் கோயிலுக்குப் போறேன். ஆனா நீ ஏன் வரமாட்டேங்குற?' என கணவன் ஆதங்கப்படுவான்.

"உங்களுக்கு முருகன் தெய்வம். எனக்கு புருஷனாகிய நீங்கதான் தெய்வம். புருஷனை தெய்வமா நினைக்கிறது தப்பா?" என மனைவி லாஜிக் பேசுவாள். பாலமுருகன் வைத்த இந்த லாஜிக்தான் 'துணைவன்' கதையின் உயிர்நாடி.

ஒரு கட்டத்தில் இந்த தம்பதியின் குழந்தை நோய்வாய்ப் படும். மருத்துவர்கள் கைவிட்ட நிலையில்... "உன் தெய்வம் நான் கூப்பிடுறேன், என்கூட என் தெய்வத்தைப் பார்க்க வா" என கணவன் அழைக்க... "குழந்தை நலமானால் சரி" என கணவனுடன் கோயிலுக்கு கிளம்புவாள் மனைவி.

மருதமலை முருகன் கோயிலில் படப்பிடிப்பு. குழந்தையை புல்தரையில் படுக்க வைத்துவிட்டு கணவனும் (ஏவி.எம்.ராஜன்) மனைவியும் (சௌகார் ஜானகி) முருகனை வேண்ட... அப்போது ஒரு நல்லபாம்பு படம் எடுத்தபடி குழந்தை மேல் படரும். உடனே இருவரும் 'முருகா' என அபயக் குரல் எழுப்ப... எங்கிருந்தோ ஒரு மயில் வந்து பாம்பைக் கவ்விக்கொண்டு போகும். இதுதான் காட்சி.

குழந்தை அருகே பாம்பை விட்டு பாம்பாட்டி மகுடி ஊத... பாம்பு படமெடுத்தது. அதை கவ்விச் செல்ல ஒன்றுக்கு நான்காக கொண்டு வந்திருந்த மயில்களை ஒவ்வொன்றாக பறக்கவிட... நான்கு மயில்களுமே பாம்பைக் கவ்வவில்லை. மீண்டும் மீண்டும் பறக்க விட்டதில் தளர்ந்துபோன மயில்கள் காட்டுக்குள் போய்விட்டன.

பொதுவாகவே பாம்பைக் கண்டால் மயிலுக்கு ஆகாது. கொத்திக் குதறிவிடும். ஆனால் நான்கு மயில்களுமே ஓட்டம் பிடித்தன.

தேவர் ரொம்பவே அப்செட் ஆகிவிட்டார். கோபம் வந்தால் தன் இஷ்ட தெய்வம் முருகனை கண்டபடி திட்டுவார் தேவர். கோயிலை நோக்கித் திரும்பிய தேவர் 'அடே... அயோக்யா... முருகா' என பலமாக அரற்ற...

'ம்ம்மோவ்' என மயில் அகவல் சத்தம் கேட்க... கேமரா ஓட... மகுடி ஊதியதால் பாம்பு படமெடுக்க... ஒரு விமானம் போல கோயில் கோபுரத்திலிருந்து பறந்து வந்த மயில்... பாம்பைத் தூக்கிக்கொண்டு போனது. கொண்டு சென்ற நான்கு மயில்களும் கை கொடுக்காத நிலையில்... கோயில் மயில் அதைச் செய்ததால் சிலிர்த்துப் போனார் தேவர்.

"அந்த அனுபவத்துக்குப் பின்னாடிதாண்டா தமிழ்நாட்ல இருக்க தியேட்டர்கள் பூராவும் தேவர் ஃபிலிம்ஸ் சார்பில் முருகன் படம் போட்டு

'நம்பினார் கெடுவதில்லை'ங்கிற வாசகத்தோட ஸ்லைடு போட்டோம்'' என்றார் தேவர்.

அந்த மாதிரி பவர்ஃபுல்லான பக்திக் கதையை தேவர் எதிர்பார்த்தார்.

'சட்'டென்று எனக்குள் திருநீலகண்டரின் வாழ்க்கை கதையாக ஓடியது.

''அண்ணே... ஒரு கதை சொல்லட்டுமா?''

''சொல்லு...''

திருநீலகண்ட நாயனார் பெரும் சிவபக்தர். அதோடு தன் மனைவியைத் தவிர பிற பெண்களை மனதாலும் தீண்டாதவர். ஒருநாள் கோயிலுக்குப் போய்விட்டு வீடு திரும்புகையில் பேய் மழை. ஒரு வீட்டு தாழ்வாரத்தில் ஒதுங்க... சாரல் அவரை நனைக்க... 'உள்ள வந்து உட்காருங்க. மழை விட்டதும் போலாம்' என அந்த வீட்டுப் பெண் சொல்ல... மழையும் துரத்துவதால் உள்ளே போய் அமர்கிறார். அது தாசி வீடு. இதைப் பார்த்த ஒரு பெண், நீலகண்டரின் மனைவியிடம் சொல்கிறாள்.

வீடு திரும்பிய நீலகண்டரிடம் ''நீ யோக்கியன் இல்லை. உன் பக்தி வேஷம். நீ வணங்கும் சிவனின் மேல் ஆணை. நீ என்னைத் தொடாதே'' என்கிறாள் மனைவி.

சிலநாளில் மனைவிக்கு உண்மை தெரிந்தாலும் சிவன் மீது செய்யப்பட்ட சத்தியம் என்பதால் மீற முடியவில்லை. 25-20 வயதில் உடல் ரீதியான தொடர்பை விட்டவர்கள் 70 வயதுவரை 'தொடாமலே' வாழ்கிறார்கள்.

ஒருநாள் ஒரு சாமியார் 'நான் காசி போய்விட்டு வரும்வரை இந்த திருவோடை பத்திரமாக வைத்திருங்கள். இந்த திருவோடு கேட்டதைக் கொடுக்கும் காமதேனு' எனவும் சொல்லிவிட்டுப் போகிறார். சிலநாளில் திரும்ப வந்து திருவோடை கேட்க... அதைக் காணவில்லை.

வைத்தீஸ்வரன் கோயில் முன்பு பஞ்சாயத்து கூட்டு கிறார் சாமியார். 'நாங்கள் அபகரிக்கவில்லை. அது மாயமாகிவிட்டது' என சத்தியம் செய்கிறார்கள் திருநீலகண்டர் தம்பதி.

''நீங்கள் இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி எழுந்து சத்தியம் செய்யுங்கள். நான் விட்டுவிடுகிறேன்' என சாமியார் சொல்ல... இருவரும் தொட்டுக்கொள்ள மறுக்க... சாமியார் பிடிவாதம் செய்ய... பஞ்சாயத்தாரும் 'சாமியார் சொல்ற மாதிரி கைப்பிடிங்க' எனச் சொல்ல... சிவன் மேல் பாரத்தைப் போட்டு

கைப்பிடித்து மூழ்குகிறார்கள். எழும்போது 25-20 வயது தம்பதியாக எழுகிறார்கள். இவர்களின் இளமையை மீட்டுத்தர சிவன் வைத்த 'செக்'தான் திருவோடு.

இந்தக் கதையை நான் சொன்னதும் உற்சாகமான தேவர், 'சிவனை முருகனா மாத்து' என்றார்.

சிவபக்தர் முருக பக்தனானான். திருவோடு 'தங்க வேல்' ஆனது. மாயமான மர்மம்... மாமியார் கேரக்டர் ஆனது.

நான் சொன்ன ஒரு ஸீன் எனக்கே பிடிக்காததால் அதை மாற்ற விரும்பினேன். தேவரோ, 'அந்த ஸீன் வேண்டும்' என்றார். வாக்குவாதமானது.

எனக்கு கதிகலங்கியது.

# 26. ஊருக்கு கிளம்பிய மகேந்திரன்!

சிவபக்தரான திருநீலகண்ட நாயனார் கதையை நான் சொல்ல... அதை தேவர் முருக பக்தர் கதையாக உல்டா பண்ணச் சொன்னாரல்லவா? அதன்படி செய்தபோது நான் சொன்ன ஒரு ஸீன் எனக்கே பிடிக்கவில்லை. "அதை மாற்ற வேண்டும்" என்றேன் நான்.

தேவரோ, "அந்த ஸீன் கண்டிப்பாக வேணும்" என்றார்.

இதனால் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது.

"நான்தான் ஸீன் சொன்னேன். அதை நானே நீக்குறேன்" என நான் சொன்னது தேவரை கோபப்படுத்தியது.

தேவர் ஃபிலிம்ஸில் கதையை ஒருவர் சொன்னாலும் பலபேர் சேர்ந்துதான் கதையை முழுமையாக்குவோம். இதனால் பலரின் பெயர்களை டைட்டிலில் போட முடியாது. அப்படியே போட்டாலும் பிற மொழி ரைட்ஸ் விற்கும்போது டைட்டிலில் இடம் பெற்றவர் களையெல்லாம் தேடிப்பிடித்து அனுமதி பெறவேண்டும். அதனால்தான் 'கதை தேவர் ஃபிலிம்ஸின் கதை இலாகா' என டைட்டில் போடுவார். கதைக்குரியவர்கள் தங்கள் பெயரை விட்டுக் கொடுப்பதால்தான் அவர்களுக்கு 'இரட்டைச் சம்பளம்' தருகிறார் தேவர். இதற்கு ஒப்புக்கொண்டு தேவரிடம் சேர்ந்த நான், 'இது நான் சொன்ன ஸீன்' என்ற வார்த்தை கோபமடைய வைத்தது. "இவ்வளவு ஆத்திரம் உனக்கு இருந்தா... நாளையிலிருந்து நீ கதை சொல்ல வேணாம்ப்பா" என்றார் தேவர்.

"தினம் ஒரு கதை சொல்லச் சொல்லிட்டு இப்போ வேணாம்கிறீங்களா? உங்க டேபிள்ல நீங்க கதை எழுதி உங்களுக்கு நீங்களே வித்துக்கணும். ஆனா நான் கதை எழுதி எந்த டேபிள்லயும் 24 மணி நேரத்துல வித்துட்டுப் பணத்தோட வந்திடுவேன்... பார்க்கிறீங்களா?" என ஆவேசமாக ஓங்கி டேபிள் மேல் அடித்துவிட்டு வெளியேறி மாடிப்படிகளில் 'தடதட'வென இறங்கினேன்.

"டேய்... அவனை விடாதீங்க... புடிங்கடா" என்கிற தேவரின் வார்த்தைகள் என் காதில் விழும்போது நான் கீழே இறங்கி ரோட்டில் நடக்க ஆரம்பித்தேன்.

என்னைவிட உயரமாக, தாட்டியாக இருந்த கதை இலாகாவின் விஜயசந்திரனும், தர்மராஜூம் ஓடிவந்து என்னைத் தூக்கினார்கள்.

"விடுங்கப்பா" என நான் மல்லுக்கட்டினேன். அவர்கள் என்னைத் தூக்கிக்கொண்டு நடந்தபடியே "அண்ணன் ரொம்ப கவலைப்படுறாரு" என்றனர்.

எனக்கு சங்கடமாகிவிட்டது. "சரிப்பா... இறக்கிவிடுங்க, வர்றேன்" என்றதும் இறக்கிவிட்டனர்.

மாடியேறி தேவர் முன் போய் நின்றேன்.

"இன்னைக்கி டிஸ்கஷன் கேன்ஸல். கலைஞானத்தைத் தவிர எல்லாரும் கிளம்புங்க" என தேவர் சொல்ல... எல்லோரும் என்னைப் பார்த்தபடியே வெளியேறினார்கள்.

ஆபீஸ்பாயிடம், "டேய்... அந்த கதவைச் சாத்துடா..." என தேவர் சொல்ல... அவனோ கதவை வெளிப்புறமாக சாத்திவிட்டு ஓட்டம் பிடித்தான்.

எனக்கு கதிகலங்கியது.

"டேய்... இவனே..."

இப்போதுதான் நான் தேவரின் முகம் பார்த்தேன்."நான் சொல்றத கவனி. என்னைய மாதிரி நீயும் கோவக்காரனா இருக்க. அதுதான் கவலையா இருக்கு. நான் கோவத்துல கெட்ட வார்த்தையால திட்டிட்டா ஐயாயிரம் குடுத்திடுறேன். ஆத்திரத்துல அடிச்சிட்டா பத்தாயிரம் குடுத்திடுறேன். 'அண்ணன் நம்மள திட்டமாட்டாரா? அடிக்கமாட்டாரா?'னு வலிய வந்து கோபப்படுத்துறானுங்க. நான் பணம் இருக்கிறவன். நான் திட்டினா பெருசா எடுத்துக்காம சிரிக்கிறானுங்க. நான் ஏழையா இருந்தா... நான் திட்டுற திட்டுக்கு சும்மா விடுவானுங்களா? வளர வேண்டிய நீ இப்படி இருந்தா, 'கலைஞானம் கோவக்காரன்'னு எவனுமே உன்னையக் கூப்பிடமாட்டான். தொழில் பாதிக்கும்ப்பா. உன் தகப்பன் சொன்ன வார்த்தையா எடுத்துக்கடா. கோபம் சத்ருடா..." என்றார் தேவர்.

அவரின் வார்த்தைகள் எனக்குள் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

"நீயும் கிளம்புடா... காலையில வந்திடு" என்றார். தலையாட்டிவிட்டு வெளியே வந்தேன்.

மறுநாள் தேவர் ஃபிலிம்ஸுக்கு கார் ஏறும்போது "இன்னிக்கு நாம எக்காரணம் கொண்டும் கோபப்படக்கூடாது' என நூறுமுறை சொல்லிக்கொண்டேன். அந்தப் பழக்கம் இன்றுவரை என்னிடம் தொடர்கிறது. நான் கோபப்படுவதேயில்லை. சிரித்தபடி இருப்பது எனது அடையாளமாகிவிட்டது.

இந்த நிமிஷமும் சொல்கிறேன்... தேவருக்கு நன்றி!

இப்படி விவாதத்துடன் தொடங்கிய அந்தக் கதை ஏவி.எம். ராஜன்-ஜெயா நடிக்க 'திருவருள்' படமாக வந்தது.

தேவர் பாஷையில் சொல்வதாக இருந்தால் கதாசிரியர்கள், கதைக்காரர்கள். தனது கதை இலாகா கதைக்காரர்களுக்கு கார் அனுப்பி அழைத்து வரச் செய்வார்.

அன்றும் அப்படித்தான். கம்பெனி காரில் நானும் தூயவனும் வந்துகொண்டிருந்தோம். தேனாம்பேட்டை யில் கார் வந்தபோது ஏதோ யோசனையாக மகேந்திரன் நின்றுகொண்டிருந்தார். மகேந்திரனை எனக்கு முன்பே தெரியும். 'துக்ளக்' பத்திரிகையில் இந்தச் சமயம் விமர்சனக் குழுவில் இடம்பெற்றிருந்தார் மகேந்திரன்.

என்னைப் பார்த்ததும் மகேந்திரன் என் கையைப் பிடித்து நலம் விசாரித்தார்.

"என்ன மகேந்திரன், கம்பெனிக்கு கூட்டிப்போக கார் எதுவும் வருதா?" என கேட்டேன்.

"இல்லண்ணே."

"பின்ன?"

"டாக்ஸி பிடிக்கணும். அதான் எங்க பிடிக்கலாம்னு யோசனை பண்ணிக்கிட்டு நிக்கிறேன்."

"எதுக்கு டாக்ஸி?"

"ஃபேமிலியோடு ஊர்ல போய் செட்டில் ஆயிடலாம்னு... சாமானெல்லாம் பேக் பண்ணிட்டேன்."

மகேந்திரன் சொன்னதும் பதறிப்போனேன் நான். எனக்கும் கூட இதே அனுபவம் உண்டுதானே! அதிலும் ஒரு எழுத்தாளனை சக எழுத்தாளன், சொந்தக்காரனாகப் பார்ப்பான். அதனால் பரிவுடன் கேட்டேன்... "ஏன் இந்த முடிவு?"



"இனியும் சினிமாவை நம்பிப் பிரயோஜனமில்லை. அதான் ஊருக்கே போறேன்" என்றார்.

எனக்குள் மின்னலாய் ஒரு யோசனை தோன்றியது. "நான் ஒரு யோசனை சொல்லட்டுமா மகேந்திரன்?" "என்னண்ணே?"

"குடும்பம் நடத்த மாசம் என்ன செலவாகுமோ அதை தேவர் அண்ணன்கிட்ட சொல்லி வாங்கித் தர்றேன். அவர் கம்பெனியில வேலை பார்த்துக்கிட்டே உன்னோட முயற்சிய தொடர்ந்து செய். இப்பவே போலாம்ப்பா. வண்டியில ஏறு" என்றேன்.

மகேந்திரன் எங்களுடன் காரில் ஏறிக்கொண்டார்.

தேவர் ஃபிலிம்ஸ் ரூல்ஸ்படி கதைக்காரர்கள் காரில் அவர்கள் மட்டும்தான் ஏறணும். மற்றவர் களை ஏற்றக்கூடாது. இருந்தும் மகேந்திரனை ஏற்றிக் கொண்டேன்.

தேவருக்கு 'கதை' என்றால் போதும். சோறு, தண்ணி வேண்டாம். ஆயிரம் கதைக்காரர்கள் வந்தாலும் வேலைக்கு வைத்துக்கொள்வார். இருப்பினும் அவரிடம் முன்கூட்டியே கேட்கணுமே.

அலுவலக வாசலில் கார் நின்றதும் ஓட்ட ஓட்டமாய் மேலே போய்... "அண்ணே ஒரு நல்ல ரைட்டர கொண்டு வந்திருக்கேன்" என்றேன்.

"யாருப்பா?"

"மகேந்திரன்!"

அதற்குள் மகேந்திரன் மேலே வந்து தேவரைப் பார்த்துக் கும்பிட...

"வாப்பா... உட்காருப்பா..." என்றார் தேவர்.

"மகேந்திரன் கதையை வச்சு ஆர்.கே.பாலன் ரெண்டு படம் பண்ணீருந்தார்..." என நான் சொன்னதும், புரிந்துகொண்ட தேவர், "இப்ப என்ன பண்ற?" எனக் கேட்க...

"சும்மாதான் இருக்கேன்" என்றார் மகேந்திரன்.

"அண்ணே... மாசச் சம்பளம் குடுத்து மகேந்திரனை வச்சுக்கலாம்" என்றேன் நான்.

"தாராளமா" என்ற தேவர்...

"உனக்கு மாசம் எவ்வளவுப்பா வேணும்?" என்றார்.

"ஆயிரம்"

"சரிப்பா... டெய்லி ஏதாவது கதை சொல்லு. ஸீன் சொல்லு" என்றார் தேவர்.

தேவருக்கு கதை விஷயத்தில் ரொம்பவே உதவியாக இருந்தார் மகேந்திரன்.

ஒருநாள் கதை விவாதம் நடந்துகொண்டிருந்தபோது சிவாஜி ஃபிலிம்ஸிலிருந்து தேவர் ஃபிலிம்ஸுக்கு போன் வந்தது.

"மகேந்திரன் இருக்காரா?"

"என்ன விஷயம்?"

"செந்தாமரைக்கு மகேந்திரன் எழுதின நாடக விஷயமா பேசணும்?"

புரொடக்ஷன் மேனேஜர் வந்து விஷயத்தைச் சொல்ல...

மகேந்திரன் தயக்கமும், யோசனையுமாக இருந்தார்.

"டேய் இவனே... பெரிய இடத்துல இருந்து அழைப்பு வந்திருக்கு. நல்லபடியா பயன்படுத்திக்க" என மகேந்திரனை ஆசிர்வதித்து தன் காரிலேயே அனுப்பி வைத்தார் தேவர்.

நடிகர் செந்தாமரைக்காக 'தங்கப்பதக்கம்' என்கிற நாடகத்தை எழுதியிருந்தார் மகேந்திரன். ஒருசமயம் அந்த நாடக விழாவிற்குப் போன நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு அந்த நாடகம் ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. அந்தக் கதை உரிமையை சிவாஜி வாங்கிவிட்டார். அதற்காகத்தான் மகேந்திரனை அழைத்த சிவாஜி, 'நீ என்கூட இருந்து எனக்கு ஏத்த மாதிரி எழுதிக் குடு' எனச் சொல்லியிருக்கிறார்.

மறுநாள் தேவரிடம் வந்து விஷயத்தைச் சொல்லி ஆசிர்வாதம் வாங்கிய மகேந்திரன், "உங்க கம்பெனிக்கு வந்த அதிர்ஷ்டம்தாண்ணே" என உருக... 'அது முருகன் செயல்டா' என ஆசிர்வதித்து அனுப்பினார் தேவர்.



மகேந்திரன் எழுதி சிவாஜி நடித்த 'தங்கப்பதக்கம்' மேடை நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றது. பிறகு குறுகிய கால தயாரிப்பாக 'தங்கப்பதக்கம்' படமானது. அதுவும் உச்சகட்ட வெற்றி.

இதனால் கதாசிரியர் மகேந்திரன் புகழ் பரவியது. தயாரிப்பாளர்கள் மகேந்திரனை முற்றுகையிட்டனர்.

இதையடுத்து உமாசந்திரன் எழுதிய கதையை வாங்கி 'முள்ளும் மலரும்' படத்தை ரஜினியை வைத்து இயக்கினார் மகேந்திரன். (இந்த இடத்தில் நிறைய சுவாரஸ்யங்கள் உண்டு. அதை பிறகு சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.)

அடுத்ததாக 'உதிரிப்பூக்கள்' படத்தை தொடங்க ஏற்பாடு செய்த மகேந்திரன் எனது உதவியை நாடி வந்தார்.

'திரைக்கதையை டெவலப் செய்ய உதவவேண்டும்' என்றார்.

அப்போது ஏற்பட்ட நெகிழ வைத்த அனுபவங்கள்...

# 27. மனதை மாற்றிய மனைவி!

'உதிரிப்பூக்கள்' படம் எடுக்க முடிவு செய்த மகேந்திரன் 'திரைக்கதையை டெவலப் செய்ய உதவுமாறு' என்னிடம் கேட்டார். என்னால் முடிந்த அளவு திரைக்கதையில் உதவி செய்து... படப்பிடிப்பு தொடங்கும்வரை அவருடன் இருந்தேன்.

நான் சொன்ன ஸீன்களில் குறிப்பிட்ட ஒரு ஸீனை தன் மனைவி மற்றும் நண்பர்களிடம் சொல்லி என்னைப் பாராட்டினார் மகேந்திரன்.

கதைப்படி அஸ்வினிக்கு ஆணும், பெண்ணுமாய் இரு குழந்தைகள். அஸ்வினியும் நோயாளியாக இருப்பார். குடும்பப் பிரச்சினை காரணமாக மூத்தவனுக்கு 'பிறந்த மொட்டை' போடாமலே தள்ளிப்போய்க்கொண்டிருக்கும்.

"அம்மா... பையனுக்கு வயசாகிக்கிட்டே போகுது. பிறந்த மொட்டை எடுக்காமலேயே இருக்கே?" என அஸ்வினியிடம் சவரத் தொழிலாளி கேட்பார்.

"அதுக்கும் ஒரு நேரம் வரணும்ப்பா" என்பார் அஸ்வினி.

மறுபடி ஒருநாள் அதேபோல் கேட்பார் சவரத் தொழிலாளி.

' நான்தான் சொன்னேனே... நேரம் வரட்டும்ப்பா' என்பார்.

மறுநாள் அஸ்வினி இறந்துவிடுவார். தாய் இறந்ததால் மகனுக்கு மொட்டை போட... அவன் தலையில் கத்தியை வைக்கும்போது, 'அதுக்கும் ஒரு நேரம் வரணும்னு சொன்னியேம்மா. இந்த நேரத்தத்தான் சொன்னியாம்மா' என சவரத் தொழிலாளி அழுவார்.

இப்படி சில ஸீன்களை அந்தக் கதைக்குக் கொடுத்தேன்.

'உதிரிப்பூக்கள்' படம் வெளியாகி மகேந்திரனுக்கு பெரும் புகழ் கிடைத்தது. வெற்றியின் விளிம்பு தொட்ட மகேந்திரனுக்கு சில படங்கள் சறுக்கலைத் தந்தன. மகேந்திரன் ரொம்பவே அப்செட் ஆனார்.

ஒருநாள்...

நான் படப்பிடிப்பு ஒன்றில் இருந்தபோது... 'நாகேஷின் வீட்டுக்கு எதிரே இருக்கும் மருத்துவமனையில் மகேந்திரனை சேர்த்திருக்கிறார்கள்' என

என் காதுக்கு தகவல் எட்டியது. போட்டது போட்டபடி கிடக்க... மருத்துவமனைக்கு ஓடினேன்.

மயக்க நிலையில் பெட்டில் மகேந்திரன் படுத்திருக்க... டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துச் சீட்டைக் கையில் வைத்துக்கொண்டு... மருந்து வாங்க பணமில்லாமல் மகேந்திரனின் அருகே நின்றிருந்தார் அவரின் மனைவி.

அந்த சீட்டை வாங்கிக்கொண்டு போய் மருந்துகளை வாங்கி வந்து அந்தத் தங்கச்சி கையில் கொடுத்தேன். இதை மறக்காமல் இப்போதும் மகேந்திரனின் குடும்பம் என்னை நன்றியுடன் உபசரிப்பார்கள்.

இதோ... இளையராஜாவுடன் இணைந்து மகேந்திரன் ஒரு படம் பண்ணப் போவதாக செய்திகள் வருகிறது. மீண்டும் மகேந்திரன் நல்லா வருவார். அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. எனது வாழ்த்துக்கள்.

ஊருக்கே திரும்பிப் போகவிருந்த மகேந்திரனை தேவரிடம் அழைத்துச் சென்று மகேந்திரனின் வாழ்க்கையில் திருப்பம் உண்டாக்க நானும் காரணம் என்பதில் இப்போதும் மகிழ்கிறேன் நான்.

மீண்டும்... தேவருடனான அனுபவத்தைப் பகிர்கிறேன்.

தேவரின் பங்குதாரர் பொன்னுச்சாமித் தேவர், கோயில் விஷயமாக ஒரு



ஒருநாள்...

தேவரின் பங்குதாரர் பொன்னுச்சாமித் தேவர், கோயில் விஷயமாக ஒரு பெரிய செலவு தொகையை வாங்கிக்கொண்டு போனார்.

"என்னண்ணே விஷயம்?" என கேட்டோம்.

"திருச்செந்தூர் முருகன் கோயில் சுற்றுப்பிரகாரம் ஒரு கிலோமீட்டருக்கு மேல இருக்கும். கல்லும் பாறையுமா இருக்கும் அந்தப் பிரகாரத்தைச் சுத்தி பெண்களும், குழந்தைகளும் வெயில் சூடு தாங்காம தவிக்கிறதைப் பார்த்தேன். "முருகா... உன் கோயிலுக்கு நான் வெயில்படாத சுற்றுப்பிரகாரம் கட்டித் தர்றேன்னு வேண்டிக்கிட்டேன். அந்த வேல முடியாம இழுக்குது" என்றார் தேவர்.

காரணம்... பணமுடை. எதனால் பணமுடை? இந்தியில் அமிதாப்பச்சனை வைத்து 'தோ அவர் தோ பாஞ்ச்' படத்தை எடுத்துவந்தார் தேவர். திட்டமிட்டதை விட பட்ஜெட் எகிறியது. இதனால் கடனுக்கு மேல் கடன். அதற்கு வட்டிக்கு மேல் வட்டி.. என சோதனையான சோகம் தேவருக்கு. வட்டிக்குப் பணம் வாங்கி கோயில் வேலைக்காக பொன்னுச்சாமி தேவரிடம் பணம் கொடுத்து அனுப்பினார். அந்த மனவாட்டத்துடன் வீட்டுக்குப் போனார் தேவர்.

அங்கே தேவருக்கும் அவர் மனைவிக்கும் இடையே நடந்த உரையாடல் இருக்கிறதே... அது எல்லோர் வாழ்க்கைக்குமான பாடம் அது. தேவரே என்னிடம் சொன்ன விஷயம் அது.

"என்னங்க ஒரு மாதிரியா இருக்கீங்க?"

"அது ஒண்ணுமில்ல மாரிமுத்து. இந்திப்பட வேலையும், கோயில் பிரகார வேலையும் முடியல. கடன், வட்டிக்கு மேல வட்டி... அதான். அதனால என்ன? முருகன் இருக்கான், பாத்துக்குவான்."

"கையில பணம், பையில பணம் இருந்தா கோயில் கட்டலாம். வட்டிக்கு வாங்கி செய்யணுமா?"

"ராம பக்தர் ராமதாஸ் ஆந்திராவில் ராமருக்கு கோயில் கட்டினார். சிவபக்தர் மாணிக்கவாசகர் சிவனுக்கு கோயில் கட்டினார். நான் முருகனுக்கு கோயில் கட்டுறது தப்பா?"

"அவங்கள்லாம் மன்னரோட, அரசாங்கத்தோட கஜானா பணத்திலிருந்து கட்டினாங்க. ஆனா நீங்க வட்டிக்கு வாங்கி கட்டுறீங்களே" என தேவரின் மனைவி மாரிமுத்து கேட்க... திகைத்துப் போனார் தேவர்.

பாண்டிய மன்னர் தனது முதல்மந்திரியான மாணிக்க வாசகரிடம் பெரும்தொகை கொடுத்து குதிரைப் படைக்காக வெளிநாட்டிலிருந்து குதிரைகள் வாங்கி வர உத்தரவிட்டார். சிவன்மேல் பற்றும், பித்தும்

கொண்ட மாணிக்கவாசகர், குதிரைகளை வாங்காமல் புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயிலில் சிவனுக்கு கோயில் கட்டிவிட்டார். இதற்காக தண்டனையும் பெற்றார்.

இதேபோல் ஆந்திராவில் வரி வசூலிப்பாளராக இருந்த ராமதாஸ்... வசூல் பணத்தை கஜானாவில் சேர்க்காமல் ராமருக்கு கோயில் கட்டி தண்டனை பெற்றார்.

இதைத்தான் குறிப்பிட்டுச் சொன்ன தேவரின் மனைவி, "கோயிலுக்குச் செய்றீங்க. தான தர்மம் பண்றீங்க. பலபேருக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறீங்க. நல்லதுதான். சந்தோஷம்தான். வீட்டுக்குனு சேமிப்பு வேண்டாமா? ஆத்திர அவசரத்துக்கு நாங்க என்ன பண்ண முடியும்?" என கேட்க... தேவருக்குள் மனமாற்றம்.

அந்தம்மாவின் மனசு நோகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயமான சூழல் தேவருக்கு இருந்தது.

"சரி, மாரிமுத்து. இன்னும் ரெண்டே மாசத்துல அஞ்சு லட்சமோ... பத்து லட்சமோ உன் பேர்ல டெபாசிட் பண்ணிடுறேன்."

"அது போதும்ங்க எனக்கு."

மறுநாள்... ஆபீஸில் எங்க எல்லாரையும் வைத்து தேவர் சொன்னார். "டேய்... கதைக்காரனுங்களா! என் மனைவி கேள்வியில நியாயம் இருக்கு. என் மனைவி பேர்ல பணம் போடுறதுன்னு உறுதி குடுத்திட்டேன்."

"ஆமாங்கண்ணே... நாங்களும் மனசில அதைத்தான் நெனைச்சோம். அம்மா பேர்ல பணம் போடுங்கண்ணே" என கோரஸாகச் சொன்னோம்.

"போட்டி போட்டுக்கிட்டு ஸீன் புடுச்சு நல்ல கதையை ரெடி பண்ணுங்கடா. ஒங்களுக்கெல்லாம் டபுள் பேமண்ட் தர்றேன். இந்தக் கதைய வச்சுப் படம் எடுத்து... அந்த லாபத்துலதான் என் மனைவிக்கு பணம் போடப்போறேன்.

"என்ன கதைண்ணே பண்ணணும்?"

"முருகன் கதைதான்" என்றார் தேவர்.

பக்தி கதை, விலங்குகள் கதை என்றாலே தேவரின் மருமகனும், டைரக்டருமான தியாகராஜன் சலிப்பாகிவிடுவார். "எப்படி, எப்படியோ படங்கள் வந்துக்கிட்டிருக்கு. நமக்கு இந்த மாதிரி கதைகளை விட்டா

வேற கதையே இல்லியா?" என எங்களிடம் முறைப்பார். ஆனால் தன் மாமா தேவரிடம் நிமிர்ந்து கூட பேசமாட்டார். அவ்வளவு மரியாதை.

தேவர் விருப்பப்படியே முருகன் கதையை தயார் செய்ய ஆயத்தமானோம்.

கேரள மாநிலம் காலடி கிராமம். குழந்தையில்லா ஒரு தம்பதி. பிள்ளை வரம் வேண்டி திருச்சூர் சிவன் கோயிலிலேயே தங்குகிறார்கள். ஒருநாள் கனவில் வந்த சிவன்... "உங்களுக்கான குழந்தை பாக்கியம் தருவதில் ஒரு சங்கடம் இருக்கிறது. நூறு வயசு ஆயுளுடன் வாழும் மக்கு குழந்தை அல்லது அற்ப ஆயுளில் மடியும் அதிபுத்திசாலிக் குழந்தை... இதில் எது வேண்டும்' என நீங்களே முடிவு செய்யுங்கள்" எனச் சொல்ல... ஒரே கனவு கண்ட தம்பதி இதுபற்றி விவாதித்து, 'புத்திசாலி குழந்தை வேண்டும்' என சிவனிடம் முறையிட்டார்கள். அதன்படி அற்பு ஆயுளில் பிறந்தவர்தான் அதிபுத்திசாலியான ஆதிசங்கரர்.

இந்தக் கதையை நான் சொன்னதும்... "இதையே மாத்தி எடுப்போம்" என்றார் தேவர்.

அதன்படி முத்துராமன்-கே.ஆர்.விஜயாவை ஒப்பந்தம் செய்து 'முருகன் அடிமை' படம் தொடங்கப்பட்டது. தன் மனைவி பெயரில் பணம் போட வேண்டும் என்பதால் 'சி.எஃப். டிரஸ்ட்' என்ற நிறுவனம் பெயரில் 'முருகன் அடிமை' படத்தை தயாரித்தார் தேவர். (சின்னப்பா ஃபேமிலி ட்ரெஸ்ட்)

அழுதார் தேவர்.

# 28. சிவகுமாரின் நாணயம்!

ஆதிசங்கரர் பிறந்த நிகழ்வையே 'முருகன் அடிமை' கதையாக மாற்றினோம்.

கதைப்படி குழந்தை இல்லா தம்பதி முத்துராமன்-கே.ஆர்.விஜயா பிள்ளை பாக்கியம் வேண்டி முருகன் கோயிலில் தங்குவார்கள். அப்போது கே.ஆர்.விஜயா கனவில் முருகன் வந்து ஆயுள் நூறு வாழும் மக்கு வேணுமா? அற்ப ஆயுள் புத்திசாலி வேணுமா?' என கேட்க... பதறி எழுவார் கே.ஆர்.விஜயா. கோயிலின் ஓரத்தில் 90 வயது தாண்டிய ஒரு கிழவி பரிதாபமாக வாயில் எச்சில் ஒழுகியபடி மனநிலை சரியில்லாத மாதிரி உட்கார்ந்திருப்பாள். அதைப் பார்த்துவிட்டு "அதிக ஆயுளில் இப்படி ஒரு குழந்தை வேண்டாம். அதற்காக அற்ப ஆயுளில் ஒரு பிள்ளையை எப்படிக் கேட்க முடியும்?" என முத்துராமனிடம் சொல்லிப் புலம்புவார்.

"அம்மா... தாயே... தர்மம் போடுனு கேட்க மட்டும்தான் பிச்சைக்காரனுக்கு உரிமை இருக்கு. பால் சோறா? பழைய சோறா?ங்கிறது தானம் போடுறவ மனசைப் பொறுத்தது. முருகனிடம் நாம பிச்சை கேட்டு வந்திருக்கோம். அவன் குடுக்கிறதை குடுக்கட்டும். நிம்மதியா தூங்கு" என்பார் முத்துராமன்.

இந்தக் காட்சியை உருக்கமான வசனங்களுடன் நான் சொல்லச் சொல்ல... தேவர் உணர்ச்சிமயமாகி அழுதுவிட்டார்.

கதைப்படி ஐந்தாவது பிறந்த நாளில் குழந்தையின் உயிர் போகும். முதல்நாள் முத்துராமனும் கே.ஆர்.விஜயாவும் கவலையுடன் இருப்பார்கள். தனது மரணத்தைத் தெரிந்து கொண்ட குழந்தை வீட்டை விட்டு வெளியேறுவான்.

இதுவரை கதை ரெடி. க்ளைமாக்ஸை எப்படி எழுதுவது? என்கிற தடுமாற்றம் ஏற்பட்டது. அப்போது ஒரு புராணக் கதை எனக்கு கை கொடுத்தது.

மார்க்கண்டேயனுக்கு வயது "என்றும் 16' என்பார்கள். ஏன் தெரியுமா?

16 வயது முடிந்ததும் மார்க்கண்டேயனுக்கு மரணம் என்பது விதி. அதனால் ஆயுள் முடியும் நாளில் எமன் துரத்துவான். மார்க்கண்டேயன் கோயிலுக்குள் ஓடி சிவலிங்கத்தைக் கட்டிக்கொள்வான். எமன் வீசும் பாசக்கயிறின் சுருக்கு லிங்கத்தின் கழுத்தில் மாட்டும். உடனே சிவன் தோன்றி எமனை எட்டி உதைக்க...

"கடமை தவறாதே என எனக்கு உபதேசித்த நீயே என் கடமையைச் செய்யவிடாமல் உதைக்கிறாயே?" என சிவனிடம் முறையிடுவார் எமதர்மராஜா. அப்போது சக்தி தோன்றி, "தன் உண்மையான பக்தனைக் காப்பாற்ற ஐயன் உன்னை காலால் உதைத்தார். ஆயினும் கடமை தவறாத உன்னை கௌரவிக்கும் விதமாக இச் சிவஸ்தலத்தில் உன்னை வணங்கிய பிறகே ஈசனை வணங்குவார்கள்" என அருள்பாலித்தார். அதேபோல் 'என்றும் 16' மார்க்கண்டேயனின் சிவபக்தியை கௌரவிக்கும் விதமாக... இச்சம்பவம் நிகழ்ந்த திருக்கடையூர் ஆலயத்தில் வலதுபுறம் மார்க்கண்டேயன் சன்னதியும், இடதுபுறம் எமன் சன்னதியும், நடுவில் சிவன் சன்னதியும் இன்றும் இருக்கிறது. விதியை மீறி ஆயுள் நீட்டிப்பு நடந்ததால்தான் 60-ஆம் கல்யாணங்கள் திருக்கடையூரில் அதிகம் செய்துகொள்கிறார்கள் மக்கள்.



இந்தப் புராணத்தைத் தழுவி... வீட்டை விட்டு வெளியேறும் சிறுவனை எருமை துரத்த... அவன் கோயிலுக்குள் ஓடி முருகன் சிலையை கட்டிப்பிடிக்க... முருகன் அவனின் ஆயுளைக் காப்பாற்றுவது போல் க்ளைமாக்ஸை உருவாக்கினோம்.

பக்தியில் சிறந்த படமாக 'முருகன் அடிமை' போற்றப்பட்டாலும் பெரிய வெற்றிப்படமாக அமைய வில்லை. சுமார் ரகமாக அமைந்தது. இருப்பினும் இதன் லாபத்தில் தன் மனைவி மாரிமுத்து பெயரில் பணம் டெபாசிட் செய்தார் தேவர்.

லாபம் எப்படி வந்தது?

தன் குடும்ப நிதிக்காக தேவர் படம் எடுப்பது தெரிந்த விநியோகஸ்தர்கள் கூடுதல் விலை கொடுத்து ஏரியா விநியோகம் வாங்கினார்கள். ஆனால் அந்தக் கூடுதல் விலை வசூலில் 'கவர்' ஆகவில்லை. இது தேவருக்கு உறுத்தலாக இருந்தது.

"தன்னை வச்சுப் படம் எடுக்கிற தயாரிப்பாளர்கள் நஷ்டப்படக்கூடாதுன்னு நினைக்கிறவன்டா சிவகுமார். ஒரு நடிகர் இவ்வளவு நேர்மையா இருக்கும்போது... ஒரு தயாரிப்பாளரான நான் என்னோட விநியோகஸ்தர்கள் பாதிக்கக்கூடாதுன்னு எனக்கு அக்கறை இருக்கும்ல. அதனால் அடுத்து எடுக்கப்போற படத்தை சலுகை விலையில் விநியோகஸ்தர்களுக்கு தரப்போறேன்" என்றார்.

சிவகுமாருக்கும், தேவருக்குமான பாசப்பிணைப்பையும், நேர்மையான தேவரையே தனது நாணயத்தால் வியக்க வைத்த சிவகுமாரின் பண்பையும் நான் அறிவேன். இருப்பினும் கதை இலாகாவிற்கு புதிதாய் வந்தவர்கள் அதுபற்றிக் கேட்க... தேவர் அதை விவரித்தார்.

'வெள்ளிக்கிழமை விரதம்' படத்திற்காக சிவகுமாரை ஒப்பந்தம் செய்தார் தேவர். இதையடுத்து தேவரின் அலுவலகத்திற்கு வந்தார் சிவகுமார்.

"சிவா! உன் படங்களையெல்லாம் பார்த்தேம்ப்பா. எந்த கேரக்டர் குடுத்தாலும் கரெக்ட்டா பண்றப்பா. அதனாலதான் என் படத்துக்கு உன்னை புக் பண்ணீருக்கேன். அது மட்டும் காரணமில்ல. இன்னொரு நல்ல விஷயம்... உன்னைப் பத்திக் கேள்விப்பட்டேன். ஏழை புரொடியூஸரோ, பணக்கார புரொடியூஸரோ அவர்களின் படத்தில் நடிக்க ஒப்புக்கிட்டா, அவங்க படம் எடுக்கலேன்னாலும் அவங்களுக்கு குடுத்த

கால்ஷீட் தேதிகளை வேற யாருக்கும் தரமாட்டியாமே?'' என தேவர் கேட்க...

''அண்ணே... ஒரு படம் எடுத்து முடிக்க தயாரிப்பாளருக்கு எம்புட்டு பிரச்சினை இருக்கும்னு தெரியும். ஃபைனான்ஸ் பண்றவங்க ஏதோ காரணத்தால் கைவிட்டுட்டா... தயாரிப்பாளர்கள் படாதபாடுபட்டுப் போவாங்க. இந்த நேரத்தில் 'பணம் அதிகம் தர்றேன், அவங்களுக்கு குடுத்த கால்ஷீட்டை எங்களுக்குக் குடுங்க'னு கேட்பாங்க. காசுக்கு ஆசைப்பட்டு அதைச் செஞ்சா நல்லாருக்குமாண்ணே? திடீர்னு பணம் கிடைச்சு மகிழ்ச்சியோட என் தயாரிப்பாளர் வரும்போது... அவருக்கு குடுத்த தேதிய வேறொருத்தருக்கு குடுத்தா அவங்க மனசு சங்கடப்படுமே. அதான்... நான் குடுத்த தேதிகளில் அவங்க படம் எடுக்கலேன்னாலும் வீட்டில் சும்மா இருந்திடுவேன்'' என சிவகுமார் சொல்ல...

''உன்னை மாதிரி எல்லா நடிகர்களும் பொறுப்பா இருந்திட்டா... எந்த தயாரிப்பாளருக் கும் ஹார்ட் அட்டாக் வராதுப்பா. சிவா... உன்கிட்ட இன்னொரு முக்கியமான விஷயம் சொல்லணும்.''

''என்னங்கண்ணே...''

''சினிமாங்கிறது கவர்ச்சியான உலகமப்பா. லவ்வு, கிவ்வுனு மாட்டிக்கிராத. பெத்தவங்களுக்கு பிடிச்ச மாதிரி அவங்க சொல்ற ஒரு பொண்ண கல்யாணம் பண்ணிக்கிட்டா... குடும்பத்துல குழப்பம் வராது. நீயும் ஆரோக்கியமா நிம்மதியா தொழில் பண்ணலாம். வீட்ல ஒரு நல்ல பொண்ணா பாக்கச் சொல்லு. நான் தகப்பன் ஸ்தானத்திலிருந்து கல்யாணத்த நடத்தி வைக்கிறேன். எத்தனை லட்சம் வேணாலும் தர்றேன். ஜாம்ஜாம்னு கல்யாணத்த நடத்திப்புடலாம்'' என்றார் தேவர்.

சிறு வயதிலேயே தகப்பனை இழந்த சிவகுமாருக்கு தேவரின் பரிவு ஒரு தகப்பனின் பரிவுபோல் இருந்தது.

''வெள்ளிக்கிழமை விரதம்' ஷூட்டிங் முடிவதற் குள்ளாகவே சிவகுமாருக்கு திருமணம் நிச்சயிக்கப் பட்டது. திருமணச் செலவுக்கு 15 ஆயிரம் ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டது. பல இடங்களில் கேட்டுப் பார்த்தும் கிடைக்காததால் தேவரிடம் வந்தார் சிவகுமார்.

''அண்ணே... எனக்குத் தரவேண்டிய சம்பளத்தில் 15 ஆயிரம் கைமாத்தா குடுங்க. கல்யாண வரவேற்பு முடிஞ்சதும் கொண்டு வந்து குடுத்திடுறேன்'' என்றார்.

தேவர் ஒருசிலருக்குத் தவிர தனது பட நட்சத் திரங்களுக்கு மூன்று, நான்கு தவணையாகவே சம்பளம் தருவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கூடுதலாகத் தர தேவர் முன்வந்தும், 15 ஆயிரம் மட்டுமே வாங்கிக்கொண்டு போனார் சிவகுமார். கோவையில் நடந்த திருமணத்திற்குச் சென்று சிவகுமார் தம்பதியை வாழ்த்தினார்கள் தேவரும், ஏ.பி.நாகராஜனும்.

தேவரிடம் வாங்கிய பணத்துக்கு செலவில்லாததால்... தனது திருமண வரவேற்புக்கு முதல் நாள் அதிகாலையில் ஐந்து மணிக்கெல்லாம் 15 ஆயிரத்துடன் தேவரின் வீட்டுக்குப் போனார் சிவகுமார். பணத்தை திருப்பிக் கொடுத்தார்.

"என்கிட்ட எத்தனையோ நடிகர், நடிகைகள் லட்சக்கணக்கில் வாங்கியிருக்காங்க. யாரையுமே "திருப்பிக் குடுங்க'னு கேட்டதில்லை. இந்த சின்னத் தொகையை திருப்பித் தர்றியேப்பா? என்கிட்ட கைமாத்தா வாங்கினதை அவமானமா நினைக்கிறியா?"

தேவர் கேட்டதும் பதறிப்போன சிவகுமார், "அண்ணா... இந்தப் பணம் நீங்க தராம இருந்திருந்தா... இந்தப் பணம் கிடைச்ச பிறகுதான் கல்யாணத்தை நடத்தியிருப்பேன். இந்தப் பணத்துக்குச் செலவில்லாமல் போனதால்தான் திருப்பித் தர்றேன். பெரிய மனசு பண்ணி வாங்கிக்கிட்டா, நான் நிம்மதியா வீட்டுக்குப் போவேன்" எனச் சொல்ல... தேவர் வாங்கிக்கொண்டார்.

"இந்தப்பய (சிவகுமார்) நடிப்புல மட்டுமில்ல... நாணயத்திலும் நாணயமா இருக்கான்" என சிலிர்த்துப்போன தேவர், அன்று முதல் சிவகுமாரை தன் மகனாக இதயத்தில் வைத்துக்கொண்டார்.

கோவை செழியன் தயாரிப்பில் எம்.ஜி.ஆர்.-லதா நடித்து வந்த 'உழைக்கும் கரங்கள்' திரைப்படத்தின் திரைக்கதையில் நானும் பங்களிப்பு செய்திருந்தேன்.

இந்நிலையில் வாட்டசாட்டமான இரண்டு ஸ்டண்ட் நடிகர்கள் என்னைச் சந்தித்து எம்.ஜி.ஆர். அழைத்து வரச் சொன்னதாக தெரிவித்தார்கள்.

முதலில் எனக்கு படபடப்பு ஏற்பட்டது. ஆனால் 'கதை விஷயமாகத்தான்' இந்த அழைப்பு எனத் தெரிந்ததும்... விஷயத்தை தேவரிடம் சொன்னேன்.

தேவருக்கு சந்தோஷம்.

"டேய்... அந்த தெய்வத்திடம் போய்ட்டா... உனக்கு எந்தக் குறையும் வராதுடா. அவர் ஃபார்முலா தெரியும்ல. அதன்படி ரெண்டு கதையை ரெடிபண்ணிக்கோ" என்றார்.

எம்.ஜி.ஆரிடம் கதை சொன்ன அனுபவம்...

# 29. எம்.ஜி.ஆருக்கு சொன்ன கதை!

எம்.ஜி.ஆரின் 'உழைக்கும் கரங்கள்', ''பல்லாண்டு வாழ்க' ஆகிய இரண்டு படங்களின் படப்பிடிப்பும் ஒரே நேரத்தில் மைசூரில் நடந்து வந்தது. சென்னையில் ரயில் ஏறி மைசூர் வந்து சேர்வதற்குள் இரண்டு ஆக்ஷன் கதைகளை எம்.ஜி.ஆருக்காக உருவாக்கிவிட்டேன். ஹோட்டலுக்குச் சென்றதும் எம்.ஜி.ஆரை சந்தித்துக் கும்பிட்டேன்.

எனது ஒன்றுவிட்ட அண்ணன் கவி.கே.பி.காமாட்சி சுந்தரத்தின் மரணத்தின்போது எம்.ஜி.ஆர். தன் தோளில் பாடை சுமந்ததை ஏற்கனவே எழுதியிருக்கிறேன். இரண்டாவது முறையாக இப்போது அவரைச் சந்திக்கிறேன்.

''உங்களுக்கு தனி ரூம் போட்டிருக்கு. எல்லா வசதியும் பண்ணித்தரச் சொல்லியிருக்கேன். நைட்டு 'உழைக்கும் கரங்கள்' ஷூட்டிங்கிற்குப் போகும்போது என்கூட கார்ல வாங்க. அப்போ கதையை சொல்லுங்க'' என்றார் எம்.ஜி.ஆர்.

இரவு ஏழுமணி. முன்னாடி ஐந்து கார்கள், பின்னாடி ஐந்து கார்கள். நடுவில் எம்.ஜி.ஆரின் கார். காரின் முன் ஸீட்டில் டிரைவருடன் பாடிகாட். பின் ஸீட்டின் நடுவில் எம்.ஜி.ஆர். இருக்க, அவரின் இடதுபுறம் நானும், வலதுபுறம் லதாவும் அமர்ந்தோம். கான்வாய் கிளம்பியது.

'எம்.ஜி.ஆருக்கே கதை சொல்ல வேண்டும்' என்கிற லட்சியத்துடன் இருந்த எனக்கு இதோ எம்.ஜி.ஆரே கதை சொல்லச் சொல்கிறார். ஆனாலும் தயக்கம், படபடப்பு. இதைக் கவனித்த எம்.ஜி.ஆர். என்னைப் பார்த்து நட்பாகச் சிரித்தார்.

இதில் தெம்பான நான் எனது இயல்புப்படி ''அவன் வாராண்ணே... இவன் போறாண்ணே... டமால், டுமீல்'' என முன்புற இருக்கையைக் குத்தி, தட்டி கதை சொல்லிக்கொண்டிருந்தேன்.

'என்னடா இவன்... தலைவர் முன்னாடி இப்படி கதை சொல்றான்?' என்பது போல லதா என்னைப் பார்த்தார். ஆனால் என் போக்கிலேயே இரண்டு கதைகளையும் சொல்லி முடித்தபோது மைசூரிலிருந்து 50 கி.மீ. தாண்டிய சிவன் கோயிலான ஷூட்டிங் ஸ்பாட் வந்துவிட்டது.

'உழைக்கும் கரங்கள்' கதையில் நான் பங்களிப்பு செய்த எம்.ஜி.ஆரின் ருத்ரதாண்டவம் காட்சியை ஷூட் பண்ணத்தான் இங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

காரை விட்டு இறங்கி கோயிலுக்குள் போன எம்.ஜி.ஆர். கோயிலின் கர்ப்பக்கிரஹ சுற்றுப்பிரகாரத்தை வலம் வந்தார்.

'டைரக்டர்'' என எம்.ஜி.ஆர். அழைக்க... 'யெஸ்' என்றபடி வந்தார் டைரக்டர் சங்கர்.

''நாம என்ன ஸீன் எடுக்கப்போறோம்?''

ஏதோ குளறுபடி நடந்துவிட்டது... என்பதை உணர்ந்து கொண்ட சங்கர் மௌனமாக...

எம்.ஜி.ஆரே சொன்னார்... ''ருத்ர தாண்டவம் எடுக்கப் போறோம்ல?''

''யெஸ்...''



"செருப்புப் போடாமத்தான் ருத்ரதாண்டவம் ஆட முடியும். ஆனா... ஆடவேண்டிய இடம் கரடுமுரடா கருங்கல் தரையா இருக்கே. இதுல நான் ஆடி காயம்பட்டா... ஒண்ணுக்கு ரெண்டு பட ஷூட்டிங் கெட்டுப்போகுமே? இது சரி வராது. வேற கோயில் பாருங்க. இப்போ ஹோட்டலுக்கே திரும்புவோம்" என எம்.ஜி.ஆர். சொல்லிவிட...

'ஷூட்டிங் கேன்ஸல்' என சங்கர் அறிவிக்க... 200 பேர்கள் கொண்ட யூனிட் மைசூர் திரும்பியது.

''ஒரு சின்ன கவனக்குறைவால் ஷூட்டிங் கேன்சலாகுதே' என வருத்தப்பட்டபடி எம்.ஜி.ஆர். யாருடனும் பேசாமல் வந்தார். நள்ளிரவில் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்ததும், ''நாளைக்கு காலைல கதை பேசிக்குவோம்'' என்றார் எம்.ஜி.ஆர்.

''சரிங்கண்ணே'' என அறைக்குத் திரும்பினேன்.

மறுநாள் காலை 10 மணி.

எம்.ஜி.ஆர். அழைப்பதாகத் தகவல் வரவும் போனேன். கும்பிட்டேன்.

''உட்காருங்க'' என்றார்.

ஒரு சேரை எடுத்து எம்.ஜி.ஆர். அமர்ந்திருந்ததற்குப் பின்புறமாக சேரை போட்டு உட்கார்ந்தேன்.

''ஏன் பின்னால உட்கார்றீங்க?''

''உங்க முன்னாடி உட்கார...''

''தப்புத் தப்பு. எழுத்தாளர்கள் தைரியமா இருக்கணும். என் முன்னால உட்காருங்க'' என்றார். உட்கார்ந்தேன்.

''கே.ஆர்.விஜயாவின் கணவர் வேலாயுதம் நாயர், கோவை செழியன்கிட்ட ஒரு கதையைச் சொல்லியிருக்கார். அந்தக் கதை எனக்குப் பொருத்தமா இருக்கும்னு கோவை செழியன் என்கிட்ட சொன்னார். அது நீங்க எழுதின கதையாமே?''

''ஆமாங்கண்ணே.''

''நேத்து நீங்க எனக்குச் சொன்ன ரெண்டு கதையும் வழக்கமா நான் பண்ற ஆக்ஷன் கதைதானே. அதுபோல நிறைய கதைகளை யாரு வேணாலும் பண்ணலாம். ஆனா நீங்க வேலாயுதம் நாயர்கிட்ட சொன்ன அந்தக் கதைதான் வேணும். கோவை செழியன் சுருக்கமா அந்தக் கதையை என்கிட்ட சொல்லியிருக்கார். கொஞ்சம் ஸீன்களோட அதைச் சொல்லுங்க'' என்றார் எம்.ஜி.ஆர்.

'பல்லாண்டு வாழ்க' ஷூட்டிங் ஸ்பாட்டில் எம்.ஜி.ஆருக்கு கதை சொல்ல ஆரம்பித்தேன். இடையிடையே ஃபைட் ஸீனில் நடித்துவிட்டு வந்து கதை கேட்டார். இப்படியே கதையைச் சொல்லி முடிந்தேன்.

''கதை ரொம்ப நல்லாருக்கு.''

''இந்தக் கதைக்கு 'கொடுத்து சிவந்த கை'னு தலைப்பு வச்சிருக்கேன்.''

'என்னை வச்சே டைட்டில் வச்சிட்டீங்களா?' என்பது போல் சிரித்த எம்.ஜி.ஆர். எனக்கு கை கொடுத்தார்.

"கதை ஓ.கே. டைட்டிலும் ஓ.கே. நேரா மெட்ராஸ் கிளம்புங்க. ஆர்.எம்.வீரப்பன் உங்களை காண்டாக்ட் பண்ணுவார். சகல வசதியும் செய்து கொடுப்பார். ரெண்டு பட ஷூட்டிங்கையும் முடிச்சுக் கொடுத்துட்டு நான் மெட்ராஸ் வந்ததும் மத்ததைப் பேசிக்கலாம்" என்றார்.

நான் எம்.ஜி.ஆரையே பார்த்தேன்.

"என்ன?"

"அண்ணே! இந்தக் கதையை நான் வேலாயுதம் நாயரிடம் சொன்னேன். கதை பிடிச்சுப் போனதால் கே.ஆர். விஜயாவிடம் சொல்லச் சொன்னார். அவரிடமும் சொன்னேன். கதை ரொம்பப் பிடித்துப் போனதால் ஒரு கதைக்கு நான் வெளியில வாங்குறதை விட கூடுதலாக ரெண்டாயிரம் பணம் குடுத்து எழுதி வாங்கிட்டாங்க. இப்ப நான் என்ன செய்றதுண்ணே?" என தயங்கித் தயங்கிச் சொன்னேன்.

"கவலையேப்படாதீங்க. விஜயாகிட்டேயும், வேலாயுதம் நாயர்கிட்டேயும் நான் பேசிக்கிறேன்" என்றார்.

'என் கதையில் எம்ஜி.ஆரே நடிக்கப்போறாரே' என்கிற மன நிறைவில் எம்.ஜி.ஆரிடம் ஆசி வாங்கிக்கொண்டு மெட்ராஸ் கிளம்பினேன்.

கே.ஆர். விஜயாவின் வீட்டுக்குப் போய் அவரிடம் எம்.ஜி.ஆரை சந்தித்த விஷயத்தைச் சொன்னேன்.

"நீங்க மைசூர்ல இருந்து கிளம்புறதுக்கு முன்னாடியே எம்.ஜி.ஆர். எனக்கு போன் பண்ணினார். "அந்தக் கதை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. நீங்க பண்றதா இருக்க அந்த கேரக்டரை கதாநாயகிக்கு ஏற்ப மாத்தி நான் நடிக்கிறேன். ஆல்ரெடி ஷூட்டிங் ஆரம்பிச்சிட்டோம்"னு எம்.ஜி.ஆர்.கிட்ட சொன்னேன்.

"உனக்கு அந்த அளவுக்கு அந்தக் கதை பிடிச்சிருக்குன்னா தாராளமா பண்ணு. நான் குறுக்க நிற்கமாட்டேன்'னு எம்.ஜி.ஆர். என்கிட்ட சொல்லிட்டார். அதுமட்டுமல்ல... "அந்த ரைட்டர் ரொம்ப நல்லா கதை செய்றார். அவர்கிட்ட வேற கதை வாங்கிக்கிறேன்'னு எம்.ஜி.ஆர். உங்களை பெருமையா சொன்னார்" என கே.ஆர்.விஜயா விளக்கமாகச் சொன்னார்.

எம்.ஜி.ஆரால் பாராட்டப்பட்ட சந்தோஷம் எனக்கு இருந்தாலும், எம்.ஜி.ஆருக்கு கதை எழுதும் வாய்ப்பு இப்போ தட்டிப் போய்விட்டதே... என்கிற கவலை எனக்கு. இருப்பினும், எம்.ஜி.ஆருக்கு கதை எழுத இன்னொரு வாய்ப்பு அமையாமலா போகும்... என என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டேன்.

'உழைக்கும் கரங்கள்', 'பல்லாண்டு வாழ்க' ஆகிய இரண்டு படங்களையும் முடித்துவிட்டு எம்.ஜி.ஆர். மெட்ராஸ் வர... ஒருமாதம் ஆகும் என்பதால் அதற்குள் படத்தை எடுத்து முடித்துவிடும் விதமாக உடனடியாக ஷூட்டிங்கை ஆரம்பித்தார் வேலாயுதம் நாயர். கே.ஆர்.விஜயா நடித்தார்.

அப்போது 'ஜானகி சபதம்' படத்தை இயக்கியிருந்த அவினாசிமணி டைரக்டராக ஒப்பந்தம் செய்யப்பட்டார். சிலரை வைத்து ஹீரோவின் கேரக்டரை ஹீரோயின் கேரக்டராக அவசர அவசரமாக மாற்றி இரவு, பகலாக படப்பிடிப்பை ஆரம்பித்தார்கள்.

தேவரிடம் போனேன்.

"அண்ணே... என் கதை கந்தலாயிருச்சு" என நடந்ததைச் சொன்னேன்.

"தெய்வத்துக்கும் (எம்.ஜி.ஆருக்கும்) ரொம்பப் பிடிச்சிருக்கு. அந்தம்மாவுக்கு ரொம்ப பிடிச்சிருக்கு" அப்படி என்னடா கதை அது?" எனக் கேட்டார் தேவர்.

"அண்ணே... கொஞ்ச காலம் முன்னாடி உங்க அனுமதியோட காலைலயிருந்து மத்தியானம் வரைக்கும் ஒரு தயாரிப்பாளரான டைரக்டர்கிட்ட கதை விவாதத்துக்குப் போனேன் அல்லவா?"

"அட... ஆமாண்டா."

அந்த தயாரிப்பாளரான டைரக்டரின் குணாதிசயத்தை 'மனைவி' கேரக்டராகவும், உங்களோட குணாதிசயத்தை 'கணவன்' கேரக்டராகவும் வச்சு கதை எழுதினேண்ணே" என்றேன்.

"என்னடா? அங்க, இங்க சுத்தி என்னைய வச்சு கதை எழுதினம்ங்கிற. சரி... கதையைச் சொல்லு பார்ப்போம்" என்றார் தேவர் ஆர்வமாக.

நான் அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்.

# 30. டிரைவர் ஓ.கே. சொன்ன ஸீன்!

எம்.ஜி.ஆர். விரும்பிய... கே.ஆர்.விஜயாவும் விட்டுக் கொடுக்க இயலாத, நான் எழுதிய கதை உருவான விதத்தை தேவரிடம் சொன்னேன்.

இயக்குநராகவும், தயாரிப்பாளராகவும் புகழ்பெற்ற அந்தப் புள்ளியிடம் பல ஆண்டுகள் டிரைவராகப் பணிபுரிந்தவர் வேலையை விட்டு நின்றுவிட்டார். ஒரு வருடம் கழித்து அவசர... அவசியமாக கைச்செலவுக்கு ஒரு சிறுதொகை உதவி கேட்டு புள்ளியின் அலுவலகத்திற்கு வந்தார். அப்போது அந்தப் புள்ளியுடன் நான் மற்றும் தூயவன் உள்ளிட்டோர் விவாதத்தில் இருந்தோம்.

டிரைவர் கைச்செலவுக்கு உதவி கேட்பதை நிர்வாகி வந்து சொல்லவும் அந்தப் புள்ளி கோபமானார்.

"அந்த டிரைவர் அவனாத்தான் வேலையை விட்டு நின்னான். என்ன செட்டில்மெண்ட்டோ அது சல்லிப் பணம் பாக்கியில்லாம குடுத்திட்டேன். இப்போ வந்து உதவி கேட்டா என்ன நியாயம்? நான் பேசுன பணத்தை நியாயமா குடுத்திடுவேன். பேசுனதுக்கு மேல கேட்டா கோவம் வரும். கலைஞானம் உனக்கு ஒண்ணு தெரியுமா? நான் சின்ன வயசுல படிக்க வசதி இல்லாம ரொம்ப கஷ்டப்பட்டேன். நான் படிப்பதற்கு உதவி செய்யுங்கள்' அப்படின்னு ஒரு நோட்டுல எழுதி அக்கம் பக்கத்துல இருக்கவங்ககிட்ட காட்டுவேன். சிலர் உதவி செஞ்சாங்க. சிலர் அவமானப்படுத்தினாங்க. இப்படி கஷ்டப்பட்டு படிச்சு முன்னுக்கு வந்தவன் நான். கணக்குப் பார்க்காம அள்ளிக் குடுத்தா நாளைக்கி என் பிள்ளைங்க கஷ்டப்படும். அந்தச் சூழல் வரக்கூடாது. அதனாலதான் காரணமில்லாம, கணக்குக்கு மேல யாருக்கும் நான் தர்றதில்லை" என தனது நியாயத்தைச் சொன்னார்.

இது காலையில் நான் கண்ட காட்சி. அன்று மாலையில் தேவருடன் விவாதத்தில் இருந்தபோது நான் கண்டது என்ன?

சாப்பாட்டுப் பில்லில் 50 பைசா அதிகம் போட்ட புரொடக்ஷன் மேனேஜர் சுப்பையாவை ஏற்கனவே வேலையை விட்டு நீக்கியிருந்தார் தேவர். அதே சுப்பையா தன் தங்கைக்கு திருமண உதவி கேட்டபோது ஐயாயிரம்

தந்தார் தேவர். அது மட்டுமில்லை... அந்தப் புள்ளி போலவே தேவரும் ரொம்ப கஷ்டப்பட்டவர்தான்.

கோவையில் இருந்தபோது ஹோட்டலில் ரெண்டு இட்லி வாங்கிவிட்டு இரண்டு, மூன்று முறை சாம்பார் வாங்கிக் குடித்தார் தேவர். உடனே சர்வர், "ரெண்டு இட்லியும் அப்படியே இருக்கு. நாலாவது முறை சாம்பார் கேட்டா எப்படி?" என கோபப்பட... "சாம்பாரைக் குடிச்சு முக்கால் வயிறு நிரப்பிட்டா... இட்லிய தின்னு முழு வயிறை நிரப்பிடுவேன். இன்னைக்கு முழுக்க பசி தாங்கணும். வேற காசில்லை. இட்லிய தின்னுட்டா சாம்பார் ஊத்தமாட்டியே"னு தேவர் சொல்லவும், சர்வர் சலித்துக்கொண்டே இன்னும் கொஞ்சம் சாம்பாரை ஊற்றிவிட்டுப் போனார்.

பத்து ரூபாய் கடன் கொடுத்த நபர் நடு ரோட்டில் தேவரின் கழுத்தில் துண்டைப் போட்டு இழுக்க... அவமானமான தேவர், "ஒன்னையே துதிக்கிற என்னை அவமானப்படுத்திட்டியேடா முருகா" என மருதமலை முருகன் சிலையை உடைப்பதற்காக பெரிய கட்டையுடன் மலையேற... மலைப்படிக்கட்டில் காலி சிகரெட்



பாக்கெட்டில் பத்து ரூபா வைக்கப்பட்ட நிலையில் கிடக்க... 'முருகா' என்று கதறிய தேவர் கையிலிருந்த கட்டையால் தன் தலையில் அடித்துக்கொண்டு "என்னை மன்னித்துவிடு முருகா" என அழுதிருக்கிறார். அதன் பிறகு கோயிலுக்குச் சென்று முருகனை வணங்கிவிட்டு அந்த ரூபாயை எடுத்து வந்து கடனை அடைத்தார் தேவர்.

இப்படி கஷ்டப்பட்டு வளர்ந்து இப்போது வசதியான தேவர்... யாராவது கஷ்டம் என வந்தால் மனமிரங்கி உதவுகிறார். அந்தப் புள்ளியோ கஷ்டப்பட்டு வளர்ந்து இப்போது வசதியான நிலையில் மற்றவருக்கு உதவினால் மறுபடி தனக்கு கஷ்டம் வரும் என நினைக்கிறார்.

வறுமை என்கிற ஒரே பாடம்தான். ஆனாலும் அது இருவருக்கு இருவேறு விதமான மனநிலையைத் தந்திருக்கிறது. இந்த முரண்தான் எனக்கு கதையானது. அந்தப்புள்ளி கேரக்டரை மனைவியாக்கி, 'அளவுக்கு மீறி அள்ளித் தராதே' என தடுப்பவளாகவும், தேவர் கேரக்டரை கணவனாக்கி அள்ளித் தரும் வள்ளலாகவும் படைத்தேன்.

கதையை நான் சொன்னதும் "அடடா... தெய்வத்துக்கு ஏத்த கதைடா. அது அமையாமப் போச்சே" என்று தேவரும் வருத்தப்பட்டார்.

'கொடுப்பவர் மனைவி, தடுப்பவன் கணவன்' என கதையை மாற்றி 'தர்மத்தாய்' என டைட்டிலும் வைத்து கே.ஆர்.விஜயா நடிக்க... அவரின் கணவர் வேலாயுதம் நாயர் தயாரித்த படம் ஆறாயிரம் அடிவரை எடுத்து போட்டுப் பார்க்கப்பட்டது. கே.ஆர்.விஜயாவுக்கும் அவரின் கணவருக்கும் குழப்பமே மிஞ்சியது. படம் சரியாக வரவில்லை. இதனால் பாதி படம் எடுத்த நிலையில் அந்தப் படம் கைவிடப்பட்டது.

எம்.ஜி.ஆர். விருப்பப்படி 'கொடுத்து சிவந்த கரம்' படமாக எம்.ஜி.ஆர். நடித்திருந்தால் அது பெரிய வெற்றிப்படமாக இருந்திருக்குமே என்கிற ஏக்கம் இன்றளவும் எனக்குள் உண்டு.

மூன்று மாதங்களாக ஸீன் பிடித்து இந்திப் படத்திற்காக 'மஸ்தூர்' (தொழிலாளி) என்கிற கதையை எழுதி முடித்தோம். கதையின் நிறை குறைகளை பார்த்து ஓ.கே. சொல்லக்கூடிய சிவா என்பவரும் 'நல்லாருக்கு' எனச் சொல்லிவிட்டார்.

சிவா ஓ.கே. செய்துவிட்டால் அன்றைய தினமோ அல்லது மறுநாளோ... கதை இலாகாவைச் சேர்ந்த ஒன்பது பேர்களுக்கும் தலா ஐயாயிரம்

பணம் கொடுப்பார் தேவர். எனக்கும், தூயவனுக்கும், மாராவுக்கும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுப்பார்.

அதனால் கதை முழுமையாக முடிந்ததுமே எங்கள் வீடுகளில் 'இன்னைக்கோ, நாளைக்கோ பணம் வந்திடும்' எனச் சொல்லிவிடுவோம். மனைவிமார்களும் மளிகை, பால் கடன் அடைக்கும் தெம்பிற்கு வந்துவிடுவார்கள்.

'மஸ்தூர்' கதை ஓ.கே. ஆனதால், ''டேய் கதைக்காரன்களா... நாளைக்கி உங்களுக்கு பேமண்ட்டுடா'' என்றார் தேவர். நாங்கள் எங்களுக்குள் கண் ஜாடையில் கை குலுக்கிக்கொண்டோம்.

''வாங்கடா... வாஹினி ஸ்டுடியோவுல நம்ம படம் ஷூட்டிங் போய்க்கிட்டிருக்கு. அங்க ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வரலாம்'' என்றார் தேவர். அவரின் செவர்லே கார் வேன் மாதிரி பெரிதாக இருக்கும். அதில் நாங்களும் தேவருடன் ஏறிக்கொண்டோம்.

தி.நகர் ஆபீஸிலிருந்து கார் கிளம்பியது. தேவர் தனது டிரைவர் விஸ்வநாதனிடம்... ''விஸ்வநாதா... இந்திக்கு ஒரு கதை இன்னைக்குத்தான் ஃபைனல் பண்ணினோம். அவுட் லைனையும் முக்கியமான ஸீனையும் சொல்றேன்... கேட்டுட்டு எப்படி இருக்குனு சொல்லுடா'' என... கதையைச் சொன்னார் தேவர்.

திருப்புமுனையை கதையில் ஏற்படுத்தப்போகும் அந்த முக்கிய ஸீனை சொன்னதும்...

''இது நல்லாயில்லீங்க'' என 'பட்'டெனச் சொன்னார் டிரைவர்.

கோடம்பாக்கம் மேம்பாலத்தில் கார் ஏறவிருந்த நிலையில் ''திருப்புடா காரை ஆபீஸுக்கு'' என்றார் தேவர்.

'பேமண்ட்' சந்தோஷத்தில் இருந்த எங்கள் முகத்தில் ஈயாடவில்லை.

கதை விவாத அறையில் அனைவரும் அமர்ந்தோம்.

''என்னப்பா? விஸ்வநாதனுக்கு அந்த ஸீன் பிடிக்கலையாம். 'டிரைவர்தானே'னு நினைக்காதீங்கடா. அவன்தாண்டா ஆடியன்ஸ். இப்படியே படமாக்கினா இன்னைக்கி விஸ்வநாதன் சொன்னதைத்தான்... நாளைக்கி தியேட்டர்ல மக்கள் சொல்வாங்க. அதனால நாளைக்குள்ள வேற ஸீன் ரெடிபண்ணி... விஸ்வநாதன்கிட்ட சொல்லிருங்க. அவன் 'ஓ.கே.'ன்னாத்தான் ஒங்களுக்கு சம்பளம்'' என சொல்லிவிட்டார் தேவர்.

இரவோடு இரவாக கதை இலாகாவைச் சேர்ந்த ஒன்பது பேர்களும் விஸ்வநாதனின் வீட்டுக்குப் போனோம்.

''எப்பா... நாங்களும் உன்னை மாதிரி தொழிலாளிங்கதான். சம்பளம் கிடைச்சாதான் குடும்பம் நடத்த முடியும். நாங்க ஒன்பது பேருமே ஆளுக்கொரு ஸீனா ஒன்பது ஸீன் சொல்றோம். எப்படியாவது ஓ.கே. பண்ணிடு'' என கேட்டோம்.

''இங்க பாருங்க... வீட்டுக்கெல்லாம் வராதீங்க. நாளைக்கி ஆபீஸ்ல வச்சு சொல்லுங்க. நான் முதலாளிக்கு துரோகம் செய்யமாட்டேன். நல்லா இருந்தாத்தான் 'நல்லாருக்கு'னு சொல்வேங்க'' என கறாராகச் சொல்லிவிட்டார் டிரைவர் விஸ்வநாதன்.

மறுநாள்... ஆபீஸில் வைத்து ஆளுக்கொரு ஸீனாக ஒன்பது ஸீன் சொன்னோம். இதில் இரண்டு ஸீன்களைக் குறிப்பிட்ட விஸ்வநாதன், ''இது கொஞ்சம் பரவால்ல... அது பரவால்ல'' என்றார்.

இரண்டு 'பரவால்ல' ஸீனையும் ஒன்றாக்கி அழகு படுத்திச் சொன்னோம். விஸ்வநாதனுக்குத் திருப்தி.

அந்த புது ஸீனை கோவை பாஷையிலேயே தேவரிடம் விளக்கிச் சொன்னார் விஸ்வநாதன்.

''உன்னைய தாஜா பண்ணினாங்களா? உண்மையைச் சொல்லு. பொய் சொன்ன கொன்னேபுடுவேன்'' என தேவர் மிரட்ட...

''சத்தியமா... நல்லாருக்குங்க'' என விஸ்வநாதன் சொல்ல... ஸ்வீட் வந்தது. சாப்பிட்டோம். சம்பளம் கொடுத்தார் தேவர்.

''நல்ல நேரத்துல காப்பாத்துன விஸ்வநாதா?'' என நான் சொல்ல...

''என்னோட நல்ல நேரம்ங்க. என்னைய நான் காப்பாத்திக்கிட்டேன். உங்களுக்காக பொய் சொல்லியிருந்தா தேவர் என்னைய அடிச்சுத் துரத்தி விட்டுருப்பாரு. எம்.ஜி.ஆர்.கிட்டயே தேவர் கோபத்தக் காட்டினத நான் பார்த்திருக்கேன். நானெல்லாம் எம்மாத்திரம்?'' என்றார்.

''அட... அதென்னப்பா விஷயம். சொல்லேன்?''

விஸ்வநாதன் சொல்லத் தொடங்கினார்.

எம்.ஜி.ஆர். மீது தேவர் கோபப்பட்டதை தேவரின் டிரைவர் விஸ்வநாதன் என்னிடம் சொல்லத் தொடங்கினார்.

"தேவரை புரொடியூஸராக்கியது எம்.ஜி.ஆர்.தான்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். ரெண்டு பேருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிரிஞ்சிட்டாங்க. சில வருஷம் அவங்க பேசிக்கவே இல்லை. ரெண்டுபேருமே ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் குடுத்து மறுபடி இணைஞ்சாங்க. தேவர் தயாரிப்பில் எம்.ஜி.ஆர். நடிக்கும் படப்பிடிப்பும் உடனடியா தொடங்கியது. தேவரைப் பொறுத்தவரைக்கும் காலைல ஒன்பது மணிக்கெல்லாம் ஷூட்டிங் ஆரம்பிச்சிடணும். அன்னிக்கு எம்.ஜி.ஆர். வர லேட்டாயிருச்சுங்களா... தேவருக்கு ரொம்பவே கோவம். அங்கிட்டும், இங்கிட்டுமா உறுமியபடி உலாத்திக்கிட்டிருந்தார்.

பத்தரை மணிக்கு எம்.ஜி.ஆர். காரில் வந்து இறங்கினார். எம்.ஜி.ஆர். வந்ததைப் பார்த்த தேவர்... பார்க்காதது போல ஒரு காரியம் செய்தார்.

எதிரே நின்றுகொண்டிருந்த டீ தரும் பையனை குடுமியைப் பிடித்து ஆட்டிய தேவர், "ஏண்டா டீயைக் கொட்டினே?' எனக் கேட்டு முதுகில் அறைந்தார்.

"முதலாளி நான் இன்னும் டீ கொண்டுட்டே வரலையே' என டீ பாய் சொல்ல... "ஏலே... ஏண்டா டீயக் கொட்டின?' எனக் கேட்டு மேலும் அடிக்க... அடி பொறுக்க முடியாமல் டீ பாய் ஓட... தேவர் துரத்திப் பிடித்து அடிக்க... இதையெல்லாம் கவனித்த எம்.ஜி.ஆர்., தேவரின் அருகே சென்று தோளைத் தொட... திரும்பிப் பார்த்த தேவர், "அட... முருகா வந்திட்டீங்களா முருகா" எனக் கேட்க... எம்.ஜி.ஆர். சிரித்தபடி...

"அவனை அடிக்காதீங்க. நாளைலருந்து ஒன்பது மணிக்கெல்லாம் ஷூட்டிங்கிற்கு வந்துடுறேன்" என்றார். டீ பாயை அடித்ததற்கான காரணத்தை எம்.ஜி.ஆர் புரிந்துகொண்டதால் தேவர் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரிக்க... எம்.ஜி.ஆர். பதிலுக்குச் சிரிக்க, இருவரும் மிகச் சத்தமாக சிரித்தபடி ஒருவர் தோளில் ஒருவர் கை போட்டுக்கொண்டு செட்டுக்குள் போனார்கள்.

"மீண்டும் தங்களுக்குள் பிரிவு வந்துவிடக்கூடாது' என்பதால் அன்று தேவரின் கோபத்திற்குப் பதில் கோபம் கொள்ளாமல் விட்டுக்கொடுத்துப் போனார் எம்.ஜி.ஆர்." என அந்தப் பழைய நிகழ்வைச் சொல்லி முடித்தார் டிரைவர் விஸ்வநாதன்.

....